தமிழவேள் பி.டி.ராஜன்
நினைவுகளில் 50



P.T. RAJAN
A HALF-CENTURY IN MEMORY

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

24.09.2024

திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் புகழ் போற்றுவோம்!

'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற இன்றைய திராவிட மாடல் அரசின் கொள்கைக் கோட்பாட்டினை, ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே முன்னெடுத்த திராவிட அரசியல் இயக்கமான நீதிக்கட்சியின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தமிழவேள் திரு. பி.டி.ராஜன் அவர்கள்.

நீதிக்கட்சியின் மூன்று பெரும் தலைவர்களான பிட்டி தியாகராயர் – டாக்டர் நடேசனார் – டி.எம்.நாயர் ஆகியோரின் சமூகநீதி எனும் மிகப்பெரும் இலட்சியத்தைச் செயல்வடிவமாக்கிய பனகல் அரசர், ஏ.டி.பன்னீர்செல்வம் உள்ளிட்ட தளகர்த்தர்கள் வரிசையில் திரு. பி.டி.ராஜன் அவர்களுக்குத் தனி இடம் உண்டு.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இரட்டையாட்சி முறையில் 1920–ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்திற்கு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. நீதிக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இளம் வேட்பாளராக இருந்தவர் பி.டி.ராஜன் அவர்கள். அவருடைய சிந்தனைகளும் செயலாற்றலும் மிகுந்த முதிர்ச்சியுடையனவாக இருந்தன. வகுப்புவாரி இடஒதுக்கீட்டு ஆணை, பெண்களுக்கு வாக்குரிமை, பொது இடங்களில் அனைத்துச் சமுதாயத்தினருக்கும் சமஉரிமை போன்ற அரசாணைகளை வெளியிட்டு, சமத்துவச் சமுதாயத்திற்கு நீதிக்கட்சி அடித்தளமிட்டது.

பனகல் அரசர் தலைமையிலான அமைச்சரவை உருவாக்கிய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கம் போன்றவற்றில் பி.டி.ராஜன் அவர்களின் பங்களிப்பு சிறப்பான முறையிலே அமைந்திருந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரம் பெருகத் துணை நின்றன. அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கடவுளின்முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டியது.

தமிழுக்கும் – தமிழ் மாணவர்களுக்கும் பயன் தரும் வகையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் நீதிக்கட்சி ஆட்சியில் அமைக்கப்பட்ட குழுவில் இடம்பெற்று ஆலோசனைகளை வழங்கியவர் பி.டி.ராஜன் அவர்கள். அவருடைய ஆலோசனைகள் அடங்கிய அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் உருவானதுதான் புகழ்பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகம்.

அன்றைய மதுரை மாவட்டம் உத்தமபாளையத்தில் பிறந்த பி.டி.ராஜன் அவர்கள் ஆன்மீகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ்மொழியின் மீது தான் கொண்ட எல்லையில்லா ஈடுபாட்டினால் தமிழ்த் தொண்டையும், பல நூற்றாண்டுகளாகப் புனரமைக்கப்படாத பல முக்கிய திருக்கோயில்களைப் புனரமைத்து ஆன்மீகத்தைச் செழுமைப்படுத்திடும் வகையில் இறைத் தொண்டையும் மேற்கொண்ட பெரியவர் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள் என்றால் அது மிகையல்ல!

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்துக் குடமுழுக்கு நடைபெறச் செய்தார். சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலில் ஐம்பொன் சிலையை நிறுவினார். அதன் மூலமாக பக்தர்கள் பலரும் சபரிமலை செல்வதை வழக்கமாகக் கொண்டனர். பழமுதிர்சோலை, வடபழனி உள்ளிட்ட பல திருக்கோயில்களைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்த திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் அவர்கள். நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், சென்னை மாகாணத்தின் முதல்–அமைச்சராகவும் பொறுப்பேற்று, தனது தூய தொண்டினால் அந்தப் பதவிக்குப் பெருமை சேர்த்தார்.

ஆளும்கட்சியாக இருந்தபோது மட்டுமல்லாமல், நீதிக்கட்சியின் சார்பில் தனியொருவராகச் சட்டமன்றம் சென்ற நிலையிலும், தம் கருத்துகளை வலிமையாகப் பதிவு செய்து, தாம் கொண்ட கொள்கைகளில் இருந்து தடம் மாறாமல் பயணித்த கொள்கைச்சுடர் அவர்.

கட்சிப் பாகுபாடுகள் கடந்து அனைவராலும் போற்றப்படும் சிறந்த பண்பாளரான தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களுடைய 50–ஆவது நினைவு ஆண்டு கடைப்பிடிக்கப்படும் இவ்வேளையில், தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்திற்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் லால்குடி தாலுகா முதலாவது மாநாடு 1928–ஆம் ஆண்டு ஜூன் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெற்றபோது அதில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றியவர்

பி.டி.ராஜன் அவர்கள். தந்தை பெரியாரின் குடிஅரசு ஏடு அவரது சொற்பெருக்கை வெளியிட்டுள்ளது.

அரசுப் பணிகளில் அனைவருக்கும் வாய்ப்பு, கோயில் கருவறை வரை சென்று அர்ச்சனை செய்யும் உரிமை ஆகியவற்றை அந்த மாநாட்டில் வலியுறுத்திப் பேசிய திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் அவர்கள், தந்தை பெரியாரின் சுயமரியாதைத் திருமண முறையைப் பாராட்டியதுடன், இத்திருமணங்களைச் சட்டப்படி உரிமையாக்கிட வேண்டும் என்றும் அதற்கேற்பச் சட்டங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளும்படியும் தன் நண்பரான பெரியாருக்கு எச்சரிக்கை கலந்த வேண்டுகோளையும் முன்வைத்திருக்கிறார்.

1928–இல் அவர் முன்வைத்த கோரிக்கை ஏறத்தாழ 40 ஆண்டுகள் கடந்து, பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு 1967–ஆம் ஆண்டு அமைந்தபோது, தந்தை பெரியார் அவர்கள் திருத்தித் தந்த வரைவின் அடிப்படையில் சுயமரியாதை திருமணச் சட்டம் எனப்படும் 'தமிழ்நாடு அரசு இந்து திருமணத் திருத்தச் சட்டம்' என நிறைவேற்றப்பட்டது. 1928–இல் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்கள் உள்பட அனைத்து சுயமரியாதைத் திருமணங்களுக்கும் சட்ட ஏற்பு அளிக்கும் வகையில் முன்தேதியிட்டு அதனை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணா, அதனைப் பெரியாருக்குக் காணிக்கையாக்குவதாக அறிவித்தார். இந்தச் சட்டத் திருத்தத்தைத்தான் தொலைநோக்குப் பார்வையுடன் 1928–இல் நடந்த சுயமரியாதை மாநாட்டில் பி.டி.ராஜன் அவர்கள் வலியுறுத்தினார்.

1967–ஆம் ஆண்டு பி.டி.ராஜன் அவர்களின் சீரிய முயற்சியால் நடைபெற்ற நீதிக்கட்சியின் பொன் விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு பொன்விழா மலர் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். 1968–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில் சென்னையில் நடத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழறிஞர்களுக்கும், காப்பிய நாயகி கண்ணகிக்கும் என 10 சிலைகள் கடற்கரையில் நிறுவப்பட்டன. அதில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் சிலையைத் திறந்து வைத்தவர் பி.டி.ராஜன் அவர்கள்.

முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரையில் நடைபெற்ற பி.டி.ராஜன் அவர்களின் 82–ஆவது பிறந்தநாள் விழாவில்

கலந்துகொண்டு, 'ஆயிரம் பிறை கண்ட அண்ணல்' எனப் போற்றியதுடன், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கான போராட்டத்தைப் பி.டி.ராஜன் தலைமையேற்று நடத்தித்தந்த பாங்கினை எடுத்துரைத்தார்.

தமிழுணர்வும் திராவிட இயக்கக் கொள்கைகளில் ஆழமான பற்றும் கொண்ட பி.டி.ராஜன் அவர்கள் வழியில் அவரது புதல்வர் – அரசியல் பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்கள் தென்மாவட்டத் தி.மு.கழகத்தின் தூணாகவும், தலைவர் கலைஞர் அவர்களுக்குத் துணையாகவும் இருந்து செயல்பட்டவர். அத்தகைய கொள்கைப் பண்புமிக்க குடும்பத்தின் வழித்தோன்றலாகத் தனது தாத்தா மற்றும் தந்தை ஆகியோரது வழித்தடத்தில் திராவிட இயக்க கொள்கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அறிவாற்றலோடு நமது திராவிட மாடல் அரசின் திட்டங்கள் நிறைவேறத் துணைநின்று பாடுபட்டு வரும் மாண்புமிகு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்களுக்குப் பாராட்டுகள்!

ஒப்பற்ற தனது தாத்தா தமிழவேள் திரு. பி.டி.ராஜன் அவர்களுடைய பொது வாழ்க்கையைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் அறிந்துகொள்ள ஏதுவாக, அவரது வாழ்க்கை வரலாற்றையும், அவரது கருத்துரைகளையும், சான்றோர் பலர் அவருக்குச் சூட்டிய புகழ்மாலைகளையும் தொகுத்து "தமிழவேள் பி.டி.ராஜன் நினைவுகளில் 50" எனும் அரிய நூலை படைத்தளித்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்களுக்குச் சிறப்பு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

இந்த நூல் திராவிட இயக்க வரலாற்றை அறிய விரும்பும் இளம் தலைமுறையினருக்கு நல்லதோர் அறிவுக் கருவூலமாக விளங்கும். திராவிட இயக்கம் இளைய இரத்தத்தின் வேகத்தையும் மூத்தவர்களின் அனுபவத்தையும் இணைத்துப் பயணிக்கிற இயக்கமாகும். திராவிட இயக்க முன்னோடியான பி.டி.ராஜன் அவர்களின் நினைவை என்றென்றும் போற்றி, அவர்கள் கண்ட இலட்சியக் கனவை நிறைவேற்ற அயராது பாடுபடுவோம்!

அன்புடன்,



(மு.க.ஸ்டாலின்)

FOREWORD

This small volume is the result of my commitment made last year on the 49th Memorial Day of my grandfather, Thamizhavel Thiru Ponnambala Thiaga Rajan, known as P. T. Rajan or PTR, that I would bring out a collection of his speeches and writings as a way of honouring his memory on the 50th anniversary of his passing.

The practice of Ancestor Worship (முன்னோர் வழிபாடு) has remained an integral part of our Tamil culture throughout the millennia of Tamil civilisation, even as other forms of worship such as Saivism, Vaishnavism, and Jainism have had varying adherence over different periods. It is our way of acknowledging that we would not exist without our forefathers – *without them, there would be no us* – and expressing our gratitude for their role in our creation. And whatever heights we achieve, we stand on the foundations they painstakingly built.

I regularly refer to my forefathers in my public comments, not to use antecedents as credentials, nor even as a measure of pride, but rather as a token of perpetual gratitude for their vital roles in enabling my current position. Such repeated invocation, across my transition from Candidate, to MLA, to Minister of the Government of Tamil Nadu, is the embodiment of ancestor worship in the domain of electoral politics.

Though every ancestor is an existential link for all future descendants, some have an outsized impact on the direction and shape of that future. Their lives serve as inflection points which alter the trajectory – in names, in profession or trade, in habits, practices, and priorities.

PTR had such an impact due to the sheer breadth and length of his career, among other unique achievements. For example, until his time, our last name used to be our caste name, Mudaliar. After him, all of us have the last name Rajan. Though he was born to high privilege, he had an extraordinarily difficult childhood in many ways. He lost both his father and his mother at a very young age and was in the care of his father's younger brother (சித்தப்பா) Thiru M. T. Subramania Mudaliar (known as MTS). Though the result of being orphaned at a young age, the guardianship of MTS proved pivotal. MTS's decisions, based on his exceptional foresight, shaped PTR's life, and career to the greatest extent.

Therefore, any memorial tribute to PTR would be incomplete without an accompanying encomium to MTS. One could detail at length the many contributions of MTS to the Dravidian Movement from its inception and through its early decades. But the obituary that Thanthai Periyar himself wrote as an editorial in the Kudiarasu newspaper upon the passing of MTS in March 1928 is hard to improve upon in terms of both scope and detail, and hence that editorial is included in part of the appendix to this volume as a mark of homage.

PTR had a stellar educational career -- he studied at The Leys School, Cambridge; graduated in history from Jesus College, Oxford; studied the law at the Inner Temple and was called to the Bar in 1917. Having joined the South Indian Liberal Federation (Justice Party) in 1920 after giving up his career as a barrister, PT Rajan emerged as one of the leaders of the Justice Party. He served as Chief Whip of the ruling party from 1921, the Minister for Public Works, Co-operation and Religious Endowments in multiple Justice Party governments (1930-1937), and for a brief while, he held the portfolio of Chief Minister of the Madras Presidency in 1936.

Extraordinary transformations characterize his personal development through the course of his life. Take language, for example. As a boy, when he went to England, he was unable to speak English—he suffered for it and had to take special tuition before he was admitted to the boarding school. By the time he came

back many years later, he had almost forgotten the use of everyday Tamil, and the family had to send somebody who was fluent in English to receive him when the ship docked on his return. It is worth noting that by the time of his demise several decades later he had become, like his father before him, an erudite scholar of the Tamil language and was bestowed the title *Thamizhavel* for his contributions to Tamil.

Two aspects of his long life are remarkable. The first is the sheer range of his career — in the political space (the Dravidian Movement and the Justice Party); in the Legislature and Administration of the Madras Presidency; in support of the growth and advancement of our language and culture, including the founding of the Thiruvalluvar Kazhagam in Madurai, support and leadership for the Tamil Sangam and its Tamil Conference; and over the decades, his unstinting support for the preservation and restoration of temples including the Vadapalani Murugan temple, Madurai Meenakshi Amman temple, Sabarimalai Ayyappan temple, Tenkasi Kasi Viswanathar temple, among several others.

The second distinguishing feature was his clarity of thought and his pivotal contributions to the political discourse in the early days of the Justice Party which came from his education as a lawyer, his command of the English language, his reading of classic Latin texts besides other scriptures, and most of all, his ability to put in context what the social justice revolution really was for, what it meant, and why it inspired him.

Defining the aim and objective of the Self Respect Movement, he declared (in 1929) that it sought to "*annihilate that social construct which discriminates between two human beings; creates divisions between different sections of society; indoctrinates the concept of superiority and inferiority on the basis of birth; paves way for the majority of people to be treated worse than cattle; prevents the majority of believers from even entering temples and allows for women to be treated as household utensils.*" The alternative world envisioned by the Self Respect Movement, in the words of PTR was, "*to ensure everybody is given equal rights, to create equality between the sexes on the principles of natural justice and man-made laws; to create all requisite facilities for every single person to attain complete and wholesome development; to make all the people realise their duties towards the nation and learn of the rights which they enjoy in the nation; and to cultivate the feeling of unity and solidarity among all the people through nationalist goals and beliefs which will enable them to experience joy and sorrow with equanimity.*" These early aspirations of the Justice Party and the Self Respect represent the core ideology of the Dravidian Movement till this day.

I must also point out that his devotion and worship co-existed alongside his own vociferous campaign against hereditary priesthood; he regularly called for the annihilation of a system of "*brokers to God*". The reimagination of the Hindu religion, veering away from its centrality to birth-ascribed hierarchy was foundational to the project of social justice — and in this regard, PTR and Thanthai Periyar, his some-time colleague in the Justice Party, were united in their ultimate goal although their relationship with God was diametrically opposite. Today, as we inhabit an increasingly sectarian atmosphere, my grandfather's words (from 1935) are a powerful reminder that it is possible to combine individual faith with religious reform. "*Many people forget that religion and God are distinct entities. Many atrocities take place in the name of religion--to link such religion to God is to reduce God to a merciless being.*"

He was also a steadfast feminist, vociferously supportive of women's rights much like Thanthai Periyar.

But, what most people remember about PTR personally was his extremely forgiving nature and the extraordinary range of people he helped on an individual basis, no matter who they were, no matter what they asked for. Even candidates who had contested against him in elections (and disparaged him during the campaign), called on him for help later in life, and he happily did his best without any ill-will or rancour.

For me, the compilation of this anthology has been an occasion to remind myself why I returned India after a long expatriate professional career and decided to enter public life. In an era where politics has become a full-time profession and even a career for many, it is important to bear in mind that the full

value of the profound philosophy of social justice can only be realized through the executive action of committed people who are focused on the greater good and the achievement of their goals, rather than personal benefits or ambitions.

Such steely resolve and selfless dedication shine from all of PTR's words. For instance, hoisting the flag of the Self Respect Movement at the inaugural Self Respect Conference in Chengalpattu in 1929 (aged ~37), he makes an emotional appeal to the members of a fledging organisation: "*What is the use of living after a movement has died? But, if a movement is alive and it spreads everywhere, you live forever.*"

At the Justice Party Golden Jubilee Celebrations in 1968 (aged ~76), he said, "*Men may come, men may go — Parties may appear and disappear — Empires rose and fell — Civilisations flourish and disappear. The Justice Party as an organisation may disappear, but the principles for which the Party stands are of eternal value and will never perish.*"

Bookended by these two powerful utterances which came almost forty years apart, we realise that PT Rajan, in dedicating himself to public service in the pursuit of social justice was incredibly self-aware that while power, political parties and even life were fleeting and transient in the context of the long arc of human history, the radical struggle towards a just society is eternal — a permanent revolution for the betterment of the human condition.

In closing, I'm very grateful for the many people who have supported this effort under the leadership of Thiru Subbiah Sivaprakasam. As PTR's birthday rolls around next April, we hope to publish a more comprehensive volume in physical form as opposed to this e-book. It will be a happy coincidence that it would mark his 133rd birth anniversary, which is very apt considering his adherence and devotion to being a propagator of Thiruvalluvar's work, the Thirukkural which has 133 chapters.

It is fitting that our Hon'ble Chief Minister Thiru. M.K. Stalin, the leader of our party and a social reformer who tirelessly champions the cause of Equality and Social Justice, is releasing the book on Thiru. P.T. Rajan, another towering figure who dedicated his life to the same ideals. I would like to express my deep gratitude to our Chief Minister for his generosity, the faith he has placed in me, and the enduring affection he holds for my family.

Dr.Palanivel Thiaga Rajan
Minister For Information Technology & Digital Services
Government of Tamil Nadu

முகப்புரை

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

(குறள் – 216)

'ஈர நெஞ்சம் கொண்டவனிடம் செல்வம் சேருமேயானால் அது, ஊரின் நடுவே செழித்து வளர்ந்த மரம், பழுத்துக் குலுங்குவது போல எல்லோர்க்கும் பயன்படுவதாகும்' என்கிற ஐயன் திருவள்ளுவரின் குறள் மொழிக்கேற்ப, காலம் காலமாகக் கல்வி ரீதியாகவும் – பொருளாதார ரீதியாகவும் சுரண்டப்பட்ட திராவிட சமுதாயத்தின் துயர் துடைத்து கைதூக்கிவிட, தங்கள் செல்வங்களையும் – நேரத்தையும் கைமாறு கருதாது செலவிட்ட கனிந்த மரங்களான பல தலைவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டதே நீதிக் கட்சியாகும்.

இன்று தமிழ்நாடு, இந்தியாவின் பிற மாநிலங்களைக் காட்டிலும் கல்வி பரவலாக்கம், பாலின சமத்துவம், சுகாதாரம், பொருளாதாரம், மதநல்லிணக்கம் எனப் பல தளங்களில் மேம்பட்டு விளங்குவதற்கான காரணமாக விளங்கும் திராவிட இயக்கத்தின் தோற்றுவாயான நீதிக்கட்சியை அதன் தொடக்கக் காலம் முதலே வளர்த்தெடுத்து, பாதுகாத்து, அதிகாரத்தைக் கைப்பற்றி பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு, அக்கட்சியின் சரிவின் போதும் தடம் மாறாமல், கொண்ட கொள்கையில் உறுதியுடன் இறுதி வரை அவ்வியக்கத்திலேயே பயணித்த தலைவர்கள் மிகச் சிலரே.

அவர்களுள் முதன்மையானவர் 'தமிழவேள்' திரு.பி.டி.ராஜன் அவர்கள். 1916 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நீதிக்கட்சி, 1920 ஆம் ஆண்டு இரட்டை ஆட்சி முறையின் கீழ் முதல் முறையாக ஆட்சியைப் பிடித்தபோது, மிக இளம் வயதிலேயே, அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினராகவும், கொறடாவாகவும் விளங்கியவர் தமிழவேள் அவர்கள். பிறகு படிப்படியாக உயர்ந்து நீதிக்கட்சியின் ஆட்சியில் பொதுப்பணி, கூட்டுறவு, சுகாதாரம் உள்ளிட்ட முக்கியத் துறைகளை நிர்வகிக்கும் அமைச்சராகவும், பின்னர் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் விளங்கியவர்.

இக்காலகட்டத்தில், அறநிலையத்துறை சட்ட உருவாக்கம், கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி உள்ளிட்டவற்றில் முக்கிய பங்காற்றியவர். இன்று தமிழ்நாடு அரசின் கீழ் சிறப்பான வகையில் இயங்கும் பல்வேறு துறைகளுக்கு நீதிக்கட்சியின் ஆட்சியில் அமைக்கப்பட்ட வலுவான அடித்தளம் காரணமென்றால் அதில் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களது பங்களிப்பு அளப்பரியது.

தமிழவேள் அவர்கள் அரசியல் துறையில் மட்டுமல்லாது, மதுரையில் திருவள்ளுவர் கழகம் அமைத்தது, மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கி அதன் பொன்விழா நிகழ்ச்சியைப் பிரம்மாண்டமாக நடத்தியது, உலகத் தமிழ் மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுரை வழங்கியது என மொழி

வளர்ச்சிப் பணிகளிலும், மன்னர் காலத்திற்குப் பிறகு மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலைப் புனரமைத்து பிரம்மாண்டமாகக் குடமுழுக்கு விழா நடத்தியது, சபரிமலை ஐயப்பன் திருக்கோவிலில் புதிய ஐம்பொன் சிலையை நிறுவி, ஐயப்ப வழிபாட்டினை பரவலாக்கியது, மேலும் பல பழமை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டது என ஆன்மீகப் பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பன்முக ஆளுமையும் ஆவார்.

அரசியல், மொழியியல், ஆன்மீகம் என எந்த தளத்தில் இயங்கினாலும், முழு சனநாயக அணுகுமுறையைக் கடைப்பிடித்த ஒப்பற்ற பண்பாளர் திரு.பி.டி.ராஜன் அவர்கள். அக்காரணத்தினால்தான் கட்சி வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் கடந்து பல்வேறு தலைவர்களால் மிகவும் மதித்துப் போற்றப்பட்டு வருகிறார்.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் ஆன்மீகத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த போதிலும், அதனை ஒருபோதும் அரசியலில் கலக்காத அவரது ஒப்பற்ற பண்பும், தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையில் இறுதிவரை சமரசம் இல்லாமல் பயணித்த மன உறுதியும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதுபோன்று தமிழவேள் அவர்களின் போற்றுதலுக்குரிய பொதுவாழ்வு பல்வேறு படிப்பினைகளை வழங்கக்கூடியதாக அமைந்திருக்கும் காரணத்தினாலேயே, அவற்றை இன்றைய இளம் தலைமுறையினரிடம் அறிமுகப்படுத்த வேண்டும் என்கிற நோக்கோடு, அப்பெருமகனாரின் 50 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவர்தம் வாழ்க்கைக் குறிப்பு, நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்க மாநாடுகள் மற்றும் பல்வேறு பொது நிகழ்வுகளில் அவர் ஆற்றிய முக்கிய உரைகள், அவர்தம் பெருமைகள் குறித்து அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் உள்ளிட்ட சான்றோர்கள் பலர் கூறிய கருத்துக்களையும் தொகுத்து ‘தமிழவேள் நினைவுகளில் 50’ எனும் மின்னூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அன்றும் இன்றும் என்றும்
திராவிடப் பாதையில்















பொருளடக்கம்

தமிழவேள் பி.டி.ராஜன் ஓர் அறிமுகம்

- **தலைவர் பி.டி. ராஜன்**
  K. பரமசிவம்.....20

தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகளும் கட்டுரைகளும்

- **தீண்டாமையானது நமது தேசிய முன்னேற்றத்திற்கு பெருந்தடையாய் இருக்கிறது**.....31
- **சுயமரியாதை இயக்கத்தின் சில முக்கிய அம்சங்கள்**.....37
- **சுயமரியாதை இயக்கம் நாஸ்தீக இயக்கம் அல்ல**.....39
- Address on Communal Representation, Recruitment Policies, and Departmental Reforms in the Madras Presidency.....41
- The Madras Co-operative Societies Bill 45
- A Bill to Facilitate the Working of Co-operative Land Mortgage Banks in the Presidency of Madras.....48
- Amendment to Madras Cooperative Societies Act.....53
- What the Justice Party has done for the Depressed Classes.....56
- **அரசியலில் மதத்தை புகுத்த நான் விரும்பவில்லை**.....62
- Justice Party and Rural Reconstruction.....70
- **வெற்றி நமதே என்பதில் சிறிதும் சந்தேகம் வேண்டுவதில்லை**.....73
- We want Government based on the Will of the Indian People.....76
- **அரசியல் ஞானம் புத்தகப் படிப்பால் வராது**.....87
- Address on the Role of the Speaker and the Vision for Tamil Nadu's First Legislative Assembly.....89
- **மேடைப்பேச்சு**.....92
- Speech at the Golden Jubilee of Tamil Sangam, Madurai.....97
- **சர்வ கட்சி கூட்டணியின் 'வேலைநிறுத்தப் போராட்டத்தின்' நன்றி அறிவிப்பு**.....102
- An Excerpt from his maiden speech at Madras Legislative Council, 1958.....103
- **தமிழை உலகெல்லாம் பரவச் செய்வது எப்படி?** 112

- **எதையும் நம்மேல் திணிக்கலாம் என்று கருதுபவர்கள் அறிவுடையவராகமாட்டார்கள்!** 114
- **Welcome Speech at The Justice Party Golden Jubilee Celebration** 120
- **தமிழ்ப் பெண்கள்**.....148
- **The Tamils**.....153
- **சட்ட அமைதி காத்த தி.மு.கழகத்தையே மீண்டும் அரசில் அமர்த்துங்கள்!**.....179
- **தேர்தல் முடிவுகள்: ஒரு கண்ணோட்டம்!**.....181

தமிழவேள் – தமிழ்த் தொண்டும், இறைத்தொண்டும்

- **தமிழ் வளர்த்த பெருந்தகை**
  நாவலர் இரா.நெடுஞ்செழியன்.....187
- **தமிழவேள் பி.டி.ஆர் அவர்கள் கல்விக்கு ஆற்றிய தொண்டு**
  சாலமன் பாப்பையா.....189
- **திருவள்ளுவர் கழகம்**.....193
- **தேவிக்குளம், பீர்மேடு உரிமைப் போர்** 197
- **தமிழ்த் திருமணம்** 201
- **தமிழவேள் ஆற்றிய திருப்பணிகள்**.....205

சான்றோர் நோக்கில் தமிழவேள் பி.டி. ராஜன்

- **A leader respected by All**
  M.Bhakthavatchalam.....224
- **தண்டோரா சர்க்கார் - 1**
  அறிஞர் அண்ணா.....226
- **ஆயிரம் பிறை கண்ட அண்ணல்**
  கலைஞர் மு. கருணாநிதி.....233
- **நாங்கள் தமிழவேள் வழியைச் சேர்ந்தவர்கள்**
  பேராசிரியர் க. அன்பழகன்.....240
- **"உள்ளத்தால் பொய்யா தொழுகின்"**
  நாவலர் இரா.நெடுஞ்செழியன்.....244
- **தலைசிறந்த கொறடா - பி.டி.ஆர்**
  ஆசிரியர் கி. வீரமணி.....250
- **சார்லி சாப்ளின் மீசை இப்போது இல்லை**
  இராஜா சர்.எம்.ஏ .முத்தையா செட்டியார்.....253

- **P.T.R. at the Council**
  C.D Natarajan.....257

- **சட்டமன்றத்தில் ராசன்**.....268

இரங்கல் குறிப்புகள்

- **சட்டப்பேரவையில் இரங்கல் தீர்மானம்**.....277

- **தலைவர் கலைஞரின் இரங்கற் செய்தி** 284

- **நாவலர் இரங்கற் செய்தி** 285

திரு. M.T. சுப்பிரமணிய முதலியார்

- **தலைவர் உத்தமபாளையம் முதலியார் மறைந்தார்**
  தந்தை பெரியார்.....287

இணைப்புகள்

- **The Non-Brahmin Manifesto** 290

- **The Significance of the Justice Party**
  Eugene F. Irschick.....298

- **The Justice Party and The Tamil Renaissance**
  Robert L.Hardgrave.....303

உதவிய நூல்கள்

நன்றி

தமிழவேள் பி.டி.ராஜன்
– ஓர் அறிமுகம்

தமிழ்வேள் பி.டி.ராஜன் (1892-1974)



இயற்பெயர்
பொன்னம்பல தியாகராஜன் (பி.டி.ராஜன்)

பிறப்பு :
22-04-1892

பிறந்த ஊர்:
உத்தமபாளையம், தேனி

தாய் - தந்தை :
திருமதி. மீனாட்சி அம்மாள்
திரு. தியாகராஜ பொன்னம்பல முதலியார்

சிறிய தந்தை :
திரு.M.T. சுப்ரமணிய முதலியார்
அவர்களால் வளர்க்கப்பட்டார்.

பள்ளி :
சேதுபதி மேல்நிலைப்பள்ளி, மதுரை.
(5 ஆம் வகுப்பு வரை)

கல்லூரி:
1909 : கேம்பிரிட்ஜ்
லீஸ் பள்ளி (Leys School)
1912 - ஆக்ஸ்போர்டு ஜீசஸ் கல்லூரி
(வரலாறு),
இன்னர் டெம்பிள் கல்லூரி
– பார்-அட்-லா.

1914 - 1918 :
லண்டனில் நீதிக்கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான திரு **T.M. நாயர் அவர்களின் அறிமுகமும், நட்பும் ஏற்பட்டது.**

1918 : தாயகம் திரும்பினார்.

1920 - **(28 வயதில்)** சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கான முதல் **நேரடி தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரானார்.**



1920 - 1932 வரை
நீதி கட்சியின் 'கொறடாவாக' விளங்கினார்.

1923 : திருமதி. கற்பகாம்பாள் அவர்களுடன் திருமணம்.

1926-1929 : **தமிழர்களுக்கு** என்று **தனி பல்கலைக்கழகம் வேண்டி,** இராமநாதபுரம் அரசர் திரு ராஜா ராஜேஸ்வர் தலைமையில், **திரு. பி.டி. ராஜன் அவர்களை செயலாளராகக் கொண்டு** அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை அடிப்படையில், **அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 இல் நிறுவப்பட்டது.**

1930 - 1937 : மெட்ராஸ் மாகாணத்தின் அமைச்சராக பணியாற்றினார்.

04.04.1936 - 24.08.1936 :
மெட்ராஸ் மாகாணத்தின் முதலமைச்சராக பணியாற்றினார்.

1937 :
பிரிட்டிஷ் அரசால் பி.டி.ராஜன் அவர்களுக்கு 'சர்' பட்டம் வழங்கப்பட்டது.

1941 - 1974 :
மதுரை திருவள்ளுவர் கழகத்திற்கு தலைவராக இருந்து தமிழ்த் தொண்டாற்றினார்.

1946 : மதுரை தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் பொறுப்பு. பின்னர் தலைவர் பொறுப்பு.

1947 : 'சர்' பட்டம் துறத்தல்.

1952 : நீதி கட்சியின் சார்பாக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி. (கம்பம் தொகுதி)

1952 : சுதந்திர இந்தியாவில், சென்னை மாகாணத்தின் முதல் தற்காலிக அவைத் தலைவராகப் பணியாற்றினார்.

1956 : தேவிகுளம் & பீர்மேடு இணைப்பை வலியுறுத்தி, சர்வகட்சி கூட்டணியின் சார்பில் நடைபெற்ற போராட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

1956 : மதுரையில் நடைபெற்ற நான்காம் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாவில், 'தமிழவேள்' பட்டம் வழங்கப்பட்டது.


1957 – 1962 : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்.

1958 : சட்டமன்ற மேலவை துணைத் தலைவர் குழு உறுப்பினர்.

17.01.1965 : திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றினார்.

1966 : கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ் மாநாட்டில், 'தமிழ் மொழிக்கு சங்கம் செய்த நன்மைகள்' என்ற ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார்.

1968 : சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி. அவர்களின் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார்.









1968 : தேசிய மயமாக்கப்பட்ட தமிழக கோவில்களில் முதன் முதலில் பார்ப்பனரல்லாதார் அறக்கட்டளையை உருவாக்கினார்.

ஏப்ரல் 22, 1973 : திரு பி.டி.ராஜன் அவர்களின் 82 வது பிறந்தநாள் விழா, முத்தமிழறிஞர் கலைஞர் திரு.மு.கருணாநிதி மற்றும் டாக்டர் ராஜா சர் எம்.ஏ.முத்தையா செட்டியார் ஆகியோரின் தலைமையில், 'ஆயிரம் பிறை கண்டார் நிறைவு விழா' எனும் தலைப்பில் மதுரையில் நடைபெற்றது.

1974 செப்டம்பர் 25 ஆம் நாள், இயற்கை எய்தினார்.



தமிழவேள் ஆற்றிய திருப்பணிகள்

1928, 1951, 1966
வடபழனி முருகன் கோவில் திருப்பணி.

1949 – சபரிமலை ஐயப்பன் கோயில், கேரளா.
ஐம்பொன்னாலான ஐயப்பன் மூலவர் சிலை நன்கொடை
அளித்து ஐயப்பன் வழிபாட்டை தமிழகத்தில் வேரூன்ற செய்தார்.

1955 – 1959 – திருவாதவூர் பெரிய கோயில்
(சிவன் கோயில் புனரமைப்பு பணிகள்),
1959 – இல் அக்கோவிலுக்கு குடமுழுக்கு

1959 – 1963 – மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர்
கோயில் திருப்பணி

1960 – பழமுதிர்சோலை முருகன் கோயில்,
மதுரை – ஞானவேல் நன்கொடை.

1962 – உலகம்மை காசி விஸ்வநாதர் கோயில்,
தென்காசி – மராமத்து பணி
(தலைவர், அரசு திருப்பணிக்குழு)

1963 – திருப்பரங்குன்றம் முருகன் கோவில்
குடமுழுக்கு.

1963 – திருக்குறள் தொடர் சொற்பொழிவுகளுக்கென
ஆடி வீதியில் அழகிய மண்டபம்
(கோவிலுக்குள் தனி மண்டபம்) நிறுவினார்.

1963 – மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்
குடமுழுக்கு (தமிழில் அர்ச்சனையை தொடங்கி வைத்தார்)

1964 – சுப்ரமணிய சாமி கோயில் குடமுழுக்கு, மயிலம்.


1964 – மாரியம்மன் கோவில், குடமுழுக்கு,
கோலாலம்பூர்.


1966 – அகில இந்திய இந்து சமய மாநாடு, டில்லி.

1966 – உத்திரசாமிநாதர் கோயில், டில்லி
ஞானவேல் நன்கொடை.


1972 – வடபழனி முருகன் கோவிலின்
குடமுழுக்கு.

1972 – மதுரை மீனாட்சி அம்மனுக்கு
வைர முடிசூட்டு









தலைவர் பி.டி. ராஜன்

- K. பரமசிவம்

(1972–இல் வெளிவந்த தமிழ்வேள் பி.டி. ராஜன் அவர்களின் 82ஆம் பிறந்தநாள் விழா மலரில், அன்றைய நீதிக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. K.பரமசிவம் அவர்கள் எழுதிய கட்டுரை)



பைந்தமிழ் நாளும் வளர்ந்தோங்கும் பாண்டிய நாட்டின் மேற்குப் பகுதியில் வானளாவும் மலைத் தொடர்களால் சூழப்பட்ட பகுதியே கம்பம் பள்ளத்தாக்காகும். மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழற்காடும் எழில் செய்யும் அப்பகுதியில் குறிஞ்சித் தெய்வமான முருகன் எழுந்தருளியுள்ள சுருளி மலையும், நீர் வீழ்ச்சியும், பெரியாறு அணைக்கட்டும் அமைந்துள்ளன. தமிழறிந்த வைகை ஆற்றுக்குக் "கம்பாநதி" என்றும் பெயருண்டு. அந்நதி தோன்றும் இடமானதால் அப்பகுதி கம்பம் (பள்ளத்தாக்கு) என்று பெயர் பெற்றது. கம்பம் என்னும் பெயர் தாங்கிய ஊரொன்றும் அங்குள்ளது. நீர் வளமும், நிலவளமும் நிறைந்த இப்பகுதி, தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வமும் சேர்ந்து விளங்கும் பெருமைபெற்றது.

அப்பகுதியின் திலகமாக விளங்குவது உத்தமபாளையம் என்னும் அழகிய சிற்றூராகும். பாளையம் என்றால் குறுநில மன்னர்களின் படைவீரர்கள் தங்கும் பாசறை என்பது பொருள். இப்பாளையமோ உத்தமர்கள் பாசறையாக இருந்ததால் உத்தமர் பாளையம் என்று விளங்கிற்றுப் போலும்.

இத்தகு நாடா வளந்தரு நாட்டை நாடி வந்தோர் பலர். அவர்களுள் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், தொண்டை நாட்டிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கு வந்து குடியேறியது, அப்பகுதி மக்கள் செய்த நல்வினைப் பயனே எனக் கூறலாம்.

அப்பகுதியினர் அனைவரின் போற்றுதலையும் பெற்றவராக அத்தொண்டை மண்டல வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பொன்னம்பல முதலியார் என்ற சான்றோர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய பண்பாடுகளில் சிறந்து வாழ்ந்தார் அவர்.

அவர் வாழ்க்கைத் துணைவியார், மீனாட்சி அம்மாள், **'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'** என்பதனையே தலையாய அறமாகக் கொண்டு

இல்லறம் நடத்தி வந்தார்கள். நற்றவத்தின் பயனாய் மற்ற எல்லாச் செல்வங்களையும் குறைவில்லாது பெற்றது போன்று இவர்கள் மக்கட் செல்வமும் பெற்று இனிது வாழ்ந்தனர். இவர்கள் பெற்ற மக்கள் ஐவர். அவர்களுள் மூன்றாவது மகவாக 1892-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பொன்னம்பலத் தியாகராசன் பிறந்தார். இவர்தான் இன்று பி.டி. ராசன் என்றும், "தமிழவேள்" என்றும் தமிழ் மக்களால் அன்பும் மதிப்பும் கொண்டு அழைக்கப்படுபவர். இத்தகைய சிறப்பும் புகழும் பெற்றமைக்குக் காரணம் அவர் எப்பொழுதும் பொதுநலம் ஒன்றையே பெரிதாகக் கருதி, தன்னலமின்றி நல்லன எல்லாம் கடன் என மேற்கொண்டு உதவி வருவதேயாகும்.

அவர்கள் குடும்பம் பாளையத்தை மட்டும் தங்கள் இருப்பிடமாகக் கொள்ளாது, மதுரை மாநகரையும் தங்கள் உறைவிடமாகக் கொண்டிருந்தது. அந்தக் குடும்பத்தினரின் அடிப்படைப் பண்பாக அமைந்த "விருந்தோம்பலில்" இன்றும் சற்றும் குன்றாது விளங்குவதைக் காணலாம்.



திரு. பொன்னம்பல முதலியார்

பொன்னம்பலத் தியாகராஜன் தனது ஏழாவது வயதில் பெருமைமிகு தந்தையையும், பன்னிரெண்டாம் வயதில் அருமைத் தாயையும் இழந்தார். தாயார் மீனாட்சி அம்மாள் சிறுவயதிலேயே ராசனுக்குத் தெய்வ பக்தியை ஊட்டி வளர்த்தார்கள். தாம் கோவிலுக்குச் செல்லும் பொழுதெல்லாம் சிறுவன் இராசனையும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலுக்கும், செல்லூர் திரு ஆப்புடையார் கோவிலுக்கும், திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கும் சென்று வழிபடும் பொழுது "ஆண்டவனே! என் மகன் வீட்டில் நீதான் விளக்கேற்றி வைத்துக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக் கொள்வது வழக்கம். அப்பொழுது இராசனுக்கு அதன் பொருள் விளங்காதவயது. விளக்கேற்றிவைப்பதென்றால் விளக்கின் ஒளியை போன்று இல்லத்தில் இன்பம் நிறைந்திருக்க வேண்டும் என்பதே அத்தாயின் வேண்டுகோளின் பொருள் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே ராசன் உணர்ந்தார்.

ராசனின் தந்தையாருடன் பிறந்தோர் நால்வர். அவர்களுள் ஆடவர் மூவர். தந்தையின் மரணத்துக்குப் பின் சிறிய தந்தை எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்களே குடும்பத்தலைவராக விளங்கி வந்தார். தாய், தந்தையை இழந்த பிள்ளை என்பதால் ராசன் வீட்டில் செல்லமாக வளர்க்கப் பெற்றார். அதனால் படிப்பில் அவர் வேண்டிய அளவு அக்கறை காட்டவில்லை. தான் பயின்ற மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் பெரியகுடும்பத்துப் பிள்ளை என்பதால் ராசனை, ஆசிரியர்களும் அதிகமாகக் கண்டிக்காது விட்டனர். இராசன் சரியாகப் படிக்காதது சுப்பிரமணிய முதலியாருக்குப் பெருங்கவலையைக் கொடுத்து வந்தது. அதுபற்றித் தம் நண்பர்களிடம் அவர் அடிக்கடி கூறி வருந்துவதுண்டு. ஒரு சமயம் பாரிஸ்டர் கரியப்பாவிடம் இதுபற்றி பேசிக்கொண்டிருந்த பொழுது, "ராசனை இங்கிலாந்திற்கு

அனுப்புங்கள். சரியாகப் படிக்கப் போகிறார்" என்று அவர் கூறினார்.

அக்கருத்தை முதலியார் அவர்கள் மனதிற்கொண்டு, நன்கு சிந்தனை செய்து முடிவில் ராசனை மேல் நாட்டிற்கு அனுப்புவது நல்லது என்ற முடிவிற்கு வந்தார். அப்பொழுது ராசன் மதுரை சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவம் படித்து கொண்டிருந்தார். பதினேழு வயதே நிறைந்த இளைஞனை 6,000 மைலுக்கு அப்பாலுள்ள கடல் கடந்த ஒரு நாட்டிற்கு அனுப்புவதென்றால் தக்க துணை வேண்டுமே என்ற கவலை சுப்பிரமணிய முதலியாருக்கு இருந்தது. நல்வினைப் பயனால் அவர் விரும்பிய துணையும் கிடைத்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்த ராஜா ரீனியஸ் என்னும் ஒரு கிறிஸ்துவ இளைஞர் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தார். அவர் உடல் நலம் சரியில்லாது தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து சில காலம் தங்கி இருந்து, மறுபடியும் தம் படிப்பை முடிப்பதற்காக இங்கிலாந்துக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் இராசனைத் தன்னுடன் அழைத்துச் சென்று, அங்கு ஒரு நல்ல பள்ளியில் சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இந்த நல்வாய்ப்பை முதலியார் அவர்கள் பயன்படுத்திக் கொண்டு 1909-ல் இராசனை ராஜா ரீனியசுடன் இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், மதுரை சௌராஷ்டிர சமூகத்தின் பெருத்தலைவரான ராஷ்டிரபந்து எல்.கே.துளசிராம் அவர்களும், வியாபார நிமித்தமாக ஜெர்மனி செல்ல இருந்தவர் இராசனுடன் தாமும் துணையாக செல்ல முன்வந்தது சுப்பிரமணிய முதலியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. மேலும் தரங்கம்பாடி கே. சி. சுப்பிரமணியமும் பாரிஸ்டர் கல்வி பயில ராசனுடன் சென்றார்.

இங்கிலாந்து சென்ற ராஜன் கேம்பிரிட்ஜில் "லீஸ்" பள்ளியில் சேர்ந்தார். அப்பள்ளியின் தலைமை ஆசிரியரான டாக்டர் பார்பர், வெகு தூரத்திலிருந்து வந்திருக்கும் சிறுவன் என்று ராசனிடம் அன்பும், பரிவும் காட்டி வந்தார். அதனால் அங்கும் அவர் செல்லப் பிள்ளையாகவே இருந்தார்.



கேம்பிரிட்ஜில் பள்ளிப் படிப்பு முடித்ததும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில வேண்டும் என்று விரும்பினார். அதற்காக ராசன் ஒரு பாதிரியாருடன் வசிக்க வேண்டியிருந்தது. ஆக்ஸ்போர்டு நுழைவுத் தேர்விற்கு அவர் மிகக் கவனத்துடன் பயிற்சி கொடுத்து அதில் இராசனை வெற்றி பெறவும் செய்தார். அவருடைய உதவியால் 1912-ல் ஆக்ஸ்போர்டு "ஜீஸஸ்" **(Jesus College)** கல்லூரியில் சேர்ந்தார்.

சிறிய தந்தைக்கு இராசன் **I. C. S.** படித்து உயர்ந்த அரசாங்கப் பதவியில் இருக்க வேண்டுமென்ற ஆசை. ராசனுக்கோ தாம் யாரிடமும் அடிமை வேலை பார்ப்பதில் சற்றும் விருப்பமில்லை. அதனால் பாரிஸ்டர் தேர்வு எழுத விரும்பினார். "பால்பீர் சிங்" என்ற நண்பர் சட்டத் தேர்வு எழுத மாணவர்களைத் தயாரிக்கும் ஒரு பிரபல ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார். அந்த ஆசிரியர் "தேர்விற்கு 30 நாட்கள்தான் இருக்கின்றன. என் 20 ஆண்டு அனுபவத்தில்

30 நாட்களில் பாடங்களனைத்தையும் படித்து முடித்த மாணவனை நான் பார்த்ததில்லை; நேரத்தையும் செல்வத்தையும் வீணாக்காதே வீடு போய்ச் சேர்" என்று கூறி விட்டார். அவர் பேச்சைக் கேட்டு தளர்ச்சியடையாது பால்பீர்சிங் "கேம்பிரிட்ஜ்" என்ற ஓர் ஆசிரியரிடம் ராசனை அழைத்துச் சென்றார். அவர் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர். பாடம் கற்பிக்கத் தாம் தயாரென்று அவர் கூறிய வார்த்தைகள் ராசனுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. இரவு பகலென்று பார்க்காது பாடங்களைப் படித்தார். அதுவரை இராசன் அவ்வாறு அக்கறையுடன் படித்ததே கிடையாது. கேம்பிரிட்ஜும் மிகவும் முயற்சி எடுத்து பாடங்களைக் கற்பித்தார். விடா முயற்சியின் பயனாக ராசன் அத்தேர்வில் வெற்றி கண்டார். அவர் பாரிஸ்டர் பட்டப் படிப்பிற்காகப் பயின்ற கல்லூரியின் பெயர் "இன்னர் டெம்பிள்". தேர்வில் வெற்றி பெற்று பார்-அட்-லா பட்டமும் பெற்றார்.

1914-ல், பிரெஞ்சு மொழி கற்க வேண்டுமென்று விடுமுறையின் போது சுவிட்சர்லாந்திற்கு நண்பர்களுடன் சென்றிருந்தார். அது சமயம் முதல் மகாயுத்தம் தொடங்கிவிட்டது. நடுநிலை நாடாக சுவிட்சர்லாந்து இருந்தபடியால் ஆக்ஸ்ஃபோர்டுக்குத் திரும்ப முடிந்தது. யுத்த காலத்தில் இராசன் இங்கிலாந்திலேயே இருக்க வேண்டியதாயிற்று. யுத்தத்திற்குப் பிறகு ஒப்பந்தம் (Armistice) ஏற்றப்பட்ட 1918-ம் ஆண்டு நவம்பர் மாதம் தான் ராசன் தாய்நாடு திரும்பினார். டாக்டர் பி. சுப்பராயன் அவர்களும் இராசன் அவர்களுடன் கப்பலில் கொழும்பு வழியாக இந்தியாவிற்குத் திரும்பினார். தனுஷ் கோடியிலிருந்து இரயில் வழியாக மதுரை வரும் பொழுது, இராமநாதபுரம் அரசராகிய முத்து ராமலிங்க சேதுபதி அவர்கள் இராமநாதபுரம் இரயில் நிலையத்தில் ராசனைச் சந்தித்து வரவேற்று உணவு அளித்தார். சேதுபதி குடும்பத்தினரும், உத்தம பாளைய முதலியார் குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்கள். ஒரு முறை இராசனுடைய தந்தையைக் காணுவதற்காகப் பாஸ்கர சேதுபதி அவர்கள் மதுரையில் முதலியார் வீட்டிற்கு வந்த பொழுது ராசன் சிறுவனாக இருந்தார். சேதுபதி அவர்கட்கு வீட்டில் அப்பொழுது அளித்த சிறந்த வரவேற்பு இன்னும் அவர் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக இருந்து வருகிறது.

மதுரையில் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் கூடி ராசனை வரவேற்றனர். சிறிய தந்தை சுப்பிரமணிய முதலியார் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். அச்சமயம் மின்டோ-மார்லி சீர்த்திருத்தத்தின்படி 1920ல் சட்டமன்றத் தேர்தல் நடக்கவிருந்தது. ராசனின் நெருங்கிய நண்பர்கள் அவரை நீதிக் கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்குமாறு வேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அவர் நிற்பதாக செய்தித்தாள்களும் விளம்பரப்படுத்தி விட்டனர். இதைக் கண்ணுற்ற சுப்பிரமணிய முதலியார், தன் மகன் வழக்கறிஞர் தொழிலைச் சரியாக நடத்துவதற்கு முன்பு, அரசியலில் நுழைவதை விரும்பவில்லை. ஆனால் மதுரையிலுள்ள கட்சிக்காரர்கள் அனைவரும் முதலியாரவர்களிடம் "ஐயா! வரும் தேர்தலில் தாங்கள் போட்டியிடவேண்டும்! இல்லையேல் தம்பி போட்டியிடவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். (ராசனவர்களை கட்சிகாரர்களும், மற்றவர்களும் தம்பி என்று அழைப்பது வழக்கம்). அனைவரது விருப்பத்தின்படி, ராசனவர்கள் தேர்தலில்

தொடக்கத்தில் கட்சியின் கொறடாவாக இருந்த அவர்கள், 1945-ல் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்பெரும் பொறுப்பினை இன்று வரையிலும் அவர்களே ஏற்று நடத்தி வருவது கண்கூடு !

போட்டியிட்டார். “பி. டி. ராசன்” என்று சொன்னால் ஒருவேளை பொதுமக்கட்குத் தெரியாமல் போய்விடுமோ என்று கருதி
“பி. டி. ராசன்” என்ற உத்தம பாளையம் முதலியார் என்ற விளக்கம் வாக்குச் சீட்டில் கொடுக்கப்பட்டது. எனவே, பொதுமக்கள், ராசன் அவர்களைக் கண்ணால்கூட பார்க்காமல் வாக்களித்தனர். ஒரு முறை மட்டுமன்று, பல முறைகளிலும் இவ்வாறே வாக்களித்தனர் என்றால் “உத்தமபாளையத்து முதலியார் குடும்பத்தாரிடம்“ பொது மக்கள் எத்துணை அன்பும், மரியாதையும் கொண்டிருப்பார்கள் என்பதை அறிய முடிகிறதன்றோ? அப்போதெல்லாம் மாவட்டம் முழுவதும் ஒரு தொகுதியாக இருந்தது. மூன்று முறை போட்டியிட்ட போதும் முதலிடத்திலேயே வெற்றி பெற்றார் தமிழவேள். நான்காவது முறை போட்டி எதுவும் இல்லாமலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடக்க முதற்கொண்டே நீதிக் கட்சியின் சட்டசபைக்கான கட்சிக் கொறடாவாக இருந்து வந்தார்.

அமைச்சர் ராசன்:

முதன் முதலில், சென்னை மாகாணத்தில் 1920-ல் நீதிக் கட்சியின் அமைச்சரவை ஏற்பட்டது. 1926க்கு மேல் டாக்டர் பி. சுப்பராயன் அவர்களின் அமைச்சரவை ஏற்பட்டு 1930 வரையிலும் நீடித்தது. பின்பு மீண்டும் 1930ல் நீதிக் கட்சியின் அமைச்சரவை ஏற்பட்டது. அப்போது அமைச்சர்கள் மூவரேயாவர்! பி. முனுசாமி நாயுடு, அவர்கள் முதல்வராகவும் ராசன் இரண்டாவது அமைச்சராகவும், குமாரசாமி ரெட்டியார் மூன்றாவது அமைச்சராகவும் இருந்தனர். சிறிது காலத்தில், அமைச்சர் அவையில் சிறு மாற்றம் உண்டாயிற்று.
பொப்பிலி அரசர் முதலமைச்சரானார். அப்போதும் ரசானவர்கள் அமைச்சராகவே இருந்தார். 1937-ல் குமாரசாமி ரெட்டியாருக்கு பதில் **M.A.** முத்தையாச் செட்டியார் அமைச்சரானார். 1937-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில், மிகச் சில இடங்கள் தவிர ஏனையவற்றில் நீதிக் கட்சி வெற்றி பெறவில்லை.

மேலவை உறுப்பினர்:

1952-ல் இந்திய அரசியற் சட்டப்படி முதன் முதலாகப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் நீதிக்கட்சியின் சார்பில் மதுரை, கம்பம் ஆகிய இரு தொகுதிகளிலும் இராசனவர்கள் போட்டியிட்டார்கள். மதுரையில் வெற்றி கிட்டவில்லை. ஆனால், கம்பத்தில் பெருவாரியான வாக்கு மிகுதியுடன் வெற்றி பெற்றார்கள். பதினான்கு ஆண்டுகள் கழித்துத் தேர்தலில் நின்ற போதிலும், அத்தொகுதி மக்கள் அவரிடத்து எத்துணை ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதனை இதன் வாயிலாக அறியலாம். அப்போது சென்னையில் முதன் முதலாக கூடிய சட்ட மன்றக் கூட்டத்தில் அப்போது முதல்வராக இருந்த இராஜாஜி அவர்கள் வேண்டுகோளுக் கிணங்க ராசனவர்கள் அதற்குத் தற்காலிக சபா நாயகராக இருந்து எல்லா உறுப்பினர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்பு 1957-ல் சட்ட மன்றத்தில் மேலவை உறுப்பினராக **(M.L.C.)** தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

ராசனவர்கள் நீதிக் கட்சியில் சேர்ந்த நாளிலிருந்து, இன்று வரை அதன் ஆக்கத்திற்குப் பல்லாற்றானும் உறுதுணை புரிந்து வந்துள்ளார். தொடக்கத்தில் கட்சியின் கொறடாவாக இருந்த அவர்கள், 1945-ல் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்பெரும் பொறுப்பினை இன்று வரையிலும் அவர்களே ஏற்று நடத்தி வருவது கண்கூடு !

ராசனவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஏற்ற பொறுப்புகள் பற்பல. உழவு, கூட்டுறவு, பத்திரங்கள் பதிவு, பொதுப்பணி, கால்நடை ஆகிய துறைகள் அமைச்சர் இராசனவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. கூட்டுறவுத்துறை நலிந்து போய் அழிந்து விடுமோ என்று அனைவரும் எண்ணிக் கொண்டிருந்த காலத்தில், இராசன் அதற்குப் புத்துயிர் அளித்துத் தமிழகமெங்கும் கூட்டுறவு நன்கு வளர்ச்சியுற வழி வகுத்தார்கள்.

அன்று அவர்கள் வகுத்த வழியிலேதான் இன்று தமிழ் நாட்டில் கூட்டுறவு நன்முறையில் வளர்ந்து, பெருகிப் பாரோர் போற்றும் வகையில் சிறந்து நிற்கின்றது.

உழவுத்துறை முன்னேற்றம் அடைவதற்கு ஆக்க வேலைகள் பல புரிந்தார். ராசனுடைய சேவையைப் பாராட்டி இங்கிலாந்து மன்னர் அவருக்கு 'சர்' பட்டம் வழங்கினார். 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் ராசனவர்கள் தனக்கு ஆங்கிலேயர் கொடுத்த 'சர்' பட்டத்தை வேண்டாமென்று கூறிவிட்டார்.

உழவுத்துறை முன்னேற்றம் அடைவதற்கு ஆக்க வேலைகள் பல புரிந்தார். ராசனுடைய சேவையைப் பாராட்டி இங்கிலாந்து மன்னர் அவருக்கு 'சர்' பட்டம் வழங்கினார். 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் ராசனவர்கள் தனக்கு ஆங்கிலேயர் கொடுத்த 'சர்' பட்டத்தை வேண்டாமென்று கூறிவிட்டார்.

ஆந்திராவில் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டதும், தமிழகத்தில் மற்றொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டும் என மக்கள் பெரிதும் விரும்பினார்கள். அதற்கென ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவர் இராமநாதபுரம் அரசர். செயலாளர் பி.டி. ராசன். அக்குழுவின் பரிந்துரையின் பயனாகவே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பிறந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மதுரைப் பல்கலைக்கழக அமைப்புக் குழுவிலும் ராசன் அவர்கள் உறுப்பினராக இருந்து ஆவன செய்தார்கள்.

1923-ல் ராசனுக்குத் திருமணம் நடைபெற்றது. தமிழவேளவர்களின் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்தவர்கள் கற்பகாம்பாள் என்னும் பொற்புசால் அம்மையாராவர். இவர்கள் தமிழகத்தில் புகழ் பெற்ற வழக்கறிஞராம் கோபாலசாமி முதலியார் அவர்களின் இரண்டாவது திருமகளாவார். தமிழவேளவர்களின் பண்பு நலன்களுக்கேற்ப கற்பகாம்பாளும் குண நலன்களால் உயர்ந்து விளங்குவது இல்லற மாட்சியாகும். கற்பொழுக்கமும், மெல்லியற் பொறையும், துறந்தார்ப் பேணலும், அட்டிற்றெழில் வன்மையும், ஒப்புரவு செய்தலுமாகிய மாண்புகள் பலவற்றை இயற்கையிலேயே பெற்றவர்கள். ஆன்ற உயர் குடிப்பிறந்தவர்களாயினும், பாமரராயினும் தம் இல்லத்திற்கு வருவோரைத் தாமே இன்முகத்துடன் வரவேற்று நல்லுரை கூறும் இயல்பினை என்றும் அவர்களிடத்துக் காணலாம். தமிழவேளவர்களும், கற்பகாம்பாள் அவர்களும் செய்த நற்றவப் பயனாய் பிறந்த நன்மக்கள் கமலத்தியாகராசன், பழநிவேல்ராசன், மீனாம்பாள், சாரதா என்ற அறம் வளர்த்த நாயகி, பாகீரதி ஆகியோராவர்.

1939ல் இரண்டாவது உலகப்போர் தொடங்கிற்று. அப்பொழுது சென்னை ஆளுநராக இருந்த சர். ஆர்தர் ஹோப், ராசனவர்களை அழைத்து, போர் உதவி இயக்கத்திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக்கொண்டார். அதனால் ராசன் அவர்களுக்குத் தமிழ் நாடெங்கும் சுற்றி வந்து ஆங்காங்கு பலரையும் கண்டு, இலட்சியத்தை விளக்க வேண்டிய கடமை ஏற்பட்டது. மதுரை மாவட்ட மக்கள் திரட்டிய நிதியிலிருந்து ஓர் விமானம் வாங்கி அளிக்கப்பட்டது.

1946ல் மதுரைத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவராக இருந்து சங்கத்தை நடத்தி வந்தார். உயர் திரு. T.C. சீனிவாசய்யங்கார் அவர்கள், ராசனை அழைத்து "எமக்கு வயதாகி விட்டது. சங்கப் பொறுப்பை நீங்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். ராசனவர்கள் அதை ஏற்று, திறம்பட நடத்தி வந்தார்கள். குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்தைச்

சங்கத்திற்கு அழைத்தார்கள்; காப்பாளராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். மனமுவந்து இராசேந்திரப் பிரசாத்தும் சங்கக் காப்பாளராவதற்கு இசைந்தார். அவருக்குப் பின் குடியரசுத் தலைவர்களான இராதாகிருஷ்ணன், சாகீர் உசேன் ஆகியோரும் தொடர்ந்து காப்பாளராக இருந்து வந்தனர். ராசன் அவர்கள் தமிழ்ச் சங்கப் பொன்விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இயல், இசை, நாடக விழாக்கள் ஏழு நாட்களிலும் மதுரையில் நடைபெற்றன. அதுபோன்ற ஒரு விழா அதற்கு முன்பும் பின்பும் மதுரையில் நடைபெற்றதில்லை என்றே எவரும் குறிப்பிடுவர்.

1953ல் கேரளாவுடன் இணைக்கப்பட்டிருந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டுமென்று சர்வகட்சிகளும் விரும்பின. அதற்காக சர்வகட்சிப் போராட்டம் ஒன்று நடைபெற்றது, இராசனவர்கள் அந்த போராட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டுமென்று சர்வகட்சிக் கூட்டம் முடிவு செய்தது. அதற்குக் காரணம் அறிஞர் அண்ணா அவர்களே. ராசன் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு மதுரைக்குத் திரும்பினார்கள். அது சமயம் ராசன் அவர்கள் அன்றிருந்த அமைச்சர்கள் சிலரின் எண்ணத்தின்படி, அரசாங்கத்திற்கு எதிராகச் சட்டவிரோதமான போராட்டங்களில் கலந்து கொள்ளமாட்டார் என்று ஒரு புரளி சென்னையில் கிளப்பப்பட்டது. ராசனவர்கள் சென்னைக்குத் திரும்பிய பொழுது அண்ணா அவர்கள் காஸ்மாபாலிடன் கிளப்பிற்கு வந்து ராசனவர்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். முகச்சவரம் முடிந்தபின் பார்க்கலாமென்று ராசன் சொன்னதற்கு, "இல்லை உடனே பார்க்க வேண்டு" மென்று அண்ணா சொன்னார். அவர் அவசரத்தை முன்னிட்டு அரைச் சவரமுகத்துடன் பார்த்தபொழுது "என்ன நீங்கள் எல்லைப் போராட்டத்தில் தலைமை வகிக்க மாட்டேனென்று சொல்லி விட்டீர்களாமே, இது உண்மைதானா"? என்று அண்ணா கேட்டார். அதற்கு ராசனவர்கள் "நான் ஒரு வாக்குக் கொடுத்தால் அதை மீறமாட்டேன் என்று உங்களுக்குத் தெரியுமென்றுதான் நினைத்தேன்" என்று அண்ணாவிடம் கூறினார்கள். "உங்கள் சந்தேகத்தை இப்பொழுதே நிவர்த்தி பண்ணுகிறேன். அந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்து கடைசிவரை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பேன்" என்று மேலும் தெரிவித்தார். ராசனுடைய வார்த்தைகளைக் கேட்ட அண்ணா மன நிறைவுடன் காஞ்சீபுரம் திரும்பினார்.

மக்களுடைய தேவிகுளம்-பீர்மேடு உரிமை ஆர்ப்பாட்டம் தமிழ் நாடெங்கும் அமைதியாக நடைபெற்றது. இப்போராட்டத்தின் வெற்றிக்குக் காரணம் தலைவரும் போராட்டக் குழுவும் அமைதியைக் கடைப்பிடித்தது தான்.

1949ல் சபரிமலை ஐயப்பசாமி கோவிலில் யாரோ சில கயவர்கள் நெருப்பு வைத்துவிட்டனர். அதன் காரணமாக மூல விக்கிரகம் சேதமுற்றது. கேரளாவிலிருந்த ஐயப்பன் பக்தர்கள் அதனால் மிகவும் மனக்கலக்கம் அடைந்திருந்தனர். கேரள அரசாங்க ஆதரவும் எதிர்பார்த்த அளவு இல்லை. அதனால் ஐயப்பசாமி கோவிலில் ஒரு புது விக்கிரகத்தைச் செய்து பிரதிஷ்டை செய்வதற்குமுன், தமிழ் மக்கள் ஆதரவையும் பெற வேண்டுமென்று விரும்பினர். எனவே ராசனின் உதவியை நாடினார்கள். அவர்களுடைய கவலையை அறிந்த ராசனவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். அதன் பின் தமிழ் நாடெங்கும் பவனி வருவதற்கென ஒரு ஐயப்பசாமி விக்கிரகத்தை அமைத்து அதனை அணிபெற அமைந்த ஒரு பேருந்து வண்டியில் வைத்து அதற்கு வேண்டிய ஆட்களுடன், திருநெல்வேலி வழியாக மதுரைக்கு அனுப்பினார்கள். ராசன் தலைமையில் மதுரையிலிருந்து புறப்பட்டு தமிழ்நாடு முழுவதும் பவனி வந்தது. இது மக்களிடையே ஒரு பெரும் எழுச்சியையும்

பக்தியையும் உண்டுபண்ணிவிட்டது. அதன் பயனாக இன்று இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் ஆண்டுதோறும் சபரிமலைக்கு பயபக்தியுடன் சென்று வருவதை நாம் காணலாம்.

திருப்பணிகள்

ராசன் அவர்கள் 1928ல் சென்னை கோடம்பாக்கம் வடபழனியாண்டவர் கோவிலுக்குச் சென்றார். அங்கிருந்த பரம்பரை தர்மகர்த்தா பாக்கியலிங்கத் தம்பிரானைச் சந்தித்தார்கள். அக்கோவிலைத் திருப்பணி செய்வதில் அவருடன் தானும் ஈடுபட்டார்கள். அப்பொழுது அது ஒரு சிறு கோவிலாகவே இருந்தது. இராசன் அவர்கள் தன் நண்பர்களிடம் சிறிது சிறிதாக ரூ. 30,000/- நிதி பெற்று வடபழநியாண்டவர் கோவில் திருப்பணியை ஆரம்பித்தார்கள். அன்று முதல் அது நாளடைவில் வளர்ச்சியுற்று ஒரு புகழ்பெற்ற தலமாகி இன்று மிகப்பெரிய முருகன் கோவிலாக விளங்குகின்றது. சென்ற ஆண்டு (1972) இராச கோபுரம் கட்டப்பட்டு, ராசன் அவர்கள் தலைமையிலேயே சிறப்பான முறையில் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது.

திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரின் பிறப்பிடமாகிய திருவாதவூர் மதுரைக்கு அண்மையில் உள்ளது. அங்குள்ள பெரிய கோவில் கவனிப்பார் அற்று மிகவும் சீர்குலைந்து இருந்தது. அக்கோவிலுக்குச் செல்லும் மக்களும் அதிகமில்லை. 1955ல் அதற்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று ராசன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப் பெற்றது. 1959ல் திருப்பணி வேலை முடிந்து குடமுழுக்கு விழா நடைபெற்றது. குடமுழுக்கு விழா முடிந்து எல்லோரும் ஒரு விடுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது "திருவாதவூர் கோவில் திருப்பணி முடிந்தது. இனி மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கும் நீங்கள் தான் திருப்பணியைச் செய்து, குடமுழுக்கு விழா நடத்த வேண்டும்" என்று அங்கு குழுமியிருந்த அனைவரும் ராசனிடம் கூறினர். அது மிகப் பெரிய வேலை என்று இராசன் தயங்கினார்கள். "நீங்கள் முன்வந்து செய்யவில்லை என்றால் வேறு யாரும் அதைச் செய்யப் போவதில்லை" என்று ஒருவர் கூறினார். அதைக் கேட்டும் ராசன் அந்தப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். ஆனால், அவருடைய நண்பர்கள் விடாப் பிடியாக வற்புறுத்தவே அந்தப் பணியையும் மேற்கொண்டார்.

மதுரைக் கோவிலில் திருப்பணிக்குழு 1959ல் இராசன் தலைமையில் செயல்படத் தொடங்கிற்று. தமிழ் நாட்டில் எங்கும் அதுவரை நடைபெறாத முறையில் பதினான்கு கோபுரங்களும் புதுப்பிக்கப்பட்டன. எல்லா விக்கிரகங்களுக்கும் மருந்து சாத்தப் பெற்றது. 1963ல் மதுரைக் கோவிலில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. கோயில் திருப்பணியுடன் ஆயிரக்கால் மண்டபத்தில் பெரிய அளவில் கலைக் கூடம் ஒன்றை ராசன் பெரும் முயற்சியுடன் அமைத்தார்கள். இன்று நாள் தோறும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டினர் அங்கு வந்து தமிழ் மக்களின் கலைச் செல்வங்களைக் கண்டு வியந்து மகிழ்கின்றனர். திருப்பணி முடிந்ததும் சற்றும் அயராது, ராசன் அவர்கள் ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு வைரமுடி ஒன்று செய்ய வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டார்கள். பற்பல இடையூறுகளுக்கிடையில் மிகவும் வேலைப்பாடுமிக்க அழகான வைர முடி ஒன்று செய்து 11-12-72ஆம் தேதியன்று மதுரை மீனாட்சி அம்மனுக்கு அந்த வைர முடி சூட்டு விழாவும் சிறப்பாக நடந்தேறியது.

திருமுருகனின் ஆறாவது படை வீடாகிய பழமுதிர் சோலை அருவமாக இருந்து வந்தது. பழமுதிர்ச் சோலையாகிய அழகர் கோவில் மலையில் ஒரு கோயில் எழுப்பி அங்கு முருகனை எழுந்தருளச் செய்ய வேண்டுமென்ற விருப்பம் தமிழ் மக்களிடையே பல்லாண்டுகளாக இருந்து வந்தது. அவ்விருப்பத்தை 1960ஆம் ஆண்டு பல எதிர்ப்புக்களுக்கிடையே ராசன் அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். அக்கோயிலில்


எழுந்தருளியுள்ள வெற்றிவேல் முருகனுக்கு சாத்துவதற்காக அழகிய வேல் ஒன்று தயாரித்து மதுரை மீனாட்சி கோயிலில் ஓர் இரவு அம்பிகையிடம் வைத்து வழிபாடு நடைபெற்றது. மறுநாள் கந்தர் சஷ்டி. முதல் நாள் முதலாம் படைவீடாகிய திருப்பரங்குன்றத்திலும், இரண்டாம் நாள் திருச்செந்தூரிலும், மூன்றாம் நாள் திரு ஆவினன்குடி என்னும் பழநியிலும், நான்காம் நாள் திருவேரகம் என்னும் சுவாமிமலையிலும் ஐந்தாம் நாள் குன்றக்குடியிலும் ஒவ்வோர் இரவு மூலத்தானத்தில் வைத்து வழிபாடுகள் நடைபெற்றன. ஆறாம் நாள் மதுரையில் திருக்கல்யாண மண்டபத்தில் அங்கயற்கண் அம்மையுடன் அமர்ந்த ஆலவாய் அண்ணலையும் எழுந்தருளச் செய்து வேலுக்கு வழிபாடு நடைபெற்றது. பின்னர் நான்கு மாசி வீதிகளில் வெள்ளி இரதத்தில் ஊர்வலமாக எடுத்துச் சென்று பழமுதிர்ச்சோலை முருகனிடம் சேர்ப்பிக்கப்பெற்றது. மதுரையில் இருந்து ஆறுபடை வீடுகளுக்குச் செல்லும் வழியெல்லாம் ஒவ்வொரு ஊரிலும் வெற்றிவேலிற்குச் சிறந்த வரவேற்பும் வழிபாடுகளும் நடைபெற்றன. அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பழமுதிர்சோலை புதிய முருகன் கோயிலைப் பற்றித் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பு கிடைத்தது.

The next renovation work I wish to refer to is that of Thiruvanaika in Trichy District. It was started in 1962. It will take some time for the kumbabishekam to be performed. The temple is a huge one and the renovation work requires a lot of money. The Thirumathil known as the 'Vibhoothi Thirumathil' is peculiar to this temple and its renovation will cost a huge amount. The tradition is that when originally the Thirumathil was put up the workmen were given Vibhoothi by way of wages and that this turned into cash, each man getting cash to which he was entitled for his work. The Acharya Swamigal of Kanchi Kamakoti Peetam is very keen on the renovation of this Thirumathil. My esteemed friend Sri T. M. Narayanaswamy Pillai is the Chairman of the Renovation Committee. He has been worrying himself to raise the necessary funds. He has been helped by many prominent people. I should like to mention the name of Kripananda Variyar in this connection. He delivered discourses in two or three different places to raise funds for the renovation. His faith in Muruga has made him very popular in Tamilnad and his help in getting funds for the renovation of this temple has been appreciable. Narayanaswamy Pillai looks like a lone mariner who wants to start his ship clear off the rough seas. Unfortunately he has not got that amount of success which his faith and endeavours entitle him to. I did what I could in getting funds for him. More than that, I have been advising him to have implicit faith in Akhilandeswari, so that he may achieve his object.

The next renovation with which I have been connected in my capacity as Chairman of the Renovation Committee is that of Sri Kasi viswanatha swamy Temple, Tenkasi. The temple and tower were built by two of the later Pandyans. The main work contemplated was the construction of the Raja Gopuram which had been badly damaged by fire about 200 years ago. The Pandyan who got the tower built strangely enough anticipated that something would go wrong with the tower and he prayed even then, before this contingency took place, that he would fall at the feet of any one would undertake the repair of the tower when it gets damaged. I could not possibly understand what exactly prompted him, with all his faith in Kasiviswanatha, to think in this fashion. It was merely because of his great humility and a sense of piety that prompted me to undertake the work of renovation. Unfortunately the construction of the Tower could not be done. The temple was however com-

pletely renovated and kumbabishekam was performed. The tower could not be renovated as the cost was estimated at about Rs. 15 lakhs. The work will be started when the temple comes in for better days.

I have dealt with the various aspects of the life of the Tamilians of the present day and the days of old as briefly as possible in view of the limited space available. If I may strike a personal note, I rendered service to my fellow men to the best of my ability, not to seek honour and the days of old fame but to do my duty by my fellow men. One can command respect by being in office. One can possibly command respect by being in possession of immense wealth. I have held office of honour and responsibility but did not possess that amount of wealth which could bring influence. I wished to earn the regard, kindness and confidence of my fellow men by service alone. As an ordinary citizen I did certain things in pursuance of my ideal. In 1952 or so I had to do the Golden Jubilee of the Tamil Sangam. I sought the help of generous minded citizens of Tamilnad. They gave it liberally. I chalked out a programme for the function to take place for 7 days. My friends thought that there was going to be a wild goose chase though they did not express their opinion to me. The programme was gone through successfully and my friends were not only pleasantly surprised but were very happy. To put it briefly, it was a function concerned and executed to be worthy of the Sangam founded by the Pandyan Kings. The people of Madurai city who conducted themselves in a disciplined manner at my request contributed a great deal for the success of the function. These good men wanted the function to be continued for two or three days more. They attended the literary session in the morning, in the evening the music parties and dances, in the night the dramas. The sessions which started from 10 o'clock in the morning, continued till late in the night with a short respite for 3 to 4 hours in the afternoon. It was really a hectic week and I was happy to see that every one enjoyed the functions to his hearts' content though I could not oblige them by extending the function. I was very ably assisted by friends who spared no efforts and did the work willingly and cheerfully to achieve success. I express my gratitude to them for their help and co-operation.

The next time I approached the public for help and co-operation was in connection with war efforts. Congressmen opposed war efforts though some of them kept neutral in view of their realisation that a German victory was a great blow to democracy. People of Tamilnad gave freely and co- operated in getting recruits for the war. Till this war, it was thought that only martial races would contribute to the success. They realised for the first time that brain power is as necessary as physical endurance and mental courage. I was made the leader of the War Front in Tamilnad and this kept me busy both day and night and took me to distant nooks and corners of the country and though is was a great

I wished to earn the regard, kindness and confidence of my fellow men by service alone.

strain, I felt extremely happy in doing my duty to my fellow men and in the cause of democracy. Tamilians by their intelligence, sacrifice, strong sense of duty and service not only earned a name for themselves but also secured a place for India in the military map of the world.

The next time I approached for public co-operation was in connection with the bhavani of Ayyappa idol throughout the nooks and corners of Tamilnad. Some unfortunate creatures had committed sacrilege to the idol of Ayyappa in far off Sabarimalai and the people of Travancore approached me for rectifying the wrongs done by these unfortunate miscreants for a restoration of faith and belief and for giving a new hope and faith to the unfortunate people of Travancore in their sad and miserable plight. I was warned that there might be opposition from those who did not believe in God and that they might make the tour a fiasco. It may be that I gave my word to the people of Travancore in a moment of weakness. But I had complete faith in my fellow men that they would go to the rescue of our neighbours-the Malayalees. People of Tamilnad who had not heard of Ayyappa of Sabarimalai before, were sceptical about the support of Tamilnad. As the bhavani progressed, the idol was received with all veneration and respect wherever it went. Even those, who I was told might stand in the way of this good work, have given their support indirectly and received Ayyappa's blessings. I may add that the tour was such a great success that a new era of faith and belief started in Tamilnad.

One other matter in which I had to seek the support of my fellow men was in connection with the peaceful hartal undertaken by the people of Tamilnad for the purpose of persuading the Central Government to hand over Peermedu and Devikulam to Tamilnad as Tamilians formed a majority of the population in those areas. The Congress government did not take to this kindly though they could not openly condemn peaceful hartal. The police, from the I. G. of police to the men of the rank extended their co-operation fully as they and I were interested in peaceful participation of the people in the hartal. I remember that the then Collector of the District did not see eye to eye with the police. But this made no difference to the hearty co-operation of the police in the District. There were stray instances of subordinate policemen worrying men engaged in peaceful hartal. But that did not matter. On the morning of the day of hartal everything went off peacefully and quietly. It was arranged that people should gather in the Island grounds and start out on a procession. There was some trouble because leading men of the party were not there in time to guide and control the rank and file. When I heard of it I rushed to the scene.

Fortunately for me the Commissioner of Police also arrived then. The situation was in perfect control and the procession started as scheduled and reached Triplicane Beach in a very orderly manner. I had some reason to believe that the rank and file might create a scene against someone who opposed this hartal. So I followed up in the rear though I was asked by the Policemen to go with them and lead the procession. Fortunately nothing happened. The meeting was held and went off successfully. After the meeting the people quietly dispersed homewards. I may add that in the All Parties Conference convened, I was persuaded to take part Little did I suspect that Mr. C. N. Annadurai, the present Chief Minister to the Government of Madras, would propose my name for the leadership of the Peaceful Movement. After visiting Madurai I returned to Madras. Mr. Annadurai appeared to have heard from someone that I had backed out of it. He came poste-haste to the Cosmopolitan Club. He could not wait till I finished my shave. As he was anxious to talk to me I came out of the room and met him. Till I assured him that I would not go back on my word he was doubtful about my participation. I do not know whether he remembers this. The assurance given by me made him feel happy and he went back. When the whole thing was over, my joy knew no bounds. I was not only happy but felt extremely proud of fellow Tamilians. I had maintained a peaceful atmosphere not only in the District but also in Madras. The popular support which I earned on different occasions made me feel a very happy man because as an ordinary citizen I gained the confidence, kindness and courtesy of my fellow men. This I consider as a great reward for my sense of duty.

CONCLUSION

In fine I venture to think that I have given a glimpse into the life of the Tamilians in all its aspects. I am quite conscious of its inadequacy and imperfections. This is mainly due to the fact that I had not kept a diary from my younger days. Besides, if strict control and discipline had been enforced in my school and college days it might be possible that I might have become a better man. My object in writing this is to tell my fellow-men that they have inherited a great legacy from their forefathers. Every individual must develop a sense of pride, not necessarily a false pride which is the fore-runner of one's down-fall. He must develop a genuine pride which will prevent him from deviating from the path of rectitude. If Tamilians do not emulate their forefathers in achieving the pristine glory of those days, it is better that they disappear as other old civilisations have, leaving a memory of their past to be cherished.

* * *

சட்டம் அமைதியைக் காத்த தி.மு. கழகத்தையே மீண்டும் அரசில் அமர்த்துங்கள் !

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், தி.மு.க.வை ஆதரித்து, நீதிக்கட்சித் தலைவர் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தமிழக மக்களுக்கு 21.2.1971 அன்று 'முரசொலி' இதழ் மூலம் ஓர் அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கை, இங்கு கட்டுரையாக கொடுக்கப்பட்டுள்ளது.



நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தல்களினால் நம் நாட்டில் ஒருவிதக் குழப்ப நிலை ஏற்பட்டிருக்கிறது. கட்சிகளின் கூட்டணிகளும், முன்னணிகளும் தேர்தல்களில் உபயோகரமாக இருக்கலாம். ஆனால், மந்திரி சபைகள் அமைப்பதிலும், அவைகள் சரியாகச் செயல்படுவதிலும் இவைகளால் எவ்விதப் பயனும் இருக்காது. என்றாலும், நாம் பொறுத்திருந்து பார்ப்போம். நமது மாகாணத்திலும் கூட்டணிகளும், முன்னணிகளும் உருவாகியிருக்கின்றன.

புதுக் காங்கிரஸ் சட்டமன்றத் தேர்தலில் பங்கு கொள்ளாததால் சட்டமன்ற தேர்தல்களில் பழைய காங்கிரசுக்கும், தி. மு. க. விற்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. சென்ற இருபது ஆண்டுகளாக அதிகாரத்திலிருந்த காங்கிரஸ் கட்சியைப்

பற்றி மக்கள் நன்கு அறிவார்கள். தி.மு.க. சென்ற நான்கு ஆண்டுகள்தான் அதிகாரத்தில் இருந்து வந்திருக்கிறது.

சட்டத்தையும், அமைதியையும் காப்பதில் நீதிக் கட்சியின் மரபை தி. மு. க. அரசு பின்பற்றி இருக்கிறது.

முதன் மந்திரி அவர்கள் தீவிரமான நடவடிக்கை எடுத்திரா விட்டால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகளின் பிரச்சினைகளும் வேறு தொல்லைகளும் ஏற்பட்டிருக்கும். நிலத்தை வன்முறையில் கைப்பற்றும் இயக்கத்தைத் தமிழ் நாட்டில் முளையிலேயே கிள்ளி எறிந்திரா விட்டால் நமது நாட்டில் வெகு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கும். திடமான கொள்கையைப் பின்பற்றியதால் நமது மாகாணத்தில் அமைதியும், சமாதானமும் நிலவுகின்றது.
அண்டையிலுள்ள கேரளா, ஆந்திரா மாகாணங்களை போன்று பலாத்காரமும், நக்சலைட் என்ற அமிதவாதிகளின் நடவடிக்கைகளும் தமிழ் நாட்டில் இல்லாது சகஜ நிலை நிலவி வருகிறது. பொறுப்புணர்ச்சியுடனும் நிதானத்துடனும் நடந்து கொண்டுள்ள தமிழ்நாட்டு மக்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.
சட்டத்தையும், அமைதியையும் பாதுகாப்பதில் மிகுந்த பொறுப்புடன் பணியாற்றி வரும் தி. மு. க. வை மக்கள் இந்த தேர்தலில் முழு மனதுடன் ஆதரிக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

ஒத்துழையாமை இயக்க காலத்திலிருந்தே சென்னை மாகாணத்தின் நிர்வாகத்திறமை இதர மாகாணங்கள் கண்டு வியக்கும்படியாக இருந்து வந்திருக்கிறது.

வாக்காளப் பெருமக்களை நான் மிகவும் வேண்டிக்கொள்வது என்னவென்றால் எந்தக் கட்சியையும் சிறு பெரும்பான்மை ஸ்தானங்களுடன் சட்டமன்றத்திற்கு அனுப்புவது உசிதமல்ல, ஏனென்றால், ஏனோ தானோ என்ற பெரும்பான்மையுடைய கட்சிகள் நிர்வாகத்திற்கு வருவது, ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறுவதற்கும் (இந்த வழக்கம் இந்தியாவில் இதர மாகாணங்களில் சர்வ சாதாரணமாகிவிட்டது) இதர அருவருக்கத்தக்க நடவடிக்கைகள் வளருவதற்கும் காரணமாகிவிடும். இதர மாகாணங்களிலுள்ள குழப்ப நிலைமை நமது தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முக்கியமாக தேர்தல் காலத்தில் சமூக விரோத சக்திகளுக்கு எந்த விதத்திலும் மக்கள் இடங்கொடுக்கக் கூடாது.

★ ★ ★

தேர்தல் முடிவுகள்: ஒரு கண்ணோட்டம்!

(1971 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில், தி.மு.க. மாபெரும் வெற்றிபெற்று, மீண்டும் ஆட்சி அமைத்தது. தேர்தல் முடிவுகள் வெளியானபின், தேர்தல் முடிவுகள் குறித்து தமிழவேள் பி. டி. ராசன் அவர்கள் எழுதிய இக்கட்டுரை 'தென்னகம்' இதழில் 31.3.1971 அன்று வெளியானது.)

தேர்தல் வந்து நடந்து முடிந்து விட்டது. தேர்தல் முடிவுகள் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன. இமயம் முதல் குமரி வரை, வாழும் மக்கள் அனைவரும் ஒரே மனத்தோடு, ஒரே குறிக்கோளோடு வாக்களித்துள்ளார்கள் என்பதைக் காணும் போது, இதென்ன அதிசயம் என்ற ஆச்சரியம் மேலிடுகிறது. இப்படி நடக்கும் என்பதற்கு அடையாளம் எதுவும், ஆரம்பத்தில் தெரியவில்லை.

தேர்தல் பிரச்சாரம், அதன் நினைவுகள் ஆகியவை குறித்து மேலோட்டமாக என் கருத்தினைக் கூற விழைகிறேன். விரிவாக எடுத்துரைக்க நேரமும் இடமும் போதாது.

இந்தத் தேர்தலில் ஒரு சிறப்பு அம்சம், எந்தக் கட்சியும் தனித்துப் போட்டியிடாததுதான். பல்வேறு அரசியல் கட்சிகளும், கோஷ்டிகளும் இரு முகாம்களாகப் பிரிந்து நின்றன; ஒரு முகாம் முற்போக்கு அணி என்றால், இன்னொன்று தன்னை ஜனநாயகக் கூட்டணி (சிண்டிகேட் அணி) என்று அழைத்துக் கொண்டது. அகில இந்திய மட்டத்தில் அந்த ஜனநாயகக் கூட்டணியில் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சி (சிண்டிகேட் கட்சி),ஜனசங்கம், சுதந்திரா, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி ஆகிய நான்கும் இடம் பெற்றிருந்தன. தமிழ் நாட்டில் தி.மு.க. தலைமையில் அமைந்த முற்போக்கு அணியில் பார்வர்ட் பிளாக், முஸ்லிம்லீக், வலது கம்யூனிஸ்ட், தமிழரசுக் கழகம், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகியவை இடம் பெற்றன.

இந்த இரு முகாம்கள், இத்தேர்தலில் ஒன்றையொன்று எதிர்த்தன.

தேர்தல் பிரச்சாரத்திற்குப் பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன – குறிப்பாக சிண்டிகேட் அணிதரப்பில், அவர்கள் கீழ்க்கண்ட சக்திகளை முடுக்கி விட்டனர்:

1. படித்தவர்க்கம்,
2. மாணவர்கள்,
3. நடிகர்களும் நடிகையர்களும்,
4. ஆங்கில, தமிழ் செய்திப் பத்திரிகைகள்,
5. சோ.

பெரியார் நடத்திய சேலம் மாநாடு, தி.மு.கழகத்தை ஒடுக்க-நசுக்க ஆண்டவன் தந்த வரப்பிரசாதமாகக் கருதினர். தி.மு.க. அரசு பெரியார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி, சிண்டிகேட் அணியினர் பிரமாதப்படுத்தினார்கள். சிண்டிகேட் அணிக்குத் தலைமை தாங்கிய சி.ராசகோபாலாச்சாரியார் நவீன கிருஷ்ண பரமாத்மாவாக ஆனார். தேர்தல் போர், குருக்ஷேத்திர யுத்தம் என்பது போன்ற தோரணையைப் பெற்றது.

சென்னை கடற்கரை, போர் களமாக அமைந்தது, தேர்தலுக்கு முன் பெரிய விளம்பரத்தோடு அங்கு ஒரு கூட்டம் ஏற்பாடாகி நடந்தது. ராசகோபாலாச்சாரியாரும், காமராசரும் பேசினார்கள்.

நாற்காலி ஒத்திகை !

சிண்டிகேட் கூட்டணியின் நோக்கம் டில்லியில் செங்கோட்டையையும், சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையையும் பிடிப்பது. தாங்கள் அதற்கான புனிதப்போரை நடத்துவதாகவே அவர்கள் நினைத்தார்கள். தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று சென்னையிலும் டில்லியிலும் மந்திரிசபை அமைக்கப்போவதாக அவர்கள் உண்மையில் நம்பினார்கள். தமிழ்நாட்டில் தி.மு கழகத்தை அழித்தொழித்து கழகத்தவரை பொது வாழ்விலிருந்தே விரட்டிவிடப் போவதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள். மார்ச் 14-ந் தேதியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்றைய தினம் தங்கள் வெற்றி பிரகடனம் செய்யப்படும் என்றும் அந்தத் தேதி முதல் தங்கள் மந்திரிசபைகள் இயங்கத் தொடங்கும் என்றும் எதிர்பார்த்தார்கள். எதிர்கால மந்திரிகள் யார் யார் என்பது பற்றி பேசப்பட்டு சில பழைய காங்கிரஸ்காரர்களின் பெயர்கள் பற்றி முடிவு செய்யப்பட்டதாகவும் அந்த நபர்கள் பதவி பிரமாண விழாவுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்ததாகவும் எனக்கு தகவல் கிடைத்தது. ஆனால் நடந்ததோ!

தேர்தல் போர் ஆரம்பமாவதற்கு முன்னால், நான் பிரதமர் இந்திரா காந்தியை எதிர்த்து வந்தேன். மற்ற கருத்து வேறுபாடுகள் ஒருபுறமிருக்க, நாற்றமெடுக்கத் தொடங்கிவிட்ட அரசியல் துறையில் பெண்களுக்கு இடமில்லை என்பதும் எனது எண்ணம், இதெல்லாம், தி.மு.க.வை அழித்தொழிப்பதே தங்கள் கொள்கை என சிண்டிகேட் அணி திட்டவட்டமாக அறிவிப்பதற்கு முன்னால்! தி.மு.க.வுக்கு ஆபத்து என்றவுடன், நான் எனது ஆதரவைக் கழகத்திற்கும், கழகத்தோடு பின்னர் தேர்தல் உடன்பாடு செய்து கொண்ட இந்திரா காந்திக்கும் தந்தேன்.

முற்போக்கு அணியின் சார்பில், திருமதி காந்தி இந்தியா முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார். இதில் அவர் தமது உழைப்பு, உற்சாகம், திறமை, சக்தி, உறுதி அனைத்தையும் முழுமையாக ஈடுபடுத்தினார். இத்தகைய பிரம்மிக்கத்தக்க, பிரமாண்டமான தேர்தல் பிரச்சாரத்தை இதற்கு முன், அவரது தந்தை ஜவகர்லால் நேரு உள்பட, யாரும் மேற்கொண்டதில்லை.திருமதிகாந்தியுடன்கருத்து உடன்பாடு-வேறுபாடு கொண்ட அனைவரும் அவர், இந்தத் தேர்தல் யுத்தத்தைதனித்து நின்று வெற்றி கண்ட பாங்கினைப் பாராட்டாமல் இருக்க முடியாது; தமிழ் நாட்டில் கலைஞர் கருணாநிதி, சிரமத்திற்குள்ளான அவரது உடல் நிலையையும் பொருட்படுத்தாது, தேர்தல் பிரச்சாரத்தின் மிகப் பெரும் பங்கினை ஏற்றுச் செயலாற்றினார்.

பாரதக் கதை மாறியது!

மார்ச் மாதம் பிறந்தது 1, 4, 7 நாட்கள் முற்போக்கு அணிக்கு வெற்றியைக் குவிக்கும் நாட்களாகவே அமைந்தன. எதிரிகள் புறமுதுகிட்டு ஓடும்படியான மாபெரும் வெற்றி முற்போக்கு அணிக்குக் கிடைத்தது. இதிகாச மகாபாரதக் கதை, தலைகீழாக மாறியது. 'கிருஷ்ண பகவானின்' பக்கந்தான் இந்த யுத்தத்தில், படுதோல்வியுற்றது.

சிண்டிகேட் அணியைச் சேர்ந்த சக்திகளை ஆராய்வது, சுவையாக இருக்கும்.

படித்த வர்க்கம்:

இவர்கள் புத்திசாலிகள் என்பது உண்மையே, ஆனால் வெறும் புத்திசாலித்தனம் மட்டும் பயன் தராது, அதுவும் குறிப்பாக அரசியலில். அவர்கள் அறிந்தோ அறியாமலோ, தமிழ் நாட்டில்

மறைந்திருந்த வகுப்புவாத அரசியலைத் தூண்டி விட்டார்கள்.

மாணவர்கள்:

சர்ச்சைக்குரிய அரசியலில் மாணவர்களை இழுத்தது மிகவும் துர்ப்பாக்கியமானது. சென்ற தேர்தலில் காமராசருக்கு எதிராக மாணவர் ஒருவர் நிறுத்தப்பட்டார். அவருக்காக, ஆதரவு திரட்ட நான் மறுத்தேன். எனினும் அப்போது மாணவர்கள் வெற்றி பெற்றார்கள். இப்போது அப்படியல்ல, கலைஞர் கருணாநிதிக்கு மாணவர்கள் ஒரு கடுமையான போட்டியைத் தந்தது உண்மைதான். ஆனால் அரசியலில் மாணவர்கள் ஈடுபடுவது, மாணவர்களிடையே ஒழுக்கமின்மையை நிரந்தரமாக்கும்.

செய்தித்தாள்கள்:

சில பத்திரிக்கைகள் கட்டுப்பாடாக ஒரு சார்பாகவே நடந்து கொண்ட முறை, பத்திரிக்கைத் துறையின் கண்ணியத்திற்கே களங்கம் ஏற்படுத்திவிட்டது. கட்சி ஏடுகளாக இருந்தாலன்றி, செய்திப் பத்திரிக்கைகளுக்குரிய சிறப்பான இலக்கணமே நடுநிலைதான் (இந்த நெறியை மதிக்காது நடந்து கொண்ட) நாளேடுகள் மனமாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. இனிவரும் தேர்தல்களில், ஆங்கில நாளேடுகளைப் பற்றி கவலைப்படவே தேவையில்லை--அவற்றை சட்டை செய்ய வேண்டியதில்லை. இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தேர்தலுக்குமுன் அறிவித்த அறிக்கை ஒன்றை--இந்த நாளேடுகள் வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தன. காரணம், அந்த அறிக்கையில் நான் எனது ஆதரவைத் தி.மு. கழகத்திற்குத் தெரிவித்தேன்.

புதிய ஆங்கில நாளேடு தேவை !

ஆங்கில நாளேடுகள் இத்தகைய போக்கைக் கொண்டிருப்பதால், தமிழ்நாட்டில் ஆளும் கட்சியான தி.மு. கழகத்தின் கருத்துக்கள், நடவடிக்கைகள் வெளி மாநிலங்களுக்கு உரிய முறையில் எட்ட முடியாது. எனவே நமக்கென்று ஓர் ஆங்கில நாளேடு மிக மிக அவசியமாகும். இந்தத் தேவையை உணர்ந்து, விரைந்து செயல்படும்படியாக கலைஞர் கருணாநிதியை நான் கேட்டுக் கொள்கிறேன். அவரே இதில் நேரடி கவனம் செலுத்த வேண்டும். ஆனால் துவக்கப்படும் நாளேடு கட்சி ரீதியில் அல்லாமல், 'லண்டன் டைம்ஸ்' பாணியில் எல்லா மக்கட் பிரிவினரின் நலனைக் காக்கத் தக்க முறையில் இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

நடிப்பும் நடிகையரும்:

சர்ச்சைக்குரிய அரசியலில் நடிக நடிகைகள் வீணாக இழுக்கப்பட்டனர். அந்த முயற்சியின் நோக்கமும் வெற்றி பெறவில்லை. நடிப்பு ஒரு தனிக் கலை--அதை அரசியலிருந்து ஒதுக்கியே வைத்திருக்க வேண்டும். நடிகர்களும், நடிகையர்களும் ஒரு தனிப்பட்ட முறையில் அவரவருக்கு விருப்பமான அரசியல் கருத்துக்களைக் கொண்டவராக இருக்கலாம்; அதன்படியே தேர்தலில் வாக்கும் அளிக்கலாம். ஆனால் அவர்கள் கலைத்துறையில் ஒரு பிளவையே உண்டாக்கும் அளவுக்குச் செல்லக் கூடாது.

சோ:

தேர்தல் நேரத்தில், தீவிர அரசியலில் 'சோ'வை இழுத்தது துர்ப்பாக்கியவசமாகும். அவர் ஒரு நகைச்சுவையாளர் என்ற முறையில் பொது வாழ்வில் காணப்படும் ஏனோ தானோ போக்குகள் மடமைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதே அரசியல்வாதியைவிட சிறந்த பணியாகும்.

சேலம் நிகழ்ச்சி:

இதை வைத்து சிண்டிகேட் சக்திகள் பிரமாதப்படுத்தியும் கூட, மக்கள் அதைக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை.

சிண்டிகேட் கூட்டணியினர் தோல்விக்கு ஒரு காரணம், திருமதி இந்திரா காந்தியைப் போன்றோ கலைஞர் கருணாநிதியைப் போன்றோ மக்களின் செல்வாக்கைப் பெற்ற பெருந்தலைவர் எவரும் அவர்களிடையே இல்லை. சிண்டிகேட்டின் பிரச்சாரம் அரசியல் பிரச்சாரமாக இருக்கவில்லை. மாற்றுக் கட்சிகளின் கொள்கைகள், திட்டங்களைக் கண்டிப்பதற்குப் பதிலாக தலைவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினர்.

பாவம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை !

மக்கள் இப்படித் தங்களை ஒதுக்கித் தள்ளுவார்கள் என்று சிண்டிகேட் தலைவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அரசியலில் வெற்றி தோல்வி சகஜம்; தேர்தல் நேரத்திலோ; பிறகோ தனிப்பட்ட விரோதகுரோதங்கள் காட்டப்படக்கூடாது. ஆனால் தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தும் மோதல்கள் நிகழ்ந்தன. இந்த வகையில் தமிழ்நாட்டுக்கு இல்லாத பெருமை மைசூருக்குக் கிடைத்தது. அந்த மாநிலத்தில் தேர்தல்கால அசம்பாவிதம் எதுவும் நடக்கக் காணோம்.

தமிழ்நாட்டு மக்கள் நிதானத்திற்கும், நேர்மைக்கும் பெயர் பெற்றவர்கள், ஆனால் சமீபத் தேர்தல்காலச் சம்பவங்கள், அந்த நற்பெயருக்குமாறான களங்கத்தை உண்டாக்கி விட்டன. இனி நடைபெறும் தேர்தல்களிலாவது, அது ஊராட்சி, நகராட்சி, சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களில் எதுவாக இருப்பினும் இத்தகைய அவப்பெயருக்கு இடந்தராமல் பார்த்துக் கொள்வது தமிழ் மக்களது கடமையாகும்.

இந்தத் தேர்தல், வரலாற்றில் தனி இடம் பெற்று விட்டது. எதிர்கால சந்ததியினர் இதை மறக்க முடியாது. காரணம், இத்தேர்தல் மூலம் ஒரு இரத்தம் சிந்தாப் புரட்சியே நடந்திருக்கிறது. ஜனநாயகக் கோட்பாட்டுக்கு, அதன் சிறப்புக்குத் தாங்கள் தகுதியானவர்களே என்பதை வாக்காளப் பெருமக்கள் காட்டி விட்டார்கள்.

அரசியல் மேடைகளிலும், சட்டமன்றங்களிலும் இத்தனை ஆண்டுகாலம் அரசியல்வாதிகள் உரத்த குரலில் வலியுறுத்தி வந்த தேசிய ஒருமைப்பாடு என்ற அந்த உணர்வு இப்போது புத்துயிர் பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தல் நமக்குத் தந்துள்ள படிப்பினைகளில் இது மிக முக்கியமானது. எனவே, இனி அரசியல்வாதிகள்தான், ஜனநாயகக் கோட்பாட்டுக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு சட்டசபையில் கலைஞர் கருணாநிதிக்கும், நாடாளுமன்றத்தில் திருமதி இந்திராவுக்கும் தாராளமான பெரும்பான்மை பலம் கிடைத்திருக்கிறது. இதற்கு முன் எவருக்கும் இப்படி வாய்த்ததில்லை. முறையான எதிர்க்கட்சியே இல்லாத சூழ்நிலையில் முதல்வருக்கும், பிரதமருக்கும் கடமைப் பாடுகள் அதிகரிக்கின்றன. தேர்தல் வெற்றிக் களிப்பில், அவர்கள் சமூதாயத்தின் ஒரு பிரிவினருக்கு மட்டும் சாதகமான காரியங்களை செய்து, மற்ற பொதுமக்களின் நலனுக்கு குந்தகம் ஏற்படும்படியாக நடக்கக்கூடாது.

இது தொடர்பாக, காலஞ் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் நடந்துகொண்ட பாங்கினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்ற அரசியல்வாதிகளைப் போன்றவரல்ல அவர். ஒரு குறிப்பிட்ட சமுதாயப் பிரிவினரின் நலனைவிட,

எல்லாப் பொதுமக்களின் பரவலான நலனைத்தான் அவர் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவார். உடனடிப் பலன் தரக் கூடியது எது ? தனக்கோ தன் கட்சிக்கோ சுலபமாகப் புகழ் தேடித் தரக்கூடியது எது என்கிற முறையில் அவரது சிந்தனை சென்றதில்லை. இந்த மிகச் சிறந்த பண்பு அவரிடம் இருந்ததால்தான் அண்ணாவிடம் மக்கள் பெருமதிப்பும் மரியாதையும், பாசமும் பற்றும் கொண்டிருந்தார்கள். அதனால்தான் அவர் இயற்கை யெய்திய போது வேறு எந்தத் தலைவரின் மறைவின்போதும் இல்லாத அளவுக்கு, மக்கள் எல்லாம் துயரக் கடலில் ஆழ்ந்து அழுது அரற்றினார்கள். அண்ணாவிடம் இருந்த இந்தப் பண்பினை கலைஞர் கருணாநிதியும் திருமதி இந்திரா காந்தியும் மேற்கொள்ள வேண்டும் என விழைகின்றேன். அப்போதுதான் அவர்கள் தலைமையின் கீழ் இயங்குகின்ற மாநில, மத்திய அரசுகளின் முழுச் சிறப்பையும், பலனையும் சமுதாயம் முழுவதும் பெற்று மகிழ இயலும்.

கடைசியாக, தமிழ்நாட்டுக் காவல் துறையினருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் நேரத்தில், குறிப்பாக வாக்குப் பதிவின் போது அவர்கள் மிகச் சிறந்த ஏற்பாட்டினைச் செய்திருந்தனர். மக்கள் பயமின்றி வாக்குச் சாவடிகளுக்குச் செல்லவும், தங்கள் விருப்பப்படி வாக்குகளை அளிக்கவும் முடிந்தது. இந்த வசதியை உருவாக்கத் துணை புரிந்த காவல் துறையினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

தமிழவேள் – தமிழ்த்தொண்டும், இறைத்தொண்டும்

தமிழ் வளர்த்த பெருந்தகை

நாவலர் இரா.நெடுஞ்செழியன்

'தமிழவேள்' என்று தண்டமிழ்ச் செல்வர்களாலும், கற்றறிந்த சான்றோர்களாலும் பேரன்புடன் போற்றப்பட்டுப், பாராட்டப் பெற்று, அழைக்கப்பட்டு வந்த மூதறிவாளர் சர்.பி.டி.இராசன் அவர்களின் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவைச் சிறப்புற நினைவுபடுத்தும் வகையில், 'நூற்றாண்டு நினைவுமலர்' ஒன்றினை வெளிக்கொண்டுவரும் முயற்சி, மிகவும் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் அரசியல் துறை, சமூகவியல் துறை, கலைத்துறை, பொதுவியல் துறை, கூட்டுறவுத் துறை, அறிவியல் துறை, தமிழியல் துறை போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றிப் பலராலும் பெரிதும் புகழப்பட்டவர் ஆவார்.

அவர் உயர்ந்த பண்பாடுகளுக்கு உறைவிடமாக விளங்கினார். அவர் கொடை உள்ளம் படைத்தவர். அவர் எப்பொழுதும் அறநெறியில் நின்றவர். நாணயம் நேர்மை -உண்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்பை அளித்தவர். அவர் அடக்கத்தையும், அமைதியையும் ஒருங்கே கொண்டவர். மாற்றாரும் மதித்துப் பாராட்டக்கூடிய நல்லியல்புகள் பல அவரிடம் உண்டு. அவர் பெருந்தன்மையோடு பழகக்கூடிய பண்பாளர். அவரால் யாருக்கும், என்றும் எவ்விதத் தீங்கும் ஏற்பட்டதில்லை. அவரது உதவியையும், ஒத்துழைப்பையும் பெற்று உயர்ந்தவர்கள் பலப்பலர் ஆவர். அவர் தீந்தமிழினிடத்து நீங்காப்பற்றும், தனியா ஆர்வமும் கொண்டு, அது வாழவும், அதனை வளர்க்கவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலப்பல ஆகும்.

தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள், தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று சிறப்பான முறையில் உருவாக வேண்டும் என்று எண்ணி, அதற்காக அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவுதான், சிதம்பரத்திற்கு அருகில் தோன்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகமாகும். அது உருவாக, அவர் சென்னை மாகாண அரசின் அனுமதியைப் பெறப், பெரிதும் ஒத்துழைப்பை நல்கினார்.

அவர் மனித வாழ்க்கையை நெறிப்படுத்திச் செல்வதற்குரிய ஓர் உயர்ந்த நூல், திருக்குறளேயாகும் என்பதைத் தெளிவாக உணர்ந்து, குறள்நெறிக் கருத்துக்கள், தமிழ் மக்களிடையே பரவலாகப் பரவ வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

அவர் தமிழ் இலக்கிய மாநாடுகளில் கலந்து கொள்வதில், மிகுந்த ஆர்வங்காட்டி வந்தார். 1934-ஆம் ஆண்டில், திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டு மிக அருமையானதோர் உரை ஆற்றினார்.

பாஸ்கர சேதுபதி அவர்களின் நல்லாதரவோடு, பாண்டித்துரைத் தேவர் அவர்களால்

தமிழனிடத்தில் அவர் கொண்டிருந்த நீங்காப்பற்று, தமிழ் வளர அவர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள், ஆகியவற்றின் காரணமாக, அவருக்குத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் 'தமிழவேள்' என்ற அடைமொழியைத் தந்து, அவரைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தனர்

துவக்கப்பட்டுச் சிறந்த முறையில் பணியாற்றி வந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகப், பல்லாண்டுகள் பணியாற்றிய சிறப்பு, தமிழவேள் பி.டி. இராசன் அவர்களுக்கு உண்டு.

1956- ஆம் ஆண்டில், அவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாகச் சிறப்பு மாநாடு ஒன்றினை, மதுரை மாநகரில் ஒருவார காலம் மிகச் சிறப்பாக நடத்தினார். அந்த மாநாட்டில், தமிழ்நாடு எங்கனும் இருந்து தமிழ்ச்சான்றோர், கவிஞர்கள், கலைஞர்கள் போன்ற பலரும் வருகை தந்து கலந்து கொண்டனர். தமிழவேள் அவர்களின் அன்பு அழைப்பினை ஏற்றுப் பேரறிஞர் அண்ணா அவர்களும், நானும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரைகள் ஆற்றினோம்.



தமிழிசை இயக்கம் தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட போது, தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள், அந்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபாடு கொண்டு, அதற்கான நல்லாதரவைத் திரட்ட, நாடெங்கணும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அவர் கோபுரக் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை போன்ற கலைகள் வளர நல்ல ஆர்வங்காட்டி ஆதரவு அளித்து வந்தார்.அவர், மலேசியாவின் தலை நகரான கோலாலம்பூரில், 1966ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டிலும், 1968-ஆம் ஆண்டில், சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் கலந்து கொண்டு, சிறப்புரைகள் ஆற்றினார்.

அவர் தமிழ் வளர வேண்டும்; தமிழர் மேம்பாடுற வேண்டும்; தமிழ்நாடு வளம் பெற்றுத் திகழ வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக அரும்பாடுபட்டு வந்தார்.


தமிழனிடத்தில் அவர் கொண்டிருந்த நீங்காப்பற்று, தமிழ் வளர அவர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள், ஆகியவற்றின் காரணமாக, அவருக்குத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் 'தமிழவேள்' என்ற அடைமொழியைத் தந்து, அவரைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தனர்.

வாழ்க தமிழவேள் அவர்களின் பெயர்!
வளர்க அவர்தம் பெரும் புகழ்!
இரா. நெடுஞ்செழியன்.

★ ★ ★

தமிழவேள் பி.டி.ஆர் அவர்கள் கல்விக்கு ஆற்றிய தொண்டு

சாலமன் பாப்பையா



1956ஆம் ஆண்டு; மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா தொடர்ந்து ஏழு நாட்கள் மதுரையில் கொண்டாடப் பெற்றது. கல்லூரி மாணாக்கனாக இருந்த எனக்கு அதுபெரும் இலக்கியத் திருவிழாவாக இருந்தது. பெரியவர் தமிழவேள் பி.டி.ஆர். அவர்கள் அந்த விழாவை முன்னின்று நடத்திய பாங்கினை நேரில் இருந்து பார்க்கப் பார்க்க, இத்தனை வயதிலும் இப்படி ஒரு செயல் திறமா என்ற வியப்பு எனக்குள் ஏற்பட்டதுண்டு. நேரத்திற்கு முன்பே வந்ததும், நிகழ்ச்சிகள் நிறைவடைந்த பின்பும் இருந்ததும், தன்னை முன் நிறுத்தாமல் தமிழை முன்னிறுத்தியதும் கண்டு, தமிழ்க் கல்வி மீதுதான் அவருக்கு எத்தனை ஈடுபாடு என்று இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

1962-ஆம் ஆண்டு தாகூர் நூற்றாண்டு விழா பாரதம் எங்கும் கொண்டாடப் பெற்றது. மதுரை

மாவட்டக் கல்வி நிலையங்களின் சார்பில் அவ்விழா மதுரை சௌராட்டிரா மேனிலைப் பள்ளியில் ஒரு வாரம் நடைபெற்றது. அதை நடத்திச் சிறப்பிக்கும் பொறுப்பைத் தமிழவேள் அவர்கள் ஏற்றிருந்தார்கள். அந்த விழாவில் அமெரிக்கன் கல்லூரியின் சார்பில் ஒரு நாடகத்தை நடத்தும் பணியில் நான் இருந்தேன். அந்த நாடகத்தை நடத்துவதற்கான செலவுத் தொகையைத் தாகூர் விழாக்குழு தந்திருந்தது. அதற்கு முறையான செலவு கணக்கைப் பெரியவர் பி.டி.ஆர் அவர்களிடம் தர வேண்டிய பொறுப்பு எனக்கு. விழா முடிந்தபின் கணக்குத் தரச் சென்ற என்னிடம் எந்தக் கேள்வியும் கணக்கைப் பொறுத்தமட்டில் கேட்காமல் விபரத்தை மட்டும் வாங்கிக் கொண்டார். **ஆட்களை அளப்பதும், அளந்தபின் நம்புவதும் அவர்களின் மிகப்பெரிய வெற்றிக்கு முதலாக இருந்ததைக் கண்டுக்கொண்டேன்.** இந்தத் தாகூர் விழா தமிழவேள் அவர்கள் இந்தியக் கவிதைக் கலையில் கொண்டிருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்துகள் முடிந்து போயிருந்தன. நலனை நம்பியிருந்த மக்கள் எல்லாம் புலனை நம்பிப் புறப்பட்ட காலம் அது. மதுரை மாவட்டம் உத்தமபாளையத்திலிருந்து ஓர் இளஞ்சிங்கம் மதுரை நகர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படிக்க வந்தது. 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்பதைக் கண்டு கொண்டவர்கள் நாடு போற்றும் புகழில் தன் பிள்ளை பீடு பெறவேண்டும் என்று எண்ணி இன்னொரு மாணாக்கனின் துணையை நம்பி இங்கிலாந்திற்குப் பி.டி.ஆர். அவர்களை அனுப்பி வைத்தார்கள். பிள்ளை மீது பெற்றோர் வைத்திருந்த நம்பிக்கை; அந்த நம்பிக்கையைக் காத்துப் பெருமைப்படுத்திய பிள்ளை; இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜில் உள்ள **லீஸ் பள்ளி**; ஆக்ஸ் போர்டில் உள்ள ஜீஸஸ் கல்லூரி, இன்னர் டெம்பிள் கல்லூரி எனப் பல இடங்களில் கற்று சுவிட்சர்லாந்தில் பிரெஞ்சுமொழியையுங் கற்று 1918-இல் பார்-அட்-லா பட்டத்துடன் தமிழகம் திரும்பினார். அலை கடல் கடந்தும் கல்விக் கலையதை நாடு என்னும் புதுமொழியை அவர் மரபில் படைத்தார்.

கல்வியைத் தான் மட்டும் அன்று; பிறர் கற்பது என்றாலும் அவர்களுக்கு உதவுவதில் தமிழவேள் அவர்கள் எப்போதும் முன்னின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் நின்று வெற்றிக் கனியைப் பெறாமல் வீடு திரும்புகிறார் ஒரு நாள்: வரவேற்பு அறையில் இளைஞன் ஒருவன்; என்ன என்று அத்தனை அகச் சோர்விலும் தமிழவேள் அவர்கள் இளைஞனை வினவுகிறார்கள். காலநேரந் தெரியாத அந்த அப்பாவி இளைஞன். பாடப் புத்தகங்கள் வாங்கத் தன்னிடம் பணம் இல்லை என்றும், இன்று வரச் சொன்னதாகவும் கூறுகிறான். அந்த நெருக்கடி நிலையிலும் எந்தவித வெறுப்பையும் காட்டாத தமிழவேள் அவர்கள் அம்மாணவனுக்குப் பணம் கொடுத்து அனுப்பினார்கள் என்றால் தன் மனத்துள் சோர்வு இருள் பெருகி இருந்தபோதும் அடுத்தவர் மனத்துள் கல்வி வெளிச்சம் பெருக வேண்டும் என்பதில் அவர் எத்தனை அக்கறை காட்டினார் என்று விளங்கிக் கொள்ளலாம்.

கல்வியின்பால் பெரும் பிடிப்புக் கொண்டிருந்த தமிழவேள் அவர்கள் நாட்டிற்கு உழைப்பதற்கு என்று சுயமரியாதை இயக்கத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அந்த இயக்கமும்,

'பிற்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும்
சமுதாயத்தில் மற்றவர்களுக்குச் சமமாகக்
கல்வியிலும், உத்தியோகத்துறையிலும், தொழில்
துறையிலும் மேம்பாடு அடைய வேண்டும்'

என்ற நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது நல்லதாகப் போயிற்று. இயக்கம் மட்டும் அன்று அன்றிருந்த ஒடுக்கப்பட்ட மக்களும் தங்களுக்குக் கல்வி வாய்ப்புகள் தர வேண்டும் என்று ஒருமித்த குரலில் கோரிக்கை வைத்தனர். 01.12.1935 அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற தேவேந்திர குல வேளாளர் இரண்டாவது மாநாட்டில் அம்மக்கள் நிறைவேற்றிய மூன்று தீர்மானங்களில் முதலாவது தங்களுக்குக் கல்வி

அலை கடல் கடந்தும் கல்விக் கலையதை நாடு என்னும் புதுமொழியை அவர் மரபில் படைத்தார்.

வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். 1936-இல் மதுரை பெரியகுளத்தில் நடந்த அம்மக்களின் வட்ட மாநாட்டிலும் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அரசு பெரிதும் உதவ வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இவை, குடஅளவு நிகழ்ச்சிகளில் துளி அளவு சான்றுகளே. எனவே, இயக்கத்தின் நோக்கமும் மக்களின் தாகமும் ஒரே திசையில் செல்லவே கல்விக்கான நற்பணிகளை நிறைவேற்றுவதில் அமைச்சர் என்ற முறையில் அவர்களுக்கு எளிதாகப் போய்விட்டது.

தமிழக வீதிகளில் தமிழ் இலக்கியங்களை அறிந்த சான்றோர் பல்கிப் பெருகியதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆற்றிய அருந்தொண்டை எவரும் எளிதாக மறந்து விட முடியாது. அப்பல்கலைக்கழகத்தை உருவாக்கிய அரும்பணியில் முன்னின்றவர் தமிழவேள் அவர்கள். ஆந்திராவில் அப்போது ஒரு பல்கலைக்கழகம் உருவானது. அதுபோலவே தமிழகத்துள்ளும் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கிவிட வேண்டும் என்ற உழைப்பில் மலர்ந்ததது தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியது போலவே மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தை உருவாக்கும் அமைப்புக் குழுவிலிருந்தும் தமிழவேள் அவர்கள் அரும்பணி ஆற்றியுள்ளார்கள்.

அரசுப் பதவியில் அமைச்சராக இருந்தது, கல்விப்பணி செய்யப் பெரிதும் வாய்ப்பாக இருந்தது. தொழிற்கல்வியை வளர்க்கும் பெரும் பணியில் அவர் நாளும் இயங்கினார். ஓவியம், சிற்பம், தச்சு, கொத்து, தங்கம், வெள்ளி, செம்பு, எனாமல் வேலை எனப் பல்வேறு தொழிற்கல்வியைக் கற்றுத் தரச் சென்னையில் பயிலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன; தோல் தொழில், சோப்புத் தொழில், பட்டுத் தொழில் என வளர்ந்திருந்த உள்நாட்டுத் தொழில்களை மேலை நாட்டு வளர்ச்சியோடு இணைத்த கல்வி புகுத்தப்பட்டது. போர்மென், மெக்கானிக், எலெக்ட்ரீஷியன், ப்ரிண்டர், ப்ளம்பர் எனப் பல்வேறு மேலைநாட்டுத் தொழிற் கல்விகள் இங்கு அறிமுகம் செய்யப்பட்டன. கல்வித்துறை புதிய மறுமலர்ச்சிக் காலத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியது. சுருங்கச் சொன்னால் இன்று நாம் கல்வித் தருவில் பறித்துப் பலன் காணும் ஒவ்வொரு செயலுக்கும் ஐயா அவர்கள் காலத்தில் வித்திடப் பெற்றிருக்கிறது. இவை மட்டும் அன்று; கோவை போன்ற நகரங்களுக்கு அருகில் வாழும் விவசாயிகளின் குழந்தைகளுக்கென்றே விவசாயக் கல்வியைக் கற்றுத் தரவும், கடற்கரை ஓரங்களில் வாழும் மீனவர்களின் குழந்தைகளுக்கான கல்வியைத் தரவும் கல்விக் கூடங்கள் உருவாக்கப்பட்டன. தனியார்களாலோ, பஞ்சாயத்து, நகராட்சி நிறுவனங்களாலோ நடத்தப்பெறும் பள்ளிகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடம் தர மறுத்தால் அப்பள்ளிகளின் ஏற்பாணை பறிக்கப்பட்டது. இதனால் விதவிதமான கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டது மட்டுமன்றி அக்கல்வி வெகு ஜனங்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதிலும் தமிழவேள் அவர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள் என்றும் அறிகிறோம்.

ஆட்களை அளப்பதும், அளந்தபின் நம்புவதும் அவர்களின் மிகப்பெரிய வெற்றிக்கு முதலாக இருந்ததைக் கண்டு கொண்டேன்

குறைந்தபட்சம் நகரங்களை ஒட்டிய கிராமங்களிலாவது ஒரு சமூக மறுமலர்ச்சி உருவாவதற்கான கல்வி வாய்ப்பை, இருக்கின்ற வரையறைக்குள் உண்மையாகவே வழங்கிய பெருமை அய்யா தமிழவேள் அவர்களையே சாரும்.

பள்ளிகளையும், கல்லூரிகளையும் அதிகமாகத் தொடங்குவது மட்டும் அன்று; அப்பள்ளி கல்லூரிகள் எந்த இடங்களில் அமைய வேண்டும், எந்த காரணங்களுக்காக அப்படி அமைய வேண்டும் என்பதிலும் ஐயா அவர்கள் சில திட்டவட்டமான எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டவர்களாக இருந்தார்கள். சான்றாக அந்நாட்களில் சென்னை மெரீனா பகுதியில் இருந்த பெண்கள் பள்ளிகளையும், கல்லூரியையும், நுங்கம்பாக்கம் கல்வி அதிகாரியின் அலுவலக வளாகத்துடன் கொண்டு செல்ல வேண்டும் என்று கருத்துக் கொண்டிருந்தார் தமிழவேள் அவர்கள். காரணம், அப்போதுதான் அந்தப் பகுதியில் இருக்கும் பெண்கள் பள்ளிகளும், பெண்கள் கிறித்தவக் கல்லூரியும் இணைந்து செயல்படவும், கலந்துரைக் கல்விக்கு வழி வகுக்கவும், ஒன்று கலையியல் கல்வி அளித்தால் பிறிதொன்று அறிவியல் கல்வி அளிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என்று கருதினார்கள். இப்படி கல்வி வாய்ப்பை ஏற்படுத்தியது மட்டும் அல்லாமல் அதில் தொலைநோக்குடன் செயல்படவும் வழிவகுத்த மேதை அவர்கள் என்பதை எண்ணி வியக்காமல் இருக்கமுடியாது.

தமிழ் மக்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் தன் முதுமையிலும் மிகுந்த அக்கறை உள்ளவராய்த் தமிழவேள் அவர்கள் இருந்தார்கள். தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களைத் தன் என்பதாவது வயதிலும் சிறப்பிக்க அவர்கள் தவறவில்லை. 1924 தொடங்கித் தன் காலம் எல்லாம் மதுரை மக்களுக்குக் கல்வித் தொண்டு செய்த சகோதரி ரோஸ் என்ற அமெரிக்கப் பெண்ணிற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் சிலை வைத்துச் சிறப்பித்த போது அதைத் திறந்து வைத்து உணர்ச்சிகரமான ஓர் உரையை ஆற்றினார். இது மட்டும் அன்று: தமிழ் மக்கள் கல்வி உலகத்தில் பின்தங்கி விடுவார்களோ என்ற அச்சம் அவர்களைப் பெரிதும் பின்நாளில் வருத்தியது. கல்வியில் கவனம் செலுத்த வேண்டிய மாணவர்கள் அரசியலில் நுழைந்து தங்கள் நலத்தையும், நாட்டின் நலத்தையும் கெடுத்துக் கொள்வதைத் தம் காலத்தில் கண்டு அவர் பெரிதும் வருந்தினார். அதனால் 30.12.68 இல் சென்னையில் நடைபெற்ற நீதிக் கட்சியின் பொன்விழாவில் ஐயா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திய போது,

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று எல்லாக் கட்சிகளும் அடிக்கடி கூறுகின்றன. எல்லோரும் வாயளவில் இவ்வாறு கூறுகின்றார்களே தவிரச் செயலளவில் மாணவர்களை அவரவர்கள் தங்கள் தங்கள் கட்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே முயலுகின்றனர். இதனால் நாட்டிற்கும் தங்களுக்கும் எவ்வளவு தீங்கு ஏற்படுகிறது என்பதை மாணவர்களும் உணரவில்லை என்று வருந்துவதைக் காண்கிறோம். அந்நியர்கள் ஆண்ட போது அவர்களை எதிர்க்க மாணவர் படை தேவைப்பட்டிருக்கலாம்; ஆனால் உடனடி லாபம் தந்த அந்தப்படை எத்தனைப் பெரிய நட்டங்களை அதன் வேலைநிறுத்தப் போர்'களால் தங்களுக்கும், நாட்டிற்கும் இன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்முன் காண்கிறோம். அல்லவா; அதிலும் ஆள்பவரும் அவரை எதிர்ப்பவரும் ஒரு தாய் மக்களே எனும் போது இளங் குருத்துக்களை எதிர் எதிர் களத்தில் இறக்கி அவர்களில் எதிர்காலத்தையும் நாசமாக்க வேண்டுமா என்பதை இனியாவது அரசியல் அறிஞர்கள் விளங்கி விவேகமாகச் செயல்பட வேண்டும் என்பதில் தமிழவேள் அவர்கள் கொண்டிருந்த கருத்து உடனடியாகச் சிந்திக்கவும் செயல்படுத்தவும் வேண்டிய கருத்தாகும்.

★ ★ ★

திருவள்ளுவர் கழகம்

திருவள்ளுவர் கழகம் 21.04.1941 இல் செவ்வாய் மாலை 6-00 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ மன்றத்தில் தமிழவேள் திரு. ராசன் அவர்கள் தலைமைதாங்கத், திருக்குறட்களஞ்சியம் திரு.தி.ப.சுப்பிரமணியதாஸ், பேராசிரியர் ஆர். கார்மேகக்கோனார், திரு.சி.டி.சீனிவாச ஐயங்கார் முதலானோர் நல்வாழ்த்துக்கூறத் தோற்றுவிக்கப்பட்டது. கழகம் நடத்த, தக்க இடம் கிடைக்கவில்லை. ஒய்.எம்.சி.ஏ. மன்றத்திலேயே மாத வாடகை ரூ.5/- க்கு அறை அமர்த்தி அங்கு வகுப்பும் சொற்பொழிவும் நடந்தன. அவ்விடத்தில் போதிய வசதி இல்லை. திருவருட் செயலால் மீனாட்சி கோயிலில் இடம் கிடைத்தது. திரு வைத்தியநாத ஐயர் தலைமையில் கோயிலுக்குள் தீண்டாதார் நுழைந்தனர். இதற்குக்கோயில் வைதிகர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கோயிலை விட்டு வெளியேறினர். கோயிலுக்குள் நுழைவதில்லையென்றும் போராடினர்.

அப்போது வடக்காடி வீதியிலுள்ள இக்கழக மன்றத்தில் சாஸ்திரியார் ஒருவர் கந்த புராணச் சொற்பொழிவு நடத்திக் கொண்டிருந்தார். வைதிகர்கள் எடுத்த முடிவின்படி, அவர் சொற்பொழிவாற்ற மறுத்து இவ்விடத்தை விட்டு வெளியேறிவிட்டார். உடனே திரு. ஆர். எஸ். நாயுடு அவர்கள் அறநெறி அண்ணல் பழனியப்பனாரை அழைத்து, 'இன்று முதலே திருக்குறள் சொற்பொழிவு தொடர்ந்து நடத்துவதாக இருந்தால், இந்த இடத்தை நன்கொடையாக வழங்குகிறேன்' என்றார். அதைக்கேட்டுத் திருவள்ளுவர் கழக உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். திருவருட்செயல் இதுவே என எண்ணி, அந்த இடத்தை ஏற்றுக்கொண்டனர். அன்று தொடங்கிய இக்கழகம் எத்தனையோ இடையூறுகளைக் கடந்து பொன்விழா கொண்டாடும் நிலைக்கு வந்துள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் வடக்குக் கோபுரத்தை அடுத்து 1963இல் அழகான மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் கழகத்தின் ஆண்டுவிழாத் தொடக்க நாளாகிய தைப்பொங்கலன்று, ராசன் சிறப்புரை ஆற்றுவதைத் தம் கடமை எனக் கருதி, இறுதி வரை இதனைத் தவறாமல் செய்து வந்தார். அச்சமயம் தமிழ் வளர்ச்சி, தமிழ் மக்கள் நிலை, தமிழர் கடமை என்பனபற்றித் தெளிவாக எடுத்து மொழிவார். கண்டிக்க வேண்டியதைத் துணிவாகக் கண்டிப்பார். அக்கழகத்தின் காப்பாளராக இருந்து 1956இல் வெள்ளி விழாவையும் நடத்தினார்.

திருக்குறள் கழகத்தின் நோக்கங்கள்

திருக்குறள் பரப்புதல், திருக்குறளை மாணவர்களுக்குக் கற்பித்தல், சொற்பொழிவுப்

பயிற்சி அளித்தல், போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கல், நூல்நிலையம் அமைத்தல், ஊர் தோறும் வள்ளுவர் மன்றம் கட்ட ஊக்கமளித்தல், திருக்குறள் வெளியிடுதல், திருக்குறள் மாநாடு நடத்துதல், திருவள்ளுவர் ஆண்டினை நாடெங்கும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் ஆகியன கழகத்தின் நோக்கங்களாகும்.

கழகம் ஏற்பட்ட நாள்தொட்டுத் திரு.தி.ப.சுப்பிரமணியதாசு அவர்கள் அங்கேயே தங்கித் திருக்குறள் வகுப்பு, வாரச் சொற்பொழிவு ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வந்தார். இம்முறையில் அவர் ஒன்பதரை ஆண்டுகள் திருவள்ளுவர் கழகத் தந்தையாகவும், தாயாகவும், ஆசிரியராகவும், தொண்டராகவும், பணியாளராகவும் இருந்து கழகத்தைக் காத்து வளர்த்தார். அவர் சிறப்பாக அமைத்த அடிப்படையில்தான் திருவள்ளுவர் கழகத் திருக்குறள் தொண்டு சிறப்புற்று நாளும் வளர்ந்து வருகின்றது.

விரிவுரைகள்

திருக்குறள் களஞ்சியம் திரு. தி.ப.சு. அவர்கள் திருக்குறள் விரிவுரையை மும்முறை சிறப்பான முறையில் செய்தார். அவரைத் தொடர்ந்து குறள் வேந்தர் கந்தசாமிப் புலவர், முப்பதாண்டுகளில் பலமுறை குறள் விரிவுரை செய்து, பல்துறை மக்களையும் திருக்குறள் நெறியில் ஆற்றுப்படுத்தினார். அவருக்குப் பின்னர் அறநெறி ஆசான் ஆ. சண்முகவேலனார் செம்மையாக நடத்தினார்.

திருக்குறள் வகுப்புடன் சங்க இலக்கிய விளக்கம், பெரிய புராணம், கம்பராமாயணம், திருவாசக விளக்கம் ஆகியவை வாரந்தோறும் தக்க புலவர் பெருமக்களால் தொய்வின்றி நடைபெற்று வருகின்றன. ஞாயிறுதோறும் இரவு பலவகைத் தலைப்புகளில் அறிஞர் பெருமக்கள் சொல்விருந்து படைக்கின்றனர்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

ஆண்டு முழுவதும் கழகத்தின் குறள்பணி, இலக்கியப்பணி ஆகியவற்றுடன் அறக்கட்டளைகள் வழியாக நிலையான நிகழ்ச்சிகளும் ஆன்மீகப் பணிக்கென அறக்கொடைகளும் நிறுவப்பெற்றன.

விழாக்களும் போட்டிகளும்

வழக்கமாகக் கழக ஆண்டு விழா ஒவ்வோராண்டும் திருவள்ளுவராண்டுத் தொடக்கமான தைத் திங்களில் பெருஞ்சிறப்புடன் நடைபெறும். கலைமகள் விழா, வ.உ.சி. விழா, பாரதிவிழா, நாவலர் சோமசுந்தரபாரதி விழா, தி.ப. சுப்பிரமணியதாசு விழா, **தமிழவேள் ராசன் விழா**, முனைவர் வ.சுப. மாணிக்கனார் விழா என அறிஞர்களைப் போற்றும் பல விழாக்கள் நடைபெற்று வருகின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவினை மிகச் சிறப்பாக 1969 இல் கொண்டாடிய பெருமை திருவள்ளுவர் கழகத்திற்கே உரியது.

பட்டமளிப்பும் பாராட்டும்

அறிஞர்களுக்கும், சான்றோர்க்கும் அவரவர் ஆற்றிய சீரியபணிகளைப் போற்றி, மதித்து, அவர் தம் வாழ்நாளிலேயே விருதளித்தும், பாராட்டியும் கழகம் பெருமை அடைகிறது.

அரங்கேறிய நூல்கள்

ஐங்குறுநூறு ஆராய்ச்சி, சிவஞானபோதச் சிற்றுரை, வள்ளுவர் வாசகம், வான்புகழ் வள்ளுவர், அங்கயற்கண்ணி இசை மாலை, காஞ்சி வெண்பா மாலை, தொல்காப்பியப் பொருள் படலப்புத்துரை, உமாமகேசுவரனார் கட்டபொம்மன் காதை, மருது பாண்டியர்

வரலாற்றுக் கும்மி எனும் நூல்கள் கழக வெள்ளி விழாவிற்கு முன்னும், ஆரோக்கிய அருளமுதம், வள்ளுவர் படப்பிடிப்பு, ரெட்டியாபட்டி ஆண்டவர் கலிவெண்பா, ஒன்றே குலம் ஒருவனே தேவன், நலந்தரும் நாமம் நமச்சிவாயக் கண்ணி எனும் நூல்கள் பொன்விழா ஆண்டிற்குப் பின்னும் கழகத்தில் அரங்கேற்றப் பெற்றன.

படத்திறப்பு

கழகத்தில் நடந்த பல்வேறு விழாக்களில் அகத்திய முனிவர் திருக்குறட் களஞ்சியம் சுப்பிரமணியதாசு , திரு.எஸ்.எஸ்.ராசன், திரு. தியாகராச முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் நா.மு.வேங்கடசாமி நாட்டார், மறைமலை அடிகள், திரு.டி.வி.சதாசிவபண்டாரத்தார், பேராசிரியர் ஆ.கார்மேகக்கோனார், சோழவந்தான் அரசன்சண்முகனார் ரா.பி.சேதுப்பிள்ளை, பரிதிமாற்கலைஞர், பண்டித ஆ. முத்துசாமிப்புலவர், குறள் வேந்தர். மீ. கந்தசாமிப்புலவர், முனைவர் வ.சுப. மாணிக்கனார், து. அழகர்சாமி ஆகியோரின் திருவுருவப் படங்கள் திறக்கப் பெற்றுள்ளன.

பயணச்சொற்பொழிவு

இலக்கிய, சமயச் சொற்பொழிவுகளுடன் வெளிநாடு சென்று திரும்பிய அறிஞர்களைக் கொண்டு, பயணச் சொற்பொழிவுகளும் நடத்தப்படுகின்றன. டாக்டர் திருமதி. லலிதா காமேஸ்வரன் அவர்களின் இங்கிலாந்துப் பயணம், திரு.தி.மாணிக்கவாசகம் செட்டியாரின் ஜப்பான் பயணம், டாக்டர் ச.காமேஸ்வரனின் 'கீழைநாட்டுப் பயணம்' டாக்டர் திரு.வை.இரத்தினசபாபதியின் அமெரிக்கப் பயணம், திரு.கி.பழனியப்பனாரின் மலேயாப் பயணம், பேரறிஞர் ச. பழனியப்பன் அவர்களின் நார்வே பயணம் ஆகிய பயணச்சொற்பொழிவுகள் குறிப்பிடத்தக்கன.

நூல்நிலையம்

திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் திருவள்ளுவர் தனிப் பயிற்சிக் கல்லூரி நடத்தப்பெற்றது. அதில் ஏழாண்டுக்காலம் ஊதியம் பெறாமல், பேராசிரியர் பலரும் தொண்டாற்றினர். இங்குப் பயின்றோர் இன்று பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணிக்கப் பொன்விழா

தெய்வத் தொண்டும், தமிழ்த் தொண்டும் இடையறாது புரிந்து வரும் திருவள்ளுவர் கழகம் 50 ஆம் ஆண்டு நிறைவுப் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்தது. கழகத்தின் முதல் புகழ்சால் தலைவராய்த் திகழ்ந்த தமிழவேள் ராசன் அவர்களின் நூற்றாண்டு மாணிக்க விழா, பொன்விழா ஆண்டுடன் இயற்கையாக அமைந்தது. திருவருளால் கழகப் பொன்விழா, மாணிக்கப் பொன்விழாவாகத், திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழித்திங்கள் 9ஆம் நாள் தொடங்கி 12ஆம் நாள் முடிய நான்கு நாள்கள் (24.12.1992 முதல் 27.12.1992 வரை) மாண்புற நிகழ்ந்தது. கற்றுத் துறைபோகிய அறிஞர்களும், சான்றோர்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

உலகத்தமிழ் மாநாடுகள்

திரு.ராசன் அவர்கள், 1966 ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரைத்தமிழ்ச்சங்கப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்கள். 'தமிழ் மொழிக்குச் சங்கம் செய்த தொண்டுகள்' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையையும் படித்தார்கள்.

மலேசியா, சிங்கப்பூர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ராசன் அவர்கள்

அங்கு ஒரு திங்கள் தங்கியிருந்தார்கள். பல இடங்களில் அரிய சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்கள்.

1968ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள். அவர் மாண்பைத் தமிழகமக்கள் அறியுமாறு செய்தார்கள். ஆகவே ராசன் அவர்கள், உலகத் தமிழ் மாநாடுகள் இரண்டிலும் சிறப்பான பங்கு கொண்டவர் என்ற பெருமை பெற்றவர் ஆவார்.

– பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்



P. Rengaswami Naidu adorring P. T. R. with *Ponnadai*
at Thiruvalluvar Kazhagam, Madurai.

தேவிகுளம், பீர்மேடு–உரிமைப் போர்

1956 இல் இந்திய மாநிலங்களை மொழி அடிப்படையில் பிரிக்கும் முயற்சி மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது. தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின், சித்தூர் ஆகிய பகுதிகளைக் கேரளத்துடன் இணைப்பதென முடிவெடுக்கப்பட்டது. மத்திய அரசின் இந்தச் செயலை எதிர்த்து 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் நாள் மாபெரும் கடையடைப்பு மற்றும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசின் எதேச்சதிகாரப் போக்கினை எதிர்த்துத் தமிழகத்தில் ஒரு கூட்டணி உருவாயிற்று. அதற்குமுன்னர் அத்தகையதொரு கூட்டணி உருவாக்கப்பட்டதில்லை. தாயகப் பகுதிகளை மீட்பதற்கும், மீண்டும் அவற்றைத் தாயகத்துடன் இணைப்பதற்கும் அவரவர் தம் கடமையைச் செய்யவும், காணிக்கை வழங்கவும் முன்வந்தனர். அந்தக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் முக்கியப் பங்கினை வகித்தது.

ஒவ்வொரு கட்சியினரும், அந்தப் பொதுப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில், தத்தமது கட்சிக்கு ஏற்ற வகையிலும் அளவிலும் பணியாற்றினர். கட்சிகளின் கூட்டு முயற்சியின் காரணமாகத் 'தமிழ் நாட்டிற்கு வந்துற்ற கேட்டினை, நீக்க முனைந்து போராட வேண்டும்' என்ற எழுச்சி எங்கும் காணப்பட்டது.

தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப் படவேண்டும் என்று காங்கிரசைத் தவிர மற்றக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தின. அனைத்துக் கட்சியினரும் ஒன்று சேர்ந்தது என்பது என்றும் மறக்கமுடியாத, மகத்தான ஒரு வரலாற்று நிகழ்ச்சியெனில் அது மிகையாகாது.

அனைத்துக் கட்சியினரும் சென்னையில் தோழர் G. உமாபதி அவர்கள் இல்லத்தில் கூடினர். 'அறப்போராட்டக்குழு' அமைப்பதே அவர்கள் நோக்கமாகும். கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா, நாவலர் இரா.நெடுஞ்செழியன், என்.வி. நடராசன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழவேள் ராசன், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், சி.பா.ஆதித்தனார் ஆகியோரும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதில் பங்கேற்றனர்.

போராட்டக் குழுவிற்கு அறிஞர் அண்ணாவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். உடனே அண்ணா அவர்கள் 'நான் இந்தக் குழுவிற்குத் தலைவராய் இருப்பதைக் காட்டிலும் அனைவரின் மதிப்பிற்கும், பாராட்டுதல்களுக்கும் உரிய தலைவர் தமிழவேள் ராசன் அவர்கள், தலைவராய் இருப்பது அனைத்துக் கட்சியினருக்கும் மகிழ்ச்சி அளிக்கும்' என்று கூறினார். ராசன் அவர்களையே தலைமைப் பதவிக்கு மகிழ்ச்சியுடன் முன் மொழிந்தார் அறிஞர் அண்ணா. நாவலர் இரா.நெடுஞ்செழியன், என்.வி.நடராசன் ஆகியோர் வழிமொழிந்தனர். அங்குக் கூடியிருந்த அனைத்துக் கட்சியினரும் ஒரு மனதாகத் தமிழவேளைத் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

இருப்பினும், கட்சித் தலைவர்களிடையே ஓர் ஐயம் இருந்தது. அவர்கள் அதை வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும், அவர்கள் உள்ளத்தில் அந்த ஐயம் இருக்கவே செய்தது. அஃதென்ன?

'ராசன் சட்டத்தைப் பெரிதும் மதிப்பவர், மிதவாதியாகவும் இருப்பவர். இத்தகைய ஒருவர் தலைவராய் இருந்தால், போராட்டம் தீவிரமாக நடைபெறுமா?' என்பதே அவர்களுடைய ஐயமாகும்.

அண்ணா அவர்கள் கட்சித் தலைவர்களின் எண்ணத்தைக் குறிப்பாக உணர்ந்துகொண்டார். 'திரு. ராசன் அவர்கள் அரசியலில் நிதானமாகச் செயற்படுபவர் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் தீவிரமாகச் செயற்பட வேண்டிய காலம் வரும்போது, அவர் எல்லோரையும் விடத் தீவிரமாகச் செயற்படக் கொஞ்சமும் தயங்கமாட்டார் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். மேலும் அவருக்குத் துணையாகச் செயல்படக் குழுவின் நிருவாகிகளைத் தேர்ந்தெடுப்போம். இக்குழு தனது கடமையை இனிதே நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது' என்றார்.

குழுவின் அமைப்புச் செயலாளராகச் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும், செயலாளராகப் பொதுவுடமை இயக்கத் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்.வி.நடராசன், தொழிற்சங்கங்கள் சார்பில் S.S.C அந்தோணிப் பிள்ளை, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி சார்பில் தோழர். எ. சுப்பிரமணியம் ஆகியோர்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
குழுவின்உறுப்பினர்களாக நாவலர்இரா .நெடுஞ்செழியனும் திரு.சி.பா.ஆதித்தனாரும் தேர்வு செய்யப்பெற்றனர்.

அறப்போர்க் குழு தனது பணியில் ஈடுபட்டது முதல், அறிஞர் அண்ணா அவ்வப்போது முக்கிய ஆலோசனைகளை வழங்கி வந்தார். 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள் தமிழகம் முழுவதும் அமைதியான முறையில் பொது வேலைநிறுத்தம் நடத்த வேண்டும் என்றும், அன்று மாலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப்படவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மாநிலம் தழுவிய மாபெரும் பொது வேலை நிறுத்தமென்றால் தமிழகமெங்கும் ஒரே நாளில், ஒரே முறையில் வெற்றியுடன் நடத்தப்பட வேண்டிய மகத்தானதோர் செயலாகும்.

ஆந்திர மக்களுக்கு வழங்கப்பட்ட மொழிவழி மாநிலம் நமக்கு மறுக்கப்படுகின்றது. மொழிவழி மாநிலம் கேட்டால் விழிகளில் ஒன்றனை இழந்துவிடவேண்டுமாம். தேவிகுளம் மற்றும் பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழ் நாட்டுக்கு இல்லை என்கின்றனர். இப்பகுதிகளை நாம் வற்புறுத்திக் கேட்டால், மொழிவழி மாநிலம் கிடைக்காது என்கிறது மத்திய அரசு. நாம் போராடவேண்டும். நமது போராட்டத்தில் வன்முறை ஒரு சிறிதும் தலைகாட்ட இடம் அளிக்கக் கூடாது; போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு எவரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது; கடையடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து முன்வந்து பங்கேற்க வேண்டும் என்று ராசன் அவர்கள் தமக்கே உரிய பண்புடன் தெரிவித்தார்.

போராட்டத்திற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. போராட்ட உணர்வு பொது மக்களிடையேயும் அனைத்துக் கட்சியினரிடையேயும் வேகமாகப் பரவி வந்தது. இந்நிலையில் அன்றைய முதல்வர் மாண்புமிகு காமராசர் அவர்கள், தம் நண்பர் ஒருவரை ராசன் அவர்களிடம் அனுப்பினார். அந்த நண்பர் மூலம் பொது வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறும் தேவிகுளம் ,பீர்மேடு ஆகியவற்றைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற

கோரிக்கையைக் கைவிட்டுவிடுமாறும் செய்தி சொல்லியனுப்பினார். செய்திகொண்டு வந்த நண்பரும் காமராசரின் கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

ராசன் அவர்கள், காமராசரின் செய்தியை அமைதியாகக் கேட்டுக் கொண்டார். 'இவ்விதமான வேண்டுகோள் இனிப் பயன்படாது. நான், போராட்டக் குழுவிற்குத் துரோகம் இழைக்க மாட்டேன். அதைவிடத் தீவிரப் போராட்டம் காரணமாக அடக்கு முறைக்கு ஆளாக நேரிட்டால், அதைப் பெருமையுடன் ஏற்பேன்; இதனை மதிப்பிற்குரிய திரு.காமராசர் அவர்களிடம் தெரிவியுங்கள்' என்று ராசன் உறுதியோடு கூறிவிட்டார்.

மாண்புமிகு காமராசரின் தூதுவர் மதுரைக்குச் சென்ற விஷயத்தை, அறிஞர் அண்ணா கேள்விப்பட்டார். ஆனால் ராசன் தூதுவரிடம் என்ன சொன்னார் என்பது தெரியாது. எனவே அண்ணா 'நாளை காலை மதுரையிலிருந்து ராசன் வந்ததும் போராட்டம் வேண்டாமென்று கூறிவிடுவாரோ? மாற்றார், தம் முயற்சியில் வெற்றிபெற்று விடுவார்களோ?' என்று நினைத்துக் கவலைப்பட்டார். அன்றிரவு முழுவதும் அவர் ஒரே குழப்பத்திலிருந்தார். மறு நாள் பொழுது விடிந்ததும் சென்னையில் ராசன் தங்கியிருந்த 'காஸ்மோபாலிட்டன் கிளப்பிற்கு' அவரைக் காணப் புறப்பட்டுச் சென்றார்.

ராசன் அவர்கள் அன்றிருந்த அமைச்சர் சிலருடைய ஆலோசனைப்படி, அரசுக்கு எதிராகச் சட்டவிரோதமான போராட்டங்களில் கலந்துகொள்ளமாட்டார் என்றதோர் வதந்தியும் சென்னையில் பரப்பப்பட்டது. ராசன் சென்னை வந்தபோது, அண்ணா அவர்கள் காஸ்மோபாலிடன் கிளப்பிற்கு வந்து, ராசன் அவர்களை அவசரமாகப் பார்க்க விரும்பினார். முகச்சவரம் முடிந்தபின் பார்க்கலாமென ராசன் சொன்னதற்கு 'இல்லை, உடனே பார்க்க வேண்டும்' என்றார் அண்ணா. அவரது அவசரத்தை முன்னிட்டு ராசன் அரைச் சவர முகத்துடன் வந்தார். உடனே அண்ணா, 'என்ன....? ....என்ன? நீங்கள் எல்லைப் போராட்டக் குழுவில் தலைமை ஏற்கப்போவதில்லை என்று சொல்லிவிட்டீர்களாமே!' என்று படபடப்புடன் கேட்டார்.

ராசன் அவர்கள், **'நான் ஒரு வாக்குக் கொடுத்தால் அதை மீறமாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும் என்றுதான் நினைத்தேன்' என்றார். 'உங்கள் சந்தேகத்தை இப்போதே தீர்த்து விடுகிறேன்; அந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்துக் கடைசிவரை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பேன்'** என்று மேலும் தெரிவித்தார்.

ராசன் சொன்னதைக் கேட்ட அண்ணா, மன நிறைவுடன் காஞ்சி திரும்பினார்.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வேலைநிறுத்தம் அமைதியாகவும் முழுமையாகவும் நடைபெற்று முடிந்தது. அன்று மாலையில் ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், லட்சக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர். ஊர்வலம் அணிஅணியாக அமைதியாகச் சென்றது. கட்சித் தொண்டர்களும் பொதுமக்களும் கட்டுப்பாட்டுடன் நடந்து சென்றனர். ஊர்வலத்தின் முன் வரிசையில் போராட்டக் குழுவின் அமைப்புச் செயலர், மற்றும் செயலாளர்கள் நின்று ஊர்வலத்தைக் கண்காணித்து வந்தனர். கட்டுப்பாடான அந்த ஊர்வலம் ஆட்சியாளர்களின் கோபத்தைக் கிளறியது.

அருமைத் தோழர் ப.ஜீவானந்தம், ஊர்வலத்தில் காவல் துறையினரால் தாக்கப்பட்டார். அவர் நிலை தடுமாறிக் கீழே விழுந்துவிட்டார். தோழர் ஆர்.வெங்கட்ராமனும் அமளியில் கீழே விழுந்துவிட்டார். மாபெரும் புரட்சிக்குத் தயாராவதைப் போன்று மக்கள் எழுச்சி

கொண்டனர்.

தமிழவேள் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், தோழர் ஜீவாவிற்கும், வெங்கட்ராமனுக்கும் ஆறுதல் கூறினர். ஊர்வலம் தடையின்றித் தொடர்ந்து கடற்கரையைச் சென்றடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் போராட்டக்குழுத் தலைவர் தமிழவேள், அரசுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்தார்.

மக்களைப் போராட்டத்திற்கு அழைப்பதும், போராட்டத்தை நடத்துவதும் எளிதான செயல்கள்தாம். ஆனால் போராட்டச் சமயத்திலும், போராட்டம் முடிவுறும்போதும் மக்களை அமைதியாக இருக்கச் செய்வது எளிதான செயல் அன்று. ராசன் அவர்களின் இதயத்திலிருந்து கிளம்பி, கேட்போர் இதயத்தில் சென்று, தங்கும் திறன் படைத்த பேருரையால் அவ்வளவு மக்களையும் அமைதியுறச் செய்தார். அன்று, ஒரு சிறு கலகமும், கூச்சலும், குழப்பமும் இல்லாமல் மக்கள் கலைந்து சென்றனர். எங்கள் கட்சி பெரிய கட்சி என்று பெருமை பேசுவோரால் எத்தனை நிகழ்ச்சிகளை இதற்கு ஈடாகக் காட்ட முடியும்?

கண்ணியத்தைக்கடைப்பிடிக்கவும், செயலாற்றும் திறனைப்பெறவும் பேருதவி அளித்த கூட்டணித் தோழர்களுக்கு அறிஞர் அண்ணா 'திராவிட நாடு' ஏட்டில் 'தம்பிக்கு!...' என்று அன்புடன் அழைத்து கடிதத்தின் வாயிலாக நன்றி தெரிவித்துக் கொண்டார். 11.3.56 இல் வெளிவந்த 'திராவிட நாடு இதழில் அவர் 'அரியதோர் வெற்றி கிட்டியுள்ளது. இது நம் ஆற்றல் வளரவும் ஆர்வம் பொங்கவும் அல்ல! தம்பீ! அடக்க உணர்ச்சியை நாம் பெற்றிடவும், அறநெறியில் அசையா நம்பிக்கை கொண்டிடவும் சார்வகட்சிக் கூட்டணி நமக்கு உதவட்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் ஊர்வலம் சென்னைக் கடற்கரையில் முடிந்தது. கடற்கரைக் கூட்டத்தில் அண்ணா அவர்களும் மற்றவர்களும் பேசுவதாக இருந்தது. தலைமை வகித்த தமிழவேள் அவர்கள் அன்று பேசிய பேச்சைக் கேட்டுத் தீவிரவாதிகள் கூட மிரண்டு போனார்கள். அவர்கள் பேசிய பிறகு அண்ணா அவர்கள் 'இனி எவர் பேச்சும் எடுபடாது இதோடு முடித்துவிடலாம் என்று சொன்னதுடன் தானும் பேசப் போவதில்லை என்றார். ராசன் உரையுடன் அந்தக் கூட்டம் நிறைவு பெற்றது.

நமது **ராசன் அவர்கள் கட்சிப் பணியைத் தம் கடமையாகக் கருதிச் செயற்பட்டவர். காலமெல்லாம் வேறு வேலைகள் பார்த்துவிட்டுச் சமயமறிந்து கட்சிக்குள் நுழைந்தவர் அல்லர் அவர்.**

கப்பல் மூழ்கப்போவதை அறிந்ததும், தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், கப்பலில் பயணம் செய்கின்ற பயணிகள் தப்பிக்க ஏற்பாடுகள் செய்வதோடு, கொடி வணக்கம் செய்தபடி கப்பலின் மேல் தளத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் கப்பலின் தலைவனைப் போல், நீதிக்கட்சியில் இறுதிவரை இருந்தவர் நமதருமைத் தலைவர் ராசன் அவர்கள் என்பதை அறியும்போது, நம் எண்ணத்தில் அவர் இமயம் போல் உயர்ந்து நிற்கிறார்.

திட்டமிட்டபடி 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 ஆம் நாள் பொதுப் வேலைநிறுத்தம் தொடங்கியது. அது தமிழக வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகப் பதிவாகிவிட்டது. வரலாற்றில் அதற்கொரு நிலையான இடம் கிடைத்துவிட்டது.

– பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்

★ ★ ★

தமிழ்த் திருமணம்

தமிழவேள் அவர்கள், பார்ப்பனர் இல்லாமல் வடமொழி மந்திர ஒலியில்லாமல், திருமணம் செய்யும் முறையை நடைமுறைப்படுத்தினார்.

ஆயிரம் பிறைகண்ட சான்றோரான ராசன், தமது வாழ்நாளில் எண்ணற்ற தமிழ்முறைத் திருமணங்களைத் தலைமை ஏற்று நடத்தியுள்ளார். சாதி, மத, இன, மொழி வேறுபாடுகள் கருதாது அவர் திருமணங்களில் பங்கு கொள்வார்; அன்பு நிறைந்த நெஞ்சத்துடன் மணமக்களை வாழ்த்தி மகிழ்வார். திருமணம் நடத்துவதில் அவர் 'கைராசிக்காரர்' என்று மக்கள் மனம் மகிழச் சொல்வதுண்டு.

1971 ஆம் ஆண்டில் ராசன் உடல் நலம் குன்றியிருந்தார். அது கோடைகாலம். அவரது இரத்த அழுத்தம் சீரான நிலையில் இல்லை. வேனல் கட்டிகளும் அவருக்குத் தொல்லை அளித்தன. ஆறு முதல் எட்டுவாரங்கள் உதகமண்டலத்தில் தங்கியிருக்க வேண்டுமென மருத்துவர்கள் கூறியிருந்தனர்.

ராசன் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் ஊட்டிக்குச் சென்று லாலி இன்ஸ்டிடியூட்டில் தங்கினார். மே மாதம் நான்காம் நாள் உத்தமபாளையப் பகுதியிலிருந்து ஒருவர் ராசனைக் காண வந்தார்; வெற்றிலை, பாக்கு, பூ, பழம் அடங்கிய தட்டில் திருமண அழைப்பிதழை வைத்து, ராசனிடம் பணிவாகக் கொடுத்தார். உத்தமபாளையத்திற்கு அருகிலுள்ள தம் ஊருக்கு வந்து, தம் மகனின் திருமணத்தை நடத்தித்தர வேண்டுமென வினயமாகக் கேட்டுக்கொண்டார். அவர், நவம்பர் மாதத்திலேயே ராசனின் இசைவைப் பெற்றிருந்தார்; ஆனால் மணநாளை, அவர் அப்போது முடிவு செய்யவில்லை. இப்போது ராசன் தலைமையில் திருமணம் நடைபெறுவதாக அழைப்பிதழ் அச்சிட்டுவிட்டார்.

அங்கு ராசனுடன், நீதியரசர். நடராசன் அவர்களும், திரு. பழனிவேல்ராசன் அவர்களும் இருந்தனர். பழனிவேல்ராசன் அவர்கள், வந்தவரைப் பார்த்து 'நீங்கள் எங்கள் ஐயாவின் ஒப்புதல் பெறாமல் நாள்குறித்துத் திருமண அழைப்பையும் அச்சிட்டுவிட்டீர்கள். இப்போது அவர் உடல் நலக் குறைவாக இருக்கிறார். ஊட்டியிலேயே இருந்தாக வேண்டும்; அவருக்குப் பதில் எங்கள் சிறிய தந்தையார் மகன் டாக்டர்.பி.சுப்பிரமணியன் அல்லது என் தமையனார் கமலத்தியாகராசன் வந்திருந்து திருமணத்தை நடத்துவார்கள் என்றார்.

வந்தவர் மனம் வாடியது; தாம் செய்தது தவறு என்று கூறி மன்னிக்க வேண்டினார். ராசனிடம் தாங்களே பெரிய மனதுடன் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டிக்கொண்டார்.

ராசன் அவர்கள் வந்தவரை நோக்கினார். அவரது வாடிய முகத்தைக் கண்டார். பிறர் வருத்தம் கொள்ள அவரால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? நோயுற்ற நிலையிலும் அவர் 'நீங்கள் கவலை கொள்ள வேண்டா! நானே வந்து திருமணத்தை நடத்துவேன்.

‘மணமக்களை வாழ்த்துவேன்’ என்றார். வந்தவர் மனமகிழ்ச்சியுடன் ஊர் திரும்பினார்.

பின்னர் தம் மகனிடம், இவர் என்னைக் கேளாமல் திருமண அழைப்பு அச்சிட்டது தவறுதான். ஆனால் நீயோ என்னைத் திருமணத்திற்குச் செல்ல வேண்டாம் என்றாய். திருமணம் என்பது ஆயிரம்காலத்துப்பயிர். மணமக்கள் வாழையடி வாழையாக வளமுடன் வாழவேண்டும். எனவே, நான் உன் தாயாருடன் மணவிழாவில் கலந்துகொள்ள விரும்புகிறேன். வந்தவர் ‘நான் தவறாமல் வருவேன்’ என்ற நம்பிக்கையில் வந்துள்ளார். அப்படிப்பட்டவரிடம் நீ அபசகுனமாக ‘உடல் நலம் இல்லை.. வெயில் அதிகம், மலையை விட்டு இறங்கக்கூடாது... உங்கள் ஊரில் மின்விசிறி இல்லை என்றெல்லாம் சொல்லலாமா? என் உடலில் மூச்சு உள்ளவரை திருமணங்களுக்குச் செல்வதை நான் நிறுத்த மாட்டேன்’ என்றார்.

தம் அருகில் இருந்த தம் மாப்பிள்ளை, நீதியரசர் நடராசனைப் பார்த்து ‘உங்கள் மைத்துனர் எவ்வளவு கண்டிப்புடன் பேசுகிறார். இதுபோல் பேசக்கூடாது. திருமணத்திற்கு எவர் அழைத்தாலும் ஏழை எளியோர் அழைக்கும் போது தவறாமல் சென்று மணவிழாவை நடத்த வேண்டும். மணமக்களை வாழ்த்த வேண்டும்’ என்று கனிவுடன் கூறினார்.


இல்லத் திருமணங்கள்

ராசன் அவர்களின் மகன்கள், மகள்கள் மணவிழாக்கள், அவருடைய தம்பி மகன்கள், மகள்கள் மணவிழாக்கள்,தமிழ்த்திருமண முறையிலேயே நடைபெற்றன. பார்ப்பனரின் மீதுள்ள வெறுப்பினாலோ, சமஸ்கிருத மொழியின் மீதிருந்த காழ்ப்புணர்வினாலோ அவர், தமிழ்த் திருமணங்களை நடத்தவில்லை. பிராமண நண்பர் பலர் அவருக்கு இருந்தனர். சமஸ்கிருதத்தின் மீது அவர் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். அவர் சமஸ்கிருத நூல்கள் பலவற்றை ஆழ்ந்து கற்றவர். பிராமண நண்பர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும், அவர் பலவகையில் உதவிபுரிந்து வந்துள்ளார். தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாகவே தமிழ்த்திருமணங்களை அவர் தீவிரமாக ஆதரித்து வந்தார்.

அவரது இல்லத் திருமணங்கள் யாவும் தமிழ்த் திருமண முறையிலேயே நடைபெற்றன. பிராமண வைதீக முறைகள் தேவையில்லை என்று, நடக்கும் திருமணங்கள் போலல்லாமல், தமிழ் மறைகளின் படி நடந்தன. மணவிழாவில் ஓமம் வளர்க்கப்படும். ஓதுவார்கள் தேவாரப்பாடல்களை உருக்கமுடன் பாடுவார்கள். மணமக்களை வாழ்த்துமாறு ராசன் அனைவரையும் கேட்டுக் கொள்வார். திருவாளர்கள் கார்மேகக்கோனார், ஔவை. துரைசாமிப்பிள்ளை போன்ற சான்றோர்கள் தமிழ்த்திருமண முறை பற்றியும், திருமண நிகழ்ச்சிச் சிறப்புகள் குறித்தும் சொற்பொழிவு ஆற்றுவர். மணவிழாவிற்கு வந்துள்ள பெரியோர் இருவர், மணமக்களுக்கு வாழ்த்துக்கூறுவர். அந்தத் திருமண நிகழ்ச்சிகளில் சமஸ்கிருத மொழிபற்றியோ பிராமணப் புரோகிதர் குறித்தோ எவரும் பேசுவதில்லை.

திருமணங்கள் நடத்தும் முறையை, முறை செய்தது போல் திருமண அழைப்புகளைக் கொடுப்பதிலும் அவர் புதுமுறையைக் கையாண்டார். பெண்வீட்டார் சார்பாக வெளியூர் உறவினர், நண்பர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படுவதில்லை. மணமகளின் தந்தை, மணவிழா குறித்த செய்தியைச் செய்தித்தாளில் வெளியிடுவார். அதனையே அழைப்பாக ஏற்று வெளியூர் நண்பர்களும், உறவினர்களும் அஞ்சல் மூலம் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்க வேண்டும். அதனையே நேரில் வந்து வாழ்த்தியதாகக் கொள்ளப்படும் என்றும் மணச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ராசன் அவர்கள் சிக்கனம்கருதி இவ்வாறு



P. T. R. Solemnising the marriage of a West German Couple converted to Hinduism, at 'Gopal Bagh', Coimbatore on October 31, 1962.

செய்யவில்லை. அதற்கு வேறு தகுந்த காரணம் உள்ளது. 1940 ஆம் ஆண்டு அவருடைய தம்பி மகள், வேலம்மாள் திருமணம் நடைபெற்றது. அனைத்து நண்பர்களும், உறவினர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். உத்தமபாளையம் மற்றும் மதுரையைச் சார்ந்த பல பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவில் வந்திருந்தனர். சிறப்பு விருந்தினராகிய டாக்டர் P. சுப்பராயன், திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார், திரு. ஜி.டி. நாயுடு, திரு. பழனிச்சாமி நாயுடு ஆகியோருக்கு மாலை நான்கு மணி ஆனபோதும், மணவிருந்து கொடுக்க முடியவில்லை. உணவருந்தும் இடத்தில் கூட்டம் மிகுந்திருந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின்னரே, அவர் இத்தகைய ஒரு முடிவை மேற்கொண்டார்.

பாளையம் இல்லத்தில் நடைபெறும் திருமணங்களில் மாப்பிள்ளை வீட்டாருக்கும், அவருடைய நெருங்கிய சுற்றத்தார்க்கும், மணவிழாவிற்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படும். உள்ளூரில் உள்ள நான்காயிரம் பேருக்கு மாலையில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சிக்குத் தனியே அழைப்பு வழங்கப்படும். மாலை வரவேற்புக்கு வரும் அனைவரையும், ராசன் அவர்கள் தாமே வரவேற்று ஒவ்வொருவருக்கும் மல்லிகைச்சரம் அணிவிப்பார். திறந்தவெளித் திடலில் சுவைமிகு சிற்றுண்டிகள் வழங்கப்படும். உணவுப் பங்கீடு நடைமுறையில் இருந்தபோது, ஐம்பது பேர்கள் மட்டுமே விருந்துக்கு அழைக்கப்படுவர். மாப்பிள்ளை வீட்டாரைத் தவிர மற்றவர்களுக்கு மணவிருந்து அளிக்கப்படுவதில்லை.

நீதியரசர் திரு. எஸ். நடராசனின், திருமணம் மதுரையில் நடந்தது. ராசன் தம் வெளியூர் நண்பர்களுக்குத் திருமணச்செய்தியைத் தெரிவித்து, ஊரிலிருந்த வண்ணமே வாழ்த்தியருளுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். இருப்பினும் அவருடைய நண்பர்கள், 'அவர் அப்படித்தான் எழுதுவார்; நாம் போகாமலிருக்கலாமா'?. என்ற எண்ணத்தில் மணவிழாவிற்கு வந்துவிட்டனர்.

'நீங்கள் என் வேண்டுகோளையும் மீறித் திருமணத்திற்கு வந்துள்ளீர்கள். மிக்க மகிழ்ச்சி... நன்றி. மதுரையில் சிறந்த உணவகங்கள்

பல உள்ளன. அங்குச் சென்று உணவருத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்றார் ராசன்'சட்டத்தை மதிக்கத் தெரிந்த மேதை அவர்' என்று அனைவரும் அவரைப் பாராட்டி மணமக்களை வாழ்த்தி விடைபெற்றனர்.

திருமண மண்டபம்

ஆயிரமாயிரம், திருமணங்களை அவர் கரங்களால் நடத்தி வைத்தமையால்தான், அவரது நூற்றாண்டு விழாவினையொட்டி அவர் பெயரில் திருமண மண்டபம் அமைய வேண்டும் என நல்லோர் பலர் வேண்டுகோள் விடுத்தனர்.

மதுரை, குதிரைப்பந்தயத் திடல் சாலையில் அவர் பெயரால் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. 27.05.2001 முதல் அங்கு மணவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ராசன் அவர்களின் உருவச்சிலை 21-04-2002 இல் திருமண மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

– பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்



அவரது இல்லத் திருமணங்கள் யாவும் தமிழ்த் திருமண முறையிலேயே நடைபெற்றன. பிராமண வைதீக முறைகள் தேவையில்லை என்று, நடக்கும் திருமணங்கள் போலல்லாமல், தமிழ் மறைகளின் படி நடந்தன. மணவிழாவில் ஓமம் வளர்க்கப்படும். ஓதுவார்கள் தேவாரப்பாடல்களை உருக்கமுடன் பாடுவார்கள். மணமக்களை வாழ்த்துமாறு ராசன் அனைவரையும் கேட்டுக் கொள்வார். திருவாளர்கள் கார்மேகக்கோனார், ஔவை. துரைசாமிப்பிள்ளை போன்ற சான்றோர்கள் தமிழ்த்திருமண முறை பற்றியும், திருமண நிகழ்ச்சிச் சிறப்புகள் குறித்தும் சொற்பொழிவு ஆற்றுவர். மணவிழாவிற்கு வந்துள்ள பெரியோர் இருவர், மணமக்களுக்கு வாழ்த்துக்கூறுவர். அந்தத் திருமண நிகழ்ச்சிகளில் சமஸ்கிருத மொழிபற்றியோ பிராமணப் புரோகிதர் குறித்தோ எவரும் பேசுவதில்லை.

★ ★ ★

தமிழவேள் ஆற்றிய திருப்பணிகள்

வடபழநி

இன்று 'வடபழநி' என்றவுடன், சென்னையில் உள்ளவர் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ளோரும் நன்கறிவர். இதனை இந்த நிலைக்கு உயர்த்திய பெருமை திரு.பி.டி.ராஜன் அவர்களுக்கே உரியது. வடபழநியில் கோயில் கொண்டுள்ள தண்டாயுதபாணி, காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகுப் பெட்டகமாய் விளங்குகின்றான். அவனுடைய நின்ற திருக்கோலத்தைக் கண்டுகளித்த தணிகைமணி திரு.வ.து.செங்கல்வராயனார்.

கண்டார்தம் மனங்கவரும் முண்டிதமாம் சிரத்தழகும் காணக் காணக் கொண்டாடத் தக்கதிரு நீற்றழகும் கண்டிகையின் கோலச் சீரும் பண்டாய நான்மறைக்கோ வணச்சீரும் கொண்டுவட பழனி மேவும் தண்டாயுதப் பெருமான் திருவடிக்கே அகங்குழைந்து தழைத்து வாழ்வோம்

என்று அவன் வடிவழகை வண்ணத் தமிழில் சித்தரித்து, அந்த வடிவத்தை அப்படியே நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். ஆடல் புரியும் முருகனின் அழகும், பாடல் அழகும், நம்மை ஒருங்கே கவர்கின்றன.

வடபழநி திருக்கோயில் மாண்புற அமைவதற்குக் காரணமாக இருந்தவர்கள் அண்ணாசாமித் தம்பிரான், இரத்தினசாமித் தம்பிரான், பாக்கியலிங்கத் தம்பிரான் எனும் மூவரே ஆவர். தற்போது வடபழநி ஆண்டவர் திருக்கோயில்



Kumbabishekham of Palani Andavar Temple, Vadapalani.

உள்ள இடத்தில் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் சாலிக்கிராமம் பகுதியில் அண்ணாசாமி நாயகர் (தம்பிரான்) வீடு இருந்தது. அவர் 'வேலுண்டு வினையில்லை'; 'மயிலுண்டு பயமில்லை'; 'புகழுண்டு குறையில்லை' என்ற எண்ணங்களோடு முருக சிந்தனையுடன் வாழ்ந்து வந்தார்.

ஒரு முறை அவர் திருத்தணி முருகனை வழிபடச் சென்றிருந்தார். அங்கு தன் நாவின் நுனியை அறுத்து முருகனுக்குக் காணிக்கையாக்கினார். அங்கிருந்து கொண்டுவந்த முருகன் படத்தைத் தம் வீட்டில் வைத்து வழிபட்டு வந்தார். பழனிக்குச் சென்றபோது பழனியாண்டவரின் அழகிய பெரும்படம் ஒன்றை வாங்கினார். அதனைப் பெருஞ்செல்வமாகக் கருதி பயபக்தியுடன் சென்னைக்குக் கொண்டு வந்தார். அந்தப் படத்தை வைத்து வழிபடும் இடத்தில் ஒரு கீற்றுக் கொட்டகை அமைத்தார். அப்போது தேனாம்பேட்டையில் வாழ்ந்த இரத்தினசாமி

செட்டியார் (தம்பிரான்) அவருடைய சீடரானார்.

ஒரு நாள் அவர், தம் சீடரிடம் 'இந்தக் கீற்றுக் கொட்டகையை மாற்றவேண்டும், வானளாவிய அழகிய கோபுரத்துடன் பெரிய கோயில் ஒன்றைக் கட்டவேண்டும், அதற்கு நீ ஏதேனும் செய்ய முடியுமா?' என்று கேட்டார்.

குருவின் கேள்வியால் சீடர் சிறிதளவும் திடுக்கிடவில்லை. தாம் எதிர்பார்த்த ஒன்றையே தம் ஞானாசிரியர் கேட்பதாக நினைத்தார் செட்டியார் அவர்கள். 'அப்படியே செய்து விடலாம்... வானளாவிய கோபுரம்.. பெரிய கோயில்... குளம்... இவை தானே? இவை யாவும் உருவாகிவிடும். அன்பர்கள் பலரும் இப்படித்தான் நினைக்கின்றனர். இதுபற்றிக் கவலைப்படவேண்டாம்' என்று தம் ஞானகுருவிடம் தன்னம்பிக்கையுடன் கூறிப் பணிந்தார். தமது சீடரின் சொற்களில் உள்ள உறுதியால் குரு உற்சாகமடைந்தார்.

சீடர் இரத்தினசாமித் தம்பிரான் வண்ணையம்பதிக்குச் (வண்ணாரப்பேட்டை) சென்றார். சிற்பி ஒருவரைச் சந்தித்தார். தமது குருவின் விருப்பத்தை எடுத்துச் சொன்னார். முதலில் பழனியாண்டவர் சிலையொன்றை வடித்துத் தருமாறு கேட்டுக் கொண்டார். சிற்பியும் மனமகிழ்ச்சியுடன் பணியை ஏற்று பழனியாண்டவர் சிலையை வடித்துத் தந்தார். கோயில் திருப்பணி தொடங்கிவிட்டது.

இப்போது வடபழநி ஆண்டவர் திருக்கோயில் கருவறைப் பகுதி உள்ள இடத்தில், செங்கல் சுண்ணாம்புக் கட்டடம் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் 1865 இல் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இரத்தினசாமித் தம்பிரானின் அன்புச் சீடர் பாக்கியலிங்கத் தம்பிரான், கோயில் பணிகளைக் கண்ணும் கருத்துமாய்ச் செய்து வந்தார். அவர், வடபழநி முருகனிடம் எல்லையில்லா பக்தி கொண்டிருந்தார். இப்போதுள்ள கருப்பக்கிருகம் மற்றும் முதல் சுற்று அதாவது முதல் பிராகாரம் ஆகியவற்றைக் கருங்கல் திருப்பணியாகச் செய்தவரும் அவரே! பாக்கியலிங்கத் தம்பிரான் ஏறத்தாழ ஐம்பதாண்டுக்காலம் கோயில் திருப்பணியையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இடையறாது தொண்டுபுரிந்து வந்தார்.

பிற்காலத்தில் அந்த ஆலயத் திருப்பணிக்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவராகத் திரு.பி.டி.ராஜன் அவர்கள் பொறுப்பேற்றார். திருப்பணிகள் பலவற்றைச் செய்தார். வடபழநி ஆண்டவர் கோயில் ராஜகோபுரக் கும்பாபிஷேகம் விரோதிகிருது ஆண்டு தைத் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கோயில் திருக்குளத் திருப்பணிக்குழுவும் திரு.பி.டி.ராஜன் அவர்கள் தலைமையில் செயல்பட்டது. குளம் சீரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றது.

சென்னை மாநகர மக்கள் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்து வடபழநி ஆண்டவனைத் தரிசித்து அவனருள் பெற்றுச் செல்கின்றனர்.

இன்று கோயில் மிகப்பெரிய கற்றளியாக உள்ளது. இது எழிலுறக் காட்சி தருவதற்கு மூலகாரணராக, முதற்காரணராக இருந்தவர் திரு.பி.டி.ராஜன் அவர்களே ஆவார்.

விண்தொட உயர்ந்து நிற்கும் வடபழநி ஆண்டவருடைய திருக்கோயில் கோபுரத்தைக் காணும்போது, அமரர் ராஜன் அவர்களுடைய நினைவும் நெஞ்சில் நிழலாடவே செய்கிறது.

சபரிமலை

தமிழகத்தில் இருந்தும், பிற மாநிலங்களில் இருந்தும் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான


மக்கள், சபரிமலையில் எழுந்தருளியுள்ள தரும சாஸ்தா என அழைக்கப்படும், ஐயப்பனை வழிபட செல்கின்றனர். ஐயப்பன் வழிபாடு தமிழகத்தில் பரவுவதற்கு மூல காரணராய் இருந்தவர் திரு.ராஜன் அவர்களே ஆவார்!

இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற நேரம். கேரளத்தைச் சேர்ந்த பிற மதவாதிகள் சிலர், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குத் தீயிட்டுவிட்டு ஓடிவிட்டனர். கோயிலும் ஐயப்பன் விக்கிரகமும் தீயில் பழுதாயின. கேரள அரசு, ஐயப்பன் திருக்கோயிலைப் புதுப்பிக்கவும் மீண்டும் ஐயப்பனைப் பிரதிஷ்டை செய்யவும் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.
கேரளத்தைச் சார்ந்த ஐயப்ப பக்தர் சிலர், திரு.இராஜன் அவர்களை அணுகினர். ஐயப்பன் கோயில் திருப்பணி குறித்து வேண்டுகோள் விடுத்தனர். ஐயப்பன் கோயில் தீயில் பழுதானது பற்றியும், ஐயப்பன் விக்கிரகம் புதியதாகப் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும் என்பது பற்றியும், அவர்கள் உருக்கமாக எடுத்துக் கூறினர்.

அவர்களது வேண்டுகோளை திரு.ராஜன் அவர்கள் உடனே ஏற்றுக்கொண்டார். அவர்கள் விரும்பியபடியே ஐயப்பன் விக்கிரகம் செய்ய ஏற்பாடு செய்தார்.

ஐயப்பன் விக்கிரகத்தைச் சபரிமலையில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டுமாயின், சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். புதிய விக்கிரகத்தை நூற்றுக்கணக்கான ஊர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்; மக்கள் வழிபட வேண்டும்; பின்னரே அத்தெய்வத்திற்குரிய கோயிலில் பிரதிஷ்டை செய்யலாம்.

திருவாளர் ராஜன் அவர்கள் ஐயப்பன் விக்கிரகத்தைச் செய்து ஊர்வலமாகப் பல ஊர்களுக்கு எடுத்துச் சென்றார். இறுதியில் சபரிமலையில் ஐயப்பனைப் பிரதிஷ்டை செய்வது வரை எல்லாப் பணிகளிலும் அவர் உடனிருந்தார். 'ஐயப்பசாமி திக் விஜயம்' என்று பெயரிட்டு ஐயப்பனை ஊர் ஊராகக் கொண்டு சென்றார். ஒவ்வொரு ஊரிலும் உள்ள முக்கியமான திருக்கோயில்களில் ஐயப்பன்



விக்கிரகத்தை வைத்துக் கோயில்மூர்த்திக்கும், ஐயப்பனுக்கும் ஒரே சமயத்தில் அபிஷேகம் அர்ச்சனை, தீபஆராதனை செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

பல இடங்களில் ஐயப்பனைக் கோவிலுக்குள் கொண்டு செல்வதில் பிரச்சினைகள் தோன்றின. வைதீக பிராமணர்கள் சிலர், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். 'ஐயப்பன் என்பவர் எல்லைக் கடவுளாகிய ஐயனார்தான். ஆகவே அவரை ஊர் எல்லை கடந்து, உள்ளே கொண்டுவரக் கூடாது' என்று அவர்கள் எதிர்த்தனர். ஆனால், ராஜன் அவர்கள் அந்த எதிர்ப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல், ஐயப்பனின் தமிழ்நாடு திக் விஜயத்தைச் சிறப்பாக நடத்தி முடித்தார்.

ஐயப்பன் திக் விஜய சுவரொட்டிகள், பல சிற்றூர்களிலும் ஒட்டப்பட்டன. நான் பிறந்த ஊர் பிள்ளையார்குப்பம். அது மிகச் சிறிய ஊர். அவ்வூரில் தொண்டை மண்டல வேளாளர்கள் மட்டுமே வாழ்கின்றனர். மக்கள்தொகை நூற்றைந்துபேர். அங்குள்ள தெருக்கோடி கிணற்றுச் சுவரில் 'ஐயப்பசாமி தமிழ்நாடு திக் விஜயம்' என்று அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்தபோது தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் பட்டிதொட்டியெங்கும் ஐயப்பன் ஊர்வலம் பற்றிய செய்தி பரவியுள்ளது எனத் தெரியவந்தது.

சபரிமலை ஐயப்பனைப் பிரதிஷ்டை செய்ய அறுபது கிலோமீட்டர் நடந்தே சென்றார் ராஜன். அவரைக் கண்ட கேரள ஐயப்ப பக்தர்கள் அவரைப் 'பாண்டிய நாட்டு அரசன்' என்று கூறி அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி வரவேற்றனர். இதன் பின்னரே தமிழ்நாட்டிலிருந்தும் ஆந்திரம் உள்ளிட்ட அயல் மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், கோடிக்கணக்கான பக்தர்கள் ஐயப்ப விரதமிருந்து சபரிமலை யாத்திரை மேற்கொள்ளத் தொடங்கினர். பக்தர் கூட்டம் ஆண்டுதோறும் பெருகி வருகிறது. கோடிக்கணக்கான பணம் கோயிலில் குவிகிறது. ஐயப்ப விக்கிரகத்தைத் தமிழகக் கிராமங்களிலெல்லாம் பவனி வரச்செய்து, தெய்வ பக்தியையும் ஒழுக்கத்தையும், பணிவையும், பரப்பிய பெருமை திரு.ராஜன் அவர்களுக்கே உரியது.

திருவாதவூர்

மதுரைக்கு அருகில் உள்ள வளமார்பதி திருவாதவூர், குறிஞ்சிக்குக் கபிலர் எனப் போற்றப்படுபவரும், குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவருமான கபிலர் பிறந்து வாழ்ந்ததும் இவ்வூரே என்பர். திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானும் இங்குதான் அவதரித்தார்.



இங்குள்ள பெரிய கோயில் கவனிப்பாரற்று மிகவும் சீர் குலைந்து இருந்தது. இக்கோயில் திருப்பணியை திரு.ராஜன் அவர்கள் 1955 இல் தொடங்கி 1959 இல் சிறப்பாக முடித்தார். குடமுழுக்கு விழாவும் மங்களகரமாக நடந்தேறியது.

இன்று மக்கள் திருவாதவூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருவதைக் காணும்போது, திரு.பி.டி.ராஜன் அவர்களின் கோயில் திருப்பணி நம் நினைவில் தோன்றுகின்றது.

பழமுதிர்சோலை

முருகனின் ஆறாம் படைவீடாகிய பழமுதிர்சோலை முருகனை அருவமாக வழிபடும் பதியாகும். பழமுதிர் சோலையாகிய அழகர் கோயில் மலையில், ஒரு கோயில் எழுப்பி அங்கு முருகனை எழுந்தருளச் செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்பினர்.

1960 ஆம் ஆண்டு எதிர்ப்புகள் பல இருந்த போதும், திரு.பி.டி.ராஜன் அவர்கள் மக்களின் பல்லாண்டுகால விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். அக்கோயிலில் எழுந்தருளியுள்ள வெற்றிவேல் முருகனுக்குச் சாத்துவதற்காக அழகிய வேலினைத் தயாரித்து, மதுரை மீனாட்சி கோயிலில் ஓர் இரவு வைத்து, வழிபாடு நடத்தப்பட்டது. மறுநாள் முதலாம் படைவீடாகிய திருப்பரங்குன்றத்திலும், இரண்டாம் நாள் திருச்செந்தூரிலும், மூன்றாம் நாள் திருஆவினன்குடியிலும், (பழனி) நான்காம் நாள் திருவேரகம் எனும் சுவாமிமலையிலும், ஐந்தாம் நாள் குன்றக்குடியிலுமாக இவ்வாறு ஒவ்வோர் இரவும் மூலத்தானத்தில் வைத்து வழிபாடுகள் நடைபெற்றன. ஆறாம் நாள் மதுரை திருக்கல்யாண மண்டத்தில், அங்கயற்கண் அம்மையுடன் அமர்ந்த ஆலவாய் அண்ணலையும் எழுந்தருளச்செய்து, வேலுக்கு வழிபாடு நடைபெற்றது.



பின்னர், நான்கு மாசி வீதிகளிலும், வெள்ளி ரதத்தில் வேலை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மதுரையிலிருது அறுபடை வீடுகளுக்குச் செல்லும் வழியெங்கும் ஒவ்வொரு ஊரிலும் வெற்றிவேலுக்குச் சிறந்த வரவேற்பும் வழிபாடும் நடந்தன. பழமுதிர்சோலையில் அழகாக எழுப்பப்பட்ட முருகன் திருக்கோயிலில் 'வேல்' பிரதிஷ்டை செய்யப்பட்டது.

டில்லி

1966 ஆம் ஆண்டு அகில இந்திய இந்துசமய மாநாடு டில்லியில் நடைபெற்றது. திரு.பி.டி.ராஜன் அவர்கள், இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

டில்லிவாழ் தமிழ் மக்கள் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. C.R. பட்டாபிராமன், அங்குக் கட்டப்பெற்றுவந்த உத்திரசாமிநாதர் கோயில் தரிசனத்துக்காக ராஜன் அவர்களை அழைத்துச் சென்றார். அங்குக் குழுமியிருந்த தமிழ் மக்கள் ராஜனுக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர். கோயில் அமைய உள்ள இடம், மாதிரி வரைபடம் ஆகியவற்றைக் காட்டினர். அப்பொழுது அவர்கள் விருப்பத்திற்கிணங்க சுவாமி மலையிலுள்ள 'ஞானவேல்' போன்ற ஒன்றைத் தாம் செய்து தருவதாக ராஜன் அவர்கள் உறுதியளித்தார்.

வேல் ஒன்றைச் செய்து ஆறுபடை வீடுகளுக்கு அதனை அனுப்பிச் சிறப்பான முறையில் ஆங்காங்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி, 1966 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் டில்லிக்கு அனுப்பி வைத்தார்.

தென்காசி

நெல்லை மாவட்டம் தென்காசியில் உள்ள உலகம்மை காசிவிசுவநாதர் கோயில் 500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது.



P. T. R. with 'Vel' (Spear of Lord Muruga) on his way to Delhi, December 1965.

தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பராக்கிரம பாண்டியன் இத்திருக்கோயிலைக் கட்டினான்.

இது ஒரு கலைக் கோயில் என்று சொல்லத்தக்க அளவு பெருஞ்சிறப்பு பெற்றுள்ளது. இங்குள்ள சிற்பங்கள் சிற்பக்கலையின் அத்துணை நுட்பங்களும் பொதிந்தவை. பேரெழில் மிக்கவை. காண்போர் கண்ணையும் மனதையும் கவரும் இயல்புடையவை. பார்த்தவர் நெஞ்சை விட்டகலாத் தன்மையுடையவை. மீண்டும் மீண்டும் காணத் தூண்டுபவை.

நடராசர், காளிதேவி, ஊர்த்துவ தாண்டவர், இரதி, மன்மதன் ஆகியோரின் சிற்பங்கள் இங்கு அழகுற அமைந்துள்ளன. கோயிலுக்குப் பராக்கிரம பாண்டியன், இராஜகோபுரம் கட்டத் தொடங்கினான். 'ஓங்கு புகழ் ஒன்பது நிலைக் கோபுரமாக' அமைக்க அவன் பெருவிருப்பம் கொண்டிருந்தான். அவன் ஆர்வத்தோடும் பக்தியோடும் தொடங்கிய கோபுரப் பணி முடியும் முன்பே, அவன் இயற்கை எய்தினான். அவன் தம்பி குலசேகரபாண்டியன், அண்ணன் தொடங்கிய பணியைத் தான் தொடர்ந்து செவ்வனே செய்து முடித்தான்.

1456 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற கோபுரப் பணிகள் 1505 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. ஒன்பது நிலைகள் கொண்ட இந்த ராஜகோபுரத்தைக் கட்டி முடிக்க ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று. அவ்வளவு அரிய பணி அது. அத்தகு அரும்பணியை மேற்கொண்ட பாண்டிய மன்னர்கள் என்றும் நம் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள் ஆவர்.

காலம் பல கடந்து நின்று காண்பவர்க்கு

விருந்தாகும் என்று கருதிய கோபுரம், இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பழுதுபட்டது. ஒரு தீக்கோளில் அந்த ராஜகோபுரம் சேதமடைந்தது. கலசங்கள் வீழ்ந்தன; சிகரம் சிதைந்தது. மொட்டைக் கோபுரமாக நின்றது. பின்னர் அந்த மொட்டைக் கோபுரமும் இரண்டாக வெடித்து, நடுவில் பெரிய பிளவு ஏற்பட்டு ஓட்டைக் கோபுரமாகவும் மாறிவிட்டது. அந்நாளில் அரசு ஆவணங்கள் (செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் முதலியன) கோபுரத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அவையும் மின்னல் தாக்கியதால் தீப்பற்றிக் கொண்டன.

கோபுரத்தின் நிலைகள், உத்திரங்கள் முதலியன மரத்தால் செய்யப்பட்டவை. ஒன்பது நிலைகளுடன் ஓங்கு புகழுடன் விளங்கிய கோபுரம் கடந்த இருநூறு ஆண்டுகளாக 'மொட்டைக் கோபுரம்' என்றே வழங்கப்பட்டு வந்தது. என்னே பரிதாபம்! உயர்வும் தாழ்வும் மனிதருக்கு மட்டுமில்லை போலும்.

ராஜகோபுரத்தைப் புதுப்பிக்கும் பணியை ஏற்றுச் செயல்பட எவரும் முன்வரவில்லை. 'அந்தக் கோபுரப் பணியைச் செய்து முடிக்க அரசர்களுக்கே ஐம்பது ஆண்டுக்காலம் ஆயிற்று என்றால் நம்மால் முடியுமா?' என்ற மலைப்பே அதற்குக் காரணமாக இருந்தது.

1963 ஆம் ஆண்டில் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு திருப்பணிக் குழுவைத் தமிழக அரசு அமைத்தது. அக்குழு கோபுரத்தின் சிதைந்திருந்த பகுதி முழுவதையும் அகற்றியது. அடித்தளம் (கல்காரம்) மட்டுமே எஞ்சி நின்றது.

1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் நாள் திருவாளர் சிவந்தி ஆதித்தன் தலைமையில் திருப்பணிக்குழு அமைந்தது. என்ன காரணங்களாலோ அதன்பின் பணி தொடர முடியாமல் போயிற்று. 28.1.1984இல் திருவாளர்.சிவந்திஆதித்தன் தலைமையில் திருப்பணிக் குழு புத்துயிர் பெற்றுத் திருப்பணிகள் தொடங்கின. ஒரு கோடி ரூபாய் செலவில் ஒன்பது நிலைகளுடன் கூடிய 170 அடி உயரம் ஓங்கிய புதிய ராஜகோபுரம் கட்டப்பட்டது. குடமுழுக்கு விழா 25.06.90 திங்கட்கிழமையன்று கோலாகலமாக நடந்தேறியது. இதனைப் பாங்குறச் செய்தவர் திருவாளர், சிவந்தி ஆதித்தன் அவர்களே ஆவார்.

மதுரை


திரு.பி.டி.ராஜன் அவர்கள் தம் முப்பத்தாறாம் வயதிலேயே கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டுவிட்டார். அரசியலிலிருந்து விலகிய பின்பு, அன்னை மீனாட்சி ஆலயத் திருப்பணியிலும், அந்த உலக அன்னைக்கு வைரமுடி செய்து அணிவிக்கும் பொறுப்பினிலும், அவர் முழுமூச்சுடன் ஈடுபட்டு வந்தார்.

திரு.ராஜன் அவர்களின் தொடக்ககாலப் பணிகளையும், வாழ்நாள் முழுமையும் ஆற்றிய பணிகளையும் சிங்கநோக்காகக் காண்போர் அவரது திருக்கோயில் திருப்பணி சிறிய அளவில் தொடங்கி பெரிய அளவில் வளர்ந்தது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

ராஜனின் வாழ்க்கை திருப்பணியில் தொடங்கியது; திருப்பணியிலேயே நிறைவெய்தியது. இதற்கு அன்னையின் திருவருளே காரணமாய் அமைந்தது!

வடபழநி திருக்கோயில் பணியை அவர் மேற்கொண்டபோது, தம் தாய் மண்ணாகிய மதுரையம்பதியிலும் திருப்பணிகளை மேற்கொள்ள நேரிடும் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டார்.

பெரிய செயலினைப் பிற்காலத்தில் செய்ய வேண்டியிருப்பின், அதற்குரிய பயிற்சியைச் சிறிய அளவில் தொடங்கிப் பெறுதல் இன்றியமையாதது அல்லவா?



1929 இல் சென்னை வடபழநியில் அவரது முருகன் திருக்கோயில் திருப்பணிக்குப் பின்னர், இருபதாண்டுகள் கால வெள்ளத்தில் கரைந்து போயின.

ஐயப்பன் திருக்கோயில், தீயவர் சிலரால் பாழ்படுத்தப்பட்டபோது, கேரள நாட்டார் கோயிலைச் செப்பனிடவோ, ஐயப்பன் சிலை அமைக்கவோ முன்வரவில்லை. ராஜன் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் இப்பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

ஐயப்பன் திருப்பணிக்குப்பின் திருவாதவூர்க் கோயில் திருப்பணிப் பொறுப்பை இவர் 1955 ஆம்ஆண்டில் ஏற்றார். 1959 இல் செய்து முடித்தார். 1960 இல் குடமுழுக்கு சிறப்புடன் நடைபெற்றது. அப்போது ராசன் தமது அறுபத்தெட்டாம் வயதினை நெருங்கியிருந்தார்.

எந்த ஒரு மாபெரும் பணிக்காக உத்தமபாளையத்தில் ஒரு பக்தனை அம்மை பிறப்பித்தாளோ, அப்பணியைச் செய்யவேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. ராஜனைத் தோற்றுவித்த பெருமாட்டி, இப்போது அவரது பணியை நினைவூட்ட நல்லவழியை மேற்கொண்டாள்.

திருவாதவூர்த் திருத்தொண்டு முடிந்து குடமுழுக்கு நிறைவேறியதும், ராஜன் அவர்கள் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அடுத்து செய்ய வேண்டிய பணி சிவராசதானி என வழங்கும் மதுரையில், அன்னையின் திருக்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்வதே ஆகும். இதனையும் ராஜனே ஏற்றுச் செய்ய வேண்டும் என்று நண்பர்கள் கேட்டுக்கொண்டனர்.

சிறு கோயில்கள் மூன்றன் திருப்பணிகளை முடித்த ராஜன் அவர்கள், நண்பர்கள் கூறிய பணியை எண்ணி மலைப்படைந்தார்.

சங்ககாலம் தொடங்கி பாண்டிய மன்னர்களும், பாண்டியரை வென்று மதுரையைக் கைப்பற்றிய சேர, சோழரும் திருக்கோயிலை விரிவுபடுத்திக்கொண்டே வந்துள்ளனர் என்பது வரலாறு.

மன்னர் பரம்பரையினரேயன்றிக், குறுநில மன்னர்களும் பெருநிலக்கிழார்களும் ஆகிய பலர் இப்பணியை மேற்கொண்டு செய்து வந்துள்ளனர். இவர்களைப் போன்றவர்கள் செய்ய வேண்டிய ஒரு பணியைத் தனி மனிதராகத் தாம் செய்ய இயலுமா என ராஜன் அவர்கள் மலைத்ததில் வியப்பில்லை.

அரசியல் அதிகாரியாகவோ, அமைச்சர் பொறுப்பிலோ இருந்தாலாவது, அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பொருள்தரப் பலரும் முன்வருவர். அஞ்சியாயினும், அன்புபட்டாயினும் அவர் கேட்கும் பொருளைத் தருவர். முதுமையில் காலூன்றியுள்ள தம்மால், எந்த அடிப்படையில் இத்திருப்பணியை மேற்கொள்ள இயலும் என்று ராஜன் அவர்கள் அஞ்சித் திகைத்தார்.

இத்தகைய சூழ்நிலைகளில் சாதாரண மனிதர்களின் செயல்பாடு வேறாக இருக்கும். ராஜன் போன்ற மாமனிதர்களின் செயல்பாடு வேறாக இருக்கும். சாதாரண மனிதர்களாயின் பலரைக் கூட்டிப் பேசுவர், அரசுக்கு விண்ணப்பம் அனுப்புவர். அமைச்சர்களைக் காண முனைவர். ராஜன் அவர்கள் இவை எதையும் செய்யவில்லை. எனினும் அவர் அஞ்சினார்.. திகைத்தார்.. முடியுமா என மலைத்தார்.

அச்சம், மலைப்பு, திகைப்பு ஆகிய அனைத்தையும் போக்கவல்ல முதல்வர் ஒருவர் உளர் என்று அவர் மனதில் தோன்றியது. மேற்குறித்த மூன்று உணர்வுகளாலும் அலமந்த அவர் உள்ளம், அந்த ஒருவரான அன்னை மீனாட்சியை நினைத்தது. உடனே அன்னையின் சந்நிதி நோக்கிச் சென்றார்.

அன்னையின் திருமுன் சென்ற அவர் 'இப்பணி நடைபெற வேண்டுமானால், அதற்குரிய பொருள் என் கையில் வந்துசேர, நீயே அருள் புரிய வேண்டும். உயர்ந்த சாரங்களில் நின்று பணிபுரியும் மண்ணீட்டாளர்கள், சிற்பிகள் போன்றவர்களின் ஆபத்தான நிலையை மனதிற்கொண்டு அருள் புரிய வேண்டும். ஆலயப் பணியில் ஈடுபடும் எவருக்கும், எந்நிலையிலும், எவ்வகையிலும் தீங்கு நேர்தல் ஆகாது' எனவும் வேண்டி நின்றார். மேலும் அவர், 'உலகீன்ற அன்னையே, என் வேண்டுகோள்களை நீ ஏற்காவிடில், எவ்விதத் தயக்கமும் இன்றித் திருப்பணியைத் தொடங்காமலே நிறுத்திவிடுவேன்' என்றும் மன்றாடி வேண்டிக்கொண்டார்.

இரண்டு தொழில்களை நான் தொடங்க முயன்றேன். அவற்றுள் ஏதேனும் ஒன்று கைகூடி இருப்பின், பொருளுக்காக எவரிடமும் சென்று கேட்கும் நிலை ஒரு நாளும் ஏற்பட்டிராது. அதிலும் குறிப்பாக அன்னையிடமே சென்று அவள் கோயில் திருப்பணிக்குப் பொருள் கேட்கும் ஒரு நிலையும் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்பட்டிராது. இன்று என்னுடைய வேண்டுகோளை அறிபவர்கள், எந்த முறையிலும் அதற்கு விளக்கம் அளிக்கக்கூடும். ஆனால், என் வேண்டுகோள் நல்லபலனைத் தந்துள்ளது என்பதனை உறுதியாகச் சொல்ல முடியும். அன்னை என் மீது அருள் பாலித்தாள். கேட்ட அனைத்தையும் அருள் உள்ளத்தோடு அளித்தாள் என்று திரு.பி.டி.ராஜன் அவர்கள் கூறியுள்ளார்.

ஒரு மனிதன் தன் ஆற்றலுக்கு உட்பட்ட செயலைச் செய்யத்தொடங்கும் போதும், அகங்காரத்துக்கு ஒருகாலும் இடம்கொடாமலிருக்க வேண்டும். இறைவன் பணியைத் தொடங்கும் ஒருவர் – தன்னைக்கொண்டு இறைவன் பணி செய்வித்துக் கொள்கின்றான் என்று நினைத்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதே அன்பர் பணி! சக்திக்கு அப்பாற்பட்ட செயலைத் தான் செய்து

முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது மலைப்படைந்தால் அதற்கு முடிவுதான் என்ன?

பிற்காலச் சந்ததியினர்கூட, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ராஜன் அவர்கள் செய்த செயல் கலங்கரை விளக்கமென எல்லோருக்கும் வழிகாட்டி நிற்கின்றது. மதுரையிலுள்ள மாபெருங்கோயிலான மீனாட்சியம்மை கோயிலைப் புதுப்பிக்கும் பணி ஒரு தனி மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால், இறைவனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென எதுவும் உலகில் இல்லை. எனவே, எந்த ஒரு மனிதனும் தன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயலை மேற்கொள்ள நேர்ந்தால், இறைவனிடம் சரணடைந்து தனக்கு உதவ வேண்டுமென வேண்டிக்கொள்வதே நாயன்மார், ஆழ்வார்கள் காலத்திலிருந்து இன்று வரை நடைபெற்றுவரும் செயலாகும்.

திருவாதவூரில் மதுரைக் கோயில் பற்றிய பேச்சு எழுந்தவுடன், நேரே தாயாரின் சந்நிதியை அடைந்து அவர் முறையிட்டது சாலப் பொருத்தமுடையதே! முழு நம்பிக்கையுடன் இறைவனை வேண்டினால் உறுதியாக அதனைப் பெறலாம். வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. வேண்டப்படும் செயல், தன்னலக் கலப்பற்றதாக இருப்பின், திருவருள் தாமே வந்து உதவும் என்பது உறுதியாகும். திருப்பணி வேலைகள் முடிந்தன. குடமுழுக்கு விழா தொடங்கவேண்டும். ராஜனிடம் 'கோயில் நிருவாக அதிகாரி, தாம்யாகசாலைப் பணிகள் தொடங்குவதற்கு உடனடியாக நாற்பதாயிரம் ரூபாய் தேவை எனக் கூறுகிறார்' என்றார் தனி அதிகாரி.

'பழனி, திருச்செந்தூர் அறங்காவலர்களிடம் அவசரத் தேவைக்கு உதவத் தயாராக ஒவ்வோர் இலட்ச ரூபாய் வைத்திருக்குமாறு கூறியுள்ளேன்' என்றார் ராஜன்.

'ஐயா! திருப்பணிக்குழுவின் தலைவரான தாங்கள் அவர்களிடம் கடன் கேட்பதா? என்றார் தனியதிகாரி.

'அப்படியா! தேவையான பணத்தைப் பெற எப்படியும் நடவடிக்கை எடுக்கப்படும்; கவலை வேண்டாம்' என்று ராஜன் நம்பிக்கையுடன் கூறினார்.

அப்போது திருவாவடுதுறை ஆதீன பண்டார சந்நிதி அவர்கள், மதுரைக்கு எழுந்தருளியிருந்தார்கள். அவர், தம்மை வந்து காணுமாறு ராஜனுக்கு ஓர் ஆள் மூலம் சொல்லியனுப்பினார். யாகசாலைப் பணிகள் இருந்தமையால் பின்னர் வருவதாகத் தெரிவித்தார் ராஜன். பண்டாரசந்நிதி அவர்கள், அடுத்தடுத்து ஆள்களை அனுப்பி அழைத்துக்கொண்டே இருந்தார். ஆகவே ராஜனும் அவரைக் காணச் சென்றார்.

ராஜன் அவர்கள், பண்டார சந்நிதிகளைக் கண்டு வணங்கி நின்றார். உடனே அவருக்குப் பண்டார சந்நிதிகள் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். கையில் சிறிய உறையையும் கொடுத்து வழியனுப்பி வைத்தார். கோயில் அலுவலகம் வந்த ராஜன், உறையைப் பிரித்தார். ரூபாய் ஐம்பதாயிரத்திற்கான இரண்டு காசோலைகள் இருப்பது கண்டார். அதே சமயத்தில் மதுரை ஹார்வி மில் நிறுவனம் அனுப்பியிருந்த ரூபாய் எழுபத்தைந்தாயிரத்திற்கான காசோலையும் வந்தது. மேலும் பழனி, திருச்செந்தூர் கோயில் நிருவாகிகள் ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபாய் என இரண்டு லட்சத்திற்கான காசோலைகளை அனுப்பியிருந்தனர்.

யாகசாலைப் பணியைத் தொடங்கப் பணமில்லை என்ற நிலையே இருந்தது. ஆனால் அடுத்தடுத்து மூன்றேகால் இலட்சம் ரூபாய் சேர்ந்து நிரம்பி வழியலாயிற்று. இதன் காரணமாகத்தான் திருப்பணி தடையின்றித் தொடர்ந்தது.

பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோரால் நிறுவப்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் வழிபாட்டுத் தலமாக மட்டும் இல்லாமல் நமது கலை, பண்பாடு ஆகியவற்றின் அரிய சின்னமாகவும் காட்சி தருகின்றது.

மதுரை மாநகரம் 20 நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிறப்புடன் விளங்கியதாக அறிகிறோம். அந்நாளில் மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில் கோயிலருகே தாம் கண்ட காட்சியைப் பின்வருமாறு பாடியுள்ளார்.

மழுவாள் நெடியோன் தலைவ னாக மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர் வாடாப் பூவின் இமையா நாட்டத்து நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார் அந்தி விழாவின் தூரியம் கறங்கத் திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித் தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத் தாமும் அவரும் ஓராங்கு விளங்கக் காமர் கவினிய பேரிளம் பெண்டிர் பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச் சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளியும்...

(மதுரைக் காஞ்சி 455 - 467)

(நெடியோன் - சிவன்; நாட்டம் - கண்கள்; பெரியோர் - தேவர்; கொடுமார் கொடுப்பதற்கு; தூரியம் - இசைக்கருவி; மதாணி - பெரிய அணிகலன்; முயங்கி - தழுவி; போது - அரும்பு; ஓராங்கு - ஒருசேர; காமர் - விருப்பம்; கவினிய அழகுபெற)

சிவபெருமான் முதலான தேவர்கள் வீற்றிருக்கும் கோயில்களில் அத்தி விழா நடைபெறுவதற்காக, இசைக் கருவிகள் ஒலிக்கின்றன. அழகிய சிறுவர்கள் உறுதியான, பெரிய, ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்து வருகின்றனர். அவர்களைப் பாதுகாத்தபடி, சேர்த்து அணைத்தவாறு, தாய்மார் உடன் வருகின்றனர். அவர்களின் கைகளில் இளங்குழந்தைகளைக் காண்கிறோம். அவர்கள் அந்தக் குழந்தைகளை ஏந்தி வருதல், மலரும் நிலையிலுள்ள செந்தாமரை அரும்புகளைக் கைகளில் பிடித்து வருதல்போல் தோன்றுகிறது. அவர்களின் கணவன்மார்களும் உடன் வருகின்றனர். அழகுமிக்க அந்தப் பெண்கள், மலர்கள், நறும்புகை, ஆகியவற்றைக் கொண்டுவந்து தெய்வத்தைத் தொழுகின்றனர் என்பது மாங்குடி மருதனார் தரும் செய்தியாகும்.

ஈராயிரம் ஆண்டுகள் கடந்த பின்னரும், அதே மதுரை மாநகரின் அந்தி வேளையில் இந்தக் காட்சியை இன்றும் காண முடிகின்றது. இடையறவுபடாத நாகரிகம் இந்த நாட்டில் தொடர்ந்து வருவதால், தலைமுறை தலைமுறையாக இத்தகைய குடும்ப வழிபாட்டைக் காண முடிகின்றது. மாங்குடி மருதனாரின் சொல்லோவியம் இன்றைய மதுரைக் கோயிலில் காணும் குடும்ப வழிபாட்டுக் காட்சியாகவே உள்ளது. இதனை என் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் குடமுழுக்கு விழாமலரில் குறிப்பிட்டுள்ளார்.

கோயில் சிறப்பு

தென்னாட்டுக் கோயில்களுள் மதுரை அங்கயற்கண்ணி ஆலயம் ஈடுஎடுப்பற்றது. எல்லாச் சமயத்தினரையும் ஈர்க்கும் வகையில் அமைந்த சிற்பங்களைக் கோயில் கோபுரங்களில் காணலாம். கோவில் சுவர்களிலும் ஓவியங்கள் அணி செய்கின்றன. மிகத் தொலைவிலிருந்து நோக்கினாலும் கண்கொள்ளாக் காட்சியளிக்கும் கோபுரங்கள், ஆண்டவனுடைய திருவிளையாடல்களை நினைவூட்டும் ஆற்றல் பெற்றவை.
ஆண்டவனே, சங்கப் புலவர்களுள் ஒருவராகக் கோலம் கொண்டு தமிழ் வளர்த்த பெருமை மதுரைக்கே உரியது.

ஈடுஎடுப்பற்ற நூலெனத் திருக்குறள் உயர்வு

பெற்றதும் இம் மதுரையம்பதியில்தான்.

தமிழ்க் காப்பியங்களுள் முழுமுதற் காப்பியமான சிலப்பதிகாரம் தோன்றுவதற்கும், மதுரையில் நடந்த நிகழ்ச்சியே காரணமாய் அமைந்தது!

சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியதும் இங்குதான்! சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த சிறப்பு மதுரைக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

சுருங்கச் சொன்னால் மதுரை அங்கயற்கண்ணி – ஆலவாய் அண்ணல் திருக்கோயிலைத் தமிழகத்தின் ஆன்மா என்றே கூறலாம்.

சிறப்பு மிக்க இந்தத் திருக்கோயில் சிற்பங்களும், ஓவியங்களும், அழகு குன்றி வருவது கண்டு மக்கள் உள்ளம் புழுங்கினர். உள்ளம் புழுங்கினால் போதுமா? கோயில் திருப்பணி செய்ய எவரேனும் முன்வர வேண்டாமா? கோயில் பணிகளில் முனைந்து ஈடுபட முன்வந்தார் ஒருவர்! அவரே தமிழவேள் திரு.பி.டி.ராஜன் அவர்கள்! அவர், 'அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்' எனும் தாயுமானவர் வாக்கையே மந்திரமாகக் கொண்டு வாழ்பவர் ஆவார்! கோயில் திருப்பணிக் குழு அமைத்தார். பணியைப் பாங்குடன் நிறைவேற்ற முனைந்தார் என்று ராஜன் அவர்களைப் பற்றி என் பேராசிரியர் முனைவர். மொ.அ.துரைஅரங்கனார் குடமுழுக்கு விழாமலரில் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பணி மிகவும் பெரியது, கடினமானது என்பதை உணர்ந்த ராஜன் அவர்கள், தலைமை ஏற்பதைத் தவிர்த்து வந்தார். மீனாட்சி அம்மனை வழிபாடு செய்தபின் முடிவைத் தெரிவிப்பதாக அவர் கூறினார்; அம்மையை உளம் கசிந்து வழிபட்டபின், அவள் அருளாணையை ஏற்றுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். குழுவின் முதற்கூட்டம் 18.05.1960 இல் கூடியது.

குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க, அரசு தலைமைப் பொறியாளர் திரு.கே.வி. ஏகாம்பரம், பாசனத்துறைத் தலைமைப் பொறியாளர் திரு.ஏ.ஆர்.வெங்கடாச்சாரி ஆகியோர் கோயிலைப் பார்வையிட்டனர்; விளக்கமான அறிக்கையையும் அளித்தனர்.

அவர்கள் அறிக்கையில் மண்டபம், மேல்தளம், சிறு கோபுரங்கள் ஆகியவற்றைப் பழுது பார்க்கலாம், வெளிக்கோபுரங்களை அப்படியே விட்டுவிடலாம் எனவும், வெளிக்கோபுரங்களையும் பழுதுபார்த்து மிகவும் சீர்கெட்டுள்ள பகுதிகளை மட்டும் சீர்செய்து விடலாம் மற்றப்பகுதிகளை அப்படியே விட்டுவிட்டு எல்லாப் பகுதிகளுக்கும் வண்ணம் பூசலாம் எனவும், எல்லாக் கோபுரங்களையும் முழுமையாக விமானங்களையும் புதுப்பிக்கலாம் எனவும் மூன்றுவிதமான கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

குழுவினர் இரண்டாம் யோசனையை ஏற்றுக்கொண்டனர். நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர் திரு.பி.எஸ்.சிவப்பிரகாசம் அவர்களைத் திருப்பணிக் குழுவின் உறுப்பினராகச் செயல்பட அரசு அனுமதித்தது.

மீனாட்சியம்மன் கோயில் திருப்பணிக்கு ரூபாய் இருபது இலட்சமும், இதனுடன் இணைந்த பிற கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூபாய் மூன்று இலட்சமும், குடமுழுக்குச் செலவு உட்பட மொத்தம் இருபத்தைந்து இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது.

அன்றைய அறநிலையத்துறை அமைச்சராக இருந்த பெரியவர் திரு.மீ.பக்தவத்சலம் அவர்கள் 27.05.1960 இல் திருப்பணிகளைத் தொடங்கி வைத்தார். அப்போது ராஜன் அவர்கள் மதுரைக் கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்துப் பேசினார். திருப்பணிக் குழுவினர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. குறிப்பாகத்

திருப்பணிகளுக்காகப் பணம் திரட்டுவது எளிதாக இல்லை!

மீனாட்சியம்மன் திருக்கோயிலார், திருப்பணிகளுக்காக மூன்று இலட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்து, முதல் தவணையாக ரூபாய் எண்பதாயிரம் வழங்கினார். வேலை தொடங்கியது. தொடக்கம் முதலே பணமில்லை என்பதற்காக எப்பணியும் தடைபடவில்லை. குடமுழுக்கு வரை இதே நிலைமையே இருந்தது; தேவைக்கு அதிகமாகவும் கையில் பணம் இருந்ததில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. இது பற்றி ராஜன் அவர்கள் 'மீனாட்சி அரசியார் சிக்கனமான பெண்மணி! அதனால் அவர் அவ்வப்போதைய தேவைக்கு மட்டும் வழிகாட்டி வந்தார். அதிகமாகவும் கொடுக்கவில்லை, குறைவாகவும் தரவில்லை. பணத் தட்டுப்பாடு ஏற்படும் போதெல்லாம் பணம் எங்கிருந்தோ வந்தது. இவ்வளவு பெரும்பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் எவருக்கும் எவ்விதச் சிறு காயமும் ஏற்படவில்லை; அன்னை மீனாட்சி அம்மையார் காலத்தில் கைகொடுத்து உதவினார். பணியாளர்களையும் மற்றவர்களையும் பாதுகாத்தார்' என்று பக்திப் பெருக்குடன் குறிப்பிடுகின்றார்.

கோபுரங்களுக்கு வண்ணம் தீட்டுவது குறித்துக் கருத்து வேறுபாடுகள் நிலவின. சிலர் செய்தித்தாள்களுக்குக் கடிதம் எழுதித் தங்கள் குறைகளைத் தெரிவித்திருந்தனர். குழுவினரை அணுகிக் கருத்துகளைத் தெரிவிக்க எவரும் முன்வரவில்லை.

ராஜன் அவர்கள், மேல ஆடி வீதியிலுள்ள நடுத்தரக் கோபுரங்கள் இரண்டிற்கும் வண்ணம் தீட்டச் செய்தார்.
ஒன்றில் வழக்கமான பளபளப்பான வண்ணமும் மற்றொன்றில் பளபளப்பற்ற சாதாரண வண்ணமும் தீட்டப்பெற்றன. இவற்றுள் எதனை மக்கள் விரும்புகின்றனர் என்றறிந்த ராஜன் அவர்கள் மக்கள் விரும்பும் பளபளப்பான – வண்ணத்தையே பிற கோபுரங்களிலும் தீட்டுமாறு செய்தார்.

திரு.பி.டி.ராஜன் அவர்கள், திருப்பணி நிதி திரட்டும் பொருட்டுத் தம்முடன் சிலரை அழைத்துக்கொண்டு மதுரை ஹார்வி ஆலையின் (மதுரா கோட்ஸ்) தலைவர் திரு.மார்ஷல் அவர்களைக் காணச் சென்றார். அவர் இருபத்தைந்தாயிரம் அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் தரக்கூடும் என ராஜன் அவர்கள் நினைத்தார். இவர்கள் வந்துள்ள நோக்கத்தை அறிந்த மார்ஷல், எங்கள் நிறுவனத்தை, நாங்கள் இயக்கவில்லை; மீனாட்சியின் ஆற்றலே இதனை இயக்கி வருகின்றது. எனவே அன்னை கோயிலின் உயரமான கோபுரம் எதுவோ அதன் திருப்பணிச் செலவை எங்கள் ஆலை ஏற்றுக்கொள்ளும் என்றார். அதற்கு இரண்டரை லட்ச ரூபாய் செலவாகும் என்று ராஜன் கூறியதும், அச்செலவை மனதார ஏற்றுக்கொண்டு மார்ஷல் அவர்கள் திருப்பணியில் தம்மையும் பக்தியுடன் ஈடுபடுத்திக் கொண்டார்.

தாம் செய்யும் திருப்பணிகளின் பயனாய், நூறாண்டுகளுக்காவது பராமரிப்புப் பணிகள் எதுவும் தேவைப்படாது என்று ராஜன் அவர்கள் உறுதியாக நம்பினார். ஒப்பந்தக்காரர்களை அனுமதிக்காமல், எல்லாப் பணிகளும் குழுவினர் மூலமாகவே நடைபெற்றன. மிகவும் சிக்கனமாகவும் அதே வேளையில் சிறப்பாகவும் குறுகிய காலத்தில் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பணிகள் தொடங்கியபோது, ராஜன் அவர்கள் மதுரைவாழ் மக்கள் அளிக்கும் தொகையே போதுமானதாக இருக்கும் என்று கருதினார். ஆனால், அத்தொகை போதுமானதாக இல்லை. அப்போது என் தாய் மீனாட்சியை நான் மதுரை மக்களுக்கு மட்டும் சொந்தமாக்கக் கருதிவிட்டேன். அவளோ உலக மாதா! அனைவரும் அவளது குழந்தைகள். எனவே அவள் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும்

மக்களைத் தன் பணியில் ஈடுபடுமாறு செய்து விட்டாள். ஆகவே பல பகுதிகளில் இருந்தும் நிதி வந்து சேர்ந்தது என்று உளம் நெகிழ்ந்து குறிப்பிடுகின்றார்.

மீனாட்சி திருக்கோயிலில் பலப்பல திருப்பணிகளும் கடவுள் மங்கலங்களும் நடைபெற்றுள்ளன. 1481 ஆம் ஆண்டு கம்பண்ண உடையார் என்பார் கோயில் திருப்பணி செய்து, மூலப்பேர் நாச்சியார் என்ற மீனாட்சி அம்மைக்கு மட்டும் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்திவைத்தார்.

1628 ஆம் ஆண்டில் (அட்சய வருடம் வைகாசி 10 ஆம் நாள்) திருமலை நாயக்கர் திருப்பணிகளைத் தொடங்கிப் புதுப்பித்தார்.

1708 ஆம் ஆண்டு (சர்வதாரி சித்திரை 31 ஆம் நாள்) சொக்கநாதருக்கு மட்டும் அஷ்டபந்தனக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விஜயரங்கசொக்கநாதர் காலத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

1877 ஆம் ஆண்டு (ஈஸ்வர, தை 27 ஆம் நாள்) ஏழுகோயில் நகரத்தார் குடமுழுக்கு செய்வித்தனர்.

1923 இல் ஜூலை முதல் நாள் (ருத்ரோத்காரி, ஆனி 17ஆம் நாள்) குடமுழுக்கு நடந்தது. இதன் பின் சரியாக நாற்பது ஆண்டுகள் கழித்து 1963 இல் குடமுழுக்கு நடந்தது.

1963 ஜூன் 28 ஆம் நாள் குடமுழுக்கு நடைபெறுவதற்கான நன்னாளாகக் குறிக்கப்பட்டது. 1877 ஆம் ஆண்டில், மீனாட்சி அம்மை கோவிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்பதை ராஜன் அறிந்தார். ஆனால் விழா நிகழ்ச்சிகள் எம்முறையில் நடைபெற்றன என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் முந்தைய குடமுழுக்குக் குறித்து எழுதியிருந்தது கிடைத்தது. அதனை ராஜன் அவர்கள் படித்தார்.

காவல் துறைப் பாதுகாப்பு, உள்ளே செல்ல அனுமதிச் சீட்டு என அந்நாளில் நடைபெற்ற அனைத்துச் செய்திகளையும் அறிந்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு தற்காலத்துக்கு ஏற்பக் குடமுழுக்கு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினார்.

முந்தைய குடமுழுக்கு விழாவில் வைநாகரம் செட்டியார் குடும்பத்தினர் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். ஆகவே அந்தக் குடும்பத்தினர் தற்போதைய விழாவில் சிறப்பிக்கப்பட்டனர்.

குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகளை, ராஜன் ஓர் ஆவணமாகத் தயாரித்தார். அதனை மதுரைக் கோயிலுக்கு அளித்து என்றும் நிலையாக இருக்குமாறு செய்தார். மேலும் இந்த ஆவணம் பிறகோயில்களிலும் இருக்குமாறு அனுப்பி வைத்தார்.

கோயில் திருப்பணி நிகழ்ச்சிகளை திரு.பி.டி.ராஜன் அவர்கள் அவ்வப்போது காஞ்சிப் பெரியவர் பரமாச்சாரியார் அவர்களிடம் கூறி, அவருடைய யோசனைகளைக் கேட்டு, அவ்வாறே செயல்பட்டு வந்தார். குடமுழுக்கு விழாவிற்குக் காஞ்சிப் பெரியவரை அழைப்பதென முடிவுசெய்து அவருக்கு அனுப்பப்பெற்றது அழைப்பு. சிருங்கேரி மடத்தின் பீடாதிபதி அவர்களைத் தங்கள் குருவாகக் கொண்டோர் சிலர், அவருடைய தலைமையில்தான் குடமுழுக்கு நடைபெற வேண்டுமென வாதிட்டனர். எதிர்ப்பைக் கண்டு ராஜன் சிறிதும் அஞ்சவில்லை. அவர்களை நோக்கி சிருங்கேரி மடாதிபதி வணக்கத்திற்குரிய மகான் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அவரையும் விழாவிற்கு அழைக்கலாம்.. சிறப்புச் செய்யலாம். அவரது ஆசிகளையும் பெற்றுக்கொள்ளலாம் .தொடக்கம் முதலே இதில் ஈடுபாடு கொண்டிருந்த காஞ்சிப் பெரியவரே

விழாவிற்குத் தலைமை ஏற்க வேண்டும் என்று சொல்லி வாதங்களுக்கு முற்றுப்புள்ளியிட்டார். பரமாச்சாரியார் அவர்களுக்கு ராஜனின் பக்தியும், செயல்பாடுகளும் நிறைவைத் தந்துள்ளன. அவர் ராஜன் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ராஜன், காஞ்சி சென்று பரமாச்சாரியைக் காணத் திருமடத்திற்குச் சென்றிருந்தார். அப்போது மாண்புமிகு அமைச்சர் மீ.பக்தவத்சலம் அமைச்சர் திரு.ஆர்.வெங்கட்ராமன் ஆகியோரும் வந்திருந்தனர்.

பரமாச்சாரியார் அவர்கள், தமது பூசையை முடித்துவிட்டு பக்தர்களுக்கு ஆசி வழங்க அமர்ந்தார். அவர் தம் அருகிலுள்ள ஒருவரை அழைத்து 'அந்த முடிசூடா மன்னனை அழைத்து வா' என்றார். அவரோ யாரை அழைத்து வருவது என அறியாமல் தயங்கினார்.'ஏன் தயங்குகிறாய் நான் சொல்வது உனக்கு விளங்கவில்லையா? மீனாட்சிக்கு மிகச் சிறப்பாகத் திருப்பணி செய்து வரும் ராஜனை அழைத்து வா' என்று கூறினார். பின்னர் ராஜன் வந்ததும், ஒரு ஜப மாலையை வழங்கி ஆசி வழங்கினார். அந்த அளவிற்குப் பரமாச்சாரியாரின் நன்மதிப்பையும் அன்பையும் திரு.பி.டி.ராஜன் அவர்கள் பெற்றிருந்தார்.

திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து, வீர வசந்தராயர் மண்டபத்தின் வழியாகத் தெற்கு நோக்கிச் செல்லும் வழியில், திறந்தவெளி ஒன்று இருந்தது. 1960-63 ஆம் ஆண்டின் திருப்பணி நினைவாகக் கலைநயம் மிக்க மண்டபம் ஒன்றை இங்கு அமைக்க வேண்டுமென விழாக் குழுவினர் விரும்பினர். அந்த மண்டபத்தை மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி பங்கயற் செல்வி பாண்டிமா தேவி என ஞானசம்பந்தரால் சிறப்பிக்கப் பெற்ற 'மங்கையர்க்கரசியார்' பெயரில் அமைக்கத் திட்டமிட்டனர்.

11.3.63 இல் திரு.மீ.பக்தவத்சலம் அவர்கள் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டினார். 28.06.63 இல் குடமுழுக்கு விழாவின்போதே இந்த மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது. இக்காலக் கட்டடக்கலை அடிப்படையில் மண்டபம். உருவாக்கப்பட்டது. இதில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கூன்பாண்டியனார், திருஞானசம்பந்தர் ஆகியோர் திருவுருவங்களும் சிவபெருமானின் லிங்க வடிவமும் சிறப்பாக அமைந்துள்ளன.

இதுவரை நடைபெற்ற திருப்பணிகளைவிட 1960-63 இல் நடைபெற்ற திருப்பணி மிகவும் சிறப்புடையது. காஞ்சி மகாப் பெரியவர் தலைமையில் குடமுழுக்கு நடைபெற்றது தனிச்சிறப்பாகும். கோயிலிலுள்ள பதினான்கு கோபுரங்களுக்கும் ஒரு சேரத் திருப்பணி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. திருமலை நாயக்கருக்குப்பின், இத்தகைய திருப்பணியை எவரும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிகின்றது. மேலும் மக்களாட்சி மலர்ந்தபின், மக்களால் நடத்தப்பட்ட முதல் திருப்பணியும் இதுவே!

சங்ககாலம் தொட்டு, இன்றுவரை எல்லா வகையிலும், மதுரை மாநகர் சிறப்புற்று முன்னணியில் நிற்கின்றது. மீனாட்சி சுந்தரேசுவரர் திருவருளே இதற்குக் காரணம். 1960-63இல் நடைபெற்ற திருக்கோயில் திருப்பணி எல்லா வகையிலும் மாபெரும் திருப்பணியே ஆகும்.

குடமுழுக்கு விழா தொடர்பாக ஒரு 'விழாமலர்' வெளியிடவும் குழுவினர் விரும்பினர். மலர் வெளியிடும் பொறுப்பினை திரு.பி.கே.அருணாசலக் கவுண்டர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். பலருடைய ஒத்துழைப்புடன் மிகக் குறுகிய காலத்தில் கவர்ச்சிகரமாக மலர் தயாரித்து வெளியிடப்பெற்றது.
இவ்வாறே, திருப்பணிக்குழு உறுப்பினர்களுள் ஒருவரான தமிழறிஞர் திரு.கி.பழனியப்பன் அவர்கள் மதுரைத் திருக்கோயில் வரலாற்றினைக்

'கோயில் மாநகர்' என்ற பெயரில் சுவைபட எழுதினார். இந்நூலும் குடமுழுக்கு அன்றே வெளியிடப்பட்டது. முனைவர்.கமலத்தியாகராசன் அவர்கள் இந்நூலை ஆங்கிலத்தில் திறம்பட மொழிபெயர்த்தார்.

டாக்டர். அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள், சுவாமி – அம்மன் இருவரையும் வழிபட ஆயிரம் போற்றிகளைத் தமிழில் எழுதினார்.

'மீனாட்சி அம்மன் கோயில் திருப்பணிக் குழுத் தலைவர் பொறுப்பேற்ற – திரு.ராஜன் அவர்கள், அறநிலையத்துறை அமைச்சர், திரு.மீ.பக்தவத்சலம், அறநிலையத்துறை ஆணையர் எம்.எஸ்.சாரங்கபாணி முதலியார், தருமகர்த்தர் குழுத்தலைவர் திரு.அ.சிதம்பரநாத முதலியார் ஆகிய நால்வரும் தொண்டை மண்டல முதன்மையராக அமையுமாறு மீனாட்சியம்மை திருவருள் பாலித்திருப்பது சைவ உலகம் எண்ணியெண்ணிப் பூரிப்படைய வேண்டிய செய்தியாகும்' என மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் தமது குடமுழுக்கு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

குடமுழுக்குப் பெருவிழா முடிவடைந்ததும், திருப்பணிக் குழுவின் பணி நிறைவடைந்துவிட்டதாக ராஜன் அவர்கள் கருதவில்லை. இவ்வளவு பெரிய கோயிலை நிருவகிக்கப் பெருந்தொகை தேவை எனக் கருதிய அவர் கோயில் வருவாயைப் பெருக்கும் வழிவகைகளை ஆராய்ந்தார்.

மதுரைத் திருக்கோயில் மிகப் பெரியது; பராமரிப்புச் செலவுகளோ மிகுதியானவை. அது பழனி, திருத்தணி போன்று பிரார்த்தனைத் தலமன்று. எனவே வருவாய் மிகவும் குறைவாகவே இருந்தது.

ஆக்ஸ்போர்டு பாட்லியன் நூல் நிலையம் போன்று ஒரு நூல்நிலையத்தையும் கண்காட்சிச் சாலையையும் கோயிலில் அமைக்க விரும்பினார் ராஜன். நூலகத்திற்கான முக்கியமான நூல்கள் அனைத்தையும் பதிப்பாளர்களிடமிருந்து இலவசமாகப் பெற வழிவகை செய்தார். தமிழர் கலை, பண்பாட்டுச் சிறப்பை விளக்கும் பொருள்கள் கண்காட்சியில் இடம்பெற வேண்டும் என்ற அவர் விருப்பம் நிறைவேறியுள்ளது. இந்து சமயத் தத்துவங்களை விளக்கும் ஓர் அரிய கலைக்கூடமாக, கலைக் கருவூலமாக அதனை மிளிரச் செய்த பெருமை ராஜன் அவர்களையே சாரும்.

அழகும் பெருமையும் கொண்ட மீனாட்சி அம்மையை அன்னையாக எண்ணி இடையறாது வழிபட எக்காரியமும் கைகூடும். எடுத்துக்காட்டாக திரு.ராஜன் அவர்களின் கோயில் திருப்பணியையே எடுத்துக்கொள்ளலாம். இந்தக் குடமுழுக்குத் திருப்பணி அவரது அன்னை வழிபாட்டிற்குக் கிடைத்த அருட்கொடை என்றே சொல்ல வேண்டும்.

எவரும் எளிதில் நடத்தி முடிக்கவல்ல பணியா இது? அவர் அன்னையின் மீது கொண்ட அன்பின் விளைவல்லவா இது!

வைரக்கிரீடம்

கோயில் திருப்பணிகள் நடைபெறும்போது அனைவரும் திருப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்பது ராஜனின் விருப்பம். அப்படிச் செய்வதன் மூலம் அனைவரும் இறையருள் பெற்று மன அமைதியுடன் வாழ முடியும் என்று அவர் நம்பினார். செல்வர் சிலர் கூடிப் பெருந்தொகை அளித்துத் திருப்பணி செய்வதைவிடப் பலரும் ஈடுபட்டுச் சிறுசிறு தொகையாக அளித்துத் திருப்பணி நடைபெறுவதையே அவர் விரும்பினார். ஆகவே எந்தத் திருப்பணியாயினும், எல்லோரும் உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்வது அவர் வழக்கம். ஏழை எளியோரும் மனமுவந்து திருப்பணிகளில் ஈடுபடுவதை அவர் மன நிறைவுடன் வரவேற்றார்.



Sir P. T. Rajan as President of the Tiruppani.k.Kuzhu was responsible for collection of generous donations from devotees and adorning Goddess Meenakshi with Rupees fourteen lakh worth of diamond crown, 1973.

எவ்வளவு தொகை சேர்ந்தது என்பதை விட, எத்தனை பேர் அதில் ஈடுபட்டனர் என்பதையே அவர் பெரிதும் விரும்பினார். ராஜனின் தலைமையில் மதுரை மீனாட்சியம்மை திருக்கோயில் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறின. இவரது சேவையை அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர். மீனாட்சி அம்மைக்கு வைரக் கிரீடம் செய்து அணிவிக்க வேண்டுமென விரும்பினார் ராஜன் அவர்கள். அதற்காக என்ன செய்தார் தெரியுமா? பெரிய நகைக் கடைக்காரர்களை அணுகி இதனைச் செய்து முடித்துவிடலாம் என்று அவர் கருதவில்லை.

தமது நண்பர்கள், பொதுமக்கள், உறவினர் ஆகியோர் ஆளுக்கொரு வைரக்கல் அளிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஒரு சிலர் பல வைரக்கற்களை அளிக்க முன் வந்தபோது ராஜன் அவர்கள், 'இப்போது ஒன்று போதும்.. தேவையெனில் பின்னர் பெற்றுக் கொள்கிறேன்' என அமைதியாக மறுத்துவிட்டார்.

அம்மன் கிரீடம் செய்யும் தொண்டில் எத்தனை பேர் கலந்துகொள்ள முடியுமோ, அத்தனை பேரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் நினைத்தார். அதன் காரணமாகவே ஒவ்வொருவரும் அத்தொண்டில் ஈடுபட ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு வைரக் கல்லையே பெற்றுக்கொண்டார். அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட உறவினர், நண்பர் ஆகியோர் ஒவ்வொரு வைரக் கல்லையும் பக்தியுடன் அளித்து வைரக் கிரீட சேவையில் தம்மையும் ஈடுபடுத்திக்கொண்டனர்.

வைரக்கிரீடம் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாம் அன்னை மீனாட்சி பேரழகுப் பெட்டகமாய் விளங்குபவள். அழகுக்கு அழகு சேர்ப்பது போன்று அவளுக்கு வைரக்கிரீடம் அணிவிக்கப் பெற்றது.

கோலாலம்பூர்

மீனாட்சி அம்மன் கோயில் திருப்பணியை மிகவும் போற்றத் தக்கவகையில் முடித்த திரு.பி.டி.ராஜன் அவர்கள், மயிலம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கோலாலம்பூர் மாரியம்மன் திருக்கோயில் ஆகிய பல ஆலயங்களின் திருப்பணிகளை நிறைவேற்றிக் குட முழுக்கும் நடத்தி வைத்தார்.

கோலாலம்பூர் திருப்பணி முடிந்தவுடன், ராஜன் அவர்கட்குச் சிறிது நெஞ்சுவலி ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்களுக்குச் சிறந்த மருத்துவம் பார்க்கப்பட்டது. அந்த மருத்துவமனையில் இருந்த செவிலியரும், நோயாளிகளும், ராஜன் அவர்களிடம் வந்து, தங்களுக்கு விபூதி, குங்குமம் பூசுமாறு வேண்டினார்கள். மீனாட்சி அம்மையை மனத்தில் நிறுத்தித் திருநீறு அணிவித்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தலைமைப் பட்டரையும் தம்முடன் அழைத்துச்

சென்றிருந்தார். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் இருந்த ஆத்திகப்பெருமக்கள், ஐயா அவர்களுக்கு ஏராளமான அன்பளிப்புகள் வழங்க ஆசைப்பட்டனர். அப்பொழுது அவர்களைப் பார்த்து, எனக்குக் கொடுக்க விரும்பும் அன்பளிப்புகளை, என்னுடன் வந்திருக்கும் பட்டருக்குக் கொடுங்கள். அவருக்கு நான்கோ ஐந்தோ பெண்கள் இருப்பதாக எண்ணுகிறேன். திருமணம் செய்ய எண்ணுகிறார். நீங்கள் செய்யும் பொருள் உதவியின் மூலம், அவர் தம்முடைய பெண்களின் திருமணங்களைப் பாங்காகச் செய்து முடிப்பார். அது காலத்தால், பாத்திரம் அறிந்து செய்யும் நல்லுதவியாகும் என்று கூறினார்.

இதனை எண்ணிப் பார்க்கும் போது, ஐயா அவர்களுக்குப் பிராமணர்கள் மீது எந்தவிதமான வெறுப்பு உணர்ச்சியும் இருந்ததில்லை என்பது புலனாகும். தேவையுள்ளவர்களுக்கு உதவுவதே, தம் தலையாய அறமாகக் கொண்டிருந்தார் என்பதை அவர் வாழ்வின் மூலம் அறிய முடிகிறது. கோலாலம்பூர் மாரியம்மன் கோயில் திருப்பணியை முடித்துவிட்டு, உறவினர்களுடன் கப்பல் வழியாகச் சென்னைக்கு வந்தார். மலேசியாவில் உள்ள தமிழர்கள் திருப்பணியை நெஞ்சாரப் பாராட்டி வருகிறார்கள்.

– பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்

* * *

சான்றோர் நோக்கில் தமிழ்வேள்

பி.டி. ராஜன்

A LEADER RESPECTED BY ALL

M. Bakthavatchalam Ex Chief Minister



Sir P.T. Rajan had his higher education in England, and after qualifying himself for the Bar he returned to his hometown. But on his return he did not devote very much to the profession of law, but got himself plunged into politics. The Dyarchy system of provincial government headed the Montagu-Chelmsford Reforms, came in.

Sir P.T. Rajan contested the first election from the Madura District and got elected. The Non-Brahmin Movement, just organized under the Justice Party came into existence. Sir P.T. Rajan had no hesitation in joining that Party, which commanded a majority in the newly constituted Legislative Council. He was also elected as the Chief Whip of the Party.

Sir P.T. Rajan was quite popular amongst all sections of politicians. This is indeed an unique characteristic of Rajan. Even now Sir P.T. Rajan proudly claims that he is the sole member of the Justice Party. But he is liked and respected by not only party politicians opposed to Justice Party but also by persons in other spheres of life.

He is a good obliging friend of persons known to him. In this respect he would not observe caste or creed.

Sir P.T. Rajan has a religious mind with fervent belief in our temples. He is very much interested in renovating our ancient shrines. But for his devotion, the world famous Madurai temple would not have been renovated with considerable cost. He is also interested in the development of our divine language, Tamil. But he does not exhibit any kind of fanaticism about it.

Sir P.T. Rajan has struck observers with lighter side of his life. He is very much

interested in Races and is an active member of the Race Club. He is also one of the oldest and most popular member of the Cosmopolitan Club, Madras. Playing cards is his great hobby. Above all, he is one of those who would never refuse help when that is sought either by acquaintance or even by a stranger.

Anyone who comes in contact with him is at once impressed by his simplicity and kindness.
May he live many years with happy life.

* * *

தண்டோரா சர்க்கார்–1
சர்வ கட்சிக் கூட்டணி – தமிழர் பெருமை
பி.டி. ராஜன்

1956 இந்திய அரசியலில் மிகவும் கொந்தளிப்பான ஆண்டாகும். ஏனெனில், இவ்வாண்டில் தான் இந்தியாவில் மொழிவாரியாக மாநில எல்லைகள் பிரிக்கப்பட்டன. இவ்வாறு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தமிழக எல்லையோர பகுதிகள் பல அண்டை மாநிலங்களோடு இணைக்கப்பட்டன. குறிப்பாக தென் தமிழகத்தில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளாவோடு இணைக்கப்பட்டது. தமிழர்களிடம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எனவே ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்தும், தமிழக எல்லையில் உள்ள பகுதிகள் தமிழ்நாட்டுடன் மீண்டும் இணைக்கப்பட வேண்டும், தட்சிண பிரதேசம் ஏற்படுத்துவதை கைவிட வேண்டும் மற்றும் புதிய சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருங்கிணைந்து மாநிலம் தழுவிய அறப்போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தனர். இந்த சர்வ கட்சி கூட்டணிக்கு தலைவராக 'தமிழவேள்' பி.டி. ராஜன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அறப்போராட்டத்தின் ஒரு பகுதியாக பிப்ரவரி 20ஆம் நாள் மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தமும், மாலை மாபெரும் மாநாடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்கேற்க சுமார் 4 லட்சம் பேர் சென்னை மெரினா கடற்கரையில் திரண்டிருந்த நிலையில், இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கிய பி.டி.ராஜன் அவர்கள் அரசுக்கு எதிராக கடும் கொந்தளிப்பில் இருந்த மாபெரும் மக்கள் திரளை தமது அரசியல் முதிர்ச்சியின் மூலம் எவ்வாறு கண்ணியத்துடன் வழி நடத்தினார் என்பதை அறிஞர் அண்ணா தமது தம்பிக்கு எழுதிய கடிதத்தில் விரிவாக பதிவு செய்துள்ளார். தமிழவேளின் தலைமைப் பண்பையும், எளிதில் பின்வாங்காத மன உறுதியையும் படம் பிடித்துக் காட்டும் அக்கடிதத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் வாசகர்களின் பார்வைக்கு.

தம்பி,

கண்ட காட்சியோ பெரியதோர் நம்பிக்கை அளித்தது. கடலலை ஒலியையும் அடக்கிடும் வகையில் முழக்கம், காண்போரின் கோழைத்தனத்தைக் கில்லி எறிந்திடும் விதமான வீரத் தோற்றம், காரியமாற்றும் திறன் படைத்த காளையர் இலட்சக்கணக்கில் உளர் என்ற பேருண்மையை எடுத்துக் காட்டிடும் எழுச்சி, எல்லாம் கண்டேன்.

'செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ?' என்று பாடியவர் நம்முடைய பாரதிதாசனல்லவா! அந்தப் புரட்சிக் கவிஞன் கிளப்பிய பொறிகளெல்லாம் எங்கே போய் விட்டன? இதோ, எமது கண்ணொளி காண்பாய்! இங்கே வந்தன்றோ, அவை அத்தனையும் குடி ஏறிவிட்டன என்றெல்லாம் எனக்கு எடுத்துரைப்பது போலிருந்தது பிப்ரவரி 19–ல் நான் சென்னைக் கடற்கரையில் கண்ட காட்சி.

தம்பி, நான் மந்திரியல்லவே. அதனால் மக்கள் திரண்டெழுந்திருப்பதைப் பல முறை பார்த்திருக்கிறேன். எழுச்சியூட்டும் பெருங்கூட்டம் பலவற்றிலே கலந்து கொண்டிருக்கிறேன் – எனினும் எனக்கு ஒரு கணம் திகைப்பே ஏற்பட்டு விட்டது, அன்றைய கூட்டத்தின் அளவையும், அங்குக் காணப்பட்ட எழுச்சியின் வகையையும் கண்டு! மக்களோ, ஒரே மேடையில், ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கிடக்கும் பல்வேறு கட்சியினர் அமர்ந்திருப்பது கண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

காலை மலர்ந்ததும், நாடெங்கும் கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடைபெற வேண்டும்.

அது எந்த அளவு வெற்றிபெறுகிறதோ இல்லையோ, கலகம் ஒரு துளியும் நடைபெறக் கூடாது.

ம.பொ.சி. பி. டி. ராஜன் பாராட்டிப் புகழத்தக்க விதமாகப் பேசுகிறார், 'எத்தனை சதவிகிதம் கடை அடைப்பு வெற்றி பெற்றது என்பதைவிட, எத்தனை சதவிகிதம் அமைதி நிலவுகிறது என்பதுதான் முக்கியம்' என்று.

நான், பன்னிப்பன்னி 'அமைதி, அமைதி! அடித்தால் பொறுத்துக் கொள்ள வேண்டும்; தாக்கினால் தாங்கிக்கொள்ள வேண்டும்; தூற்றுவர், கோபம் கொள்ளக் கூடாது; இழித்தும் பழித்தும் பேசுவர், ஏளனம் செய்வர், அது கேட்டு மன எரிச்சலடையக் கூடாது, என்கிறேன்.

நமது முறையில் பலாத்காரம் தலைகாட்டக் கூடாது, யாரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது, கடை அடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து ஈடுபட வேண்டும், யாரையும் நாம் பலவந்தப்படுத்தக் கூடாது என்று தமக்கே உரித்தான பண்புடன் பேசுகிறார், பி. டி. ராஜன்.

மக்களோ, அப்போதே நகரெங்கும் குழுமிக் கிடக்கும் கவசத் தொப்பி தரித்த போலீசைக் காண்கிறார்கள்; அவர்களின் முகம் கடுகடுத்து இருப்பதும் தெரிகிறது. இவர்கள் என்னென்ன 'இம்சை'கள் தருவார்களோ என்றும் எண்ணுகிறார்கள். இங்கோ தலைவர்கள், காந்தியார் பார்த்து மெச்சத்தக்க வகையில், 'சாந்தோபதேசம்' செய்கிறார்கள் – போலீஸ் முகாமிலோ, துப்பாக்கிகளுக்குத் தோட்டாக்களைப் பொருத்திக் கொண்டும், தடிகளுக்குப் போடப்பட்டுள்ள 'பூண்கள்' சரியாகப் பொருந்தியுள்ளனவா என்று சரிபார்த்துக் கொண்டும் உள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள் கடற்கரையில்.
அவர்களை 'அடக்கி ஆள' ஆயிரக்கணக்கில் புதிய புதிய போலீஸ் படைகள் வந்திறங்குகின்றன. ஆந்திர நாட்டிலிருந்து கூடப் போலீஸ் படைகள் தருவிக்கப்பட்டிருப்பதாக, அன்று தோழர் விநாயகம் அறிவித்தார்.

நமது முறையில் பலாத்காரம் தலைகாட்டக் கூடாது, யாரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது, கடை அடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து ஈடுபட வேண்டும், யாரையும் நாம் பலவந்தப்படுத்தக் கூடாது என்று தமக்கே உரித்தான பண்புடன் பேசுகிறார், பி. டி. ராஜன்.

தம்பி! 19-ந் தேதிய கூட்டத்தையும் கண்டேன், தலைவர்கள் காட்டிய அடக்கத்தையும் அவர்கள் தந்த அறிவுரையையும் எண்ணி எண்ணிப் பார்த்தேன் – என் கண்களில் நீர் துளிர்த்தது!
சென்னை நகரை, என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாம் அன்று இரவு! ஆம், தம்பி! என்ன வேண்டு மானாலும்! எழுக, வீழ்த்துக-என்று தலைவர்கள் அன்று கட்டளையிட்டிருந்தால், எதனை? என்று கூடக் கேட்டுக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்கள், எதையாவது வீழ்த்திவிட்டு, வேறு எதை வீழ்த்த வேண்டும் என்று கேட்டிருப்பர். அவ்வளவு உணர்ச்சிவயப்பட்ட

நிலையில் இருந்தனர் மக்கள்.என்னால், எண்ணத்தை வெளியிடாமல் இருக்க முடியவில்லை. இன்று ஆளவந்தார்களாக உள்ள இதே காங்கிரசாரிடம் இந்த 'ஜன சக்தி' கிடைத்தபோது, அம்மவோ! என்னென்ன செய்து மகிழ்ந்தனர்; எதிர்க் கட்சியினரைத் துரத்தித்துரத்தித் தாக்கினர். துரைத்தனத்தைத் துழைத்து எடுத்தனர். சட்டமாவது மண்ணாவது! அமைதி என்று கோழைத்தனம் பேசுவதா, அடிமைத்தனத்தைப் போக்கிக் கொள்ளும் அரும் வாய்ப்பினை இழந்து விடுவதா? தத்துவம் பேச இதுவா தருணம்? தாக்குக, நொறுக்குக, தண்டவாளங்களைப் பெயர்த்திடுங்கள், தபாலாபீசுகளைக் கொளுத்துங்கள்! சர்க்கார் கட்டிடத்துக்குத் தீ மூட்டுங்கள், தனியே சிக்கிடும் அதிகாரியின்மீது திராவகம் ஊற்றுங்கள் – என்றெல்லாம் பேசினர் – மக்களை எதெதற்கோ ஏவினர் – பலாத்காரத்தை அவிழ்த்து விட்டனர். மக்களின் ஆற்றலைக் கொண்டு, நாசவேலையைச் செய்து முடித்தனர்.

இதோ, பி. டி. ராஜன் எதிரில் நான்கு இலட்சம் மக்கள் சர்வகட்சிக் கூட்டணியின் தலைவர் அவர்.

அவர், தம்மிடம் தரப்பட்டுள்ள நான்கு இலட்சம் மக்களைக் கண்டு, என்ன எண்ணுகிறார்? இந்தப் பெரும் படையினைக் கொண்டு, எத்தகைய பேயாட்டம் நடத்திக் காட்டலாம் என்றா? இல்லை தம்பி, இல்லை. பெருநோக்கம் கொள்கிறார்! மகத்தானதோர் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறோம், எதையும் சாதிக்கவல்லதோர் ஆற்றல் படை இதோ அணிவகுத்து நிற்கிறது! இதனை நாசப் பாதையில் நாட்டம் கொள்ளாதிருக்கச் செய்ய வேண்டும், தமிழ்ப் பண்பு அழியும் விதமான போக்கிலே நடந்து கொள்ளாதிருக்கச் செய்ய வேண்டும் என்பது பற்றித்தான், மிகமிகப் பொறுப்புடன் பேசினார்.

இதோ, பி. டி. ராஜன் எதிரில் நான்கு இலட்சம் மக்கள் சர்வகட்சிக் கூட்டணியின் தலைவர் அவர்...
இதனைப் பெற்றும், மகிழ்ச்சியடைந்தும், வாய்ப்பு, பெரும்பொறுப்பு தவிர, பகை கக்குவதற்கான சாதனம் அல்ல என்பதை உணர்ந்து பேசுகிறாரே, இவரல்லவா கண்ணியவான் என்று எண்ணிக் கொண்டேன், பெருமிதம் கொண்டேன்.



எனக்குத் தம்பி, உண்மையாகவே உருக்கமாக இருந்தது. மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத் தன் வலிவை' எடுத்துக் காட்டுவதற்கான எத்துனை பெரிய வாய்ப்பு இது. இதனைப் பெற்றும், மகிழ்ச்சியடைந்தும், வாய்ப்பு, பெரும்பொறுப்பு தவிர, பகை கக்குவதற்கான சாதனம் அல்ல என்பதை உணர்ந்து பேசுகிறாரே, இவரல்லவா கண்ணியவான் என்று எண்ணிக் கொண்டேன், பெருமிதம் கொண்டேன்.
இலட்சக்கணக்கிலே கூடி இருந்த மக்களிடம் சொன்னேன். தங்களிடம் மக்கள் சக்தி குவிந்திருந்த போது கொடுமையையும் நாசத்தையும் அவிழ்த்துவிட்ட அந்த அரசியல் வாதிகள் எங்கே? தமிழகம் தன் பக்கம் திரண்டு நின்று ஆர்வம் கொப்பளிக்கும்

நிலையில் ஆதரவு காட்டி நிற்பது அறிந்தும், அமைதியுடன் நீதியைப் பெற அறநெறி நிற்கவேண்டும் என்று அறிவுரை தரும் இவர் எங்கே? தமிழ் நாட்டின் கண்ணியம், இதோ இங்கு அமர்ந்திருக்கிறது. காண்பீர்! என்று எடுத்துச் சொன்னேன். என் இதயம் பேசிற்று.

அத்தகைய 'கண்ணியவான்' ஜனவரி 27-ந் தேதிய சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார் கூட்டணித் தலைவரானார்; பிப். 20, பொதுவேலை நிறுத்தம், கடை அடைப்பு, அன்றே தீர்மானிக்கப்பட்டது.

பி. டி. ராஜன், அரசியலில் இப்போது நுழைந்த டி.டி.கே. அல்ல.

காலமெல்லாம் வேறு வேலை பார்த்துவிட்டு, சமயமறிந்து காங்கிரசில் பதுங்கும் 'சந்து' தேடிடும் சந்தர்ப்பவாதியல்ல.

கப்பல் மூழ்குவது தெரிந்தாலும், அதில் உள்ளோர் தப்பிச் செல்ல வழி செய்துவிட்டு, நான் தப்பித்துச் செல்வது அறமாகாது, நானும் கப்பலுடன் சேர்ந்து மூழ்கினாலும் கவலையில்லை என்று கூறி, கொடி வணக்கம் செய்தபடி, கப்பல்மேல் தட்டிலே நிற்கும் கப்பல் தலைவன் போல, ஜஸ்டிஸ் கட்சியில் நின்றவர்.

காமராஜ், அரசியல் இயக்கத்தில் தொண்டராக, கொடி ஏந்தியாக இருந்த நாட்களிலே, கோலோச்சும் அமைச்சராக இருந்தவர்; துள்ளி விளையாடும் சிறுபிள்ளைப் பருவத்தில் காமராஜர் இங்கு இருந்த நாட்களில், சீமை சென்று பார்-அட்-லா படித்தவர். பண்புக்கும் அன்புக்கும் உறைவிடம்; அரசியல் நாகரிகத்துக்கே ஆசான். அவரைச் சந்தித்து, பிப்ரவரி 20 குறித்துப் பேச வேண்டும் என்ற அளவுக்குக்கூட, தமது உயர்ந்த இடத்திலிருந்து கீழே இறங்க, காமராஜருக்கு மனம் இடம் தரவில்லை.

அழைத்துப் பேசவும் அவருக்குத்

நமது முறையில் பலாத்காரம் தலைகாட்டக் கூடாது, யாரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது, கடை அடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து ஈடுபட வேண்டும், யாரையும் நாம் பலவந்தப்படுத்தக் கூடாது என்று தமக்கே உரித்தான பண்புடன் பேசுகிறார், பி. டி. ராஜன்.

தோன்றவில்லை. அலட்சியப்படுத்தின கூட்டணி என்றோர் அமைப்பு உருவாக்கி இருப்பதையே கவனிக்க வேண்டிய அளவில் நான் சாமான்யனல்ல, ஒஹோ! அதனை அறிவீரா? நான் இந்த இராஜ்ய முதல் மந்திரி! என்று எண்ணி இறுமாந்து கிடந்தார்.

'அர்த்தால்' நடத்தத் தேவையில்லை; கோரிக்கைகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன் என்று கூறிட முன்வரவில்லை. ஒருவேளை, முதல் மந்திரிக்கு இருக்கும் மிகுதியான, பலரக வேலைகளிலே, இதனை அவர் கவனிக்கவே இல்லையோ என்றால் தெரிந்திருக்கிறது, தூற்றிப் பேசியுமிருக்கிறார் செஞ்சியில்.

வேண்டுமென்றே அலட்சியப்படுத்தினார் - துச்சமென்று எண்ணினார் - கூட்டாவது குழம்பாவது என்றார் !

அப்படிப்பட்டவருக்குக் 'கண்ணியம்' காட்டினார், பி.டி. இராஜன். தமிழனின் புகழ்க்கொடி, உயர உயரப் பறந்தது, தம்பி, பறந்தது!

நாடு, சர்வ கட்சிக் கூட்டணியின் அழைப்புக்கு ஆதரவு காட்டிற்று. தம்பி, நீ

உன் முழுத்திறமையையும் அளித்து பிப். 20 வெற்றி தேடித் தந்திருக்கிறாய், நான் உன்னிடம் எவ்வளவு எதிர்பார்க்கிறேனோ, அந்த அளவு குறைவு, இன்னும் அதிகம் நான் உன்னிடம் எதிர்பார்க்கலாம் என்பதை எடுத்துக் காட்டிவிட்டாய்.

தித்திக்கும் செய்திகளாகவே அனைத்தும் இருந்து விடவில்லை. குருதி கொட்டினர் நண்பர்கள்; தடியடிக்கும் ஆளாயினர் அன்பர்கள்; அரசியல் பிரச்சினையிலே அக்கறை கொண்டுள்ள தமிழர்கள் அத்துணை பேரும், அவர்கள் எந்தக் கட்சியினராயினும், ஏதேனும் ஓர் வகையில் தமது பங்கினைச் செலுத்த வேண்டும் என்ற ஆர்வத்துடன் பணியாற்றினர் வெற்றி பெற்றனர். வாழ்த்துகிறேன் வணங்குகிறேன். அவர்களின் 'தோழனாக' இருக்கும் 'பேறு' கிடைக்கப்பெற்றதற்காகப் பெருமகிழ்வு கொள்ளுகிறேன்.

சைமன் கமிஷனை பகிஷ்கரித்தபோதுகூட இப்படி இருந்ததில்லை என்றும், ரவுலட் சட்ட எதிர்ப்பின் போதும் இதுபோல் கொதிப்பு எழுந்ததில்லை என்றும், இராஜ்யம் பூராவிலும் நடைபெற்ற மிகப் பெரிய அர்த்தால் இதுதான் என்றும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஏற்பாடு செய்த அர்த்தாலில், இது போல் மகத்தானது வேறு ஒன்றும் இதற்குமுன் நடை பெற்றதில்லை என்றும், பெரிய பத்திரிகைகளின் ஒத்துழைப்பு ஒரு துளியுமின்றி அவைகளின் எதிர்ப்பையும் ஏளனத்தையும் தாங்கிக் கொண்டு வெற்றிகரமாக நடைபெற்றது இந்த அர்த்தால் ஒன்றுதான் என்றும், காலித்தனமோ குழப்பமோ, பலாத்காரமோ பயங்கரமோ இல்லாமல், மிக மிக அமைதியாக, மக்கள் பெருமளவுக்கு நடந்து கொண்டது, இந்த அர்த்தாலில்தான் என்றும்,
ஓரிரு இடங்களில் கட்டுக்கடங்காத ஆர்வத்தினால் சில காரியங்கள் நடைபெற்றிருந்தாலும், அவை விதிவிலக்கு அல்லது 'திருஷ்டி பரிகாரம்' என்று கூறத்தக்க வகையில்தான் இருந்தது என்றும்,
இந்த அர்த்தாலின் போதுதான், பொதுமக்கள், பயமற்று உலவிய, காட்சிகளைக் காண முடிந்தது என்றும், பெரும் பணத்தைச் செலவிட்டு, முதலாளிமார்கள் முன் முழங்காற்படியிட்டு, போலி வெற்றி தேடிடாமல், மனமுவந்து, தாமாக மக்கள் ஈடுபட வேண்டுமென்று முறை வகுக்கப்பட்டு, நடத்தப்பட்டது இந்த அர்த்தால் ஒன்றுதான் என்றும், நேர்மை உள்ளம் படைத்தவர்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகை யானாலும், மணம் இருந்தால் ரசிக்கத் தெரிந்தவர்கள், அனைவரும் கூறினர் – பாராட்டினர்

இந்தக் கட்டத்திலேதான், சர்வ கட்சிக் கூட்டணியின் தலைவர்களுடன் அடிக்கடி சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டபடி இருந்தது. அதனால் எனக்கு உற்சாகம் ஏற்பட்டதுடன், எங்களுக்குள் ஓர் உள்ளன்பு வளர்ந்திருக்கிறது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு ம.பொ.சி யுடன் மீண்டும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இருவருமே இதனை மெத்தச் சுவைத்தோம் என்று எண்ணுகிறேன்.

தமிழரசுக் கழகத் தோழர்களில் எனக்கு நீண்ட காலமாகவே நண்பர், உமாபதி; கூட்டணி காரணமாக நாங்கள் சந்திப்பதும், பொதுவாகத் திட்டம் தீட்டுவதும், காணக்காண அவருக்கு மெத்த மகிழ்ச்சி – அலாதியான ஆனந்தம்!
கோவை சின்னதுரையும், சென்னை சுப்பிரமணியமும், ஈரோடு சின்னச்சாமியும், சென்னை அந்தோணிப் பிள்ளையும், அவரவர் தொடர்பு கொண்டுள்ள தொழில் சங்கங்களின் மூலம் சர்வகட்சிக் கூட்டணி பெறக்கூடிய வாய்ப்புகள் பற்றிக் கூறியும், பிரச்சினைகளை அன்புடன் விவாதித்தும், திட்டங்கள் காணுவதிலே தெளிவும் துணிவும் காட்டியும், எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டினர்.
ஜீவாவைப் பற்றித்தான் சொல்லத் தேவையில்லை! 'பொல்லாத ஆசாமி, சொல்லாமல் கொள்ளாமல் வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டார்,' என்று நாமெல்லாம், எப்போதும் சொந்தம் கொண்டாடிப் பேசும்

நிலையில் உள்ள தோழர்.

இவ்வளவு பேருக்கும் அன்பை அள்ளிக்கொடுத்து முற்றிலும் தமக்குப் பழக்கமே இல்லாத முறைகளையும் திட்டங்களையும் நாங்கள் திணிக்க முயற்சித்த போதெல்லாம், புன்முறுவல் காட்டி, எங்கட்கெல்லாம் பொறுப்புப் பற்றி அடிக்கடி நினைவுபடுத்தி, எம்மை ஊக்குவித்து வந்தார், உடனிருந்து நடத்திச் சென்றார், பி. டி. ராஜன் அவர்கள்.

சர்வ கட்சிக் கூட்டணிக்கு, சட்டத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற பொறுப்பைத் தாங்கித்தாங்கித் தழும்பேறிப் போனவர் தலைவர்; அதிலே உறுப்பினர்களாக உள்ளவர்களில் பெரும்பாலோர், ஜனநாயகத்தின் பேரால் பதவிக்கு வந்தவர்கள் சட்டத்தைப் பயன்படுத்தியே சர்வாதிகாரியாகி விடுகிறார்கள் என்ற உண்மையை அறிவதால், ஆத்திரமே கொள்பவர்கள்! இந்தக் 'கூட்டு' எத்தனை நாளைக்கு நிலைக்கும்? ஒரு சிறு விவாதத்தில் சச்சரவு மூண்டுவிடாதா? திட்டம் தீட்டும் போதே தகராறு கிளம்பி விடாதா? கொள்கைக்கு விளக்கமளிக்கும் போதே ஒவ்வொருவர் ஒவ்வொரு கோணம் சென்று விடமாட்டார்களா? என்றெல்லாம் எண்ணிக் கொண்டுதான் காமராஜர்கூட, கூடட்டும், கூடட்டும், தீட்டட்டும் தீட்டட்டும் என்று கூறிக்கொண்டு சும்மா இருந்துவிட்டார் என்று எண்ணுகிறேன். அப்படியே அவருக்குச் சிறிதளவு ஆயாசமோ அச்சமோ ஏற்படவிடக் கூடாது என்பதற்காகவே, பெரியாரும் 'பூ, பூ! இதுகளெல்லாம் கூடி ஒரு காரியம் செய்ய முடியுமா? யார் இதுகளை நம்புவார்கள்? இதுகள் யார் என்பது யாருக்குந் தெரியாது?' என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தார்.

எனினும், தமிழகம் கண்டு பாராட்டத்தக்க விதமாக, கூட்டணி செயலில் ஈடுபடுவதிலே, தோழமை உணர்ச்சியையே காட்டிற்று. ஒவ்வொரு சந்திப்பும், நேசத்தை வளர்த்தது. ஒவ்வொரு விவாதமும், தோழமைக்கு அழைத்துச் சென்றது. கூட்டணி முறியவில்லை என்பதையும், பெரியாரின் பகைப் பிரசாரத்துக்குப் பிறகும், கூட்டணியின் குரலுக்கு நாட்டு மக்கள் ஆதரவு அளிக்கிறார்கள் என்பதைத் தெரிந்த பிறகுதான், ஜனவரி 27-ல் அமைக்கப்பட்ட கூட்டணியை அலட்சியப்படுத்தி, தலைவருடன் பேச முயற்சிக்காமல் முடுக்குடன் இருந்து வந்த காமராஜர் சர்க்கார், கூட்டணித் தலைவரைக் கண்டு பேசவும், அர்த்தாலைக் கைவிட்டு விடும்படி அவரைக் கேட்டுக் கொள்ளவும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டம் பிறந்தது! ஆனால், அதற்குள் கூட்டணி அலுவலகக் கதவு தாளிடப்பட்டு விட்டது; தட்டினால் திறக்கப்படும், கேட்டால் விளக்கம் அளிக்கப்படும், கெஞ்சினாலும் மிஞ்சினாலும். அர்த்தாலைக் கைவிடுவது என்பது மட்டும் முடியாது என்பது அறிவிக்கப்பட்டாகி விட்டது.

அரசியலில் அமளிகளைத் தடுத்துச் சமரசம் காண்பதற் கென்றே தம்மை ஒப்படைத்திருப்போர் மூலம், 'சமரசம்' பேசப் பட்டது - பலன் ஏதும் இல்லை. காரணம், கூட்டணி தன் திட்டத்தில் தடுமாற்றமற்ற நிலையில் இருந்ததுதான்.

பி.டி. ராஜன் என்னைப் பார்த்ததும், 'அண்ணாதுரை! என்ன, விஷயமெல்லாம் எப்படி இருக்கிறது? எது எப்படி இருப்பினும், 20-ந் தேதிய காரியத்தில் நான் உங்களோடு இருப்பது உறுதி, விட்டு விட்டுப் போய்விடுவேன் என்று மட்டும் எண்ணிக் கொள்ளாதே!'

19-ந் தேதி காலை, தம்பி! இரவெல்லாம் எனக்குத் தூக்கம் ஏதேதோ வித விதமான வதந்திகள்! நானும் விதவிதமான புத்தகங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டேன், உள்ளே போக.... விடியற் காலையில் மதுரையிலிருந்து தலைவர் சென்னை வருகிறார். வருகிறவரிடம் கெஞ்சுவது போலவும் கொஞ்சுவது போலவும் ஓர் அறிக்கையும், வழிக்குவராவிட்டால் தாக்குவோம் என்று மிரட்டும் விதமாக மற்றோர் அறிக்கையும் சர்க்கார் வெளியிட்டு விட்டார்கள். பி. டி. ராஜன்

வருவார், இந்த அறிக்கைகளைக் காரணமாகக் காட்டுவார், கடை அடைப்பு வேண்டாமென்று கூறி விடுவார், கூட்டணி உடைபடப் போகிறது! என்றெண்ணிக் குதூகலம் கொள்கிறார்கள் மாற்றார். என்செய்வேன் நானும் காலையிலே எழுந்தேன், தலைவரைக் காணச் சென்றேன். தம்பி! அந்தக் காட்சியை நான் என்றைக்கும் மறந்திட முடியாது. பி.டி. ராஜன் அவர்கள் முகத்தில் 'சோப்பு' போட்டுக் கொண்டிருக்கிறார், உள் அறையில்; நான் வெளி அறையில் நுழைகிறேன். எப்படியாவது காமராஜரின் அறிக்கையில் திருப்தி பெறச் செய்ய வேண்டும் என்று எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்த நண்பரும் இருக்கிறார் நான் சிறிதளவு பயந்து போனேன். இருவரிடமும் எனக்குச் சாதகமாக இருந்தாக வேண்டும் என்று சண்டை போடக் கூடிய அளவு உரிமை உண்டு – எனினும் அதேபோல அவர்களுக்கும், நாங்கள் சொல்லுகிறபடி கேட்டுத்தானாக வேண்டும் என்று என்னிடம் கூற உரிமை உண்டல்லவா. அதனால் பயந்து போனேன். என் மனநிலையைப் புரிந்து கொண்டாரோ என்னவோ, பி.டி. ராஜன் என்னைப் பார்த்ததும், 'அண்ணாதுரை! என்ன, விஷயமெல்லாம் எப்படி இருக்கிறது? எது எப்படி இருப்பினும், 20-ந் தேதிய காரியத்தில் நான் உங்களோடு இருப்பது உறுதி, விட்டு விட்டுப் போய்விடுவேன் என்று மட்டும் எண்ணிக் கொள்ளாதே!' என்றார். வெற்றிப் புன்னகையுடன் நான், சமரசத் தூதுவரைப் பார்த்தேன். அவர் மட்டும் என்ன செய்வார்? அவருக்கே உரித்தானதோர் பரிவான பார்வை காட்டினார், தம்பி! உன்னை மனக்கண்ணால் கண்டேன், உறுதி கொண்டேன்.


பி.டி. ராஜன் என்னைப் பார்த்ததும், 'அண்ணாதுரை! என்ன, விஷயமெல்லாம் எப்படி இருக்கிறது? எது எப்படி இருப்பினும், 20-ந் தேதிய காரியத்தில் நான் உங்களோடு இருப்பது உறுதி, விட்டு விட்டுப் போய்விடுவேன் என்று மட்டும் எண்ணிக் கொள்ளாதே!'

அன்புள்ள,
அண்ணாதுரை.



‘ஆயிரம் பிறை கண்ட அண்ணல்’

(மதுரையில் நடைபெற்ற தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் 82ஆம் பிறந்தநாள் விழாவில், தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கி ஆற்றிய உரை)



பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரிய தமிழவேள், பி. டி. ஆர். அவர்களே! திருமதி அம்மையார் அவர்களே! மாண்புமிகு கல்வி, உள்ளாட்சித்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களே! மாண்புமிகு பேராசிரியர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் என். வி. என். அவர்களே! வணக்கத்துக்குரிய மேயர் அவர்களே! செட்டிநாடு அரசர் அவர்களே! பாராட்டுரை நிகழ்த்திய தமிழ்ப் பெருமக்களே! தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இன்று ‘ஆயிரம் பிறை கண்ட அண்ணல்’ என்று போற்றப்படுகின்ற நம்முடைய தமிழவேள் அவர்களுடைய இந்த விழா நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு, விழா மலரை வெளியிடுவதிலும் விழாவிற்குத் தலைமை ஏற்பதிலும் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். அவர்களுடைய பண்புகளைக் குறித்தும், அவர்கள் ஆற்றிய பணிகள் குறித்தும் எனக்கு முன் பேசிய அனைவரும் வெகு விளக்கமாக எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் பண்பாளராக, தமிழவேளாகத் திகழ்கின்ற திரு. பி. டி. ஆர். அவர்களுடைய தொண்டும், அவர்களுடைய வழிகாட்டும் ஆற்றலும், அவர்களுடைய அறிவுத்திறனும் எங்களைப் போன்றவர்களுக்கு எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

இந்த விழாவிலே தமிழகமே அவரைப் பாராட்டிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், 'ஆயிரம் பிறை கண்டவர்' எங்கள் மீது ஒரு குறை கண்டார்.

நாவலர் அவர்கள், விடுத்த முறையீடு ஒன்றினை விரைவில் முடித்துத் தரவில்லை என்பது தான் அந்தக் குறை ஆகும். ஆனால் அரசாங்கத்தினுடைய பொறுப்புகள் அனைத்தும் அதிலே நிறைவேற்றப்பெற்று, மதுரைப் பல்கலைக்கழகத்தினுடைய பொறுப்புதான் நிறைவேற்ற வேண்டிய கட்டத்திலே இருக்கிறது என்பதையும், அதை மதுரையிலேயே இருக்கின்ற நம்முடைய தமிழவேள் அவர்கள் மிக நன்றாக உணர்வார்கள் என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆகவே, அவர்கள் சாட்டிய அந்தக் குற்றச்சாட்டை திரும்பப் பெறவேண்டுமென்று நான் (கரவொலி) கூறாவிட்டாலும் நிலைமையை அவர்களுக்கு உணர்த்துவதற்காகக்கூட அல்ல, இவ்வளவு பெரியவர் இவ்வளவு காலமாக ஒன்றைச் சொல்லி, இந்தப் பிள்ளைகள் கேட்காமல் இருக்கிறார்களே என்று நீங்கள் யாரும் நினைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் விளக்கம் செய்ய ஒரு வாய்ப்பினை நான் பயன் படுத்திக்கொண்டேன். பல்கலைக்கழகம் விரைவிலே அதை முடிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாதா என்று அவர்கள் கேட்கக்கூடும், அந்த முயற்சிகளை நிச்சயமாக நாங்கள் எடுத்துக் கொள்வோம் என்பதை மாத்திரம் இந்த விழாவிலே அவர்களுக்கு உறுதியாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (கரவொலி)

அவர்கள் இந்த விழாவில் ஒன்றைச் சொன்னார்கள், தனக்கு நாவலரையும், பேராசிரியரையும், என். வி. என். அவர்களையும் நன்றாகத் தெரியும்; முதலமைச்சரை அவ்வளவாகத் தெரியாது என்று சொன்னார்கள். அந்த உண்மையை அவர்கள் சொன்னதற்காக, நான் அவர்களை உள்ளபடியே அவர்களுடைய இராஜதந்திரத்தைப் பாராட்டுகின்றேன். (கரவொலி) என்னைத் தெரியாது என்று அவர்கள் சொன்னதை, அவர்களிடத்திலே சிபாரிசுக்காக வருகின்றவர்கள் உண்மை என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் சிரமம் குறையும், வயதான காலத்தில், எனக்கும் சிரமம் குறையும் இருக்கின்ற வேலைகளுக்கிடையே.

அவர்களுடைய பிறந்தநாள் செய்தியாக ஒரு அருமையான செய்தியை இந்த சமுதாயத்துக்கு, இந்த நாட்டுக்கு அவர்கள் இன்றைக்கு வெளியிட்டு இருக்கின்றார்கள். அதுதான் இளைஞர்கள் இடத்திலே கட்டுப்பாடு; பொதுமக்கள் இடத்திலே கட்டுப்பாடு; கண்ணியம், கடமை உணர்ச்சி, இவைகள் எல்லாம் நிரம்ப இருந்திட வேண்டும் என்பதாகும் . 1937-ம் ஆண்டுக்குப் பிறகு அடித்த அரசியல் புயலின் காரணமாக அந்த கட்டுப்பாட்டு உணர்ச்சிகள் தளர்ந்து விட்டன என்று அவர்கள் குறிப்பிடுவது, அந்த காலகட்டத்தினுடைய அரசியல் வரலாற்றை திரும்பிப் பார்க்கிறவர்களுக்கு வெகு நன்றாக புரியும். அதைக் கொஞ்சம் தீவிரமாகச் சிந்தித்தால் இந்த விழாவில் அரசியல் கலப்பு வந்துவிடும் என்பதற்காக, நான் அதை தீவிரமாக சிந்திக்க வேண்டுமென்று யாரையும் கேட்டுக்கொள்ள விரும்பவில்லை. ஆனாலும், பொதுமக்களுடைய கட்டுப்பாடு, இளைஞர்களுடைய கட்டுப்பாடுஇதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல், முதலமைச்சருக்குத்தான் இருக்கிறது என்று சொல்லி அவர்கள் தன்னுடைய வேலையைக் குறைத்துக் கொண்டது உள்ளபடியே எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எனக்கு அந்தப் பொறுப்பு இருந்தாலும் அல்லது இந்த அமைச்சரவையிலே உள்ள அமைச்சர் பெருமக்களுக்கு அந்தப் பொறுப்பு இருந்தாலும் அந்தப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடியவர், பி. டி. ஆர். அவர்கள் என்பதை (கரவொலி) இந்த நாடு நன்றாக அறியும். ஆகவே பொறுப்பை எங்களுடைய தோள்களிலே மாத்திரம் சுமத்தி விட்டு

‘பொறுப்பைத் தந்தேன் நீங்கள் ஒழுங்காக அதை ஆற்றிடவில்லை’என்று குற்றம் சாட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்ளாமல் எங்களோடு இருந்து இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நீங்கள் துணைபுரிய வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு அவர்கள் குறிப்பிட்டுள்ள இளைஞர்கள் ஆகட்டும்; அல்லது பொதுமக்களிலே ஒரு பகுதியினர் ஆகட்டும்; அவர்கள் கட்டுப்பாடாக நடந்து கொள்வதைச் சட்டத்தால் மாத்திரம் நிறைவேற்றிட முடியாது; அறிவுரைகளால் மாத்திரம் நிறைவேற்றிட முடியாது; பொது மக்களும் இளைஞர்களும் தங்களுடைய பொறுப்பை உணர்ந்தாக வேண்டும். எதிர்கால நாட்டினுடைய நலத்தை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்; அந்த வகையிலே பொறுப்புள்ளவர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் என்று பெரியவர் பி. டி. ஆர். அவர்கள் தன்னுடைய செய்தியிலே குறிப்பிட்டிருந்தாலும் கூட அந்தப் பொறுப்பை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது என்று அவர்கள் அகமகிழ்ச்சியோடு உங்களை பாராட்டி இருந்தாலும்கூட நான் பொது மக்களையும், இளைஞர்களையும் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த ஒருவரோடு நின்று விடுகின்ற பொறுப்பு அல்ல இந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற அனைவரும் பகிர்ந்து கொண்டு, நம்முடைய சமுதாயம், நம்முடைய நாடு, நம்முடைய எதிர்காலம் ஒழுங்காக உருவாக வேண்டுமானால், செம்மையாக வேண்டுமானால், அனைவரும் இதிலே பங்குபெற்று, பணியாற்றிட வேண்டுமென்று அவர்களுடைய பிறந்தநாள் செய்தியிலே என்னுடைய வேண்டுகோளையும் இந்த வகையில் இணைத்துக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அவர்களுடைய குண நலன்களைப் பற்றி எல்லாம் பலரும் சிறப்பாகப் பேசினார்கள். நம்முடைய மதுரை மேயர் முத்து அவர்கள் சொன்னார்கள், அவர்களுடைய மாணவனாகவேதான் ஒரு காலத்தில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினேன் என்று சொன்னார்கள். இப்படி பல்லாயிரக் கணக்கானவர்கள் இன்றைக்கு தமிழவேள் அவர்களுக்கு அரசியலிலே மாணவர்களாகவும் அவர்களுடைய குடும்பத்தோடுநல்லஉறவுகொண்டவர்களாகவும் எந்த நேரத்தில் சங்கடங்கள் ஏற்பட்டாலும் அந்த நேரத்திலே அந்தச் சங்கடங்களை எல்லாம் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு உருவமாக அன்றைக்குத் தோன்றியவர், இன்றைக்குத் தோன்றிக் கொண்டிருப்பவராக நம்முடைய தமிழவேள் அவர்கள் விளங்குகின்றார்கள்.

நான் அவரை நீண்டகாலமாக அறிவேன். தேவிகுளம், பீர்மேடு தகராறு ஏற்பட்ட அந்த நேரத்தில் அவர்கள் அந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த அந்தக் காலத்தில், நம்முடைய என். வி. என், அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தத் தலைமைப் பொறுப்பை அவர்கள் எவ்வளவு பாங்குற நிறைவேற்றினார்கள், அதே நேரத்திலே எவ்வளவு தீரத்தோடுநின்று அந்தத் தலைமைப் பொறுப்பை நடத்திக் காட்டினார்கள், அதிலே வெற்றி பெற்றோமா இல்லையா என்பது வேறு பிரச்சினை. அதிலே தமிழர்களுடைய உணர்ச்சி எந்த அளவுக்கு வடித்தெடுத்து நாட்டுக்கு உணர்த்தப்பட்டது என்பதை எல்லாம் யாரும் மறந்துவிட முடியாது. அவர்களுடைய பெயரால் இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கின்ற மலரில் சில பக்கங்களை நான் புரட்டிப் பார்த்தேன். இன்றைக்கு பழுத்த பழமாக, மினாட்சியம்மன் கோவிலினுடைய திருப்பணியை செய்து முடித்தார் என்கின்ற வரலாற்றுப் புகழ் பெற்றவராக, பக்திமானாக, பக்தி சிரேஷ்டராக, வெள்ளிவேலைப் பரிசாகப் பெறுகின்ற முருகனுடைய அத்தியந்த பக்தராக இன்றைக்கு இந்த இடத்திலே திகழ்கின்ற நம்முடைய தமிழவேள் பி, டி. ஆர். அவர்கள் தான் 1931ம் ஆண்டு சேலம் நகரத்தில் சுய மரியாதை சங்க கட்டிடத்தை திறந்து வைத்தார்கள் என்பதை எண்ணுகிற நேரத்திலே எனக்கு மிக மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அவர்கள் பேசிய பேச்சு அந்த மலரிலே கூட வெளியிடப்பட்டிருக்கிறது. 1935ஆம் ஆண்டு அவர்கள் பேசிய அந்தப் பேச்சு 'குடியரசு' இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த இதழிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள் ' நான் கற்பனையாகச் சொல்லவில்லை; பரமசிவம் வெளியிட்ட மலரிலேதான் இருக்கிறது' 'மதத்தையும் சமூகத்துறையையும் ஒன்றுபடுத்திக் கொண்ட மக்கள் சமூகத்துறை சீர்திருத்தம் ஏற்படும் காலங்களில் இப்படித்தான் சொல்வது சகஜம், மனித முன்னேற்றத்திற்கு இடையூறான எல்லா மதங்களும் எல்லா சாஸ்திரங்களும் கொளுத்தப்பட வேண்டியது தான்' (குரவொலி). ஜாக்கிரதியாக சொல்லி இருக்கிறார்கள், 'மனித முன்னேற்றத்திற்கு இடையூறான எல்லா மதங்களும் எல்லா சாஸ்திரங்களும் கொளுத்தப்பட வேண்டியதுதான். 'ஆனால் கடவுள் இருக்க வேண்டும், ஏனென்றால் மனித சமூக முன்னேற்றத்திற்கு எந்தக் கடவுளும் தடையாக இருக்க மாட்டாது. கடவுளுக்கு தரகர் முறை ஒழிக்கப்பட வேண்டியது மிக அவசியம். ஆதலால் நமது முயற்சிகள் நாஸ்திகமானது என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை' என்று தமிழவேள் பி.டி. ஆர். அவர்கள் சேலம் சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தை அன்றைக்குத் திறந்து வைத்துப் பேசிய பேச்சு இந்தப் பேச்சாகும். அதற்கு முன்பே 1928-ம் ஆண்டு லால்குடியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் அவர்கள் பேசிய நேரத்தில். 'இன்றைக்கு தமிழ்ச் சமுதாயத்திலே அறிவார்ந்த திருமணங்கள் நடைபெறுகின்றன. யாரும் இடைத்தரகர் இல்லாமல், சடங்குகள் இல்லாமல், சம்பிரதாயங்கள் இல்லாமல், புரோகித முறை இல்லாமல் திருமணங்கள் நடைபெறுகின்றன, அவைகளை எல்லாம் நான் வரவேற்கின்றேன். ஆனால் இந்தத் திருமணங்களிலே பிறகு ஏற்படுகின்ற வாரிசுகளுக்கு சட்டப்படி உரிமைகள் வேண்டும், அதை நீங்கள் தக்கபடி, கவனித்து இந்தத் திருமணங்கள் எல்லாம் சட்டப்படி செல்லுபடி ஆவதற்கான வழிவகைகளை எல்லாம் காணவேண்டும்' என்று 1929-ம் ஆண்டு லால்குடி சுயமரியாதை மாநாட்டிலே தமிழவேள் அவர்கள் கொடுத்த குரலை 1967ம் ஆண்டுக்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலே நிறைவேற்றி வைத்தார்கள். (குரவொலி) என்பதை எண்ணுகிற நேரத்தில், இப்படிப்பட்ட பெரியவர்களுடைய எண்ணங்கள், அவர்களுடைய நினைவுகள், அவர்களுடைய அரிய ஆலோசனைகள் இவைகளை எல்லாம் நிறைவேற்றி வைக்கின்ற செயல் வடிவமாகத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது.

அவர்கள் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் எதிரி என்று சிலபேர் சொல்கிறார்கள்? என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்; அப்படிச் சொல்கிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கமாட்டார்கள் என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். அவர்கள் கூட அந்தப் பொருளிலே சொல்லவில்லை என்பது எனக்குப் புரியும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர் எதிரி என்று சொல்கிறவர்கள் அவர்கள் எதிரியாக இருக்கக்கூடாதா என்று எண்ணுகிறவர்கள் தான் அப்படிச் சொல்கிறார்களே அல்லாமல் வேறல்ல. எதிரியாக இருந்தால் அவரைவிட்டு நாலு வசைபாட சொல்லலாமே. அவரைவிட்டு முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிரான சில குறைகளைச் சொல்லலாமே என்று எண்ணுபவர்களாக இருக்கக்கூடுமே அல்லாமல் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நம்முடைய தமிழவேள் அவர்கள் நட்போடு இருக்கவேண்டும்; உறவோடு இருக்க வேண்டும் என்று விரும்புவர்களாக அவர்கள் இருக்கமாட்டார்கள்.

இந்த நட்பு, அவர்களுடைய வாழ்த்துதலைப் பெற்ற கழகம், இந்த கழக ஆட்சி நடைபெறுமேயானால் இன்னும் மேலும் வலுவாக பொலிவாக இருக்கும் என்கின்ற எண்ணத்திலே வேண்டுமானால் அதைச்

சொல்லி இருக்கலாம். அவர்களுடைய உரையின் மூலமாக அந்தக் கருத்தையும் இந்த பிறந்தநாள் விழாவிலே அவர்கள் தவிடுபொடி ஆக்கி இருப்பதற்காக நான் மனமார்ந்த நன்றியை முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இந்த ஆட்சியின் சார்பில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

1916-ம் ஆண்டு தமிழகத்தில்' தென்னகத்தில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை ஏற்படுத்தினார்கள். கிட்டத்தட்ட 56 ஆண்டு காலமாகிறது, தமிழகத்திலே பின்தங்கிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகநம்முடைய நாவலரும் பேராசிரியரும் இங்கு எடுத்துக் காட்டியதைப் போல அவர்களுடைய முன்னேற்றத்திற்காகத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் உருவாயிற்று, அது சட்டசபைக்குப்போன பிறகுதான் சட்டசபைக்கு தன்னுடைய கட்சியின் பெயராக 'நீதிக் கட்சி' என்று தன்னுடைய பெயரை மாற்றிக்கொண்டது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஒரு வகுப்பாரை தாழ்த்துவதற்காக அல்ல, அதனுடைய குறிக்கோளே பல மாநாடுகளிலே தமிழவேள் பி.டி.ஆர். அவர்களே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் குறிக்கோள் உயர்ந்திருப்போர்களைத் தாழ்த்துவது அல்ல; தாழ்ந்து இருப்பவர்களை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு வருதல். இதுதான் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் குறிக்கோள் என்று பல மாநாடுகளிலே பி.டி.ஆர். அவர்களே எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு கொள்கை வடிவமாக 1916-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக் கட்சியாக மாறி, 'நீதிக் கட்சி' என்கின்ற பெயரால் ஆட்சிபுரிந்து, நிர்வாகத்திற்கு பெயர் பெற்றக் கட்சி என்கின்ற பெயரை எடுத்து, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரையிலே பி. டி. ஆர். போன்றவர்களும், செட்டிநாட்டு அரசரைப் போன்றவர்களும் இருந்து நல்ல வழிமுறைகளை, ஆலோசனைகளைச் சொல்கிறார்கள்.

'மனித முன்னேற்றத்திற்கு இடையூறான எல்லா மதங்களும் எல்லா சாஸ்திரங்களும் கொளுத்தப்பட வேண்டியதுதான். ஆனால் கடவுள் இருக்க வேண்டும். ஏனென்றால் மனித சமூக முன்னேற்றத்திற்கு எந்தக் கடவுளும் தடையாக இருக்க மாட்டாது. கடவுளுக்கு தரகர் முறை ஒழிக்கப்பட வேண்டியது மிக அவசியம். ஆதலால் நமது முயற்சிகள் நாஸ்திகமானது என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை'

என்று கூறியவர் தமிழவேள் பி.டி. ஆர். அவர்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். அவர்கள் சொல்லுகிற ஆலோசனைகள் அனைத்தையும் நாங்கள் ஒப்புக் கொள்கிறோம் என்பது பொருளல்ல, அவர்களுடைய ஆலோசனைகள் நாங்கள் செல்கின்ற பாதையிலே அவைகள் எங்களுக்கு சில கருத்துக்களை உருவாக்க, இந்த பாதையிலே இன்னும் ஒழுங்காகச் செல்ல, அந்த ஆலோசனைகள் மெத்தவும் பயன்படுகின்றன. அந்த வகையிலேதான் நம்முடைய பேராசிரியரும் நாவலரும் ஒன்றை அழகாகச் சொன்னார்கள்; நீதிக் கட்சியின் நிலையான தலைவராக இன்றைக்குப் பண்பாளர் தமிழவேள் பி. டி. ஆர், அவர்கள் இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை. அவர் தலைவர். பரமசிவம் பொதுச் செயலாளர். அந்தக் கட்சியினுடைய உறுப்பினர்களாகச் சிலபேர் இருந்தாலும் கூட அந்த நீதிக் கட்சியினுடைய உணர்வுகள் இன்றைக்கு நாட்டிலே இல்லாமல் போகவில்லை, நீதிக்கட்சியினுடைய ஆட்சி இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீதிக்கட்சி கிட்டத்தட்ட 60 ஆண்டு காலத்திற்கு முன்பு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சிறப்பான ஆட்சி நடத்திய கட்சி என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்தக் கட்சியை அன்றைக்கு நடத்திச் சென்ற பெரியார் அவர்கள் ஆகட்டும்; அதனுடைய படைத் தளபதியாகக் கொலுவீற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்

இன்றைக்கு பழுத்த பழமாக, மினாட்சியம்மன் கோவிலினுடைய திருப்பணியை செய்து முடித்தார் என்கின்ற வரலாற்றுப் புகழ் பெற்றவராக, பக்திமானாக, பக்தி சிரேஷ்டராக, வெள்ளிவேலைப் பாரிசாகப் பெறுகின்ற முருகனுடைய அத்தியந்த பக்தராக இன்றைக்கு இந்த இடத்திலே திகழ்கின்ற நம்முடைய தமிழவேள் பி, டி. ஆர். அவர்கள் தான் 1931ம் ஆண்டு சேலம் நகரத்தில் சுய மரியாதை சங்க கட்டிடத்தை திறந்து வைத்தார்கள் என்பதை எண்ணுகிற நேரத்திலே எனக்கு மிக மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஆகட்டும்;அந்தக்கட்சியினுடையகொள்கைகள்இன்றைக்குதமிழ்ச் சமுதாயத்திலே வேறு விதத்தில பரவி, வகுப்புவாத உணர்ச்சியோடு அல்ல, அனைவரும் சமம் என்கின்ற சமதர்ம உணர்ச்சியோடு அந்தக் கொள்கைகள் பரவி; இன்றைக்கு முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்கு வலுவூட்டுகின்ற தன்மையிலே நீதிக்கட்சி அன்றைக்கு விதைத்த விதை பயன்பட்டு வருகிறது. அந்தவகையிலே பி. டி. ஆர். அவர்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் நாம் நம்முடைய தலைதாழ்ந்த வணக்கத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்றைக்குப் பார்க்கிறோம், அவர்கள் எவ்வளவு பண்பாளர் என்பதற்கு இங்கே பேசிய நாவலருடைய வயது என்ன? என்னுடைய வயது என்ன? பேராசிரியருடைய வயது என்ன? என். வி. என். அவர்களுடைய வயது என்ன? அவர்கள் எங்களை எல்லாம் எவ்வளவுமரியாதையாக நடத்தினார்கள்; எவ்வளவு மதிப்போடு நடத்துகிறார்கள் என்பதை எண்ணுகிற நேரத்தில், அதுதான் பெரியவர்கள்; அது தான் பண்பு; அதுதான் அவர்கள் எல்லாம் மெத்தப் பெரியவர்கள் என்பதற்குச் சான்று, அடையாளம், அறிகுறி. அதைத்தான். இங்கே நீங்கள் காண்கிறீர்கள்.

நாம் ஒரு காலத்திலே அமைச்சராக இருந்தோம், இந்த நாடு போற்றுகின்ற தலைவராக இருந்தோம், ஒரு கட்சியைக் கட்டிக் காத்தோம். இன்றைக்கு நம்முடைய இடத்திலே இவர்கள் எல்லாம் உட்கார்ந்துகொண்டு இருக்கின்றார்களே என்கின்ற அசூயை இல்லாமல் என்கின்ற உணர்ச்சிக்கு ஆட்படாமல் எங்களை எல்லாம் தன்னுடைய பேரப்பிள்ளைகளைப்போல நடத்துகின்ற அந்த பாங்கு இருக்கிறதே, அதுதான் உண்மையான பெரிய மனிதருக்கு அடையாளம். அதைத்தான் பி. டி. ஆர். அவர்களுடைய உருவத்திலே இங்கே நாம் காண்கிறோம். அவர்கள் தமிழ் நாட்டினுடைய எல்லைக்கு அல்ல; தமிழ் மொழிக்கு ஆபத்து வந்த நேரத்திலே வெகுண்டெழுந்தவர்கள்.

பாரதிதாசனுடைய இரண்டு வரிகளுக்கு இன்றைக்கு உதாரணமாகத் விளங்குபவர்களிலே தமிழவேள் பி.டி.ஆர். அவர்கள் ஒருவர் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. 'தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' 'பாரதிதாசனுடைய வரி. அதைப்போல தமிழுக்கு ஆபத்து வருகிற வரையில் இந்தி ஆதிக்கம் இங்கு நுழைந்த நேரத்தில் அதை எதிர்த்துக் கங்கணம்கட்டி, அதைப் புறமுதுகிட்டு ஓடச் செய்கின்ற வகையிலே போர்க்களத்திலே நின்ற பெருமக்களிலே ஒருவராக இருந்தவர் தமிழவேள் பி.டி.ஆர். அவர்கள் ஆவார்கள்.

அடுத்த வரி, 'எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும்' எதிரிகள்

எமை நட்பு தாயென கோடியிட்டு அழைத்தாலும் தொடேன்' என்கின்ற வகையிலே பதவியா, பட்டமா எதுவானாலும்; செல்வாக்கா, சீரா எதுவானாலும் என்னுடைய கொள்கை எனக்கு; எதிர் முகாமுக்குச் செல்லமாட்டேன் என்கின்ற அந்த உறுதியிலேயும் நிலையாக நின்றவர் நம்முடைய பி. டி. ஆர். அவர்கள், இவ்வளவு அரசியல் புதருக்கிடையே ஓரே கட்சியை வைத்துக்கொண்டு, அந்தக் கட்சியை இன்றைக்கு நடத்தி, என்னுடைய வாழ்நாள் வரையிலே அந்தக் கட்சியினுடைய கொள்கைகள் என்னுடைய உள்ளத்தே இருக்கும்; அதைப் பின்பற்றுகின்றவர்கள் சிலராக இருப்பினும் பரவாயில்லை என்கின்ற உள்ள உறுதியோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற

தமிழவேள் அவர்களுடைய உறுதியை, அவர்களுடைய உணர்வை, அவர்களுடைய ஆர்வத்தை, அவர்களுடைய தமிழ்ப்பற்றை, அவர்களுடைய தமிழ் நாட்டுப்பற்றை, அவர்களுடைய தன்மான உணர்வை அனைவரும் பெறுவதுதான் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிலே நாம் அவர்களுக்கு காட்டுகின்ற மரியாதையாகும் என்று எடுத்துக்கூறி அவர்கள் வாழ்க வாழ்க! பல்லாண்டு வாழ்க!!! தமிழ்போல் தழைத்து வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன்.

வணக்கம்.

* * *




நாங்கள் தமிழவேள் வழியைச் சேர்ந்தவர்கள்

(பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், திரு.பி.டி. ராஜன் அவர்களின் 82ஆம் பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை)

விழாத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, விழா போற்றுதற்குரிய ஆயிரம் பிறை கண்ட தலைவர் தமிழவேள் பி. டி. ராஜன் அவர்களே, தமிழக கல்வித்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நண்பர் என்.வி.என். அவர்களே, மதுரை மாநகர மேயர் அவர்களே, உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களே, அறிவு சார்ந்த பெருமக்களே, தாய்மார்களே, நண்பர்களே!

நீதிக் கட்சியினுடைய நிலையான தலைவர் தமிழவேள் அவர்களுடைய 82 ஆண்டு நிறைவு கண்ட அந்தப் பெருவிழாவில் நானும் கலந்து கொண்டு, அவரைப் போற்றதற்குரிய, நல்ல வாய்ப்பைப் பெற்றதற்காக எனது உளமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழவேள் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முடிசூடா மன்னராகப் பண்பு உலகில், அன்பு



P. T. R., K. Anbazhagan, Health Minister and K. Paramasivam.

உலகிலே திகழ்ந்து வருகிற காரணத்தாலேதான் இன்றைய தினம் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் அவர்களைப் போற்றுதலிலும், வாழ்த்துதலிலும் பெருமைப்படுகிறார்கள் என்பது நாமெல்லாம் அறிந்ததாகும். அவர்களைத் தமிழவேள் என்று தமிழகம் கொண்டாடத் தொடங்கியதற்குப் பின்னர், இன்றைக்குத் தமிழவேள் என்று பாராட்டப்படுகின்ற கலைஞர் அவர்களே இந்த விழாவிலே தலைமை வகிப்பதும் (கரவொலி) ஒரு தமிழவேள் தலைமையில் மற்றொரு தமிழவேள் விழா நிறைவேறுவதும் (கரவொலி) தமிழ்நாட்டிலே என்றைக்கும் தமிழவேள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையை நமக்குத் தருகிறது (கரவொலி) உள்ளபடியே, அவர்கள் அமைச்சராக இருந்தார்கள் என்பது மக்கள் மறந்திருப்பார்கள். எத்தனையோ அமைச்சர்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன சமுதாயத்தில் அவர் அமைச்சர் என்பதிலே நாடு பெருமை கொள்ளும் என்று நான் கருதவில்லை. ஆனால் நிலையான கொள்கை உடையவர் என்பதிலேயும், எதை இந்த நாட்டுக்கு நல்லது என்று அறிமுகப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதைத் தொடர்ந்து அறிமுகப்படுத்துபவர், ஆதரிப்பவர் என்ற முறையிலேயும், தோல்வி எத்தனை முறை வந்தாலும், அதைப்பற்றி கவலைப்படாத உள்ள உறுதிபடைத்தவர் என்ற அந்தத் தன்மையிலும், அந்த வாழ்க்கையிலே வயதுக்குத் தக்க பண்பாடுகளை வளர்த்துக்கொண்ட பெரியவர் என்ற முறையிலேயும் அவர்கள் போற்றப்படுகிறார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் அவர்களை நான் முதன் முதல் சந்தித்த போது அவரோடு எனக்கு மாறுபாடு அதிலே, அவர்கள் ஒன்றைச் சொல்ல நான் ஒன்றைச்சொல்ல நான் இளைஞன், கல்லூரி மாணவன். அவர்கள் அப்போது சமூகத்தில் மிகப் பெரிய தலைவர். ஒரு சமுதாய மாநாட்டிலே நாங்கள் கலந்து கொண்டோம். அவர்கள் தலைமை வகித்தார்கள். இந்த சமதாயத்திற்குச் சில மாறுபட்ட கருத்துக்களை நான் எடுத்துச் சொல்ல நேரிட்டது. அவர்களுக்கு அவ்வளவு உடன்பாடு இல்லை, இருந்தாலும் அவர்கள் என்னிடத்திலேயே கோபித்துக் கொள்ளாமல் அவர் சொன்ன ஒரே வார்த்தை 'நீயா பேசுகிறாய்? நீயல்ல, காலம் பேசுகிறது' (கரவொலி) என்று பதில் சொல்லி அவர்கள் அந்த மாநாட்டிலே என் கருத்து வேறுபட்டாலும்கூட அதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எவ்வளவோ கருத்து மாறுபாடுகளுக்கு இடையிலேயும் நடுநிலை வகிக்கின்ற ஒரு அரிய பண்பாடு அவர்களிடத்திலே உண்டு. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் சில தலைவர்கள் இந்த நாட்டுக்கு நன்மை என்ற காரணத்தால் தாங்கள்கொண்ட கொள்கைக்காகப் பிறருடைய கொள்கைகளையெல்லாம் தாக்கித் தகர்த்து பேசவேண்டிய அவசியத்திலே இருப்பதை நாடறியும்.

ஆனால், நீதிக் கட்சியைப் பொறுத்தவரையில் சில துறைகளில் அவர்கள் அழுத்தமான சில கருத்துக்களை இந்தநாட்டிலே உருவாக்கினாலும் கூட, சில துறைகளில் நடுநிலையாளர்களாக, அதுவும் குறிப்பாக சமயத்துறையைப் பொறுத்தவரையில் அது அவர்களுடைய தனிப்பட்ட உரிமை என்று கருதுகிற ஒரு கருத்தை மேற்கொண்டு தங்கள் சார்பு சமய கருத்துக்களை என்றைக்கும் போற்றி வந்திருக்கிறார்கள். அதே நீதிக்கட்சி தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட தந்தை பெரியார் அவர்கள் அந்தச் சமயத்துறை கருத்துக்களாலே ஏற்பட்ட வேறுபல விபரீதங்களைப் பார்த்து அதை அடியோடு எதிர்த்தார். அறிஞர் அண்ணா அவர்கள் தான் அந்தச் சமயத்துறை கருத்துக்களை எந்த அளவுக்கு சமுதாயச் சீர்திருத்தத்திற்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அதளவுக்கு பயன்படுத்த வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொண்டு 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்ற கோட்பாட்டை, மக்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை

எடுத்துச் சொல்லி அழுத்தமான சமயப்பற்று ஒரு சில தலைவர்களிடத்திலே இருக்கிற அதே நேரத்திலே சமயப்பற்றாலே ஏற்படுகிற கேடுகளை பெரியார் அவர்கள் எடுத்துச் சொல்லுகிற அதே நேரத்தில், அந்த சமயப்பற்றையும் சமுதாய வளர்ச்சிக்கு பயன்படுத்துகிற வகையிலே ஓரளவாக ஏற்றுக்கொண்டு வழிகாட்டிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்குரியதாகும். (கரவொலி) நம்முடைய தமிழவேள் அவர்கள், பெரியார் அவர்களை மிக கடுமையாக தாக்கிப் பேசுவதை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் பெரியார் அவர்களையும் மதித்து, பழகியவர்கள். அறிஞர் அண்ணா அவர்களை மிகப்பெரிய அளவுக்கு ஆதரித்து அவருடைய கருத்து வளரவேண்டுமென்று விரும்பியவர்கள். தன்னைப் பொறுத்தவரையில், ஆலயத் திருப்பணியில் தன்னை அனுதினமும் ஈடுபடுத்திக் கொண்டாலும் அடிக்கடி ஆலயத்திற்கு வராத எங்களைப் போன்றவர்களையும் வாழ்த்துவதற்கு அவர்கள் ஒரு நாளும் தவறியதில்லை, எனவே அந்த முறையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற கழக அரசு, தமிழக முதல்வர், தமிழகத்தினுடைய கல்வி அமைச்சர் நாவலர், முன்னணியிலே உள்ள நம்முடைய அமைச்சர்கள், கழகத் தலைவர்கள், அத்தனை பேரும் தமிழ்நாட்டிலே இன்றையதினம் முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிற ஒரு தனி செல்வாக்குக்கு ஒரு வகையிலே அடிக்கல் நாட்டியவர் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்கள் என்பதை மறப்பதும் இல்லை. (கரவொலி) உள்ளபடியே, எங்களுடைய தலைவர்களில் ஒருவர் என்று சொல்லிக் கொள்வதிலே நாங்கள் பெருமைப்பட தவறியதுமில்லை. அதேபோல் தமிழவேள் அவர்கள் நீதிக்கட்சியிலே தான் ஒருவன் மட்டும் இருந்தாலும் அதை நான் சொன்னால் பரமசிவம் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள், இரண்டுபேர் என்று சொல்லச் சொல்வார்கள் அப்படி ஒருவரோ இரண்டு பேரோ இருந்தாலும் எங்களுடைய கட்சியை ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக்கழக தலைவர்கள் பேரறிஞர் அண்ணாவைப் போற்றி அந்த வழியிலே இன்றைக்கு நடமாடுகின்ற அத்தனைபேரும் நீதிக் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கையை நாட்டிலே நிலைநாட்டுவார்கள் என்பதை பெருமையோடு ஒப்புக்கொள்கிறவர்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழவேள் அவர்களுக்கு அரசியலைவிட கட்சி மனப்பான்மையைவிட சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றில் நிலை நாட்டவேண்டுமென்பதில் அதிக விருப்பமுள்ளவர்.

சொல்லப்போனால், தமிழவேள் அவர்களுக்கு அரசியலைவிட கட்சி மனப்பான்மையைவிட சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றில் நிலை நாட்டவேண்டுமென்பதில் அதிக விருப்பமுள்ளவர்.

தமிழவேள் அவர்கள் அறிக்கை விட்டுத் தெரிவித்தார்கள். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியைவிட இன்றைக்குள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சட்டத்தை பாதுகாப்பதிலேயும், அமைதியை நிலை நாட்டுவதிலேயும் ஒரு (கரவொலி) இம்மியளவும் குறைந்துவிடவில்லை என்பதை எடுத்துச் சொல்லி, நீதியின் பக்கம் நிற்கிற ஒரு அரசுதான் இன்றைய அரசு; அதன் பக்கம்தான் நான் நிற்பேன் என்கின்ற அறிக்கையை வெளியிட்டார்.

எனவே தமிழவேள் அவர்கள் இன்றைக்கும் தன்னுடைய லட்சியம் நாட்டிலே நிறைவேறி

வருகின்றது என்பதிலே மிகப்பெரிய அளவுக்கு பெருமையும் பூரிப்பும் அடையலாம். வயது நிரம்பிய பெரியவர்களுக்கு ஏற்படக்கூடிய மகிழ்ச்சியெல்லாம் என்னுடைய வழியிலே என் பிள்ளை மிகச் சிறந்தவனாகவிளங்குகிறான்,என்னுடையகொள்கைஎன்னுடையலட்சியத்தைஎன்பேரன்வளர்க்கிறான் என்பதிலேதான். வயது நிறைந்த பெரியவர்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி ஏற்படும். அதைப்போல நீதிக் கட்சி எங்களைப் பொறுத்தவரையிலே எங்கள் தாத்தா கட்சி. திராவிடர் கழகம் எங்களுடைய தந்தை கட்சி. திராவிட முன்னேற்றக் கழகம் எங்களுடைய அண்ணன் கட்சி, இதற்கு பின்னாலே வருவதெல்லாம் உண்மையான தம்பிகள் கட்சியா என்பதை மக்கள் தெரிந்தவர்கள். (கரவொலி) ஆகவே, அப்படி தாத்தா கட்சியைச் சார்ந்த அதனுடைய தலைவராக இருக்கிற தமிழவேள் அவர்களை வாழ்த்துகிறபோது நாங்கள் மிகச் சிறியவர்கள் என்று உணருகிறோம்.அந்த தாத்தாவினுடைய பெருமை பேரனுக்கும் பயன்படுகிறது என்பதிலே பூரிப்பு அடைகிறோம். தாத்தா மிக நல்லவர் என்று சொல்லுகிறபோது பேரனும் நல்லவனாகத்தான் இருப்பான் என்பதை மக்கள் உணரவேண்டுமென்று விரும்புகிறோம். (கரவொலி) அப்படிப்பட்ட தமிழவேள் அவர்கள் எங்களுக்கெல்லாம் பெருமைக்குரிய சின்னமாக விளங்குகிறார்கள். அவர்களுடைய வழியிலே நாங்கள் வந்த காரணத்தாலேதான் பேரறிஞர் அண்ணாவை மதித்து பின்பற்றி அவர் வழியிலே நடைபோட்டபோதும் பெரியார் அவர்களை நாங்கள் மதித்தோம். தமிழவேள் அவர்களையும் செட்டிநாடு அரசர்போல நீதிக்கட்சியினுடைய நிலைபெற்ற தூண்களாக இருந்தவர்களையும் நாங்கள் மதித்தோம். அதைப்போல மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களையும் நாங்கள் மதிக்க அவர்களுக்கு தரவேண்டிய மதிப்பை தரவேண்டிய நேரத்திலே தரத்தவறியதில்லை. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்–ராஜாஜி அவர்களை மதிக்க வேண்டிய காலத்திலேயும் மதித்தோம். மாறுபட்ட காலத்திலேயும் கூட மதித்தோம், மாறுபட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராஜர் அவர்களையும் மதிப்போடுதான் இன்றைக்கும் நாங்கள் பேசுகிறோம். எனவே, யாராக இருந்தாலும் மதித்து அந்த நன்மதிப்பைச் சமுதாயத்திலே உருவாக்கி தமிழர் சமுதாயம் ஒரே குடும்பமாக உருவாவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலியன்ற தொண்டை, தன்னாலியன்ற அடிப்படைப் பணியை என்றைக்கும் நிறைவேற்றி வருகிறது என்பதைச் சொல்லி, அந்த வகையிலே நாங்கள் தமிழவேள் வழியைச் சேர்ந்தவர்கள் என்பதை மறுபடியும் நாங்கள் நினைவூட்டி. தமிழவேள் அவர்கள் உத்தமபாளையத்தினுடைய மிகப்பெரிய செல்வாக்குமிக்க குடும்பத்திலே பிறந்து, மதுரை மாவட்டத்தினுடைய பெருந்தலைவராகத் திகழ்ந்து நீதிக்கட்சியினுடைய செல்வாக்கைப் பெற்ற காலத்தில் தென்னகத்துக்கே ஒரு தலைவராக விளங்கி சர். பி. தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர் அவர்களுக்கு அடுத்தபடி அந்த இயக்கத்தினுடைய முன்னோடியாகத் திகழ்ந்து, அமைச்சராக விளங்கி, அறிஞர் பெருமகனாக வாழ்ந்து, இன்றைக்கு பண்புசால் தலைவராக நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குகிற அவர்கள் ஆயிரம் பிறை கண்டவர்கள் இன்னும் பல பிறை காணவேண்டும், பொதிகைமலை நிலைத்து நிற்பதைப்போல அவர் புகழ் என்றைக்கும் நிலைத்து நிற்கவேண்டும். வைகை ஆற்று மணலிலும் பன்னாள் அவர்கள் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்தி என் உறையை முடித்துக்கொள்கிறேன்.

வணக்கம்.

★ ★ ★

உள்ளத்தால் பொய்யா தொழுகின்

நாவலர் இரா.நெடுஞ்செழியன்



Education Minister V. R. Nedunchezhiyan and P. T. R. at the Conference of the Justice Party held on December 9, 1971 at the Children's Theatre, Madras.

விழாத் தலைமை தாங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே! செட்டிநாட்டு அரசர் அவர்களே! மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களே! மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நண்பர் என்.வி.நடராசன் அவர்களே!

பெருமதிப்பிற்கும்பேரன்பிற்கும்உரியதமிழ்வேள் பி.டி. ராஜன் அவர்களே! பாராட்டுரை வழங்க வந்துள்ள சிறியோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

"ஆயிரம் பிறை கண்ட அண்ணல்" என்று வாயார, மனதார வாழ்த்தி, வழுத்தி, உள்ளத்திலே இன்பப் பெருக்குக் கொள்ளத்தக்க அளவுக்கு இந்தப் பெருவிழாவினை ஏற்பாடு செய்து, தாங்கள் பெறுகிற மகிழ்ச்சியில் நாங்களும் பங்குபெற வேண்டுமென்று எண்ணி, அந்த வாய்ப்பினை மிக அன்போடு வழங்கியுள்ள விழாக் குழுவினருக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதிலே நான் பூரிப்பும் பெருமையும்

கொள்கிறேன். இந்த விழா மண்டபமே மகிழ்ச்சி கொள்ளத்தக்க அளவுக்கு தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களுடைய அருமைகளையும் பெருமைகளையும் அவர்களுடைய அறிவுச் சிறப்பினையும் ஆற்றல் சிறப்பினையும் பண்பாட்டுச் சிறப்பினையும் அவர்கள் வாழ்ந்து காட்டிய வரலாற்றினையும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த தன்மையினையும் எனக்கு முன்னால் பேசியவர்கள் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் திட்டமாகவும், நீங்கள் எல்லாம் அறிந்துகொள்கிற முறையிலும் புரிந்து கொள்கிற வகையிலும் மகிழத்தக்க முறையிலும் மிக அழகுபட எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒருவன் எவ்வளவு நாள் வாழ்ந்தான் என்பதல்ல முக்கியம்; எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம் (கரவொலி) ஆக; ஆண்டுக் கணக்கை வைத்து யாரையும் யாரும் பாராட்டி விடுவது இல்லை. ஆனால் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதுதான். வசைபட வாழ்ந்தார்களா அல்லது இசைபட வாழ்ந்தார்களா என்பதுதான் முக்கியம். (கரவொலி). ஆனால் உலகிலே வசைபட வாழ்பவர்கள் ஏராளம் இருக்கிறார்கள். ஆனால் வசை ஒழிய இசைபட வாழ்பவர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அந்த இசைபட வாழ்வதற்கேற்ற அளவுக்குச் சிறந்த பண்புகளுக்கு உறைவிடமாகத் தம்மை ஆளாக்கிக் கொண்டு மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவுக்கு தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் எந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் கடமையாற்றும்பொழுது எப்படி நெறி நின்று, நீதி வழுவாது, நேர்மை வழி நின்று, பிறருக்குத் தீங்கு எண்ணாது, நன்மை பயப்பதிலே நாட்டம் செலுத்தி, அவர்கள் பணிகள் பலவற்றையும் சிறப்புற ஆற்றி வெற்றிகண்டு திகழ்ந்தார்கள் என்பதையும் எனக்கு முன்னால் பேசியவர்கள் மிகத் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள்.

அந்த அளவிலே ஆயிரம் பிறை கண்ட அண்ணல் என்று பாராட்டத்தக்க அளவுக்கு அவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பெறத்தக்க அளவுக்குச் சிறந்த நிலைமைகளைப் பெற்றிருக்கிற பாங்கினை எடுத்துத் தெரிவித்தார்கள்.

அவர்கள்,

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது" என்றார்கள்.

ஆக, தான்கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் வழுவாமல், நழுவாமல், வீழாமல், நெளியாமல், அன்றிலிருந்து இன்றுவரைத் தான்கொண்ட கொள்கையை நிலைநாட்டுவதிலே அவர்கள் உறுதியாக நின்று வந்திருக்கிறார்கள் என்பதை மிகச் சிறப்பாக நாம் காணலாம். அப்படிச் சிறப்புக்குரிய பண்புகளுக்கு எல்லாம் உறைவிடமாக அவர்கள் விளங்குகிறார்கள் என்பதிலே நமக்கெல்லாம் பூரிப்பும் பெருமையும் உண்டு. அன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் சிலராவது ஒரு நாட்டில் வாழ்ந்தால்தான் அந்த நாட்டுக்கே பெருமை; ஊருக்கே பெருமை. அப்படி அன்று அவிந்து அடங்கிய கொள்கைச்சான்றோர் வரிசையில் மிகச் சிறந்த ஒருவராக காணத்தக்க அளவுக்கு இன்றைக்குத் தமிழவேள் பி. டி. ராஜன் அவர்கள் நம்மோடு இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்வதிலே நமக்கு பெருமை.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே

என்ற அளவுக்கு நாம் அவர்களுடைய அருமைகளையும் பெருமைகளையும் எடுத்துச் சொல்வதிலே பூரிப்பும் பெருமையும் கொள்கிறோம். எனக்கு முன்னால் பேசியவர்கள் அப்படிப்பட்ட கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். ஆக, எல்லோரும் வாழத்தான் செய்கிறார்கள். ஆனால் சிலருடைய இதயங்களிலே இடம் பெற்றவர்கள் எத்தனை

பேர் என்று பார்த்தால் உலகத்திலே மிக மிகச் சிலராகத்தான் இருக்க நாம் காண்கிறோம். ஒருவன் எதையும் பெற்றுவிடலாம். ஆனால் சிலருடைய இதயங்களிலே இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான ஒரு செயல் அல்ல. மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் எல்லாம் பெற்றுவிடலாம். ஒம்மை வரிசைகள் எல்லாம் கூடப் பெற்றுவிடலாம். தோட்டந்துறவுகள் எல்லாம் பெற்றுவிடலாம், ஆண்டியாக இருப்பவன் ஆறாண்டு காலத்தில் ஆறு அடுக்கு மாளிகைகளுக்குச் சொந்தக்காரனாகக் கூட ஆகிவிடலாம். குறுக்கு வழியிலேயும் ஆகிவிடலாம், நேர் வழியிலேயும் ஆகிவிடலாம் (கரவொலி) வெள்ளைச் சந்தையின் மூலமும் ஆகிவிடலாம், கள்ளச் சந்தையின் மூலமும்கூட ஆகிவிடலாம். ஆக, உருட்டல் மிரட்டல்களின் மூலமும் ஆகிவிடலாம், புரட்டலின் மூலமும்கூட ஆகிவிடலாம், எதிர் பாராத வகையிலும் ஆகிவிடலாம், எதிர்பார்த்தும் ஆகிவிடலாம். வஞ்சகம் புரிந்தும் ஆகிவிடலாம்; வழியைக் கண்டுபிடித்தும் ஆகிவிடலாம். ஆக, பட்டம் பதவிகளையும் பெற்றுவிடலாம். பணத்தைக் கொண்டே கூட பெற்று விடலாம். ஆக, எந்த வழியிலேயும் பெற்றுவிடலாம். சிபாரிசு பிடித்துக்கூட சில பல நலன்களைப் பெற்றுவிடலாம் (கரவொலி). ஆக, தயவைப் பெற்றுகூட பெற்றுவிடலாம். எதையும் ஒருவன் பெற்றுவிடலாம். அதற்கான வழி வகைகள் எல்லாம் இருக்கின்றன. அத்தனை சிலபேர் சாமர்த்தியக்காரர்கள் கூட உலக நாடுகளில் எல்லாம் இருக்க நாம் காண்கிறோம். ஆனால் சிலருடைய இதயங்களிலே ஏற்றுக்கொள் என்று ஒருவன் சொல்லி, அவ்வளவு எளிதாக யாரும் ஏற்றுக்கொண்டுவிட மாட்டார்கள். பிறருடைய இதயத்திலே இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான ஒரு செயல் அல்ல. ஒரு லட்சம் ரூபாயை ஒருவன் கையிலே கொடுத்து, உன்னுடைய இதயத்திலே என்னை வைத்துக்கொள், ஒரு லட்சம் ரூபாயை வாங்கிக்கொள் என்று சொன்னாலும், உதட்டளவிலே ஒரு லட்சம் ரூபாயை கொடுத்தவனை அவன் பாராட்டி, போற்றி மகிழ்வானே தவிர உள்ளத்திலே ஒரு லட்சம்தான் அந்த படுபாவி தரலாம் என்கிறான் (கரவொலி). இவன் அடித்திருக்கிற கொள்ளைக்கு ஒரு ஐந்து லட்சமாவது தரவேண்டாமா (கரவொலி) என்றுதான் ஒரு லட்சம் ரூபாயை வாங்கி கையிலே வைத்துக் கொண்டுகூட உதடு அவனை வாழ்த்துமே தவிர உள்ளம் இன்னும் அந்தப் படுபாவி ஒரு ஐந்து லட்சம் தருவதற்கு என்ன என்றுதான் கேட்பார்கள்.

ஆறு அடுக்கு மாளிகையிலே நிலாமுற்றத்திலே அம்சத்தூளிகா மஞ்சத்திலே படுத்துக்கொண்டு, கை பிடிக்க நாலு பேர், கால் பிடிக்க நாலு பேர் இருந்தாலும் இப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்திலேயாவது அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றா நீங்கள் கருதுகிறீர்கள்! அவர்களுடைய இதயங்களிலே கூட இடம் பெற்று தங்கள் வாழ்க்கையை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? அப்படி கை பிடிப்பவர்கள் கால் பிடிப்பவர்கள் கூட இவன் என்றைக்குச் சாவானோ, நமக்கு அந்த கைபிடிக்கிற வேலை என்றைக்கு நிற்குமோ என்று எண்ணிக்கொண்டு தான் பிடிப்பார்களே தவிர, ஊரிலே யார் யாருக்கோ என்னென்னமோ வருகிறது, இவனுக்கு எதுவும் வராமலே இருக்கிறது (கரவொலி) என்ற நினைப்போடுதான் பிடித்துக்கொண்டிருப்பார்களே தவிர, அவர்களுடைய இதயங்களிலே இவன் இடம் பிடித்துவிட்டான் என்று சொல்லமுடியாது. ஊரிலேகூட பெறமுடியாது. அடுத்தவீட்டுக்காரன், எதிர்த்த வீட்டுக்காரனுடைய உள்ளத்திலே கூட இடம்பெற முடியாதவர்கள் எல்லாம்கூட இருக்கிறார்கள். ஏன்! அண்ணனுடைய இதயத்தில் இடம்பெற முடியாத தம்பிமார்கள், தம்பிமார்களுடைய இதயங்களிலே இடம் பெற முடியாத அளவுக்கு இருக்கின்ற அண்ணன்மார்கள், தந்தையினுடைய இதயத்திலே இடம்பெற முடியாததனயன்மார்கள், தனயனுடைய இதயத்திலே இடம் பெற முடியாத தந்தைமார்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஏன்! மனைவியினுடைய இதயத்திலே இடம்

பெறமுடியாத கணவன்மார்கள் (குரவொலி), கணவனுடைய இதயத்திலே இடம் பெற முடியாத மனைவிமார்கள் (குரவொலி) எல்லாம்கூட இருக்கிறார்கள். ஆனால் இதெல்லாம் தாண்டி நாடு நகரங்கள் எல்லாம் தாண்டி, எல்லோருடைய இதயங்களிலும் இடம் பெறுகிற தன்மையை ஒருவன் பெறுவது என்று சொன்னால்,

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்

என்றார் வள்ளுவப் பெருந்தகையார், அப்படித் தமிழவேள் பி.டி. இராஜன் அவர்கள் உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய (குரவொலி) காரணத்தினால் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன் என்று வள்ளுவர் கூறிய இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாய் திகழ்ந்து எல்லோருடைய இதயங்களிலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். உலக வரலாற்றைப் பார்த்தாலும் கூட எல்லோருடைய இதயங்களிலும் கோடிக்கணக்கான இதயங்களிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இடம் பெற்றிருக்கிற வாய்ப்பையும் வன்மையையும் ஒருசிலர்தான் பெற்றிருக்கிறார்கள்.

அலெக்சாண்டரை உலகம் பாராட்டும் போற்றும். ஆனால் இதயத்திலே வைத்திருக்காது. நெப்போலியனுடைய வீரத்தை உலகம் பாராட்டும் போற்றும் அவருடைய வீரத்துக்கு ஈடு இணை ஐரோப்பாக் கண்டத்திலே கிடையாது. இந்த நூற்றாண்டிலேகூட கிடையாது. அவனை எதிர்த்தோர் யாரும் கிடையாது. வாட்டர்லூவே அவனை வென்றானா இல்லையா என்பது இன்னும் ஐயப்பாட்டிற்கு உரியதாக இருக்கிறது, என்றால் அவனுடைய வீரத்தை உலகம் பாராட்டி விட்டது. ஆனால் நெப்போலியனை யாரும் உள்ளத்திலே வைத்திருப்பதில்லை. ஐன்ஸ்டீன் கூட இந்த நூற்றாண்டிலே மிகப்பெரிய கணக்கியல் அறிஞன். இந்த அணு ஆராய்ச்சிக்கே அடிப்படையான கருத்தைக் கண்டுபிடித்த ஒரு சில அறிஞருள் அறிஞன் ஐன்ஸ்டீன். நோபிள் பரிசு பெற்ற ஐன்ஸ்டீன்; அவனை பாராட்டுவோம் போற்றுவோம், புகழ்வோம், ஆனால், ஐன்ஸ்டீனை உலக மக்கள் இதயத்திலே வைத்திருப்பதில்லை. சர்.சி.வி.ராமன் மிகச் சிறந்த விஞ்ஞானி பாராட்டுதற்குரியவர், போற்றுதற்குரியவர், வியத்தற்குரியவர். ஆனால் சர்.சி.வி.ராமனை இதயத்திலே வைத்திருக்க மாட்டார்கள். ஆனால் யாரை உலகம் இதயத்திலே வைத்திருக்கிறதென்றால், ஒரு புத்தரை, நபிகள் நாயகத்தை, இயேசுவை, வள்ளுவரை, அண்ணல் காந்தியடிகளை, இப்படிப் பட்டவர்களைத்தான் உலகம் இதயத்திலே வைத்திருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால் மனிதப் பண்புகளுக்கு யார் யார் மதிப்பு அளிக்கிறார்களோ, அவர்களைத்தான் இதயத்தில் உலகம் வைத்துக்கொள்ளுமே தவிர மனிதப் பண்புக்கு மதிப்பளித்து, தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறவர்கள் யார் யார் வரலாற்றில் உண்டோ, அவர்களைத்தான் உலகமானாலும் சரி, நாடானாலும் சரி, ஒரு சமுதாயமானாலும் சரி, ஒரு குறிப்பிட்ட குழு ஆனாலும் சரி, மனிதப் பண்புக்கு மதிப்பு அளிப்பவர்களைத்தான் இதயத்திலே வைத்துக் கொள்வார்கள். அப்படி மனிதப் பண்புக்கு மதிப்பு அளிக்கின்ற பாங்கு தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களிடத்திலே இருக்கிற காரணத்தினாலே (குரவொலி) தான் வேறுயாரும் பெறமுடியாத இடத்தை, பகையையும் நட்பாகக் கொண்டு ஒழுகும் பண்பு வேண்டுமென்றார் வள்ளுவர். அப்படிப் பகைவர்களை நட்பாகக் கொண்டிருந்த அத்தகைய சீரிய பண்புக்கு உறைவிடமாக விளங்கி, சிறந்த பணிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி எந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் அந்தப் பொறுப்பிலே இருந்து பணியாற்றுகின்றபோது எல்லோருடைய இதயத்திலும் இடம்பெற்ற அன்பையும், ஆதரவையும் பெற்று எல்லோராலும் பாராட்டத்தக்க போற்றத்தக்க அளவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பாங்குகளை மிகச் சிறப்பாக எடுத்து தெரிவித்தார்கள். தமிழ் வாழ,

தமிழர்கள் வாழ, தமிழ்நாடு வாழ, செய்யப்பட வேண்டியவைகளுக்கு தம்முடைய முழு மூச்சான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வாய்ப்புகள் ஏற்படும்பொழுதெல்லாம் தந்து உறுதுணையாக நின்றார்கள் என்ற வரலாற்றினை எனக்கு முன்பு பேசியவர்கள் மிகத்தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட வகைகளிலே சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர்களை வாழ்த்துவதிலும்; பாராட்டுவதிலும் உள்ளபடியே அவர்கள் நீண்டகாலம் வாழவேண்டுமென்று நாம் எண்ணுவதில் உள்ளபடியே பெருமைப்படுகிறோம். எனக்கு முன்னாள் பேசிய பேராசிரியர் அவர்கள் சொல்லியது போல், ஜனநாயகத்திலே கருத்து வேறுபாட்டுக்கு இடமளித்து மனிதனுக்கு மனிதன் மதிப்பு அளிப்பதுதான் ஜனநாயகத்திலே விரும்பப்படவேண்டிய ஒன்று.

காலஞ்சென்ற திரு.வி. கல்யாணசுந்தரனார் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். கருத்து வேறுபாட்டுக்கு இடமளித்து மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு, மனிதனுக்கு மனிதன் காட்டவேண்டிய மரியாதை, மனிதனுக்கு மனிதன் காட்டவேண்டிய அத்தகைய மதிப்பினைக் காட்டினால்தான் ஜனநாயகம் இருக்கும். ஜனநாயகத்திலே கருத்து வேறுபாட்டுக்கு இடமளிக்கவேண்டும். அதே சமயத்திலே. ஒருவரையொருவர் முறைத்தே காணவேண்டும். வெறுத்தே காணவேண்டும். அருவருத்தே காணவேண்டும் என்றல்ல, மதிக்க வேண்டும். ஆக, கருத்து வேறுபாடு கொண்டவர்களிடத்திலும் மதிப்பை நிலைநாட்டுகிற அளவுக்கு அந்த ஜனநாயக பண்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்ற வகையிலே தமிழ்வேள் பி.டி. ராஜன் அவர்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய பாங்குகளை நாம் காணுகிறோம். மதிப்பு தருவது என்பது ஒரு வழிப் பாதையல்ல, எல்லோரும் என்னை மதிக்கவேண்டும், நான் எவனையும் மதிக்கமாட்டேன்; ஆனால் எல்லோரும் என்னை மதிக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கிற எந்த அரசியல் தலைவனும் வாழ்ந்ததும் இல்லை, வளர்ந்ததும் இல்லை. (கரவொலி) ஆனால் நான் எல்லோரையும் மதிப்பேன், எல்லோரும் என்னை மதிப்பார்கள் என்ற நிலையிலே வளர்ந்தவர்களைத்தான் உலக வரலாற்றிலும் காணலாம். இந்த நாட்டு வரலாற்றிலேயும் நாம் காண்கிறோம்.

அந்த வரிசையில் ஏற்றதொரு சிறந்த தலைவராக தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள் மிகச் சிறப்புற்று மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, ஆடாமல், அசையாமல், அவசரப்படாமல் அதே சமயத்தில் ஆர்வம் குன்றாமல் தன்னுடைய பணிகளை ஆற்றுவதிலே எவ்வளவு சிறந்து விளங்கினார் என்பதை நண்பர்கள் எல்லாம் எடுத்து தெரிவித்தார்கள். அப்படிப்பட்டவர்களை பாராட்டுவதில் போற்றுவதில், நாமெல்லாம் பூரிப்பும், பெருமையும் கொள்ளுகிறோம். அப்படிப்பட்டவர்கள் 'உண்டாலம்ம இவ்வுலகம்." இந்த உலகம் இருக்கிறதே என்று சங்க கால புலவன் ஒருவன், புறநாநூற்று ஆசிரியன் வியந்தான். இந்த உலகம் ஏன் இருக்கிறது என்ற ஒரு வினாவை கேட்டான். 'உண்டாலம்ம இவ்வுலகம்' இந்த உலகம் இருக்கிறதே என்று 'அம்ம' என்ற வியப்புணர்ச்சியூட்டக்கூடிய சொல்லை பெய்து 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்றான். அவன் அதற்கு காரணம் சொன்னான். ஏன் இந்த உலகம் இருக்கிறது என்றான்.

தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென வாழுநன் உண்மை யானே

இந்த உலகம் இருக்கிறது. தனக்கு என்று வாழாமல் பிறர்க்கென்று வாழ்கின்ற பாங்கு பெற்றவர்கள் ஒரு சிலர் இருக்கிற காரணத்தினால் இந்த உலகம் இருக்கிறது (கரவொலி) என்று முடித்தான். அப்படி தமிழவேள் பி. டி. ராஜன் போன்ற ஒருசிலர் தனக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழுகின்ற அளவுக்கு தன்னுடைய பண்பாட்டை, தன்னுடைய நேரத்தை, நினைப்பை, உழைப்பை, அறிவை, ஆற்றலை, பொருளை அத்தனையும் பயன்படுத்துகிற

பாங்கு பெற்றிருக்கிற காரணத்தினால் இந்த உலகம் உய்கிறது. நாடும் உய்கிறது. மதுரை மாநகரும் பெருமை பெற்றுத் திகழ்கிறது. அந்த வகையிலே அவர்களுடைய வழி வந்தவர்கள். எனக்கு முன்னால் பேசிய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரியும், என்.வி. என் அவர்கள் குறிப்பிட்ட மாதிரியும் நீதிக் கட்சியினுடைய பரம்பரையிலே வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதிலே திராவிட முன்னேற்றக் கழகம் பூரிப்பும், பெருமையும் கொள்கிறது, என்பதை இங்கு எடுத்துச் சொன்னார்கள். அன்றைக்கு வகுத்த அத்தகைய சமுதாய நீதி இன்றைக்கும் மாற்றப்படவில்லை. அன்றைக்கு நீதிக் கட்சி வகுத்த சமுதாய நீதி இடையிலே காங்கிரஸ் வந்தாலும் மாற்றவில்லை என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்தச் சமுதாய நீதி வழங்கப்பட வேண்டுமென்பதாலே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16-ஆக இருந்ததை 18-ஆக ஆக்குகிற அளவுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 இடங்கள் ஒதுக்க வேண்டும் என்பதை 31 இடங்கள் ஒதுக்கவேண்டிய அளவுக்கு வலிவு பெற்று இருக்கிறதே தவிர ஆக, இந்தச் சமுதாயம் மீது ஆயிரம் ஆண்டு, காலமாக புறக்கணிக்கப்பட்ட அத்தகைய சமுதாயத்திற்கு கீழே தள்ளப்பட்டவர்களுக்கு கைகொடுத்துத் தூக்கிவிட்டார் போல் சமநிலைக்கு கொண்டுவருவதற்கு கைகொடுத்துத் தூக்குவதற்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் தந்தால்தான் கைகொடுப்பதாக ஆகுமென்ற கருத்துக்கு வலுவூட்டிய கட்சி நீதிக்கட்சி. அந்தக் கருத்துப் பாழ்படாமல், வீண் போகாமல் அதனுடைய பலன் நாட்டுக்கு கிடைக்கத்தக்க அளவுக்கு நல்லவர்களுக்கு கிடைக்கத்தக்க அளவுக்கு அறிவுடையார் ஆற்றலுடையார் வாய்ப்பு அளித்தால் எந்த தன்மையில் இருப்பவர்களும் வரமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கி அந்த வாய்ப்பை அளித்ததன் காரணமாக 'எக்குடிப் பிறப்பினும் பிறக்க' ஆனால் அறிவுடையவர்கள் வாய்ப்பு தந்தால், வசதி தந்தால், அதற்கான நிலைமைகள் ஏற்படுத்தினால் உருவாவார்கள் என்பதற்கு அந்த 25-30 ஆண்டுகால தமிழக அரசியல் வரலாறு சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையிலே நீதிக்கட்சியினுடைய வழி வந்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்று பாடுபட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொண்டு பி.டி. ஆர். அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்திட விரும்பி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

* * *

தலைசிறந்த கொறடா – பி.டி.ஆர்!

ஆசிரியர் கி.வீரமணி

தமிழவேள் பொன்னம்பலம் தியாகராசன் அவர்களைப்பற்றி இன்றைய தலைமுறை எந்த நிலையில் அறிந்திருக்கிறது என்பது ஒரு கேள்விக்குறியே! அவர் நீதிக்கட்சியை சார்ந்தவர், பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் பசுமரத்தாணி என்று அறிந்ததை விட அவர் ஒரு ஆன்மீகவாதி; பரம பக்தர் என்றளவில் தான் செய்தி பரப்பப்பட்டுள்ளது. செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் சுயமரியாதை இயக்கக் கொடியை ஏற்றி வைத்து அவர் உரையாற்றுகையில் குறிப்பிடும் கருத்துகளும், எடுத்து வைக்கும் விவாதங்களும் அவர் நெஞ்சில் கனிந்திருந்த உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியவை. 24.2.1929 நாளிட்ட குடி அரசு அவரின் உரையை வெளிப்படுத்தியுள்ளது.

நண்பர்காள்! இந்த ரம்மியமான கைங்கர்யத்தைத் தொடங்கு முன்னர், சுயமரியாதை இயக்கத்தின் சில முக்கிய அம்சங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த இயக்கம் மனிதனுக்கு மனிதன் வேற்றுமையையும் வகுப்புக்கு வகுப்புப் பிரிவினையையும் உண்டாக்குகின்ற ஒரு சமுதாயக் கட்டுப்பாட்டையும், பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பிக்கும் ஒரு கட்டுப்பாட்டையும் சமூகத்தில் பெரும்பாலோரை ஆடு, மாடுகளிலும் கேவலமாய் நடத்துவதற்கு ஏதுவான கட்டுப்பாட்டையும், கோயில்களுக்குள் அதைச் சேர்ந்தோரில் பெரும்பாலோர் பிரவேசிக்கக் கூடாது என்று தடுக்கிற கட்டுப்பாட்டையும், பெண்களை ஒதுக்கி அடிமைகள் போல் நடத்துவதற்கு இடம் கொடுக்கின்ற கட்டுப்பாட்டையும் மற்றும் இது போன்றதையும் ஒழிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

எல்லோருக்கும் சம உரிமை அளிப்பதும், இயற்கை விதிப்படியும் மனிதத் தன்மைப்படும்படியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவம் ஏற்படுத்துவதும் எல்லா மனிதரும் பூரண அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதும். மற்றும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், நாட்டில் மக்களுக்குள்ள உரிமைகளையும் எல்லாக் குடிமக்களும் உணரும்படி செய்வதும், எல்லோருக்குள்ளும் ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதுமே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். எனது வாலிப நண்பர்களே நீங்கள் வசிக்கும் இந்தக்காலம் அதி முக்கிய சம்பவங்கள் நடைபெறும் காலம் என்று உங்களுக்குச் சொல்கின்றேன். எனவே, நீங்கள் முன்வந்து வருங்கால சரித்திரம், சென்ற கால சரித்திரத்தைப் போலிராமல் வேறுவிதமாய் எழுதப்படத்தக்கதாக முயன்றுழைத்தல் வேண்டும் என்று சொல்லிக் கொடியை உயர்த்தினார்.

'குடி அரசு' 24.2.1929

பி.டி.ஆர். அவர்களின் சமத்துவ – சமூகச் சிந்தனைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

காந்தியாரை மகாத்மா என்று கூறுவது பற்றி பி.டி.ஆர் அவர்கள் கூறியுள்ள கருத்து அவர்களின் கருத்துச் செறிவுக்கும் நுண்மான் நுழைபுலத்திற்கும் ஒரு தனி எடுத்துக்காட்டு.
காந்திக்கு நான் மகாத்மா பட்டம் சூட்டாதது பற்றி தோழர் சத்தியமூர்த்தி குறை கூறுகிறார். காந்திக்கு நான் மகாத்மா பட்டம் சூட்டாததை வாக்காளர்கள் கவனித்து வரப்போகும் தேர்தலில் எனக்கும் பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவர் பூச்சாண்டி காட்டுகிறார். பூச்சாண்டி ஒரு புறம் இருக்கட்டும். காந்தியாரை மகாத்மா என்று அழைக்க எனக்கு ஆட்சேபணை கிடையாது: ஆனால் தோழர் சத்தியமூர்த்தி தன்னை மஹரிஷி என்று நாளை கூறிக்கொண்டால் என்ன செய்வது? எனவே உலக விவகாரங்களில் இந்தப் பட்டங்களை நாம் லட்சியம் செய்யக்கூடாது.

தம் சொந்த மனிதர்களை வானளாவப் புகழ்வதும், எதிரிகளைத் தூஷிப்பதும் எங்கள் கட்சி வழக்கமல்ல. பாமர மக்களைத் தட்டி எழுப்ப காந்தியார் எவ்வளவோ செய்திருக்கிறார் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அது சாமானிய காரியமுமல்ல. காந்தியின் நிலையிலுள்ள ஒருவருக்குக் காட்ட வேண்டிய மரியாதையை நானும், என் கட்சியாரும் காட்டியே வந்திருக்கின்றோம். மேலும் காட்டிக் கொண்டே இருப்போம்.

மகாத்மா, மகரிஷி போன்ற பட்டங்கள் மதச் சார்புடையவை. அரசியலில் மதத்தைப் புகுத்த நான் விரும்பவில்லை. மதத்தை அரசியலோடு கலவாமலிருக்க நாங்கள் எவ்வளவோ முயன்றும் பொது ஜனங்களை ஏமாற்றும் பொருட்டு அரசியலில் காங்கிரசார் மத உணர்ச்சியைப் புகுத்தி இருப்பதை நீங்கள் எல்லாம் அறிந்திருக்கிறீர்கள். அரசியல் காரணங்களுக்காக காங்கிரஸ்காரர்கள் மதத்தை உபயோகப்படுத்தி வருகிறார்கள். தேர்தல் காலங்களில் காந்தியார் படத்தை அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச் சென்று காந்திக்கு ஓட்டுக் கொடுக்கும்படி பொதுஜனங்களை ஏமாற்றி

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றிய ஆலோசனைக் குழுவின் செயலாளராக இருந்து அப்பல்கலைக்கழகம் உருவாவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தார்.

வருவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இம்மாதிரி மோசடிகளாலேயே சென்ற அசம்பிளித் தேர்தலிலும் சமீபத்தில் நடைபெற்ற ஸ்தல ஸ்தாபன தேர்தலிலும் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றார்கள்.

(வாடிப்பட்டியில் 12.7.1936-ல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டைத் திறந்து வைத்து அமைச்சர் பி.டி.ஆர். ஆற்றிய உரையிலிருந்து) இவ்வுரையில் பொதிந்து கிடக்கும் ஆழமான சிந்தனை அவரைப் பற்றிய மதிப்பீட்டை உயர்த்தக் கூடியது என்பதில் அய்யமில்லை.
1920 தேர்தலில் அடி எடுத்துவைத்த பி.டி.ஆர். அவர்கள் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவையிலும் இறுதியாக 1957-ல் தமிழக மேலவையிலும் உறுப்பினராகப் பணியாற்றியவர். அவரது சட்டப்பேரவைப் பணிகள் தனித்த ஒளிமுத்துக்கள் நீதிக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏவுநராக (கொறடாவாக) இருந்து அவர் ஆற்றிய பணியைப் பாராட்டாதவர்கள் இல்லை.

1930- நீதிக்கட்சி அமைச்சரவையில் இரண்டாவது அமைச்சராகவும் அதன்பின் பொப்பிலி அமைச்சரவையிலும் அதே தகுதியிலும் சிறப்பாகப் பணியாற்றினார். அவர் வகித்த துறைகளில் எல்லாம் முத்திரை பதித்தார். குறிப்பாக கூட்டுறவுத் துறை அவர் காலத்தில் புதிய பரிணாமத்தைப் பெற்றது என்றே கூறலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றிய ஆலோசனைக் குழுவின் செயலாளராக இருந்து அப்பல்கலைக்கழகம் உருவாவதற்குப்

பெரிதும் காரணமாக இருந்தார்.

இதன் காரணமாக இலட்சோப லட்ச பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் உருவாவதற்கு அடிஎடுத்துக் கொடுத்தார். என்பதை நன்றி உணர்வுடன் குறிப்பிட்டாக வேண்டும்.

இரண்டாவது உலகப்போர் மூண்டது. இந்திய நாட்டில் இருக்கக் கூடிய பார்ப்பனர்கள் பிரிட்டனுக்கு எதிராக இருந்தனர். ஜெர்மனி வெற்றி பெறும் என்று ஜெர்மன் மொழிகளைக் கூட படிக்க ஆரம்பித்தனர். ஹிட்லர் வெற்றி பெற்றால் அதன் விளைவு எவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்று தந்தை பெரியாரும் நீதிக்கட்சியினரும் கடுமையாக எதிர்த்தனர்.

போர்ப் பிரச்சார குழுவுக்குத் தலைமை வகிக்கும்படி பிரிட்டிஷ் அரசு பி.டி.ஆர் அவர்களைக் கேட்டுக் கொண்டது. அதன்படி அவர் சிறப்பாகப் பணியாற்றினார்.

போரில் நேசநாடுகள் வெற்றி பெற்ற நிலையில் பி.டி.ஆர். அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியை அளிக்க வெள்ளையர் அரசு முன்வந்தது. ஆனால் அந்தப் பெருந்தகை அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது–அவர் எப்படி உயரமானவரோ அதுபோல உள்ளத்திலும் உயர்ந்தவர் என்பதற்கான கலங்கரை விளக்கமாகும்.

அரசியல் வாழ்வும், பொதுவாழ்வும் பெருமைப்படத்தக்கதாக இல்லை என்கிற கருத்து உருவாகி இருக்கும் இக்காலகட்டத்தில், நீதிக்கட்சியின் சான்றோர்கள் நடந்து காட்டிய எடுத்துக்காட்டான–எடுப்பான தகைமை சான்ற போக்குகளை சான்றாண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

போரில் நேசநாடுகள் வெற்றி பெற்ற நிலையில் பி.டி.ஆர். அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியை அளிக்க வெள்ளையர் அரசு முன்வந்தது. ஆனால் அந்தப் பெருந்தகை அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. என்பது–அவர் எப்படி உயரமானவரோ அதுபோல உள்ளத்திலும் உயர்ந்தவர் என்பதற்கான கலங்கரை விளக்கமாகும்.

நீதிக்கட்சி காலத்தில் நடைபெற்ற சென்னை சட்டமன்ற நடவடிக்கைகளின் பண்பாட்டு நிலைகளையெல்லாம் புதிய தலைமுறைக்குக் கற்பிக்க வேண்டும். வெளிநாட்டுத் தூதுக் குழுவினர்கள் இந்தியாவிற்கு வந்தால், அவர்கள் நேரில் வந்து பார்க்கத் தவறாத ஒரு இடம் உண்டென்றால் அது நீதிக்கட்சி ஆட்சி நடத்திய சென்னை மாநில சட்டசபை நடவடிக்கையாகத் தான் இருந்திருக்கிறது.

அந்த பொற்கால வரலாற்றில் தமிழவேள் பொன்னம்பலம் தியாகராசனார் அவர்களின் பங்களிப்பும். பணியும் பெருமிதமாக இருந்திருக்கிறது.

வாழ்க பி.டி.ஆர். கொள்கைகளும்
கோட்பாடுகளும்
வளர்க அந்த பாரம்பரியம்.


★ ★ ★

‘சார்லி சாப்ளின் மீசை இப்போது இல்லை’

தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் 82 ஆம் பிறந்தநாள் விழாவில்
இராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் ஆற்றிய சிறப்புரை

பெருமதிப்புக்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே! மற்றும், அமைச்சர் பெருமக்களே! விழாவுக்கு வந்திருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே! முதற்கண் அனைவருக்கும் என் வணக்கம்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாபெரும் விழாவுக்குத் தலைமையேற்றிருக்கிறார்கள். தமிழக முதல்வராக இருப்பது மட்டுமே, இந்த விழாவுக்கு அவர் அழைக்கப்பட்டதற்கும் விழாவுக்குத் தலைமை வகிப்பதற்கும் காரணமல்ல.



Sir P.T. Rajan, Raja of Bobbli Raja Sir Muthayya Chettiar

மறைந்த தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்பொருமுறை ‘நான் நீதிக்கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவன்’ என்று பெருமையோடு கூறியிருக்கிறார்கள்.

இன்று அதே அறிஞர் அண்ணாவின் வாரிசாக இருந்து ஒரு இயக்கத்துக்கும் அரசுக்கும் தலைமையேற்று சிறப்புடன் அந்தப் பொறுப்பினை நிறைவேற்றிவருபவர் டாக்டர் கலைஞர் என்பது அனைவரும் அறிந்ததே!

இங்கிலாந்திலிருந்து திரும்பிய போது நடிகர் சார்லி சாப்ளின் மாதிரி ஒரு சின்ன மீசை வைத்திருந்தார். பின்னர் அதை எடுத்துவிட்டார்! அப்போது மீசை இருந்தது; இப்போது மீசை இல்லை. இதுதவிர, அவரின் கொள்கையில், இலட்சியத்தில், குறிக்கோளில், பொதுத்தொண்டில் எந்த மாற்றத்தையும் நான் மட்டுமல்ல, யாரும் காணமுடியாது.

ஆகவே, நீதிக்கட்சியின் பாரம்பரிய வழியில் வாழையடி வாழையாக வளர்ந்து வரும் பொறுப்புமிக்க தலைவர்களில் ஒருவராக டாக்டர் கலைஞர் அவர்களும் விளங்குகிறார் என்பதே இந்த விழாவுக்கு அவர் தலைமைதாங்க அழைக்கப்பட்டதும்; அவர் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதுமாகும்.

சர். பி.டி. ராஜன் அவர்கள் இங்கிலாந்தில் பாரிஸ்டர் படிப்பை முடித்துவிட்டுத் தாயகம் திரும்பிய 1920-ஆம் ஆண்டு முதல் தெரியும். அன்று போலவே இன்றும் சுறுசுறுப்பும் சலியாத பொதுத்தொண்டும் புரிந்து வருகிறார். அவரிடம் எந்த மாற்றத்தையும் என்னால் காணமுடியவில்லை, ஒன்றே ஒன்று தவிர!

இங்கிலாந்திலிருந்து திரும்பிய போது நடிகர் சார்லி சாப்ளின் மாதிரி ஒரு சின்ன மீசை வைத்திருந்தார். பின்னர் அதை எடுத்துவிட்டார்! அப்போது மீசை இருந்தது; இப்போது மீசை இல்லை. இதுதவிர, அவரின் கொள்கையில், இலட்சியத்தில், குறிக்கோளில், பொதுத்தொண்டில் எந்த மாற்றத்தையும் நான் மட்டுமல்ல, யாரும் காணமுடியாது.

ஜஸ்டிஸ் கட்சி இப்போது இல்லையென்கிறார்கள். இது தவறான கருத்தாகும். ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தான் இன்று பரவலாகப் பலகட்சிகளின் வடிவில் அரசியலில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய ஆளுங்கட்சிக்கும் இது பொருந்தும். எனவே, ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகள் இன்றைய அரசால் நிறைவேறி வருகிறது. எனவே, ஜஸ்டிஸ் கட்சிதான் கொள்கையளவில் பார்க்கும்போது இன்று எங்கும் விரிந்து பரவி இருக்கிறது என்று கூறவேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சியினரும் அதிலிருந்து பிரிந்துபோய்விட்ட பல கட்சிகளும் பிராமணர்களுக்கு விரோதமான கட்சிகள் என்று சிலர் கூறுகிறார்கள். இது தவறான கருத்தாகும். என்றைக்கும் அப்படி இருந்ததில்லை. சர். பி. தியாகராஜ செட்டியார், சர். பி. டி. ராஜன், என்னுடைய தந்தை இராஜா சர். அண்ணாமலை செட்டியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகிய அனைவருக்கும் எத்தனையோ பிராமணர்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள்- இருக்கிறார்கள்.

உண்மையாகச் சொல்லப்போனால் ஜஸ்டிஸ் கட்சியும். அதன் வழிவந்த கட்சிகளும் பிராமணர்களுக்குத் தீங்கு செய்யாத கட்சிகள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால், இன்று கலைஞர் ஆட்சியில் கூட கோட்டையிலே போய்ப்பார்த்தால் தெரியும், எந்த அளவுக்குப் பிராமணர்கள் இருக்கிறார்கள் என்பது! யார் ஆட்சியிலிருந்தாலும் தங்களுக்கு நன்மை செய்கிறார்கள் என்றால் அவர்களை ஆதரித்துப் போய்விடுகிறார்கள் அவர்கள். அந்தப் புத்திசாலித்தனத்தை நாம் பாராட்டவேண்டும். (சிரிப்பு)

அன்று நீதிக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணம், பிற்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் சமுதாயத்தில் மற்றவர்களுக்குச் சமமாகக் கல்வியிலும், உத்தியோகத் துறையிலும், தொழில்துறையிலும் மேம்பாடு அடையவேண்டும் என்ற நோக்கத்துக்காகத் தான். அந்த நோக்கம் இன்று பெரிய அளவில் நிறைவேறிவிட்டது. இன்று மிகவும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த பலர் டாக்டர்களாக, வக்கீல்களாக, எப்.ஆர்.இ.எஸ். ஆக மற்றும் பல்வேறு தரப்பட்ட உயர் அந்தஸ்தில் இருப்பதைக் காண்கிறோம். அன்று நீதிக்கட்சி தோற்றுவிக்கப்படாமலிருந்தால் இன்று பிற்பட்ட சமூகத்தினர் பெற்றிருக்கும் இத்தகைய முன்னேற்ற நிலைமை நிச்சயமாக ஏற்பட்டிருக்காது என்பது உண்மையாகும்.

நான் இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது 1968- ஆம் ஆண்டு

டிசம்பர் மாதம் என் அருமை நண்பரும் ஜஸ்டிஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான பரமசிவம் அவர்களின் பெருமுயற்சியாலும் தலைவர் பி. டி. ஆர். அவர்களின் ஒத்துழைப்பாலும் சென்னை பாலர் அரங்கத்தில் (பின்னர் கலைவாணர் அரங்கம் என மாற்றப்பட்டது) நீதிக்கட்சியின் பொன் விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

நண்பர் பரமசிவம் அவர்கள் அப்போது நீதிக்கட்சியின் வரலாற்றைத் தெளிவாகக் கூறுகின்ற முறையில் சிறப்பானதொரு மலர் தயாரித்திருந்தார்கள். நான் தான் அந்த விழாவுக்குத் தலைமை வகித்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் அந்த மலரை வெளியிட்டார்கள். அந்த மலரைப் படித்துப் பார்த்தால், வரலாறு தெரியாதவர்களும் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மையான வரலாற்றைச் சரியாக புரிந்துகொள்ளலாம். அந்த மலர் வெளியீட்டின்போது பேரறிஞர் அண்ணா அவர்களே, 'என் நண்பர் பரமசிவம் அவர்கள் இந்த மலரை மிகப்பெரும் முயற்சியெடுத்துத் தயாரித்திருக்கிறார். இது ஒரு அரிய வரலாற்றுப் பொக்கிஷம்' என்று பாராட்டிப் பேசினார்கள். அந்த விழாவில் தலைவர் பி. டி. ஆர். அவர்கள் தான் அரிய கருத்துகள் கொண்ட சிறந்த வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

அந்த விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியபோது; 'ஜஸ்டிஸ் கட்சி என்றால், பணக்காரர்கள் கட்சி, ஜமீன்தார்கள் கட்சி, மிட்டா––மிராசுதார்களின் கட்சி என்று கூறுகிறார்கள். அப்படியில்லை, அவர்களெல்லாம் எவ்வளவை இழந்தார்கள் என்பதை வரலாறு புரிந்தவர்கள் உணர்வார்கள். பிற்பட்டவர்களின் முன்னேற்றத்துக்கு தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்துக்கு உழைப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டஅந்தக்கட்சிக்காகஉழைத்ததால், அவர்கள் உள்ளதையும் இழந்தனர் என்பதே உண்மை,' என்று குறிப்பிட்டார்கள்.

இப்படியெல்லாம் நீதிக்கட்சி ஆரம்ப முதல் செயல்பட்டதாலும், சிறந்த கொள்கைகளை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழக மக்களுக்குத் தந்ததாலும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாகத்தான் இன்றைக்குச் சட்டமன்றத்திலும், ஆளும் பொறுப்பிலும் பெரும்பாலும், அன்று தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகமாகக் கருதப்பட்ட பிரிவினரிலிருந்தே அதிகமானவர்கள் பிரதிநிதித்துவம் பெற்று திகழ்கிறார்கள்.

நீதிக்கட்சியின் சிறப்புகளைக் கூறிக்கொண்டே போனால், அதிக நேரம் பிடிக்கும். அந்தக் கட்சியின் மகத்தான சிறப்புக்கும் தனித்தன்மைக்கும் ஒரு உதாரணம் கூறவிரும்புகிறேன்.

நீதிக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் எதையும் அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் கட்சியினாலும் மாற்றம் செய்யமுடியவில்லை. அப்படியே மாற்றமின்றிக் கடைப்பிடித்தார்கள். அதற்குப் பின்னரும் இன்றுவரை ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அனைவருமே நீதிக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை மாற்றாமல் கடைப்பிடித்தே வருகிறார்கள். இது ஒன்றே நீதிக்கட்சியின் சிகரமான சிறப்பு அம்சம் ஆகும்.

இத்தகைய பெருமைக்குரிய ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மிகவும் இளைஞராக இருந்தபோதிலும், அறிவாற்றலும் செயல் திறனும் கொண்டவராக இருந்த காரணத்தால் தலைவர் பி. டி. இராஜன் அவர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் சட்டமன்றக் கட்சித் தலைவராக (WHIP) இருந்தார். அதன் பின்னர் தொடர்ந்து பல ஆண்டுகள் அமைச்சராக இருந்தார்; அதற்குப் பிறகு இன்றுவரையில் தொடர்ந்து தனிப்பெரும் தலைவராக இருந்துவரும் பெருமை நமது தலைவர் தமிழவேள் சர். பி. டி. இராஜன் அவர்களுக்கே உண்டு.

மற்ற கட்சியை நடத்துபவர்களும் பி. டி. ஆர்.

அவர்கள் போல இருந்து சிறப்படைய அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறப்பான அம்சங்கள் ஏராளமாக உள்ளன. அதனால்தான் இதை நான் குறிப்பிட்டேன்.

அவர்களுக்கு எண்பத்து ஒரு ஆண்டு முடிந்து எண்பத்தி ரெண்டாவது ஆண்டு தொடங்குகிறது. அதற்காகத்தான் நண்பர் பரமசிவத்தின் தனிப்பெரும் முயற்சியால் இந்த மாபெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டு நடக்கிறது. அவர்கள் இன்னும் நூறாண்டு இருந்து வாழ்ந்து சிறப்படைய வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்; அதுவே அனைவருடைய விருப்பமாகும்.

தமிழ் நாட்டின் நடுநாயகமாக விளங்கும் ஒரே தலைவர் என்பதால் தான், தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் விழா நடத்தாமல் நடுநாயகமாக விளங்கும் மதுரை மாநகரில் நடக்கிறது.

நீதிக்கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்ற காரணத்தால் வைதீகர்கள் பலர், இன்றைய ஆளும் கட்சியான தி.மு.கவை கோவில்களை அழிக்கவேண்டும் என்ற கொள்கையுடைய கட்சி என்று தவறான பிரச்சாரம் செய்கிறார்கள்.

சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் கூடக் கோவிலுக்குப் போக வேண்டாம் என்றனவே தவிர, கோயில்களை அழிக்கச்சொல்லவில்லை. சரியாகச் சொல்வதென்றால், நீதிக்கட்சியின் ஆட்சியின் போதுதான் கோவில்களின் பாதுகாப்புக்கான நல்ல சட்டமே உருவாக்கப்பட்டது.

நீதிக்கட்சி ஆட்சியின்போது முதலமைச்சராக இருந்தவர்கள் அனைவரும் மிக முற்போக்கான சட்டங்களை உருவாக்கினார்கள். பனகல் அரசர் முதலமைச்சராக இருந்தார். அவர் போன்ற ஒரு தலைசிறந்த இராஜ தந்திரியைக் காண்பது அரிது. மிகப்பெரிய நிர்வாகத் திறமை படைத்தவர். அவர் இன்று இருந்திருந்தால் இந்தியாவுக்கே பிரதமராக ஆகியிருந்தால் கூட ஆச்சரியப்பட முடியாது.

அத்தகைய சீரிய இராஜ தந்திரிகளின் வழி வந்துள்ள இன்றைய ஆளும் கட்சியினர் மீது வைதீகர்கள் சிலர் இவ்வாறு அவதூறான கருத்துக்களை வெளியிடுவது சரியல்ல.

மிகப்பழுதடைந்த கோயில் தேர்களை ஏலத்தில் விடலாம் என்று ஒரு விதி இருந்தது; அதை ரத்துச் செய்து கோயில் தேர்களெல்லாம் பழைமையான நாகரிகத்தின் சின்னங்கள்.ஆகவே, அவற்றை அழிக்கக் கூடாது பழுதுபார்த்துப் பாதுகாக்கவேண்டும் என்ற விதியினைச் செய்ததே இன்றைய தி.மு.கழக அரசுதான். ஆகவே, வைதீகர்களின் தவறான பிரச்சாரத்தை யாரும் நம்பவேண்டியதில்லை.

இன்னும் தலைவர் பி. டி. ஆர். அவர்களைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். நான் ஏதோ தமிழில் உள்ள ஆர்வத்தினால் இவ்வளவு பேசினேனே தவிர, தமிழில் பெரிய புலமையுடையவனல்ல!

தமிழில் பெரிய புலமையுள்ள அமைச்சர் பெருமக்கள் பேராசிரியர் வந்திருக்கிறார்கள். அமைச்சர் என்.வி. என் வந்திருக்கிறார்கள். நாவலர் வந்திருக்கிறார். சுருக்கமாகவும் உருக்கமாகவும் பேசக்கூடிய டாக்டர் கலைஞர் இருக்கிறார்கள். மற்றும்பல பெரியார்கள் பேச இருக்கிறார்கள்.

அவர்களின் பேச்சைக் கேட்க வேண்டுமென்று உங்களைப் போலவே எனக்கும் ஆர்வம் மிக உண்டு. ஆகவே, தலைவர் பி. டி. இராஜன் அவர்கள் இன்னும் நூறாண்டு வாழவேண்டும் என்று மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

வணக்கம்!

✸ ✸ ✸

P.T.R. AT THE COUNCIL

C.D.Natarajan M.A.,B.L.

Saturday, the 8th day of January 1921, was a momentous and memorable day in the constitutional history of India in general and the then Madras Presidency in particular. The seed sown by the Indian Councils Act, of 1861 was quickened into life by the Act of 1909, popularly known as Minto-Morley Reforms and ripened into the Government of India Act of 1919, which embodied the Montagu - Chelmsford Reforms and heralded the introduction of Representative Government composed of elected representatives of the people. The council was a UniCameral Legislature. Subjects were classified as Central and provincial and Provincial subjects were further as classified "Transferred Subjects" administered by the Governor and his Ministers responsible to the Legislative Council and "Reserved Subjects" administered by the Governor and the Executive Council, the system of the Government being then known as Diarchy. The Governor could override both the Executive Council and the Ministers. Every law made by the Provincial Council required for its validity the assent of the Governor as well as the Governor-General.

The venue was the historic Legislative Council Chamber in Fort St. George and the time was 11 O'clock in the forenoon. The Members of the newly constituted Council were assembled to take the Oath of Allegiance. The occasion was both solemn and significant. Sir P. Rajagopalachariar, the first nominated President, was in the Chair and Thiru L. D. Swamikannu Pillai was at the Table, as the first Secretary. The Hon'ble Sir Lionel Davidson, the Hon'ble Mr. C. G. Todhunter, Mr. A. M. MacDoughall, Mr. A. Y. G. Campbell, C. I. E., were among the notable Englishmen present on the occasion. The Hon'ble Diwan Bahadur A. Subbarayalu Reddiyar, the Hon'ble Diwan Bahadur P. Ramarayannigar, the Raja of Panagal, the Hon'ble Rai Bahadur K. Venkata Reddi Naidu, Sir P. Thyagaraja Chetti, Mr. O. Thanikachalam Chettiar, Mr. T. A. Ramalingam Chettiar, Mr. R. K. Shanmukham Chettiar, Khan Bahadur Muhammad Usman Sahib, the Raja of Ramnad, Mr. S. Srinivasa Iyengar, Mr. C. P. Ramaswamy Iyer, Mr. W. P. A. Soundara Pandia Nadar, were among the distinguished Indian Members of the Council. In this brilliant galaxy of Parliamentarians Mr. P. T.

Rajan occupied a place of prominence in his own right.

The Oath of Allegiance to the Crown was administered in a solemn and impressive manner by the President and Mr. P. T. Rajan affirmed the Oath of Allegiance and took his seat for the first time in the Council.

The Council, re-assembled on Wednesday, the 12th January 1921, the scene was both magnificent and majestic, serene and solemn. His Excellency the Governor Lord Willingdon, extended a cordial and respectful welcome to His Royal Highness the Duke of Connaught. His Royal Highness inaugurated the New Legislative Council and expressed his fond and fervent hope that the deliberations and discussions of the Council would be a fruitful exercise in Parliamentary Government and would 'teach, guide and fit the Indians to govern themselves'. The occasion marked another significant landmark in the constitutional destiny of India in general and then the Madras Presidency in particular. The President conveyed to His Majesty, through the Royal Highness, the Council's sentiment of "profound loyalty and devotion to His August Thrown and Person." The newly constituted Council then elected Diwan Bahadur P. Kesava Pillai as Deputy President.

Since then and for a long period of 15 years till March 1936, Mr. P. T. Rajan played a significant role in the Legislative Council and made solid contributions to the deliberations and discussions. He was ushered into the Council 'ready booted and spurred'.

'The best that ever happened to me,' said H. G. Wells, 'was to be born.' Mr. P. T. Rajan could have well said 'the best that ever happened to me was to be a Member of the Council.'

Sir Ponnambala Thyagarajan, for such is his full name in the expanded form, sounds sweet and sonorous and the resonant cadence lingers long and weaves a charm round the name and personality of Mr. P. T. Rajan. A scion of an ancient and noble family, blessed with affluence, reputed alike for high traditions and generous hospitality, young Rajan went to England in 1909 and entered the Leys School of Cambridge. Later, he joined the Oxford University. With no aptitude for I.C.S., he took B.A. (Oxford) and Bar-at-Law and returned to India in 1919 to preside as a patrician in the ancestral house, namely, the Palayam House and to practise the virtue of true Tamil hospitality. Tall and stately, fair in complexion with a noble mien, the very picture and personification of affability and gentleness, young Mr. P. T. Rajan, started in right earnest his legal practice in Madurai and was ready to plunge into politics when the call came. India was on the threshold of great constitutional advancement. In those far off days, politics was not a profession, much less a gainful occupation, but a call to public service. Distinguished men of merit and independent means took to politics as part of public duty. Mr. P. T. Rajan could

not resist the call for long and his entry into politics was smooth and natural. As already stated, he was instantly elected to the Legislative Council constituted under the Montagu-Chelmsford Reforms.

Mr. P. T. Rajan was no orator, no spinner of words or phrases and yet he exercised his authority and exerted his influence in a calm and quiet manner. He was a leader in his own right. His pre-eminence in the Justice Party and his personal prestige invested him with authenticity. In the early days of his career in the Council, Mr. P. T. Rajan preferred to listen and learn and was slow to make speeches. His maiden speech was made on the 8th March 1922 when he participated in the discussion on the Budget. His speech was brief and precise, confined only to three points –Irrigation, Village Officers and Police and was marked by clarity of thought and lucidity of expression. He pleaded for grant of maniams to Village Officers wherever possible. On Irrigation, he observed that the demand of the Hon'ble the Revenue Minister for Rs. 60 lakhs was grossly inadequate and said that based on his own experience, his own district alone would require half the amount. He referred to the conditions in Cumbum Valley and the Periyar Delta and expressed hope that with adequate money dry lands could be converted into wet lands. Thus, even in those early days he had the vision and the passion to plead for more and more irrigation projects to usher in Green Revolution. As regards the Police, he pleaded for increase in the number of Head Constables and maintained that in the matter of investigation Head Constables could do as well as Sub-Inspectors.

His second speech was made on the Bill to provide for the re-organisation of the Madras University. He asked for a precise and clear definition of the term 'Residential University' and said that the habits and traditions of all colleges went to make up the University. He added that there was no University apart from the Colleges. He said that the University must not be a mere agency for examinations, but must become the real and true agency for dissemination of knowledge.

When the historic Madras Hindu Religious Endowments Bill, 1922, which raised a great controversy and led to heated discussions, came up for consideration in the Council, Mr. P. T. Rajan stood solidly behind his Leader and wholeheartedly supported the Bill in a forceful speech. Even then, he pleaded that all temple servants must be paid in cash and not in kind and as regards the diversion of surplus funds he said the same must be decided by the Charity Commissioners. Mr. P. T. Rajan, of and on, tabled Cut Motions on various Demands for Grants to focus attention on the acts of commission and omission on the part of the Government and in order to high-light the imperative necessity for welfare measures and beneficial projects. For instance, he moved a Cut Motion on Demand No. VII- Irrigation and Public Works- and deplored the inadequacy of the provision for repairs

of irrigation Works and wells as well as for the execution of new projects. In particular, he entered a strong plea for expeditious execution of Periyar Project as well as the imperative necessity for immediate relief to the famine stricken areas of Melur and Madurai taluks. He was especially interested in the welfare of the Kallars and whenever an opportunity occurred, he did not fail to put in a special plea on their behalf.

Mr. P. T. Rajan, of and on, tabled Cut Motions on various Demands for Grants to focus attention on the acts of commission and omission on the part of the Government and in order to high-light the imperative necessity for welfare measures and beneficial projects.

Mr. P. T. Rajan was quick to make use of the invaluable right of interpellation, though he tabled questions on subjects of his choice and interest. He was deeply interested in the Tamil Lexican and hence raised several questions on the terms of Reference as well as the time schedule for the completion of the Tamil Lexican. Likewise, he took great interest in the School for the Deaf and the Dumb and so he never let slip an opportunity to focus the attention of the Government by means of questions on the subject.

On the question of location of Women's Schools and Colleges. Mr. P. T. Rajan had his own definite views. He was of the opinion that the Women's College and Schools on the Marina must be removed to the campus of the Office of the Director of Public Instruction in Nungambakkam, not only for privacy, but also to promote inter-collegiate lectures between these Schools and Colleges and the Women's Christian College already located in the area. Indeed, he advanced the view that one College could impart instruction in arts, another could provide courses of study in sciences.

On March 24, 1926, he pleaded for the transfer of the control of all Taluk Headquarters Hospitals from the District or Taluk Boards to the Government.

When the Bill to re-enact the Madras Hindu Religious Endowment Bill, 1923 came up for consideration, he made a short but strong speech in support of the Bill and he challenged Mr. S. Satyamurthy, who opposed the Bill tooth and nail, to fight the next general election on the issue of the Bill.

Even as far back as March 14, 1927, when Mr. P. Anjaneyalu, moved a Resolution for the constitution of a separate Andhra Province, Mr. P. T. Rajan had the courage of his conviction to second the Resolution. He, however, said that the members of the Justice Party were neither for nor against a separate Andhra Province. Indeed, he said that individual members were free to vote in accordance with their conviction and added that he spoke on behalf of the Tamilian members, which however, made Mr. Satyamurthy to intervene and say, 'Tamilian Members of your Party and not ours.' Subsequent events proved Sir P. T. Rajan right.

After well-nigh 9 years of apprenticeship as a member Back-Bencher in the Council, the mantle of Ministership, rightly fell on the shoulders of
Mr. P.T. Rajan, when on October 27, 1930, he assumed office as Minister for Public Works, which office he held with very great and conspicuous distinction and merit till November 3, 1932 and again from November 5, 1932 to 1st April 1937. Besides Public Works, the portfolios of Agriculture, Co-operative Societies and Registration were allotted to him. In all these fields he left his mark and imprint by his deep knowledge of the subjects and devoted service. Whenever he moved the Demands for either Public Works or Agriculture or Co-operation of Registration, he was brief in his speech, but his speeches were ever marked by effective persuasiveness. Moderation in language was his hall-mark. During his tenure of office as Minister, he served well for the expansion and improvement of the Co-operative Movement. He was particularly interested in the Weavers Co-operatives and did his best for the same. He even promised to improve agriculture by co-operative methods. In one of his replies to the discussion on Demand No. V-Registration on March 16, 1931, he felicitously said that the points raised by the Hon'ble Members were very easy to reply which, however, invited the laughter of the Members. It was in the course of this reply that he categorically affirmed, in answer to criticisms, that appointments and promotions were governed by relevant orders and that his Party stood for equal justice and equal opportunities for all. When Mr. Yakub Hasan and Mr. Pocker Sahib claimed special representation for Muslims, he said that he was glad that his Hon'ble friends had come to recognise openly on the floor of the House the necessity for equal rights and equal opportunities for all communities in all departments. He added, 'that is the policy of the Justice Party; I am glad that he has openly on the floor of this House endorsed the policy and programmes of my party'. He proclaimed his confirmed faith and belief in the principles and programmes of the Justice Party and also demonstrated his strict adherence to the same. In a jocular vein, he said in answer to Mr. Pocker Sahib, wants to enjoy the fruits of the labours of the Justice Party; I may give the assurance that I am here to safeguard the interests of all communities'.

Later in March 1933, in the course of his reply to the discussion on Demand No. V-Registration, Mr. P. T. Rajan said '... Sir, it takes two people to start a quarrel. likewise it also requires two men to complete a transaction of corruption. If there is a man to receive, there must be a man to offer. In this connection it is more incumbent on the public to see that they do not put temptations in the way of officers and especially subordinate officers. If temptations are not offered I am sure corruption will not flourish. But in cases where extortion is made by officers, either high or low, and if it is brought to the notice of the Government, the Government will deal with the situation'. This clearly shows his analysis of the anatomy of corruption as

well as his readiness to punish corrupt officers with an iron hand. This was further, exemplified by his later speech in March 1935 when he said, with reference to the charge of prevalence of corruption mentioned by Mr. Koti Reddy, as follows:-

"What he and I have both in view is that corruption in whatever walk of life it may be found must be done away with. Otherwise, it will eat into the very vitals of our society and we shall be nowhere."

In February 1935, in the course of his reply to the General Discussion on the Budget, he disdained to descend to the level of personal vilification, despite propagations provided in the speeches of some Hon'ble Members and affirmed his firm resolve to maintain the dignity of the House. Thus, he administered a rebuke to the members and confined his reply only to the criticisms against the departments in his charge in general.

In March 1936, a year before the introduction of full-fledged provincial autonomy, he had the foresight to state, 'in provincial autonomy, the Ministers will be in sole and full charge of the departments of the Government and they can make adjustments here, there and anywhere. Now, we are not in a position to do so. I am, however, happy to state that the relationship of the Ministers with the members of the Reserved half has all along been cordial and as such we have not found it very hard to work a system inherently defective'. He thus admitted the defects and drawbacks inherent in the system of diarchy and at the same time affirmed that it had worked well and smooth. Here ended the first chapter in the Parliamentary career of Mr. P. T. Rajan. In the general elections which followed, the Justice Party suffered a dismal defeat and Mr. P. T. Rajan was no exception. Then ensued a long period of break in his parliamentary life. During this period however, he remained the staunch, though solitary, leader of the Justice Party. Never wavered in his allegiance and service to the Party even in the dark days when it was much maligned by its detractors. Even when Mr. Satyamurthy said that the Party was buried fathoms deep, Mr. P. T. Rajan had the courage to claim and proclaim that the party was very much alive and the day of resurrection was not far distant.

Later in 1952, Mr. P. T. Rajan was elected to the First Legislative Assembly under the Indian Constitution from the Cumbum Constituency, which constituted the commencement of another phase of his parliamentary career. As a valued and venerable member of the August Assembly, he was appointed Speaker Pro-Term the recognition and the signal honour were well merited. He took his Oath before His Excellency the Governor on May 5, 1952. In turn, he administered the Oath or Affirmation to the newly elected Members on May 6, 1952. He had the honour to conduct the election of the first Speaker of the first Assembly under the Constitution. In this election, he decided to exercise his franchise and marked the ballot paper

from the Chair, for, he said, 'As Speaker I cannot leave the Chair'. When on the announcement of the result of election that Mr. J. Sivashanmugam Pillai secured 206 votes as against 162 secured by his rival Mr. S. Swayamprakasam, some visitors in the gallery clapped their hands, Speaker Pro-Term., Mr. P. T. Rajan, in his stentorian voice said, "Order, Order, those who are present in the visitors gallery must not take part in the proceedings or clap their hands; I now declare that Mr. J. Sivashanmugam Pillai has been duly elected as Speaker'. Then he made a short and simple speech which was full of noble thoughts and fine sentiments, besides personal reminiscences of his past career as a Parliamentarian.

He said-

"Mr. Speaker, Sir, it was indeed a great privilege to me to have been asked to set the new House constituted under the New Constitution of India on its legs in its new habitation, Government Estate, Mount Road. It was also my rare privilege to have installed the Speaker duly elected by this House. I am thankful to His Excellency the Governor and his Government for the opportunity given and the courtesy shown me in this matter. During the last three days when I acted as a high priest and in the discharge of my duties connected with that office, the Hon. Members of the House have been very good in giving me their help and co-operation."

"Sir, after having been in exile for the proverbial period of fourteen years, I have re-entered this House. I find myself amongst strangers and in a new place. I look around and I can see only a few familiar faces, familiar in the sense that they have been connected with this Assembly proceedings."

"I recognise Mr. A. B. Shetty, Mr. Manickavelu Naicker and the Raja of Chettinad. Incidently, I am happy to see on the Treasury Bench, a Member who is a representative of the Sethupathi family. His father was a Member in the old Legislative Council."

"Sir, events here take me back to the year 1920 when I became a Legislator for the first time. People from different walks of life of this Presidency came to the Council. They were best and able men. I found myself, Sir, youngster though I was, in a very cordial, homely atmosphere, If I could compare the Legislature of that day with anything, I could compare it to use an English expression to a Club. It was an ideal joint family. Cordiality, friendship and good cheer prevailed throughout. The patriachal head of that family was the late lamented
Sir P. Rajagopalachari.

"Sir, when I occupied the Chair during the last three days, I was a little bit nervous because I was occupying the Chair which had been consecrated by him. He had a great sense of humour. He could transfer a lively House into a very serious one and a dull House into a lively one."

"Youngsters must be encouraged. Thanks to him, Sir, a number of young men have made their mark, not only in this Assembly and the other Assemblies in this Country, but also throughout the world. The Speaker has got a dual role. He has got to assist the Government and make its Legislative work easy, efficient and smooth. His other role is as the custodian of the rights and privileges of the House and to protect it."

During this period of his Membership of the Legislative Assembly from 1952 to 1957, Sir P.T. Rajan remained mild and mellowed; but on many an occasion he had the misfortune to cross swords with the then Leader of the House,
Mr. C. Subramaniam, not of course on his volution. But he never for once indulged in any personal or vituperative remark. He was always high minded and his thoughts were couched in courteous language. Indeed on occasions he was deeply emotional, the words came straight from his heart. He never wounded anyone's feelings or gave any cause for offence, though, he was himself the victim at times of vituperative attacks. While he spoke on the motion of Vote of Confidence in the Ministry headed by Mr. C. Rajagopalari, he said, "I am the solitary representative of the Justice Party having no flock.....I have never sat on the fence during my political career; I am not likely to sit on the fence at the fag end. I propose to give my general support to the Hon. C. Rajagopalachari, Chief Minister. The Ministry must command the confidence of the House, the confidence of the people...and the confidence of Services....., my vote means that Mr. Rajagopalachari is best fitted to be the Chief Minister in the present difficult circumstances. This does not mean that we approve the whole of his policy or programme..." This is a clear index of his robust independence both in thought and action.

In the course of his speech on the Budget for 1952/53, he had a word of advise to the then Chief Minister. He said that the Chief Minister should not be a glorified Secretary. He added, 'he should direct and not write notes and minutes himself. He must guide his colleagues in his Cabinet". Later in 1953, in the course of his speech on the Budget he pleaded for Vaigai River Scheme and provision of protected water supply to Cumbum, Uthamapalayam, Chinnamanur and Gudalur , which only shows that even Sir P. T. Rajan was not free from parochialism and seized every opportunity to plead for some project or other in his own constituency.

Sir P. T. Rajan had a high sense of humour. This is evident from his speech on the Budget for 1954-55, when he said, "the Budget is verily a feast of tongues. I have heard Budget speeches for the last 20 years. There can be nothing novel, especially when you take away money from the people: the deeper the Finance Minister puts his hands into the pockets of others, the greater will be the feeling against the Minister."

In March 1956, in the course of the discussion on the State Re-organisa-

tion Bill, Mr. P. T. Rajan, was needless by the target of many personal attacks. The Leader of the House in particular referred to his past activities in derisive terms and ridiculed him for his role during the Second World War. But Sir P. T. Rajan, did not believe in tit for tat. He was calm, cool and well composed never, perturbed. He politely, but firmly, replied as follows. "Myself and my party have been accustomed to vile and violent epithets because we stood for constitutional Government. First I was annoyed, later on I looked at these with a certain amount of amusement". He went on to say that as a reward to his services in the War effort, he had the Madras Regiment revived through the good offices of the then Governor, which covered itself with glory not only in the war but also later during the disturbances in Delhi on the wake of Partition as well as in Kashmir. He continued, " when we asked for Tamil State we realise that there is something sacred about it. The Tamils feel that they have a past of which they are proud. They want to revive the glory of their forefathers. That is why they want this area to be called Tamilnadu". Thus, even then, Sir P. T. Rajan advanced a forceful and fervent plea for Tamil Nadu. It must be mentioned in this connection that he advocated the inclusion of Devikulam and Peermade in the residuary State of Madras. When Mr. C. Subramaniam quipped that he should be ashamed of the part played by him in the past, he readily retorted, "I am not here by nomination". And when, Mr C. Subramaniam went on to state, "in any other country and set up, the Hon. gentleman would have been completely liquidated," Sir P. T. Rajan ignored this with studied and supreme silence. He did not even say, as was his habit, "God forbid ".

After a five-year term in the Legislative Assembly, Sir P. T. Rajan again became a Member of the Legislative Council in 1958. When Dr P.V. Cherian, the then Chairman, called on Sir P.T. Rajan to make his maiden speech', some Members remarked, 'old maiden'. Sir P. T. Rajan, true to his innate modesty said, '...I should have thought, as befits a new-comer to this House, that I should keep silent and learn things before I venture to open my mouth. But I cannot disobey you, Mr. Chairman, when you have asked me to speak." In the course of his "maiden speech," Sir P. T. Rajan, once again referred to his being a sol-

"I am the solitary representative of the Justice Party having no flock.....I have never sat on the fence during my political career; I am not likely to sit on the fence at the fag end. I propose to give my general support to the Hon. C. Rajagopalachari, Chief Minister. The Ministry must command the confidence of the House, the confidence of the people... and the confidence of Services....., my vote means that Mr. Rajagopalachari is best fitted to be the Chief Minister in the present difficult circumstances. This does not mean that we approve the whole of his policy or programme..."

itary member of the Justice Party and admitted that it had ceased to exist except for himself. He, however, affirmed that its fundamental principles of eternal value still remained and added that they did not require an organisation, nor numbers. He concluded, "such principles depend on the quality and not on numbers."

In October 1961, Sir P. T. Rajan made a memorable speech on the Madras Land Reforms (Fixation of Ceiling) Bill. He spoke with sincerity and emotion. He said "My Hon. and learned friend Sri Balasubramania Iyer had stated that his speech was his Swan Song. Generally, Mr. Chairman, one attends somebody else's funeral; myself and others who are similarly situated have come to attend our own funeral. This legislation has signed and sealed our fate with no chance of resurrection. I am not bothered about the individual. After all, our philosophy teaches us that when we come into this world, we come with nothing, and when we get back we take nothing." In December 1961, he participated in the Valedictory Address in a very reminiscent mood. He paid rich compliments to those Members who were to retire. He recalled to his mind his first entry into the Council in 1921 "as a young man, fresh man from England" and traced his career as a Parliamentarian. As regards the Leader of the House. Thiru R. Venkataraman, he said that he had persuasive eloquence which at once disarmed the Opposition. He complimented him for his consideration and courtesy to the Members and said that the term 'pink of courtesy' aptly applied to him. In regard to the Leader of the Opposition. Dr. A. L. Mudaliar, he said "he is an eminent Doctor and he is also an eminent educationist, a rare combination" On this occasion, he rose to his full stature as a free gentleman with malice to none and goodwill to all. Of the Finance Minister, Sri. C. Subramaniam, he said "his career is a fit subject of study in politics. Always present in the House, he worked hard with a strong sense of devotion to duty. As a speaker he was most effective and lucid. He has graduated in the school of Experience. His foreign tour has broadened his outlook." Such was the nobility of Sir P. T. Rajan, that he was generous and magnanimous even to his political opponents.

Sir P. T. Rajan, if at times, was mauled and wounded in the Council or Assembly, a lion he remained till the end. He had always in him an innate modesty that held people in deep affection and great regard. As Balfour said of Harcourt, it can well be said of Sir P. T. Rajan that,whether he spoke or was silent, no one could forget for a moment that he was present in the Council." His mind was seldom swayed by primeval emotions. Nobody had more sincerely struggled to reconcile conservative instincts to radical necessities or had his way through the rough-and-tumble of the times with an equal joy of battle or a ready sense of enjoyment of life. Every thing came to him easily as to Rosebery-honours, praises and positions. His fame does not and will not depend upon any particular achievement only;

it depends rather upon the whole genality and personality of the man. Dr. Johnson insisted that he was 'a young fellow; Sir P. T. Rajan can well say that he is eighty two years young. No one can ever forget the benign and benevolent Patriarch,
Sir P. T. Rajan, who spontaneously accos any and every friend with the familiar words "hallo, Sir, how do you do." May his tribe increase for the good and benefit of mankind.

* * *

சட்டமன்றத்தில் ராசன்



Sir P.T. Rajan
First Minister
4-4-1936 to 24-8-1936

ராசன் தமக்கு உண்மை என்று தோன்றுமானால் அதை ஆதரிக்கவும் அதற்காகப் போராடவும் தயங்குவதில்லை. சட்டமன்றத்திலும், மேலவையிலும், உறுப்பினராக இருந்த காலங்களில், அவர் ஒருவர் மட்டுமே நீதிக்கட்சி உறுப்பினராக இருந்தபோதும், நிலையில் திரியாது. அடங்கிய தோற்றத்துடன், செம்மாந்து நின்றார்; மாற்றார் மனங்களையும் வென்றார். அவரிடம் மாற்றுக் கட்சியினர் கொண்டிருந்த மதிப்பு, இதனால் மேலும் மேலும் ஓங்கியதே தவிர, ஒரு நாளும் குன்றவில்லை. அடிக்கடி கட்சி மாறிகளாகிச் சில பதவிகளைப் பெற்றுச் சில காலம் ஒளிவிட்டுப் பிரகாசித்த பலர், பின்னாளில் இருக்குமிடம் தெரியாமல் மங்கிப் போயினர். இவர் எந்த நிலையிலும் கட்சி மாறாத பெரும் சிறப்பினைப் பெற்றிருந்தார்.

1968 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 30 ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நீதிக்கட்சிப் பொன்விழாவில் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் தேர்ச்சியுடன் நாட்டைச் சிறப்பாக ஆண்ட நீதிக்கட்சியின் பாரம்பரியத்தில் வளர்ந்த கட்சி', என்று புகழ்ந்தபோது ராசன் மனம் மகிழ்ந்தார். நல்லொழுக்கத்திற்கும், நன்னடத்தைக்கும் முதலிடம் ஈந்து, பொதுத்தொண்டு ஆற்றுபவர்களுள் தலைசிறந்து விளங்கியவர், நமது தலைவர் தமிழவேளாகத்தான் இருக்கமுடியும், என்பதை எவரும் மறுக்க முடியாது.

நீதிக்கட்சியில் அடியெடுத்து வைத்த ராசன், அரசியலில் எத்தனையோ புயல்கள் வீசியபோதும், பூகம்பங்கள் ஏற்பட்டபோதும், பலர் அடிக்கடி கட்சி மாறிய போதும், அரசியல் காட்சிகள் அவ்வப்போது மாறியபோதும், அவர் மட்டும் இம்மியும் மனம் மாறாமலும் கருத்துக் குழப்பங்களுக்கு ஆளாகாமலும் நீதிக்கட்சியிலேயே நீடித்து நிலைத்து நின்று தொண்டாற்றிய தன்னிகரில்லாத தலைவர் ஆவார்!

ராசன் என்று மரியாதையுடன் வழங்கப்பட்ட பொன்னம்பலத் தியாகராசன் பழம்பெருமை

வாய்ந்த, செல்வவளம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். பார்-அட்லா பட்டம் பெற்ற அவர், தம் உள்ளத்தில் உயர்ந்து நின்றது போன்றே தோற்றத்திலும் உயர்ந்து நின்றார். அவரைப் பார்க்கும்போதே அவர் பெருந்தன்மையும் அடக்கமும் பொறுமையும் கொண்டவர் என்பதை யாவரும் உணர்வர்.

இங்கிலாந்திலிருந்து மதுரை வந்ததும் வழக்கறிஞர் பணியைத் தொடங்கினார். நீதிக்கட்சியில் சேர்ந்தார். அக்காலத்தில் அரசியல் ஒரு தொண்டாக இருந்தது. இன்று போல் அன்று அது ஒரு லாபகரமான தொழிலாக இல்லை. மக்களுக்குத் தொண்டாற்ற விழைந்த தூயவர்களே, அரசியலில் பங்கு கொண்டனர். உயர்ந்த பண்பாளர்களும், சிறந்த அறிஞர்களும், நிறைந்த வருவாய் உடையவர்களும் அந்நாளில் அரசியலில் ஈடுபட்டுத் தொண்டாற்றினார். வளமார்ந்த தொன்மைச் சிறப்புமிக்க பாளையம் குடும்பத்தில் பிறந்த ராசன் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சொல்லாற்றல் மிக்கவர். ஆனால் சொற்சிலம்பம் விளையாடுபவர் அல்லர். அமைதியாகத் தம் கருத்துகளைத் தெளிவாக நிரல்பட வகுத்தும், தொகுத்தும் வழங்கும் வல்லமை பெற்றவர். தலைவராவதற்கான அனைத்துத் தகுதிகளும் இயல்பாகவே அமையப்பெற்றிருந்தமையால் சட்டமன்றக் 'கொறடா' ஆனார். தொடக்கக் காலத்திலேயே எதையும் கூர்ந்து கேட்பவராகவும், ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் மிகுந்தவராகவும் விளங்கினார்.

1922 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் நாள் சட்டமன்றத்தில் அவர் தம் கன்னிப்பேச்சை நிகழ்த்தினார். அது கன்னிப்பேச்சாயினும், அவையிலிருந்த அனைவரும் அதனை உன்னிப்போடு கேட்டனர். ஏனெனில் அவர் பேச்சில் தெளிவு இருந்தது. ஒழுங்கு இருந்தது கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும் அமைந்திருந்தது.

அந்தக் காலத்திலேயே நாட்டில் பசுமைப் புரட்சி வரவேண்டுமென்றும் அதற்கேற்பப் பாசனத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்றும் அவர் தமது பேச்சில் வலியுறுத்தினார். காவல் துறையில் தலைமைக் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று தெளிவுபடுத்தினார்.
அவர் தமது இரண்டாவது சொற்பொழிவில் சென்னைப் பல்கலைக்கழகத்தைத் திருத்தி அமைக்க வேண்டியதன் இன்றியமையாமை குறித்துக் கூறினார். பல்கலைக்கழகம் வெறும் தேர்வு நடத்தும் கூடமாக மட்டும் இருக்கக் கூடாது; 'கேடில் விழுச்செல்வ' மாகிய கல்வியை வாரி வழங்கும் கருவூலமாகவும் செயற்பட வேண்டும் என்றார்.

1922 இல் கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையே இந்து அறநிலையச் சட்டம் நிறைவேறுவதற்கு அரும்பாடுபட்டார். கோயிலில் பணி செய்பவர்களுக்கு ஊதியத்தைப் பணமாகக் கொடுக்க வேண்டும்; பொருளாகக் கொடுக்கக் கூடாது என்றார். மேலூர், மதுரை வட்டங்களில் வானம் பார்த்த பூமி மிகுந்திருந்தது. அவை நீர்வளம் பெற்று, நில வளம் மிகுந்து வளங்கொழிக்கும் வயல்களாக மாறுவதற்கு, உடனே 'பெரியாறு' திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தினார்.

கள்ளர் சமூகத்தை முன்னேற்ற வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தி வந்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் 'அகரமுதலி' (லெக்சிகன்) ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்றும், குறிப்பிட்ட கால அளவிற்குள் இதனை முடிக்க வேண்டுமென்றும் பயனுள்ள ஆலோசனைகள் வழங்கினார். காது கேளாதோர், வாய் பேசாதோர், பார்வையற்றோர் பள்ளிகள் ஏற்படுத்துவதில் அவர் பேரார்வம் காட்டினார். மகளிர் பள்ளிகள், கல்லூரிகள், கலைப் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள் ஆகியவை ஏற்பட அரும்பாடுபட்டார்.
1926 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம்

நாள் தாலுக்காக்களில் இயங்கி வந்த மருத்துவமனைகள் மாவட்டங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால், சரிவர இயங்கவில்லை என்பதை அறிந்த ராசன், நன்கு சிந்தித்துத் திட்டமிட்டு அவற்றை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆவன செய்தார். 1923 ஆம் ஆண்டு இந்து அறநிலைய மசோதாவின் இன்றியமையாமையைச் சட்டமன்றத்தில் வலியுறுத்திக் கூறினார். திரு. சத்தியமூர்த்தி இதனைக் காரசாரமாக எதிர்த்தார். இருப்பினும், மசோதா கொண்டு வரப்பட்டுப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேறியது.

1927 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் நாள் தனிப்பட்ட ஆந்திர மாநிலம் வேண்டுமெனத் திரு. ஆஞ்சநேயலு தீர்மானம் கொண்டுவந்தார். இதனை ராசன் துணிவுடன் வழிமொழிந்தார். அப்போது அவர் 'ஆந்திர மாநிலத்தைப் பிரிக்க விரும்புவது தனிப்பட்ட உறுப்பினர் கொள்கை. இதை உறுப்பினர்கள் ஆதரித்தோ, எதிர்த்தோ அவரவர் விருப்பத்தின்படி வாக்களிக்கலாம். யார்மீதும் எப்போதும் எதையும் நீதிக்கட்சி திணிக்காது' என்றார். ஆனால் சத்தியமூர்த்தியின் தலைமையிலிருந்த காங்கிரஸ் கட்சியானது, தீர்மானத்தை எதிர்த்தது. பிற்கால நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கும்போது, அன்று ராசன் கொண்டிருந்த கருத்து சரியானது என்று தெளிவாகிறது.

ஏறத்தாழ ஒன்பதாண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகவும், கட்சியின் கொறடாவாகவும் பாங்காய்ப் பணிபுரிந்த ராசன் 1930 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் நாள் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவி ஏற்றார். 1932 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் நாள் வரை பொதுப்பணித்துறை அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றிய அவர், அத்துறையோடு வேளாண்மை, கூட்டுறவு, பத்திரப்பதிவு ஆகியவற்றின் அமைச்சராகவும் ஆனார்.

அவர் தம்மால் இயன்ற அளவு, மக்களின் துன்பதுயரங்களை அறிந்து, அவற்றை மாற்ற வழிவகை செய்து, திறம்படச் செயலாற்றித் தாம் மேற்கொண்ட முயற்சி ஒவ்வொன்றிலும் தம் முத்திரையைப் பதித்தார். தமது துறை பற்றிப் பேசும்போது இரத்தினச் சுருக்கமாய்ப் பேசுவார். அனைவரும் ஏற்கும் வகையில் அவர் பேச்சு அமைந்திருக்கும்.

பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சிலசொல்லல் தேற்றா தவர்

என்றார் செந்நாப்போதார். அதன்படி பல சொல் சொல்ல விரும்பாமல், சில சொற்களில் கருத்தை விளக்குவது அவரது தனிச் சிறப்பாகும். அவர் கூட்டுறவு அமைச்சராக இருந்த போது, கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு முனைந்து பாடுபட்டார்.

நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் அவர் காட்டிய பேரார்வம் போற்றுதற்குரியதாகும். பிறப்பிலேயே வேளாளரான அவர், வேளாண்மையிலும் கூட்டுறவுமுறையைப்புகுத்திப்பற்பலவகைகளில் செயல்பட வழி வகுத்தார். அரசின் பதவி நியமனங்கள், பதவி உயர்வுகள் ஆகியவற்றில் நீதியும், நேர்மையும் கடைப்பிடிக்கப்பட்டன. எல்லா இனத்தவர்க்கும் சமத்துவ வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், எதிர்க் கட்சியினர் வழக்கம்போல் குற்றச்சாட்டுகளைக் கூறினர். அவற்றில் உண்மை இல்லை என்பதை ராசன் புள்ளிவிவரங்களுடன் தெளிவுபடுத்தினார். யாகூப்ஹாசன் என்பவரும், போக்கஸ் சாய்பு என்பவரும் இஸ்லாமிய இனத்திற்கு அரசுப்பணிகளில் உரிய இடம் வழங்க வேண்டுமென்று கேட்டனர். அதைக் கேட்ட ராசன் 'என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர்கள், எல்லாத் துறையிலும் பணிபுரிவோர்களுக்குச் சமத்துவ வாய்ப்புக் கிடைக்க வேண்டுவதன் அவசியத்தைச் சட்டமன்றத்தில் கூறுவது கேட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்' என்றார். பிறகு அவர்களைப் பார்த்து 'இது தான் நீதிக்கட்சியின் கொள்கை, இது தான் நீதிக்கட்சியின் திட்டம்.

அனைவர்க்கும் அனைத்திலும் சமத்துவமும் சமபங்கும் நாங்கள் வழங்குகிறோம். இதையே எங்கள் அசைக்க முடியாத உறுதியான கொள்கையாகவும் கொண்டுள்ளோம்' என்றார். மேலும் அவர் போக்கஸ் சாய்புவைப் பார்த்து நகைச்சுவையோடு 'நீதிக்கட்சியின் முயற்சியால் விளைந்த பயன்களைப் போக்கஸ் சாய்பு எளிதாகப் பெறுகிறார். எல்லா இனங்களுடைய எதிர்பார்ப்புகளையும் நியாயமான வகையில், நீதியான முறையில் காக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.' என்று உறுதிபடக் கூறினார்.

1933 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பத்திரப்பதிவு செய்தல் என்ற உரிமைக் கோரிக்கை பற்றி விவாதித்தனர். அப்போது ராசன் 'சண்டை போடுவதெனில் இரண்டு பேராவது இருக்கவேண்டும், ஊழல் நடப்பதற்கும் இருவர் வேண்டும். அப்போது தான் ஊழல் தலையெடுக்கும்; யாருக்கும் பொதுமக்கள் லஞ்சம் தரக்கூடாது. அதிகாரிகளுக்கும் முக்கியமான துணை அலுவலர்களுக்கும் பொது மக்கள் பணம் தரக்கூடாது. அலுவலர்களிடம் பணம் வாங்கும் ஆசையைத் தூண்டக் கூடாது; காரியத்தை முடிக்கப் பணம் கொடுக்காவிட்டால், ஊழல் பெருகாது. ஊழல் வளரவும் வழியில்லை. பொதுமக்களை அச்சுறுத்தி அதிகாரிகள் பணம் கேட்டால், உடனே அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவ்வாறு செய்தால் அதிகாரிகள் அச்சுறுத்தலும் தொல்லையும் இராது. தவறு செய்வோர் இரும்புக் கரம் கொண்டு தண்டிக்கப்படுவர்' என்றார்.

ஒரு முறை கே.சி.ரெட்டி என்பவர் ஊழல் பற்றிப் பேசும்போது ராசன் குறுக்கிட்டு 'ஊழல் எங்கு இருப்பினும் அதை உடனே ஒழித்தாகவேண்டும் என்னும் கருத்தையே நாம் இருவரும் கொண்டிருக்கிறோம். ஊழல், சமுதாயத்தின் உயர் ஆற்றலை விழுங்கி விடும். அதனை ஒழித்துக்கட்ட வேண்டும்' என்றார்.

1935 ஆம் ஆண்டு பிப்ரவரியில் சட்டமன்றத்தில் வரவுசெலவுத் திட்டம் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது பலர் ஒருவரையொருவர் பழித்தும் இழித்தும் சாடிக்கொண்டிருந்தனர். அதைக் கண்ட ராசன் 'சட்டமன்றப் பண்பாட்டை – மதிப்பைக் காக்க வேண்டுவது நம் கடமை' என்றார்; பழித்துப் பேசியவர்களையும் இழித்துப் பேசியவர்களையும் கண்டித்தார்.

ஒரு முறை சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தி அவர்கள் 'நீதிக்கட்சியை ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்து விட்டோம்' என்று வீராவேசமாகப் பேசினார். ராசன் அவர்கள், 'நீதிக்கட்சி மீண்டும் எழும் நாள் வெகு தொலைவில் இல்லை' என்றார். அவர் அன்று கூறிய தீர்க்கதரிசனம் பொய்க்கவில்லை. ஆம் அவர் கூறியது போலவே நீதிக்கட்சிப் பாரம்பரியத்தில் தோன்றிய தி.மு.க 1967 ஆம் ஆண்டு பெருவெற்றி பெற்றது. காங்கிரஸ் சில இடங்களையே பிடித்தது. வருங்காலத்தைக் கணித்துக் கூறவல்ல அரசியல் மேதை ராசன் அவர்கள் பின்னர் நிகழ இருந்ததை முன்னரே உய்த்துணர்ந்து கூறினார் என்பது தெளிவாகிறது. 1952 ஆம் ஆண்டு புதிய இந்திய அரசியல் சட்டத்திற்கிணங்க, முதல் சட்டமன்றத் தேர்தல் நடந்தது. அப்போது அவர் கம்பம் தொகுதியில் நீதிக்கட்சி சார்பில், வெற்றி பெற்றார். இதனை அவரது சட்டமன்ற வாழ்க்கையின் இரண்டாம் பகுதி எனலாம்.

சட்டமன்றத்தில் அவர் அனைவரின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவராகத் திகழ்ந்தார். அவரது தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில், அவர் சட்டமன்றத்தின் தற்காலிக சபாநாயராக நியமிக்கப்பட்டார். 1952 மே 5 ஆம் நாள் ஆளுநருக்கு முன்னர், சபாநாயகராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். மறுநாள், உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் சட்டசபை சபாநாயகர், தேர்தலை முறையாக நடத்தினார். நாற்காலியில்

அமர்ந்து கொண்டு, தமது வாக்குச் சீட்டில் தாம் விரும்பிய ஒருவருக்கு வாக்களித்தார். பின்னர் அவர், சபாநாயகராக இருக்கும் நான் நாற்காலியை விட்டு நகரக் கூடாதென்பது சட்டமன்ற விதி. ஆகவே இங்கிருந்து கொண்டு சபாநாயகர் தேர்தல் முடிவை அறிவிக்கிறேன். திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் 206 வாக்குகளும், திரு. சுயம்பிரகாசம் அவர்கள் 162 வாக்குகளும் பெற்றுள்ளனர் என்றார். பார்வையாளர்கள் கைதட்டி, ஆரவாரம் செய்தனர். உடனே சபாநாயகர் 'அமைதி' 'அமைதி' என்றார். சட்டமன்ற நடவடிக்கைகளில் பார்வையாளர்கள் கைதட்டி ஆரவாரம் செய்யக்கூடாது என்றார். திரு. சிவசண்முகம் பிள்ளை சபா நாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிவித்துக் கருத்தாழம் கொண்ட உரை நிகழ்த்தினார். சட்டசபை உறுப்பினராய்ப் பல்லாண்டுகள் இருந்தமையால், அவர் தாம் பெற்ற அனுபவங்களைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அவர் பேசும்போது, 'சபாநாயகர் அவர்களே! இந்தப் புதிய சட்டமன்றத்திற்குத் தங்களைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்ததையும், தங்களை இந்த மன்றத்திற்கு அறிமுகப்படுத்துவதையும் நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பை நல்கிய ஆளுநருக்கும் அரசுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். மூன்று நாள்கள் நான் தற்காலிக சபாநாயகராக இருந்து, இந்த அவை நடவடிக்கைகளைச் சிறப்புற நடத்துவதற்குத் தாங்கள் எனக்கு நல்கிய நல்லாதரவுக்கு, நான் நன்றி தெரிவிக்கிறேன். பதினான்கு ஆண்டுகள் வனவாசம் போன்றது, பதினான்கு ஆண்டுகள் சட்டமன்றத்திற்கு வெளியே இருந்தேன். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை என் தொகுதி மக்கள் எனக்கு வழங்கியுள்ளனர். இங்கு எனக்குத் தெரிந்தவர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் சிலரே! இது, புது இடம்போல் எனக்குத் தோன்றுகிறது. இங்குள்ள உறுப்பினர்களுள் மதிப்பிற்குரிய செட்டிநாட்டரசர், மாணிக்கவேலு நாயகர், ஏ.பி.ஷெட்டி ஆகியோர் மட்டுமே எனக்குத் தெரிந்தவர்கள். சட்டமன்ற ஆளுங்கட்சியின் இருக்கையில் **(Treasurry Bench)** சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரைப் பார்க்க, நான் பெருமகிழ்ச்சிகொள்கிறேன். பழைய சட்டமன்றத்தில் அவருடைய தந்தை உறுப்பினராய் இருந்தார். நான் முதன் முதலில் 1920 ஆம் ஆண்டு சட்டமன்றத்திற்கு வந்தேன். இதைப்பற்றிய நினைவுகள் அலை அலையாக என் உள்ளத்தில் மோதுகின்றன. இந்த நான்கு மாநிலங்களின் பல்வேறு துறைகளைச் சார்ந்தோர், சட்டமன்ற உறுப்பினராய் இருந்தனர். அவர்கள் பெரிய மேதைகள். அப்போது நான் இளைஞன். அன்பும் பாசமும் கலந்த சூழலே நிலவியது, அந்தக்காலச் சட்டமன்றத்தை ஒரு 'கிளப்'(**Club**) என்றுதான் சொல்லவேண்டும். அது ஒரு கூட்டுக் குடும்பம்; பாசமும் நட்பும், மகிழ்ச்சியும் நிரம்பி வழிந்தன. குடும்பத்தின் தலைவராக

சர் **P**. ராஜகோபாலாச்சாரியார் இருந்தார். அந்தோ! நம்மையெல்லாம் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டு, அவர் மறைந்து விட்டார்.

மூன்று நாள்கள் அந்த நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, எனக்கு அச்சமும் கூச்சமும் ஏற்பட்டன. ஏனெனில் இதில் அமர்ந்து இந்த நாற்காலிக்கே ஒரு புனிதத் தன்மையை ஏற்படுத்தியவர் சர் **P**.ராஜகோபாலாச்சாரியார் ஆவார். அவர் நகைச்சுவை மிளிரப் பேசுவார். சட்டமன்றம் கலகலப்பாக இருக்கும். கருத்தாழமுள்ள காரியங்களில் ஈடுபடச் செய்வார்; சட்டமன்றம், களைகட்டும். இந்த மாமன்றத்தில், உறுப்பினர்களாக இருந்த இளைஞர் பலர், இந்திய நாட்டின் பிற சட்டமன்றங்களிலும் உலகின் வேறு சில சட்டமன்றங்களிலும் முத்திரை பதித்துள்ளனர்.

சபாநாயகருக்கு இருவகைப் பணிகள் உண்டு. சட்டமன்றத்தின் செயல்பாடுகள் சிறப்பாகவும் முறையாகவும் நடைபெற அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். சட்டமன்ற உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறித் தம் உரையை முடித்தார்.

1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை சட்டசபையில் ராசன் நீதிக்கட்சியின் உறுப்பினராக இருந்தார். நீதிக்கட்சியில் அவரது பணி சிறப்புற்றிருந்தது. அவர் கனிவுடையவராகவும், இனிய பண்பாளராகவும், பொறுமை மிக்கவராகவும் திகழ்ந்தார்.சட்ட மன்றத்தில் பல சமயங்களில் மன்றத் தலைவர் C.சுப்பிரமணியம் அவர்களுடன், மாறுபடும் சூழல் உருவாயிற்று. ஆயினும் அவர் ஒரு போதும் தரக்குறைவாகப் பேசியதில்லை; தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தியது இல்லை; பழித்ததும் இல்லை. ராசன் உயர்ந்த உள்ளமுடையவர். அவரது பேச்சு கருத்தாழம் உடைய சொற்கள் பொதிந்தனவாய் இருந்தது. சில நேரங்களில் உணர்ச்சி வயப்படுவார். அப்போது சொற்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவரும். தம்மை எவராவது ஏசிப்பேசினால் அந்த நிலையிலும் பிறர் மனம் நோகுமாறு பேசமாட்டார். சி.ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது, அவர்மீது நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானம் பற்றிப் பேசும்போது 'நான் நீதிக்கட்சியில் தன்னந்தனியாய் , என்னைச் சார்ந்தோர் எவருமிலா நேரத்தில், நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது பேசுகிறேன். என் அரசியல் வாழ்வில் நான் மதில்மேல் பூனையாய், ஒரு போதும் இருந்ததில்லை. அவ்வாறிருக்க என் அரசியல் வாழ்வு முடிவுறும் நிலையில் நான் மதில்மேல் பூனையாக இருக்க விரும்பவில்லை. முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியாருக்கு என் ஆதரவைத் தருகிறேன். அமைச்சரவை என்பது சட்ட மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றதாக இருக்கவேண்டும். பல்வேறு துறைகளின் பணியாளர்களுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக அமைச்சர்கள் இருக்கவேண்டும். இப்போதுள்ள இக்கட்டான சூழலை ஏற்றபடி சமாளிக்க மாண்புமிகு ராஜகோபாலாச்சாரியார்தாம் எல்லாத் தகுதியும் பெற்றவர். இந்த நம்பிக்கைத் தீர்மானத்திற்கு ஆதரவு தருவதால் அவர் கொள்கையையோ திட்டங்களையோ நான் ஏற்பதாகப் பொருள்கொள்ளக்கூடாது' என்றார். இவ்வகையில் ராசன் எண்ணத்திலும், செயலிலும் திடமான சுய சிந்தனையாளராக இருந்தார், என்பதை மேற்குறித்த பேச்சு உறுதிசெய்கிறது.

1952 – 53 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் குறித்து நடந்த விவாதத்தில், பங்கேற்ற ராசன், முதலமைச்சருக்கு ஆலோசனை ஒன்றை வழங்கினார். அப்போது, 'முதலமைச்சர் என்பவர் புகழ்சார்ந்த செயலாளராக இருக்கக்கூடாது; கோப்புகளில் அவரே குறிப்புகள் எழுதக் கூடாது; மற்றவர்களைத் தூண்டி எழுதுமாறு கட்டளையிடவேண்டும்; சக அமைச்சர்களுக்கு வழிகாட்ட வேண்டும்' என்றார்.

1953 – 54 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் பற்றிய விவாதத்தில் பேசும்போது வைகையாற்றுத் திட்டம், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், கூடலூர் ஆகிய இடங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் திட்டம் முதலியவற்றை வலியுறுத்தினார். வாய்ப்பு நேரும்போதெல்லாம் ராசன் தம் தொகுதிக்கு வசதி செய்யுமாறு வேண்டினார்.

ராசன் அவர்கள், நகைச்சுவை உணர்வு மிக்கவர். 1954 – 55 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றியபோது 'இத்தகைய விவாதத்தில் கலந்துகொண்டு, பேசுவதால் ஒவ்வொரு உறுப்பினரும் தத்தம் கருத்தைக் கூற முடிகின்றது. கடந்த இருபது ஆண்டுகளாக வரவு – செலவு குறித்து நிகழ்த்தப்படும் சிறப்பான உரைகளைக் கேட்டு வருகிறேன். மக்களிடம் வரி விதித்துப் பணம் வசூலிப்பது தவிர, வேறு எந்தப் புதுமையும் இல்லை. நிதியமைச்சர் எவ்வளவுக்கெவ்வளவு வரிவிதித்து மக்களைத் துன்புறுத்துகிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு மக்கள் அவரை வெறுப்பார்கள்' என்று கூறினார்.

1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம், மாநில மறுசீரமைப்பு மசோதா மீது நடந்த விவாதத்தில், ராசன் கலந்துகொண்டார். அப்போது அவரைத் தனிப்பட்ட முறையில் பலர் ஏசிப் பேசித் தாக்கினர். குறிப்பாகச் சட்டமன்றத் தலைவர், ராசனின் முந்தைய செயல்களை வெறுப்புடன் எடுத்துக் கூறினார். இரண்டாம் உலகப்போர் நடந்தபோது அவர் ஆற்றிய பணியை எள்ளி நகையாடினார். ராசன் யாரையும் நேரடியாகப் பழித்துப் பேசுவதில் நாட்டமில்லாதவர். அதனால் அதைக் கேட்டு அவர் ஆத்திரப்படவில்லை; நிலை கலங்கவில்லை. சாந்தமாய் இருந்தார். வினயமாகவும், உறுதியாகவும் பதில் கூறினார்.

அரசியல் சாசனத்திற்குட்பட்டு ஆட்சி நடத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்த என்னையும், என் கட்சியையும், மோசமான, முரட்டுத்தனமான அடைமொழிகளால் பேசுவது கேட்டு நான் பழகிவிட்டேன். இருப்பினும் எனக்கு ஆத்திரம் பொங்கியது. பின்னர், இக்கூச்சல் எனக்கு வேடிக்கையாகவே இருந்தது. நான் போருக்காகப் பிரச்சாரம் செய்ததைப் பாராட்டி ஒரு பரிசு கொடுத்தனர். அது தனிப்பட்ட எனக்குக் கொடுக்கப்பட்டதன்று. நம் மாநிலத்திற்கே வழங்கப்பட்டதாகும். பரிசு என்னவென்றால் அப்போதிருந்த ஆளுநரின் ஆதரவு காரணமாகக் கலைக்கப்பட்டிருந்த மதராஸ் படைவகுப்பு **(Madras Regiment)** மீண்டும் ஏற்படுத்தப்பட்டதேயாகும். இப்படை வகுப்பு நம் நாட்டுப் பிரிவினையின்போது, காஷ்மீரிலும், டில்லியிலும் ஏற்பட்ட கொடிய கலவரங்களைத் திறம்பட அடக்கிப் பெரும்புகழ்பெற்றது. அதே நேரம் அப்படை வகுப்பு உலகப்போரிலும் சிறந்த வெற்றிவாகை சூடியதை நான் குறிப்பிட்டாக வேண்டும். நாங்கள் தமிழ்நாடு கேட்டோம்; அதில் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. தமிழர் தாம் பெருமைகொள்ளத்தக்க பழம்பெருமை, தமக்கு உண்டென்று உணர்கின்றனர். தம் முன்னோர்களின் பெருமையை நிலைநாட்ட எண்ணுகின்றனர். எனவேதான், இவ்விடத்தைத் தமிழ்நாடு என வழங்க விரும்புகின்றனர். மறுபடியும் தமிழ்நாடு எனப் பெயர் வைக்க அழுத்தம் திருத்தமாக ஆர்வத்தோடு தம்முடைய கோரிக்கையை மொழிந்தார்.

சி.சுப்பிரமணியம் அவர்கள் 'முன்னர், தாங்கள் நீதிக் கட்சியில் செய்தது குறித்து வெட்கப்படவேண்டும்' என்று சொற்பொருள் நயத்துடன் துடுக்காகப் பேசினார். எனவே, ராசன் 'நான் இங்கு நியமன உறுப்பினராக இல்லை' என்று சுடச்சுடப் பதில் கூறினார். சி.சுப்பிரமணியம் 'வேறு எந்த நாடாக இருந்தாலும், மதிப்பிற்குரிய பெரியவர் உயிருக்கே உலை வைத்திருப்பார்கள்' என்று தொடர்ந்து கூறினார்.

ராசன் அதனைப் பொருட்படுத்தவில்லை. மௌனமாக இருந்தார். அவர், வழக்கமாகச் சொல்லும் 'கடவுள் காப்பாராக' என்றும் சொல்லவில்லை, 1958 ஆம் ஆண்டில் ராசன் சட்ட மன்ற மேல்சபை உறுப்பினரானார். மேல்சபைத் தலைவரான டாக்டர் செரியன் அவர்கள் ராசனை நோக்கி 'தங்கள் கன்னிப் பேச்சைத் தொடருங்கள்' என்றார். உறுப்பினர் சிலர் 'முதிய கன்னிப்பேச்சு' என்று நகைச்சுவையுடன் கூறினர். ராசன் இயற்கையான அடக்கத்துடன் 'இந்த மேல்சபைக்கு நான் புதியவன்; நான் பேசும்போது நீங்கள் அமைதியாக இருந்து செவிமடுக்கவேண்டும். அப்போதுதான் புதிய உறுப்பினரான நான், பேச வசதியாய் இருக்கும். நான் நீதிக்கட்சியையைச் சார்ந்த ஒரே ஒரு உறுப்பினர். என்னைத் தவிர இக்கட்சியின் வேறு உறுப்பினர் இங்கு இல்லை. இக்கட்சியின் கொள்கைகள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும் அடிப்படை உண்மைகள்; அவை வாழக்கூடியவை; அதற்கென ஒரு இயக்கம் வேண்டாம். கொள்கைப்பிடிப்பாளர் ஒருவர் இருந்தாலும் போதும். உயர்ந்த கொள்கைகள் நிலைபெற அதைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை; கொள்கையின் தரமே முக்கியம்' என்றார்.

1961 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை நிலச் சீர்திருத்த மசோதா (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) அவையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, எல்லோரும் நினைவு கூரத்தக்க வகையில், ராசன் அரிய உரையை நிகழ்த்தினார். அப்போது உணர்ச்சி ததும்பப் பழங்கால நிகழ்ச்சிகளை நினைத்து மனம் நெகிழ்ந்தார். 'இங்கிலாந்திலிருந்து வந்த நான் இச்சட்டமன்ற இயலறிஞர் (Parliamentarian) வாழ்க்கையை 1919 ஆம் ஆண்டு தொடங்கினேன். அப்போது ஆர். வெங்கட்ராமன் சட்டசபைத் தலைவராக இருந்தார். அவர் எதிர்க்கட்சியினர் பேச்சைத் தம் நாவன்மையால் மடக்கிவிடுவார்: 'உறுப்பினர்கள் மீது மிகுந்த அன்புகொண்டவர். அனைவரிடமும் மரியாதை காட்டினார். எனவே அவரை நான் மிகவும் பாராட்டுகிறேன், இந்த எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் உலகப் புகழ்பெற்ற மருத்துவர்; சிறப்பு மிக்க கல்வியாளர். கல்வி, மருத்துவம் ஆகிய இரு துறைகளிலும் தனிச்சிறப்பு வாய்ந்த பெருமகனார்; மூதறிஞர்; அவரைப் பாராட்டுகிறேன்' என்றார்.

ஒரு முறை நிதியமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அவர் அரசியலில் ஆழ்ந்த தெளிவு கொண்டவர், சட்டசபையில் கடமை உணர்வுடன் பங்காற்றும் இயல்பினர்; அவருடைய பேச்சில் தெளிவு இருக்கும்; எதையும் அழுத்தம் திருத்தமாகப் பேசும் வல்லமை பெற்றவர். அவரை, அனுபவம் என்னும் பள்ளியில் சிறந்த பட்டம் பெற்றவர் எனலாம். அவர், வெளிநாடு சென்று வந்ததால் அவரது மனப்பான்மை மேலும் விரிவடைந்துள்ளது.' என்றார்.

மாற்றுக் கட்சி உறுப்பினர்களைச் சிறந்த முறையில் பாராட்டிப் பேசுவது, ராசனின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. சட்டமன்றத்தில், சிலர் சில வேளைகளில் ராசனின் மனம் நோகுமாறு பேசியபோதும், அவர் அமைதியாக இருப்பார். அவரது அடக்கத்தையும் பொறுமையையும் கண்டவர்கள், அவர் மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். சட்டமன்றத்தில் அவர் சில வேளைகளில் பேசுவார். வேறு சில சமயங்களில் பேசாமல் இருந்துவிடுவதும் உண்டு. ஆனால், அவர் தவறாமல் நாள்தோறும் அவைக்கு வந்து, அரிமா போல் வீற்றிருப்பார். சட்டமன்றத் தொடர் நடக்கும் காலங்களில், ஒரு நாள் கூட தவறாமல் அவைக்குச் செல்லும் வழக்கத்தை அவர் மேற்கொண்டிருந்தார். அவையில் யார் மீதும் விருப்பு, வெறுப்பின்றிப் பழகினார். காலத்திற்கேற்றபடி, அவர் தம்மை மாற்றிக்கொள்ளத் தயங்கவில்லை. பழமைக் கருத்துகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டார். சில தடைகள் இருப்பினும், கவலைப்படாமல் மகிழ்ச்சிகொண்டு வாழ்ந்தார். பதவிகளும் பெருமைகளும் மதிப்புகளும் அவரை நாடி வந்தன. அவர் என்றும் அவற்றைத் தேடிப் போனதில்லை. அவரது ஆளுமையும், இணக்கமும், பொறுமையும், அவருக்கு நீங்காச் சிறப்பை நல்கின. அவர் அன்பும் பாசமும் நிறைந்த மூதறிஞர். ஓவ்வொரு நண்பரையும் பார்க்கும்போது 'ஐயா, நலமாக இருக்கிறீர்களா' என நலம் விசாரிப்பார்.

– பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்

* * *

இரங்கல் குறிப்புகள்

சட்டப்பேரவையில் இரங்கல் தீர்மானம்

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

Thursday 12th December 1974

Obituary reference
Demise of Thiru
P. T. Rajan, ex-M.L.A.

தமிழ் நாடு சட்டப் பேரவை வியாழக்கிழமை, 1974 டிசம்பர் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 10-மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர். கா.கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

இரங்கல் தீர்மானங்கள்.

முன்னாள் உறுப்பினர் திரு. பி. டி. இராசன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டுவரை கம்பம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவும் இருந்த திரு. பி. டி. இராசன் அவர்கள் 25-9-1974 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து, இப்பேரவைக்கு நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானங்களை முன்மொழிவார்கள்.'

இரங்கல் தீர்மானங்கள்

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்



மாண்புமிகு: டாக்டர் இரா.நெடுஞ்செழியன் :

பேரவைத் தலைவர் அவர்களே,

'1921 ஆம் ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரையிலும், பின்பு 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகவும், கம்பம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராகவும் மற்றும் 1932 ஆம் ஆண்டு

முதல் 1937 ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவரும், நீதிக் கட்சியின் தலைவராக விளங்கிய திரு. பி. டி. இராசன் அவர்கள் 25-9-1974 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறது' என்ற தீர்மானத்தையும் நான் முன் மொழிகின்றேன்.

தமிழவேள் என்று தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பி. டி. இராசன் அவர்கள் 25-9-1974 ஆம் நாளன்று மறைந்தது குறித்து நாம் இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழக அரசியல் உலகில் மிக முக்கியமான ஒருவராகக் கருதப்படத்தக்க அளவுக்கு திரு. பி. டி. இராசன் அவர்கள் விளங்கிவந்தார்கள் என்பதை அனைவரும் நன்கு உணர்வார்கள். கருத்துக்களில் மாறுபாடு கொண்டவர்களும் கூட, மாற்றுக் கட்சியினரும் கூட, அவரை மதிக்கத்தக்க அளவுக்கு அவர் எல்லோருடனும் நெருங்கிப் பழகக்கூடிய இனிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கினார்கள்.

'பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.'

என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க, பகைவரிடமும் நட்பு கொள்ளத்தக்க சிறந்த பண்புகளுக்குச் சீறிய உறைவிடமாக திரு.பி.டி.இராசன் அவர்கள் விளங்கினார்கள். எண்பத்துமூன்று ஆண்டுக்காலம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் எல்லோராலும் பாராட்டத்தக்க அளவுக்கும் போற்றத்தக்க அளவுக்கும் எல்லோரும் அவரை மதித்து அணுகி அவரிடத்தில் அன்பு செலுத்துகிற அளவுக்கும் அவர்களுடைய பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் தமிழகத்திலே படித்துவிட்டு, பிறகு மற்ற படிப்புகளை இங்கிலாந்து நாட்டில் படித்து, பார்-அட்-லா பட்டம் பெற்றுத் திரும்பிவந்து சிறந்ததொரு இடத்தைப் பெற்று வந்தார்கள். அப்பொழுது நீதிக் கட்சியில் முக்கியமான இடத்தைப் பெற்று, நீதிக் கட்சியினரால் மிகமிகப் பாராட்டத்தக்க அளவுக்கு, போற்றப்படத்தக்க அளவுக்கு, அவர் தமிழகத்தினுடைய அமைச்சரவையில் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தினுடைய அமைச்சரவையில் முக்கியமானதொரு இடத்தை, 1932 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரை ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வந்தார். நீதிக் கட்சித் தலைவர்களால் மிகவும் மதிக்கத்தக்க ஒருவராகவும் அந்தத் தலைவர்கள் பலராலும் பாராட்டத்தக்க வகையிலும் அவர்களுடைய பணிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. திரு. பி. டி. இராசன் அவர்கள் ஆங்கில மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் மிகச் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் பள்ளியிலும் மற்ற இடங்களிலும் படித்தது சமஸ்கிருத மொழியாகும். பிறகுதான் அவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். என்றாலும், தமிழில் மிகவும் பற்றும் ஆர்வமும் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கி, தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்களுடைய நலனுக்கும் பாடுபட்டு, தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதில் எவ்வப்போது தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமோ அவ்வப்பொழுது தெரிவித்துத் தம்மை ஈடுபாடு கொள்ளச் செய்த அளவுக்குச் சிறந்ததொரு தன்மையை நிலை நாட்டியவர்கள் ஆவார்கள்.

அதுமட்டுமின்றி,1956 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஒரு வார காலம் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக அவர்கள் நடத்தினார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சிறந்த தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டு, அந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டை நடத்திய பெருமை

தமிழவேள் திரு. பி. டி. ராசன் அவர்களுக்கு உண்டு. அந்த நேரத்தில் 'தமிழவேள்' என்ற பட்டத்தைக் கொடுத்து எல்லோரும் மிகச் சிறப்பாக அவரைப் பாராட்டினார்கள்.

அவர்கள் எல்லோருடைய அன்பையும் பெற்று விளங்கினார்கள் என்பது மட்டுமல்லாமல், யார் அவரிடத்தில் எந்த உதவியை நாடிச் சென்றாலும், அவர் மனங்கோணாத அளவுக்குத் தம்மால் இயன்ற வரையில், நேர்மை வழி நின்று, உதவி செய்வதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட ஒருவர் தமிழகத்தினுடைய அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்கள் என்பது தமிழகத்திற்கே பெருமை தரத்தக்க ஒன்றாகும். 83 ஆண்டுக் காலம் வாழ்வாங்கு வாழ்ந்து, அனைவருடைய ஆதரவையும் பெற்றிருந்த அவர்கள் மறைந்தார்கள். அவருடைய இழப்பு நம் அனைவராலும் நினைந்து பார்க்கத்தக்க அளவுக்கு துக்கத்தையும் துயாத்தையும் அளிக்கக்கூடிய

அதுமட்டுமின்றி,1956 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஒரு வார காலம் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக அவர்கள் நடத்தினார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சிறந்த தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டு, அந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டை நடத்திய பெருமை தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களுக்கு உண்டு. அந்த நேரத்தில் 'தமிழவேள்' என்ற பட்டத்தைக் கொடுத்து எல்லோரும் மிகச் சிறப்பாக அவரைப் பாராட்டினார்கள்.

வகையில் அமைந்த ஒன்றாகும். அந்த முறையில் அவர்களுடைய மறைவு குறித்து ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவருடைய மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நாம் தெரிவித்துக்கொள்வதோடு, அவருடைய அருமை மகனாகவும், இந்தச் சட்டப்பேரவை உறுப்பினராகவும் விளங்குகின்ற
திரு. பழனிவேல் இராசன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானங்களை வழிமொழிந்து நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தி. ஏ. ஆர். மாரிமுத்து:

தமிழ்ப் பெருமகன் சர் பி. டி. ராஜன் அவர்கள் நீண்ட நாள் அரசியல்வாதி என்பது மட்டுமல்லாமல் ஒரு சிறந்த வழக்கறிஞராக விளங்கியதோடு மட்டுமல்ல பொதுச் சேவையிலும் அதிகமாக ஈடுபட்டு, சாதாரண மக்களுடைய அன்பையும் மதிப்பையும் அதிக அளவுக்குப் பெற்றுவிட்டவர்கள் ஆவார்கள். ஏழை எளிய மக்கள் அவரை எந்த நேரத்திலும் சாதாரணமாக அணுகி அவரது உதவியைக் கோரிப்பெறுவதற்கு எந்த நேரத்திலும் அவர் அவர்களைக் காணத் தயாராக இருந்தார்கள். பசியோடு வருகிறவர்களுக்கு உணவு அளிக்க அவரது வீட்டுக் கதவு ஏழை எளியவர்களுக்கு என்றுமே திறந்திருந்தது என்றெல்லாம் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். பசித்தவர்களுக்கு உணவு அளிப்பதையே உயர் பண்பாகக் கொண்ட அந்தத் தமிழ்ப் பெருமகன் நம்மை விட்டுப் பிரிந்தது நமக்கெல்லாம் பெரிய நஷ்டம் அன்னாருடைய குடும்பத்தினர்களுக்கு எனது கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :

நான் குறிப்பிட விரும்புவது தமிழ்ப் பெருமகன் சர். பி. டி. ராஜன் அவர்களைப் பற்றி. எனக்கு முன்பு பேசிய பெருமக்கள், 'நான் கேள்விப்பட்டேன்' என்று சொன்னார்கள் நான் கேள்விப்பட்டது இல்லை. கிட்டத்தட்ட நாற்பது வருஷங்களாக அவரோடு நெருங்கியிருந்து பழகினவன். ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் அவர் அமைச்சராக இருந்த காலத்திலும், ஜஸ்டிஸ் கட்சியை நிர்மாணிப்பதற்கு, அதை வளர்ப்பதற்கு அவர் செயல்பட்ட சூழ்நிலைகளிலும் எனக்கு அவரோடு தொடர்பு இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் தன் கொள்கைப் பிடியில் இருந்து மாறாத பெருமகன் அவர்.

ஒருவர் பேசும்போது குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் பேசும்போது அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும் தெய்வ நம்பிக்கை உடையவராக இருந்தார் என்றார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தபோது தெய்வ நம்பிக்கை மாத்திரம் அல்ல அதற்காக அடிகோலி வந்தார். மிக அமைதியானவர் அடக்கமே உருவானவர் மிகப் பெரும் குணம் உடையவர். எந்தெந்த நேரத்தில் எந்தெந்த கொள்கையைப் பின்பற்ற வேண்டுமோ அதைப் பின்பற்றி நாட்டுக்கு நலம் செய்தவர். அவரது மறைவு நமக்கு ஈடு செய்ய முடியாத நட்டம். என்றாலும் அந்தப் பெரு மகனார் தந்திருக்கிற அன்புமகன் நம்மோடு நமது சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுதான் சற்று மகிழ்ச்சி அளிக்கிறது. தந்தையைப் போலவே பேச்சும், பண்பும், அடக்கமும், தெய்வ பக்தியும், கோயில் திருப்பணியில் ஈடுபாடும் கொண்டு தந்தையின் உருவாகவே அவர் திகழ்கிறார்.அவரை, அவருடைய உறவாக அவர் தந்துவிட்டு போயிருக்கிறார் என்று நாம் அமைதி கொண்டு, அவருக்கும் என்னுடைய அனுதாபத்தை, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அவருடைய குடும்பத்தாருக்கும் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானங்களை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன்.

திரு.கே.டி.கே. தங்கமணி :



சபாநாயகர் அவர்களே அவை முன்னவர் அவர்கள் சபைமுன் வைத்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானங்களை ஆதரித்து எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. பி. டி. ராஜன் அவர்களைப் பற்றி பேசுவதிலே என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. காரணம், எங்கள் குடும்பத்தோடு நீண்ட நெடுங்காலமாக தொடர்பு கொண்டிருக்கிற நெருங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். இன்று, அவருடைய அரசியல் நிலையைப் பற்றித்தான் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்ற முறையிலே எங்கள் கட்சிக்கும் அவருக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் இருந்தாலும் கூட ஒரு குறிப்பிட்ட இயக்கத்திலே ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினார்கள். தட்சிணப் பிரதேச எதிர்ப்பு இயக்கம் நடந்த காலத்தில் அவர் தலைவராக இருந்தார். அந்த ஊர்வலத்தில், எங்கள் அருமைத் தலைவர் திரு.ஜீவானந்தம் அவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட உடனே திரு. பி. டி. ஆர். அவர்கள் எவ்வளவு துடித்தார் என்பது நமக்குத் தெரியும். உடனடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஜீவானந்தத்தைக் கண்டு, இம்மாதிரியான அசம்பாவிதம் ஏற்பட்டதைக் கண்டு வருத்தப்பட்டார்கள். அது அவருடைய பண்புக்குரியது.

அவரைச் சரியாக விவரிக்க வேண்டுமென்றால், ஆங்கிலப் பதமான **True Gentleman** என்று அவரை நிச்சயமாகச் சொல்லாம். அவர்

குடும்பத்தோடு பழகி அவர் இல்லத்திற்குச் சென்றவர்க்குத் தெரியும், விருந்தோம்பல் என்றால் என்ன என்பது. விருந்தோம்பலுக்கு ஒரு இலக்கணமாக அவரது குடும்பம் திகழ்ந்தது. இன்றைக்கு அவருக்கிருக்கிற இரு குமாரர்களிலே ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். இன்றைக்கும்கூட, விருந்தோம்பலிலிருந்து வழுவாமல் அவரது குடும்பம் இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, வருத்தத்தோடு இந்தத் தீர்மானங்களை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. மணலி சி.கந்தசாமி:

தலைவரவர்களே, சபையின் முன்னவர் அவர்கள் பிரேரேபித்திருக்கக்கூடிய அனுதாபத் தீர்மானங்களை முழுமனதோடு ஆதரித்து, எனது கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1952-57-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், திரு.பி.டி.இராசன் அவர்கள் எங்களைப் போன்று இளைஞர்களாக இருந்தவர்களோடு மிகவும் சரளமாகப் பழகி, பார்லிமெண்டரி முறையைப் பின்பற்றுவதிலிருந்து கிஞ்சித்தும் வழுவாமல் நடந்து காட்டினார் என்பதை நான் நேரடியாகக் கண்டவன்.

அவருடைய குடும்பத்தினர் எந்தவிதமான வாதப்பிரதிவாதத்திற்கும் ஆளாகக் கூடிய விதத்திலே இல்லாமலிருந்தது மட்டுமல்ல, எல்லா தரப்பினரும் மதிக்கக்கூடிய விதத்திலே அவர் அரசியல் பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய திருமகனார் இன்றையதினம் சட்டமன்றத்திலே அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்யக்கூடிய நிலையைப் பெற்றதற்கு நாம் எல்லாம் பெருமைப்பட வேண்டும். அவர் மறைந்தது நம் முடைய தமிழகத்தின் துர்ப்பாக்கியம் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து:



தமிழவேள் பி. டி. ஆர். அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராக இருந்து செய்த பணிகள் ஏராளம். அவர் இப்பொழுது ஆளுங்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தாய்க் கழகமாக இருந்த நீதிக் கட்சிக்கு வகுத்த கொள்கைகள், 14 ஆண்டுக்காலம் அந்தக் கட்சி இந்தத் தமிழகத்தை ஆண்ட பொழுது செய்துவந்த சில நன்மைகளைத் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்ற கருத்திலே இன்றைக்கு அரசுப் பீடத்திலே இருப்பவர்கள் இருக்கவேண்டும். மறைந்த தமிழவேள் கொண்டிருந்த நல்லெண்ணங்களை, இன்றைக்கு இவர்கள் கொண்டிருக்க வேண்டும். செய்து காட்ட வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

1957-ம் ஆண்டில் போறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது, முதுகுளத்தூர் கலவரத்தைப்பற்றி விவாதிக்க நேர்ந்தது. அன்றைக்கு நானும் அந்த விவாதத்திலே பங்கு கொண்டேன். நான் பேசிய அன்று, மதிப்பிற்குரிய மறைந்த தமிழவேள், போறிஞர் அண்ணாவுக்கு ஒரு விருந்து அளித்தார்கள். **அவருக்கு வைத்த விருந்துதான். அதிலே, அன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருந்த நாங்களெல்லாம் கலந்துகொண்டோம். ஆனால், அந்த விருந்துக்குச் சென்ற என்னைப், பெரியவர் அவர்கள், இன்றைக்கு நீங்கள்தான் 'சீஃப் கெஸ்ட்' என்று சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு அவர்கள், நீங்கள் அந்தக் கலவரத்தைப் பற்றி சட்டமன்றத்திலே**

எடுத்து வைத்த அந்தத் தன்மை மிகச் சிறந்தது என்று என்னைப் பாராட்டி, அந்தப் பெருமையை எனக்கு அளித்தார்கள்.

அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது எவ்வளவு நியாயமான அன்பும் பற்றும் வைத்திருந்தார் என்பதை அறிந்து அவரோடு பழகி, அவரைச் சந்தித்து, பல கருத்துக்களைப் பேசுகின்ற வாய்ப்பினை பெற்றேன். அப்படிப்பட்ட பெரியவர் மறைந்து விட்டார்... அவரது இலட்சியங்கள் இன்றைக்கும் அவரது திருமகன் மூலமாக ஒலிபரப்பப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், எந்த அளவுக்குக் கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நல்ல முறையிலே படம் பிடித்துக் காட்டினீர்கள் என்று எடுத்துச் சொல்லி, அந்த வகையில் அவர் என்னை அன்றைக்குப் பாராட்டினார்கள்.

அதிலேயிருந்து அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது எவ்வளவு நியாயமான அன்பும் பற்றும் வைத்திருந்தார் என்பதை அறிந்து அவரோடு பழகி, அவரைச் சந்தித்து, பல கருத்துக்களைப் பேசுகின்ற வாய்ப்பினை பெற்றேன். அப்படிப்பட்ட பெரியவர் மறைந்து விட்டார். அவரது நல்ல உள்ளத்தையும், கொள்கைகளையும் கொண்டிருக்கிற அவரது திருமகன் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கிறார். அவரது இலட்சியங்கள் இன்றைக்கும் அவரது திருமகன் மூலமாக ஒலிபரப்பப்படுகின்றன. ஆனாலும், அவர் இல்லையே என்ற வருத்தத்தை இந்த மன்றத்தில் எனது கட்சியின் சார்பில் நானும் தெரிவித்துக்கொண்டு, அவரின் குடும்பத்திற்கு எனது கட்சியின் சார்பிலே வருத்தத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி:



தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் நாவலர் அவர்கள் இங்கு கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தில் அவை உறுப்பினர்களோடும் அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் கலந்து என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் தலைசிறந்த பண்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த, தமிழ்நாட்டினுடைய தலைவர்கள் அத்தனை பேர்களுடைய பேரன்பினை கட்சி வேறுபாடற்ற முறையிலே காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்டு ஒருங்கே பெற்ற மாபெரும் மனிதர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் எப்படிப்பட்ட செயல்களுக்கு எல்லாம் இந்த நாட்டிலே தலைமை வகித்தார்கள், எந்த மக்களுக்காகப் பாடுபட்டார்கள் என்பவைகளையெல்லாம் இந்த நேரத்திலே விரிவாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அவையனைத்தும் எல்லோரும் நன்கு அறிந்த உண்மைகள் ஆகும்.

1938 ஆம் ஆண்டில் தமிழகத்திலே மொழிப் போர் நடைபெற்ற போது அதனுடைய தானைத் தலைவர்களிலே ஒருவராக விளங்கி தமிழ்மொழியைக் காப்பாற்றுவதற்காக அன்றைக்குப் படைநடத்திச் சென்ற பெருமையிலே, திரு. பி. டி.ராஜனுக்கும் அந்தப் பெருமை உண்டு என்று சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லியதைப்போல 1956 ஆம் ஆண்டிலே தட்சிணப் பிரதேசம் மட்டுமல்லாமல், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளும் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற எல்லைப் போராட்டத்திலே பல்வேறு கட்சிகளுக்கும் யார் தலைமை வகித்துப் போராடுவது என்ற பிரச்சனை எழுந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்களால் முன்மொழியப்பெற்று, எல்லாக் கட்சித் தலைவர்களாலும் வழிமொழியப்பெற்று, திரு.பி.டி. ராஜன் அவர்கள் தேவிகுளம், பீர்மேடு எல்லைப் போராட்டத்திற்கும் தலைமை வகித்தார்கள். அதற்குப் பிறகு தமிழர்களின் உரிமைகள், தமிழ் மொழி உரிமை, தமிழ் மக்களுடைய உரிமைகள் இவைகளைக் காப்பாற்றுவதற்காக அந்த நேரத்திலே தன்னுடைய சுகதுக்கங்களை மறந்துவிட்டு ஈடுபட்ட தமிழராக இருந்தார்கள். கோலாலம்பூரிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்து கொண்டு தமிழ் வளர, உலகத்திலே தமிழின் தன்மை மேலும் மேலும் போற்றிப் பாதுகாக்கப்பட அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் எல்லாம் இன்றைக்கும் நினைந்து நினைந்து நம் எல்லோராலும் பாராட்டத்தக்கக் கருத்துக்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட சிறந்த பண்பாளரை, தமிழர்களுடைய தலைவரை இழந்திருக்கிறோம். அவர்களுடைய குடும்பத்திற்கும் இந்த அவையிலே மிகச் சிறப்புற்று விளங்கும் உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்கிற திரு.பழனிவேல்ராஜன் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இதயமார்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு இந்த அவையின் சார்பிலே கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானத்தோடு என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

மறைந்தவர்களுக்கு இந்த மன்றம் தெரிவித்த இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு அவை முன்னவரவர்களால் முன் மொழியப்பட்ட இரங்கல் தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.)

* * *

தலைவர் கலைஞரின் இரங்கற் செய்தி

கழகத் தலைவர் கலைஞர் இரங்கற் செய்தி

கோத்தகிரியிலிருந்த கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டதும் ,அவர் மிகுந்த துயருற்றார். தனது ஆழ்ந்த இரங்கலை அவர் தந்தி மூலம் தெரிவித்தார்.

இன்று கழகத் தலைவர் முதல்வர் அவர்களும், அறநிலையத்துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்களும் பங்கேற்ற காரமடை முப்பெரும் விழாக் கூட்டத்தில் மறைந்த தலைவருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பி.ஏ.சாமிநாதன் மதுரையிலிருந்து வந்த செய்தியை வெளியிட்டு இரங்கல் தீர்மானத்தை அவரே முன்மொழிந்தார்.

‘தமிழ்ச் சமுதாயத்துக்காக அரும்பாடுபட்ட அரசியல் வல்லுநரும், பண்பாளருமான பி.டி ராஜன் அவர்களது மறைவுக்கு இந்தக் கூட்டம் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது’
கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களும், அமைச்சர் கண்ணப்பன் அவர்களும், மக்களும் எழுந்துநின்று இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றினர்.
கழகத் தலைவர் முதல்வர் கோத்தகிரியில் (நீலகிரி மாவட்டம்) இருந்தபோது அவருக்கு பி. டி.ராஜன் மறைந்தார் என்ற செய்தி கிடைத்தது.
உடன் அவர் பழனிவேல் ராஜனுக்கு தந்தி அனுப்பினார் .



பி. டி. ராசன் மறைவு

முதல்வர் கலைஞரின் ஆழ்ந்த இரங்கல்

பொதுச் செயலாளர் நாவலர் இரங்கற் செய்தி

கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் இரங்கற் செய்தி

எல். வி. எல். இரங்கற் செய்தி

‘தங்கள் அன்பான தந்தையார் மறைவுகேட்டு அதிர்ச்சியுற்றேன். நான் நிகழ்ச்சி காரணமாக கோத்தகிரியில் இப்போதிருக்கிறேன். இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். எனது உள்ளார்ந்த இரங்கலை ஏற்றுக் கொள்ளுங்கள்’ என்று அந்தத் தந்தியில் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

செய்தியறிந்ததும், கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் நாவலர் அவர்கள் பி.டி.ஆர். அவர்களது இல்லம் சென்று மலர்வளையம் வைத்து இறுதி வணக்கம் செலுத்தினார்.

★ ★ ★

நாவலர் இரங்கற் செய்தி

கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் நாவலர் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தின் முதுபெருந் தலைவர் தமிழவேள் பி.டி.ராஜன் இயற்கையெய்திய செய்தி தமிழன்பர் –களனைவருக்கும் ஆற்றணாத் துக்கத்தையும் துயரத்தையும் அளிப்பதாகும்.

தமிழகம் நாணயத்துக்கும் நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் சிறந்த பண்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய பெருந்தலைவரை இழந்துவிட்டது.

அவர் தமிழர்கள் எல்லோரது உள்ளத்திலும் நீங்காத ஒரு இடத்தை என்றென்றும் பெற்றவராவார்.

அவர் நீதிக் கட்சியின் தலைவராகவே தோன்றி கடைசி வரை கொள்கை உறுதிப்பாட்டோடும் நிலைபிரியாத தன்மையிலிருந்தும் நீதிக் கட்சியின் தலைவராகவே மறைந்தார்.

அவர் தமிழுக்கு, தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு தமிழ் நாட்டிற்குச் செய்துள்ள அறப்பணிகள் அரும் பணிகள் மறக்கக் கூடியவை அல்ல.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு முயற்சிக்கும் பலவேறு கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அவர் என்றென்றும் உறுதுணையாக இருந்து வந்துள்ளார்.

அவரைத் தலைவராகக் கருதுவதில் என்போன்று ஏராளமான பேர்கள் பெருமையும் பெருமிதமும் கொண்டிருந்தாலும் அண்ணாருடைய இழப்பு நிலைகுலையச் செய்கின்ற இழப்பு ஆகும்.

முதுபெருந் தலைவரை இழந்து வருந்துகிற அவரது குடும்பத்தாருக்கு, குறிப்பாக பழனிவேல் ராஜன் அவர்களுக்கும் ஏனைய உற்ற நண்பர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு நாவலர் அவர்கள் தமது இரங்கற்செய்தியில் கூறியுள்ளார்.

* * *

தலைவர்
திரு. M.T. சுப்பிரமணிய முதலியார்



சிக்கனம் என்பதை தம் செலவு செய்யும் பொருளில் மட்டுமல்லாது பிறருக்கு வழங்கும் பாராட்டிலும் மிகக் கறாராகக் கடைப்பிடித்தவர் தந்தை பெரியார் ஆவார். அத்தகைய பெரியாரே ஒருவரை 'தலைவர்' என்றும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குப் 'புத்துயிரளித்த பெரியார்' என்றும் தாராளமாகப் பாராட்டும் அளவிற்குப் போற்றுவதற்குரிய பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் திரு. உத்தம பாளையம் எம்.டி. சுப்ரமணிய முதலியார் ஆவார். தமிழவேள் திரு பி. டி. ராஜன் அவர்களின் தந்தையாரான திரு பொன்னம்பல முதலியாரின் உடன் பிறந்த சகோதரர் தான் திரு. எம்.டி. சுப்ரமணிய முதலியார் ஆவார். தமது ஏழாம் வயதில் தந்தையையும் பன்னிரண்டாம் வயதில் தாயையும் இழந்த திரு. ராஜன் அவர்களை சீரோடும் சிறப்போடும் வளர்த்து, அவருக்குச் சிறந்த கல்வியை வழங்கியவர் இப்பெருமகன்தான். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப்புலமைமிக்க திரு எம்.டி.சுப்ரமணிய முதலியார் அவர்கள் தன்னியல்பாகவே பார்ப்பனர் அல்லாதார் நலனில், சமத்துவ கொள்கையில் நாட்டம் கொண்டவர். அதன் விளைவாகத் தமிழக அரசியல் வரலாற்றிலேயே சமூக நீதிக் கொள்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த நீதிக்கட்சி தொடங்கப்பட்ட 1916 ஆம் ஆண்டே, அதன் உறுப்பினராகவும், தென் தமிழகத்தின் முக்கிய தலைவராகவும் செயல்பட்டவர். மிக முக்கியமாக, தேர்தல் தோல்வியில் துவண்டு கிடந்த நீதிக்கட்சிக்குப் புத்துயிர் ஊட்டும் விதமாக மதுரையில் 'பார்ப்பனரல்லாதார் 10-வது மாகாண மாநாட்டை' வரவேற்பு கழகத் தலைவராக முன்னின்று மிகப் பிரமாண்டமாக நடத்தி, அதில் மிகச் சிறப்பான, முற்போக்கு கருத்துக்கள் நிறைந்த சொற்பொழிவையும் நிகழ்த்தினார். திராவிட இயக்கத்தின் அடித்தளமாய் அமைந்த நீதிக்கட்சியின் உருவாக்கத்திற்கு உதவியதோடு மட்டுமல்லாமல், பின்னாட்களில் அக்கட்சியின் மிக முக்கிய தூணாய் விளங்கிய தமிழவேள் அவர்களையும் வார்ப்பித்து வழங்கிய பெருமைக்குச் சொந்தக்காரரான திரு எம்.டி .சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தன்னலமற்ற பொது வாழ்வின் சிறப்பை அவரது மறைவினையொட்டி தந்தை பெரியார் விடுத்த இரங்கல் அறிக்கையின் வழியே அறியலாம்.

தலைவர் உத்தமபாளையம் முதலியார் மறைந்தார் (25.03.1928)



குடி அரசு


தலைவர்
உத்தமபாளையம் முதலியார்
மறைந்தார்.

தமிழ் நாட்டுத் தலைவரும் தமிழர்களின் நண்பருமான உத்தமபாளையம் முதலியார் என்கின்ற மதுரை ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வியாழக்கிழமை இரவு காலஞ்சென்றார் என நண்பர் திரு. பி. டி. ராஜன் அவர்களின் தந்தியால் தெரிந்து திடுக்கிட்டுப்போனோம். தலைவர் முதலியார் அவர்களுக்கு ஏற்பட்ட நீரழிவு வியாதியானது எவ்வளவு சிகிச்சை செய்தும் குணப்படாமல் அவரது உயிருக்கு 'கூற்றுவ' னாகவே முடிந்துவிட்டது. திருவாளர் முதலியார் அவர்கள் தமிழ்நாட்டின் பழங்குடி மக்களுள் முதன்மையானவர்.

